# அறிஞர் அண்ணாவின் கல்விச் சிந்தனைகள்



கல்வியியல் மற்றும் மேலாண்மையியல் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

ACL-MKU
00803

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்.
தமிழியல் துறை.

அறிஞர் அண்ணாவின்
கல்விச் சிந்தனைகள்

©

கல்வியியல் மற்றும்
மேலாண்மையியல் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

# அறிஞர் அண்ணாவின் கல்விச் சிந்தனைகள்

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை ... நூலகம்.
தமிழியல் துறை.

## பதிப்புக் குழு

கல்வியியல் மற்றும் மேலாண்மையியல் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

திருவள்ளுவராண்டு 2040 - ஆனி - சூலை - 2009

| | | |
|---|---|---|
| நூல் | : | *அறிஞர் அண்ணாவின் கல்விச் சிந்தனை* |
| பதிப்பாசிரியர் | : | பதிப்புக்குழு |
| மொழி | : | தமிழ் |
| பொருள் | : | கல்வியியல் |
| பதிப்பு | : | *முதற்பதிப்பு 2009* |
| பக்கம் | : | 216 |
| தாள் | : | மேப்லித்தோ |
| நூலின் அளவு | : | *டெமி (1 x 8)* |
| எழுத்தின் அளவு | : | *10 புள்ளி* |
| விலை | : | உரு. *140/-* |

அச்சாக்கம் : அகரம், தஞ்சாவூர்.
94431 59371

289013

உருவாக்கமும் வழிக்காட்டுதலும்

முனைவர் ம. இராசேந்திரன்

மான்பமைத் துணைவேந்தர்

முனைவர் ஆ. கார்த்திகேயன்

மதிப்புயர் பதிவாளர்

## பதிப்புக் குழு

முனைவர் க. மோகனசுந்தரம்

துறைத் தலைவர்

முனைவர் கு. சின்னப்பன்

இணைப் பேராசிரியர்

முனைவர் ஞா. பழனிவேலு

விரிவுரையாளர்

முனைவர் சி. சிவக்குமார்

விரிவுரையாளர்

திரு. இரா. ஆனந்தரசு

விரிவுரையாளர்

முனைவர் இரா. முத்தையன்

விரிவுரையாளர்

திரு. சா. இரவிவர்மன்

விரிவுரையாளர்

திரு. ப. சீனிவாசன்

விரிவுரையாளர்

திரு. ரெ. மாரியையா

உடற்கல்வி ஆசிரியர்

முனைவர் ம. இராசேந்திரன்
துணைவேந்தர்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

# முன் முயற்சி! முன்மாதிரி

அறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளான செப்டம்பர் 15-இல் தமிழ்ப் பல்கலைக்கழகம் தொடங்கப்பட்டுள்ளது. அவரது நூற்றாண்டு விழாவினைத் தமிழ்நாடு கொண்டாடிக் கொண்டிருக்கிறது. அறிஞர் அண்ணாவின் பன்முக ஆற்றலைப் பயன்கொள்ளும் வகையில், தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் 25 துறைகளிலும் கருத்தரங்கம் நடத்திடத் திட்டமிடப்பட்டது.

அவ்வகையில் கல்வியியல் மற்றும் மேலாண்மையியல் துறை நடத்திய கருத்தரங்கப் பயனாக இந்த நூல் வெளிவருகிறது. கருத்துக்களைக் காற்றோடு கரைந்து போகவிடாமல் நூலாக்கித் தந்துள்ளார். துறையில் பணியாற்றுவோரின் ஒத்துழைப்பு, நூல் உருவாக்கத்தில் வெளிப்பட்டிருக்கிறது.

அறிஞர் அண்ணா அவர்களின் நூற்றாண்டில் அறிஞர் அண்ணாவின் கல்விச் சிந்தனைகள் எனும் நூலால் அவரைப் போற்றி, வணங்கி மகிழ்கிறது தமிழ்ப் பல்கலைக்கழகம்.

இத்தகைய முன் முயற்சியை மேற்கொண்டு முன்மாதிரியை உருவாக்கியுள்ள கல்வியியல் மற்றும் மேலாண்மைத்துறையைப் பாராட்டி வாழ்த்துகிறேன்.

29/5/09

(ம. இராசேந்திரன்)

# பொருளடக்கம்

பேரறிஞர் அண்ணாவின் சிறுகதைகளில் சமுதாய விழிப்புணர்வை தோற்றுவிக்கும் பாங்கு 7
**க. மோகனசுந்தரம்**

அறிஞர் அண்ணாவைப் படி.... 10
***கு. சின்னப்பன்***

பேரறிஞர் அண்ணாவின் மொழிக் கொள்கை 17
***ப. சீனிவாசன்***

அறிஞர் அண்ணாவின் கல்வியியல் சிந்தனைகள் 20
***சா. இரவிவர்மன்***

வரலாறு படைத்த அண்ணாவின் வாழ்க்கைச் சுவடுகள் 25
***ஞா. பழனிவேலு***

பேரறிஞர் அண்ணா கற்றோருக்கு வழங்கிய கருத்துரைகள் 30
***இரா. முத்தையன்***

அறிஞர் அண்ணாவின் பகுத்தறிவுக் கல்வி 35
***இரா. ஆனந்த் அரசு***

அறிஞர் அண்ணா கவிதையில் கல்விச் சிந்தனைகள் 38
***சி. சிவக்குமார்***

அறிஞர் அண்ணாவும் கல்வியும் 41
***ரெ. மாரியப்பா***

அறிஞர் அண்ணாவின் கல்விச் சிந்தனைகள் 44
***ஞா. சிவகுமார் & ஞா. பழனிவேலு***

அறிஞர் அண்ணாவின் பொதுவா.ழ்க்கை 47
***ப. சீரங்கன்***

அறிஞர் அண்ணாவின் சமுதாய சிந்தனைகள் 51
***கோ. சங்கீதா***

அறிஞர் அண்ணாவின் தமிழ்க்கொடை 53
**ந. மாமலைவாசன்**

உழைப்பு மற்றும் உரிமை பற்றிய அறிஞர் அண்ணாவின் கருத்து 57
**ச. கிருபா**

அறிஞர் அண்ணாவின் நோக்கில் பெரியார் 60
**பி. தனலெட்சுமி**

அறிஞர் அண்ணாவின் பார்வையில் மாணவர்கள் 63
**செ. சுப்புலெட்சுமி**

அறிஞர் அண்ணாவின் மாணவர்கள் பற்றி பகுத்தறியும் திறன் 67
**த. மனோகரன்**

அறிஞர் அண்ணாவின் மேடைப்பேச்சு 71
**இரா. சத்யா**

நாடகத்துறையில் அறிஞர் அண்ணாவின் பங்கு 76
**கோ. பிரியதரிசினி**

மாணவர்களைப் பற்றி அறிஞர் அண்ணா 80
**வை. சிங்காரவேலு**

அறிஞர் அண்ணாவின் கல்விச் சிந்தனைகள் 83
**மு.ஆ. சரவணன்**

அறிஞர் அண்ணாவின் பார்வையில் கல்வி 88
**வி. மனோகரன்**

பேரறிஞர் அண்ணாவின் கல்விப்பணி 92
**வே. அய்யாத்துரை**

அறிஞர் அண்ணாவின் கல்விக் கொள்கைகள் பற்றிய சிந்தனைகள் 95
**ப. ரெங்கமணி**

அறிஞர் அண்ணாவின் கல்விச் சிந்தனைகள் 99
**கொ. பிரபாகரன்**

அறிஞர் அண்ணா உணர்த்திய எழுத்தறிவு நிலை 104
**ஆ. பழனிச்சாமி**

பல்துறை அறிஞர் அண்ணா 108
**வி. கோதண்டராமன்**

அறிஞர் அண்ணாவும் தமிழ்க் கல்வியின் சிறப்பும் 112
**மு. கோகுல்ராம்**

பேரறிஞர் அண்ணாவின் கல்விச் சிந்தனைகளின் நோக்கங்கள் 115
**க. தமிழ்ச்செல்வன்**

பேரறிஞர் அண்ணாவின் தமிழ்க் கல்விச் சிந்தனைகள் 118
**ஆ. ஏஞ்சல் புனிதவதி**

பேரறிஞர் அண்ணாவின் கல்விக் கருத்துகள் 121
**ச. இரவிச்சந்திரன்**

அண்ணாவின் சமுதாய மாற்றச் சிந்தனை 126
**இ. ஜாஸ்மின்**

அறிஞர் அண்ணாவின் பகுத்தறிவு கல்விச் சிந்தனைகள் 129
**சீ. செல்வகுமாரி**

அறிஞர் அண்ணாவின் பார்வையில் தமிழ்க் கல்வி 133
**பெ. பெரியதம்பி**

அறிஞர் அண்ணாவின் நாட்டு நலப்பணி அமைப்பின் சிந்தனைகள் 138
**பொ. ராமமூர்த்தி**

ஆற்றல்களின் திருவுருவமான அறிஞர் அண்ணா 143
**சி. சிவகலா**

அறிஞர் அண்ணாவின் சொற்பொழிவில் கல்விச் சிந்தனை 145
**து. பிரகாஷ்**

அறிஞர் அண்ணாவின் கவிதைகள் 149
**ஜெ.ப. ஷீலாதேவி**

மாணவர்களுக்கு அறிஞர் அண்ணாவின் அறிவுரைகள் 152
**சி. கண்ணன்**

அறிஞர் அண்ணாவின் கல்விச் சிந்தனை 155
**செ. உத்திராபதி**

அறிஞர் அண்ணாவின் கல்விச் சிந்தனைகள் 158
**பெ. ராஜேந்திரன்**

அறிஞர் அண்ணா கவிதையில் மொழிக் கல்வியின் ஆளுமை 162
***ந. லாவண்யா***

அறிஞர் அண்ணாவின் கல்விச் சிந்தனைகள் 165
***க. கண்ணகி***

பேரறிஞர் அண்ணாவும் தாய்மொழி சிந்தனையும் 168
***த. சிவக்குமார்***

அறிஞர் அண்ணாவின் கல்விப்பாதை 173
கு. [redacted]

அறிஞர் அண்ணாவின் சிந்தனைகள் 177
***இரா. அனுசூயா***

அண்ணாவும் வாழ்வியலும் 181
**இரா. சுரேந்திரன்**

அண்ணாவும் வாழ்வியலும் 187
***மு. மலர்விழி***

அண்ணாவின் பார்வையில் கல்வியின் நோக்கங்கள் 190
***இரா. வைஷ்ணவி***

பேரறிஞர் அண்ணாவின் பல்துறை சிந்தனைகள் 194
***சி. முத்துலெட்சுமி***

அறிஞர் அண்ணாவின் அரசியல் வாழ்க்கையில் முக்கிய நிகழ்வுகள் 197
***ஜா. பௌலின் மார்க்கிரேட்***

அறிஞர் அண்ணாவின் தமிழ்மொழி பற்றிய கல்விச் சிந்தன்னகள் 201
***சி. சுமதி***

அறிஞர் அண்ணாவின் கல்வித் திட்டம் 205
***ச. சந்தியா***

# பேரறிஞர் அண்ணாவின் சிறுகதைகளில் சமுதாய விழிப்புணர்வை தோற்றுவிக்கும் பாங்கு

**க. மோகனசுந்தரம்**
துறைத்தலைவர்
கல்வியியல் மற்றும் மேலாண்மையியல் துறை
தமிழ்ப்பல்கலைக்கழகம்

## முன்னுரை

தனது எழுத்தாலும் பேச்சாலும் கருத்துப் புரட்சி செய்தவர் பேரறிஞர் அண்ணா அவர்கள். மனித சமுதாயத்தில் புரையோடிப் போயிருக்கும் பல்வேறு பிரச்சினைகளை தனது சிறுகதைகள் மூலம் எடுத்துக்காட்டி படிப்பவர்களது பண்முகச் சிந்தனையைத் தூண்டிய இவர், ஏழ்மை, விதவை மறுமணம் போன்ற சமுதாயப் பிரச்சினைகளுக்கு தனது சிறுகதைகள் மூலம் மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி ஒரு மறுமலர்ச்சியை அண்ணா தோற்றுவித்துள்ள தன்மையை இங்கு காண்போம்.

## அண்ணாவின் சிறுகதைகள்

பேரறிஞர் அண்ணா 1934 முதல் 1966 வரை பல சிறுகதைகளை எழுதியுள்ளார். இவற்றில் பல தொகுக்கப்பட்டு "பேரறிஞர் அண்ணாவீன் சிறுகதைத் தொகுதி" என்ற நூலாக வெளியிடப்பட்டுள்ளது. உள்ளத்துடன் உள்ளம் உறவாடும் வகையில் இவரது எழுத்துநடை அமைந்திருக்கும்.

## ஏழ்மை

ஏழ்மை என்பது உலகளாவிய ஒரு சமுதாயப் பிரச்சினை. கல்லாமை, நோய்கள் பரவுதல், சமுதாயக் குற்றங்கள், மனநலம் பாதிக்கப்படுதல், மனித உரிமைகள் மீறல் போன்ற பல்வேறு

பிரச்சினைகளுக்கு அடிப்படைக் காரணமாக ஏழ்மை அமைந்துவிடுகிறது.

"தீர்ப்பளியுங்கள் சிக்கலான பிரச்சினை" என்ற சிறுகதையில் அறிஞர் அண்ணா அவர்கள் மகாலிங்கம் என்ற கதாபாத்திரத்தை படைத்துள்ளார். இவர்மீது நீதிமன்றத்தில் ஒரு வழக்கு. நிலையான தொழில் இல்லாத இவர் பித்தளைச் சங்கிலியைத் தங்கச் சங்கிலி என்று ஏமாற்றி விற்றார் என்று குற்றச்சாட்டு. இதில் நீதிபதி தீர்ப்புக் கூற வேண்டும். குற்றம் சாட்டப்பட்ட மகாலிங்கம் தனது வாக்குமூலம் வழியாக தனது குற்றத்தை ஒப்புக்கொள்கிறார். சாட்சியங்களும் இதனை உறுதி செய்கின்றன. அதே சமயம் மகாலிங்கம் துன்பப்படுபவர்களுக்கு உதவும் இரக்க மனம் கொண்டவர். நோயால் பாதிக்கப்பட்டு துன்பப்படும் தனது நண்பனுக்கு உதவுவதற்கு இந்த குற்றத்தை செய்தான் என்பதற்கும் நீதிபதியிடம் சாட்சிகள் உள்ளன. அதனை நீதிபதி தனது நண்பரிடம் கூறி இதற்கு தீர்ப்பு கூறுங்கள் என்று கேட்கிறார். அதற்கு நண்பர் நானா தீர்ப்பளிக்க வேண்டியவன்? என் தீர்ப்பு நெடுநாட்களுக்கு முன்பே பதிவாகி விட்டது. ஒரு வழக்குக்கு மட்டுமல்ல. பொதுவாகவே, ஏழைகள் செய்யும் குற்றங்களுக்கு காரணம் அவர்களின் ஏழ்மையே. ஆகவே, தண்டிக்கப்பட வேண்டியது மனிதர்கள் அல்ல. பொருளாதார பேத அமைப்பு முறைதான் என்று கூறுகிறார்.

இதன் மூலம், பல சமுதாயக் குற்றங்களுக்கு காரணமாக அமைவது ஏழ்மையே. அதனைப் போக்க சமூகத்தில் உள்ள பொருளாதார ஏற்றத்தாழ்வு நிலையை மாற்ற முயற்சி செய்ய வேண்டும் என்று அண்ணா கூறுகிறார். இதன் மூலம் சமுதாய மறுமலர்ச்சிக்கு பொருளாதார சமநிலையே அடிப்படையாக உள்ளது என்ற விழிப்புணர்வை மக்களிடையே பேரறிஞர் அண்ணா ஏற்படுத்தியுள்ளார்.

### விதவை மறுமணம்

இவர்கள் குற்றவாளிகளா? என்ற சிறுகதையில் கோகிலம், அமுதன் என்ற கதாபாத்திரங்களைப் படைக்கிறார். கோகிலம் ஓர் இளம் விதவை, அமுதன் அவள்மீது மாசற்ற அன்பு கொள்கிறான். இருவரும் சமூகக் கட்டுப்பாடுகளை மீறி, சாதித் தடையைமீறி தனியே வந்து இல்லற வாழ்வு மேற்கொள்கின்றனர். இவர்கள்

இருக்குமிடத்தை அறிந்த கோகிலத்தின் தந்தை, சமூகக் கட்டுப்பாட்டை மீறி தனக்கு அவப்பெயர் ஏற்படுத்திய இருவரையும் கொடுவாள் கொண்டு கொலைசெய்ய வந்தார். வந்தவர், தனது மகளின் தோற்றம் கண்டு வியக்கிறார். தன்னோடு தங்கியிருந்த போது தனது மகள் அழகு குன்றி இருந்தாள், கண்ணீரும் கவலையுமாயிருந்தவள் இன்று மகிழ்வுடன் இல்லறம் மேற்கொள்வதை அறிந்து சிந்திக்கிறார்.

ஊரார் அபவாதம் ஒரு பக்கம். சமூகக் கட்டுபாடுகளை மீறி உள்ளம் ஒன்றி மறுமணம் செய்து மகிழ்வுரும் மகள் ஒருபுறம். இருவரும் தன்னிடம் வந்து தாங்கள் செய்தது குற்றமெனில் மன்னியுங்கள் என்று வேண்டுகின்றனர். இவர்களது தூய வாழ்விற்கு நாம் தடையாக இருக்ககூடாது என எண்ணி தந்தை திரும்பிச் செல்கிறார்.

இந்த சிறுகதை 1943ல் எழுதப்பட்டது. அன்றைய சூழலில் விதவை மறுமணம் என்பது பெரிய சமூகக்கேடாக கருதப்பட்டது. இந்நிலையை, இந்த சிறுகதை மூலம் அறிஞர் அண்ணா சாடுகிறார். விதவை மறுமணத்திற்கு எந்தக் கட்டுப்பாடும் தடையாக இருக்கக்கூடாது என வலியுறுத்துகிறார். இவ்வாறு சமூக மறுமலர்ச்சிக்கு வித்திடுகிறார்.

### முடிவுரை

அறிஞர் அண்ணா தனது எழுத்தாற்றலால் படிப்பவரிடம் ஒரு சிந்தனையைத் தூண்டுபவர். உள்ளத்தில் ஒரு எழுச்சியை ஏற்படுத்துபவர். ஒரு கருத்து, பிரச்சினை தொடர்பான அடிப்படை கருத்துகளை மற்றவரிடம் கூறி விரும்பத்தக்க நடத்தை மாற்றம் ஏற்பட வழிவகை செய்வது விழிப்புணர்வை தோற்றுவித்தல் எனப்படும்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் தனது சிறுகதைகளில் சமுதாயக் குற்றங்களுக்கு வழிசெய்யும் ஏழ்மையை நீக்க சமூகத்தில் உள்ள பொருளாதார ஏற்றத்தாழ்வு நிலையை மாற்ற முயற்சி செய்யவேண்டும்; இளம் விதவை மறுமணத்திற்கு எந்த சமூகக் கட்டுப்பாடும் தடையாக இருத்தல் கூடாது என்ற கருத்துகளை நடைமுறை வாழ்க்கை நிகழ்வுகளோடு தொடர்புபடுத்தி எடுத்துக் கூறி சமுதாய விழிப்புணர்வை மக்களிடம் தோற்றுவித்துள்ளார்.

# அறிஞர் அண்ணாவைப் படி....

**கு. சின்னப்பன்**
இணைப்பேராசிரியர்
கல்வியியல் மற்றும் மேலாண்மையியல் துறை
தமிழ்ப்பல்கலைக்கழகம்

தமிழக அரசியலில் புதிய எழுச்சிகாண நீதிக்கட்சியிலும், சாதி, மத, பேதமற்ற சமுதாயம் காண பெரியாருடன் இணைந்து திராவிடர் கழகத்திலும் *(1936-48)* களப்பணியாற்றியவர். பின்னர் நாட்டிலே நல்லறிவு ஏற்பட *1949*இல் திராவிட முன்னேற்றக் கழகத்தை உருவாக்கியவர். *1935* முதல் தமிழ்மொழி, தமிழ் மரபு, தமிழர் நலம் காக்கப்பட வேண்டுமென்று போராடி தமிழர் வாழ்வைத் தலைநிமிரச் செய்தவர் பேரறிஞர் அண்ணா.

தனிமனித மேம்பாட்டிற்காகவும், ஒரு நாட்டின் சமூக, பொருளாதார, கலாச்சார, அரசியல் மேம்பாட்டிற்காகவும் பல்வேறு சிந்தனைகளை அளித்தவர், எனினும் கல்வி குறித்த பேரறிஞர் அண்ணாவின் சிந்தனைகளையும், செயல்பாடுகளையும் பதிவு செய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

## கற்பித்தல் முறை

ஒரு சமுதாயத்தின் எழுச்சியும் வீழ்ச்சியும் ஆசிரியர்களின் கையில்தான் இருக்கிறது என்று குறிப்பிடும் அறிஞர் அண்ணா, ஆசிரியர்களுக்கு பணி நோக்கத்தைவிட பண்பு நோக்கம், அறிவுநோக்கம் ஆகிய இரண்டும் மிக முக்கியமென்று வலியுறுத்தினார்.

"நீங்கள் கற்பிக்கும்போது மாணவர்களுக்கு எட்டாத தொலைவில் எங்கோ இருப்பதை; எவரும் பார்த்திராத புராண-இதிகாச கருத்துக்களை எடுத்துக்காட்டாகச் சொல்லாதீர்கள். மாறாக இந்நாட்டு மாணவர்கள் ஒவ்வொருவரும் இப்ஸனாக, ஷெல்லியாக, தாந்தேயாக, பர்க்காக, சாக்ரடீசாக, லிங்கனாக,

அலெக்சாண்டராக, நெப்போலியனாக, இளங்கோவாக, வள்ளுவராக பரிணமிக்க செய்யும் வழிகளை கற்பியுங்கள்" என்று கூறினார்.

## பயிற்றுமொழி

தமிழகத்தில் ஆட்சி புரிந்தோர் டில்லி அரசாங்கத்தைத் திருப்திபடுத்துவதற்கென்று தமிழ்நாட்டில் இந்தியைக் கட்டாயப் பாடமாக்கினார்கள். மொழிப்போர் தியாகிகள் தாளமுத்து, நடராஜன் மரணத்தைக்கூட "கல்வியறிவு இல்லாதவர்கள் சிறையிலே செத்துப் போனார்கள் என்று இழித்துரைத்தனர்" (ஞா. மாணிக்கவாசகன், *1969:31)* இந்தித் திணிப்பை எதிர்த்து எல்லோரும் தாய்மொழியில்தான் படிக்கவேண்டுமென்று 1957இல் தி.மு.க.வின் தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டார். 1967இல் தமிழக முதல்வராகப் பொறுப்பேற்ற பிறகு 23.01.1968இல் "இந்த நாட்டுப் பள்ளிகளில் இனி மும்மொழித்திட்டம் ஒழிக்கப்படும்" என்று ஆணைப் பிறப்பித்தார். என்.சி.சி. அணிவகுப்பில் இந்தி ஆணைச் சொற்கள் கட்டாயம் நீக்கப்படும் என்றும் பிரகடனப்படுத்தினார் (மேலது, *1969:45*). இது ஒவ்வொரு குழந்தையும் தனது தாய்மொழியிலேதான் கல்வி கற்கவேண்டும் என்ற அவரது எண்ணத்தை வெளிப்படுத்துகிறது.

## பாடத்திட்டமும் கல்விமுறையும்

பகுத்தறிவு பெற கல்வி கற்கிறோம் ஆனால் "மனிதன் இன்னும் மனிதனாக நடந்துகொள்ள முழுவதும் கற்றுக் கொள்ளவில்லையே, மனிதன மனிதனாக அறிந்துகொள்வதிலே மட்டும் வெற்றிபெற முடியவில்லையே" (இருளகல:65) என்று வருத்தப்பட்டார். மனிதருக்குள் பேதத்தைப் புகுத்திடும் பாடத்திட்ட ஏடுகள், அவற்றில் இடம்பெறும் எண்ணங்கள், கல்வி ஏற்பாடுகள் நீக்கப்படவேண்டுமென்று கருதினார். "சில சாதிக்குத்தான் படிப்பு வரும், சில சாதிக்குப் படிப்பு வராது" (இருளகல:29) என்ற மனிதத்தன்மைக்கு மாறான கருத்துக்கள் நாட்டிலே பரவாமல் தடுக்கவேண்டும். நாட்டிலே அறிவுபுரட்சி ஏற்பட குடியாட்சிக் கோட்பாட்டுக்குத் தேவையான கல்வி முறையை மேற்கொண்டாக வேண்டுமென்றார் (பேரறிஞர் அண்ணா 1985:83). இதற்கான புதிய திட்டங்களை வகுக்க வேண்டும்

என்று குறிப்பிட்டார். இக்கருத்துக்கு முரணாக இருந்த "குலக்கல்வி திட்டத்தை", வார்தா கல்வித் திட்டத்தை (1953) வேண்டாமென்று எதிர்த்தார்.

## எளியோருக்கு இலவசக் கல்வி

அறிஞர் அண்ணா பி.ஏ., (ஆனர்ஸ்) பட்டம் பெற்றதும் சென்னை சட்டக் கல்லூரியில் சேர்ந்தார். பொருள் வசதி இன்மையால் மூன்று தினங்களுக்கு மேல் சட்டப் படிப்பைத் தொடர முடியவில்லை (ஆரியமாயை, 1995:4). கல்வி பெற ஏழ்மை யாருக்கும் தடையாக இருக்கக்கூடாது என்று உணர்ந்தவர். தமிழக முதல்வராகப் பொறுப்பேற்றதும் ஏழைகளுக்கு புதுமுகக்கல்வி வரை இலவசக் கல்வி பெற (1967) ஆணைப் பிறப்பித்தார் (என்.சொக்கன், 2007:159). இச்செயல் நாட்டிலுள்ள ஒவ்வொருவரும் கல்லூரிக் கல்வி பெற வேண்டுமென்ற அவரது எண்ணத்தை வெளிக்காட்டுகிறது.

பாமர மக்கள் உயரவேண்டுமென்றால் அவர்களுடைய சூழ்நிலையைச் செம்மைப்படுத்த வேண்டும். சூழ்நிலையைச் செம்மைப்படுத்தவேண்டுமெனில் அவர்களுக்கு தரமான இலவசக் கல்வி அளிக்கப்படவேண்டுமென்று கருதினார். எனவேதான் பட்டமளிப்பு விழா உரை நிகழ்த்தும்போது "பல்கலைக்கழகம் பாமரனையும் கணக்கில்கொள்ள வேண்டும். ஏனெனில் இது பாமரனின் காலம்" என்று குறிப்பிட்டார் (அ.கி.மூர்த்தி, 1997:19). மேலும் தமிழ்ப் புலவர்களில் பெரும்பாலோர் தமிழின் துணை கொண்டு 'விஞ்ஞானம்' பற்றி பாமர மக்களிடையே பேசவேண்டுமென்பது என் ஆசை (பேரறிஞர் அண்ணா, 1985:18) என்பதை வெளிப்படுத்தினார். இதன்மூலம் எளியோர் கல்வி பெறுவதில் அவர் காட்டிய அக்கறையை அறிய முடிகிறது.

## முதியோர் கல்வியும் - பெண் கல்வியும்

பெண்கல்வி மிக இன்றியமையாதது என்பதை உணர்ந்தவர் 1931இல் "பெண்கள் சமத்துவம்" என்ற கட்டுரையை எழுதினார். சமூகப் பணிகளில் அனைத்தையும் அரசாங்கமே செயல்படுத்திக் கொண்டிருக்க முடியாது என்று கருதிய அறிஞர் அண்ணா ஆயிரம் இளைஞர்களைத் தேர்ந்தெடுத்து "சீரணிப்படை" ஒன்றை அமைத்தார். இவர்களின் மூலமாக தமிழகத்தில் மூலை

முடுக்குகளிடையே சுற்றுப்புறத்தூய்மை விழிப்புணர்வு, பெண்கல்வி விழிப்புணர்வு மற்றும் முதியோர் கல்வியைச் (என்.சொக்கன், 2007:158) சிறப்பாகச் செயற்படுத்தினார்.

**மதச்சார்ப்பற்ற கல்விக்கூடங்கள் தேவை**

"ஏழைக்கு எழுத்தறிவிக்கும் பணியே, பணிகளிலே சிறந்த பணி" என்று அறிஞர் அண்ணா குறிப்பிடுவார். ஆனால் நாட்டிலே பணம் படைத்த சீமான்கள் தங்கள் உள்ளத்திலே தர்மத்தைப் பற்றி நினைக்கிற அளவுக்கு கல்வி நிலையைப் பற்றி நினைப்பதில்லை (பேரறிஞர் அண்ணா, 1995:84). அரசும் கல்விக்குப் பணமில்லையென்று கைவிரித்துவிட்டு, பழைய கோயில்களை புதுப்பித்து, விக்கிரக பிரஷ்டைகள் செய்து, புதுக்கோயில் கட்ட லட்சக்கணக்கில் செலவிடுகிறது (மேலது 1925:39). இப்படி மதச்சார்புள்ள சர்க்கார் கல்வி நிலையங்களை ஏற்று நடத்துமானால் மனிதனின் சிந்தனை சக்திக்கு அங்கே இடமிருக்காது (மேலது 1995:83) என்று சுட்டிக்காட்டினார்.

கல்லூரி படிப்பை முடித்துவிட்டு வெளிவரும் வரை அவர் எந்த இயக்கத்தோடும் இரண்டறக் கலக்கவில்லை. 1932இல் கல்லூரி மாணவர் கழகச் செயலாளராக இருந்தபோதும் அறிஞர் "அண்ணாவின் முழுக்கவனமும் படிப்பில்தான் இருந்து இருக்கிறது" (என்.சொக்கன், 2007:20) என்பதை அறியமுடிகிறது. அப்பொழுது மாணவராக இருந்த கலைஞர் மு. கருணாநிதி எழுதிய 'இளமைப் பலி' கட்டுரையைப் படித்து வியந்த அறிஞர் அண்ணா, திருவாரூர் பொதுக்கூட்டத்திற்கு சென்றிருந்தபோது கலைஞரை நேரில் அழைத்துப் பாராட்டியதோடு "படிப்பில் முதலில் கவனம் செலுத்தி பாக்கி விஷயங்களை பிறகு பார்த்துக்கொள்ளலாம்" (ஞா.மாணிக்கவாசகன், 1969:32) என்று அறிவுறுத்தினார். அந்நாட்களில் மாணவர்கள் அரசியல் நேரடித் தொடர்பின்றி பணியாற்ற "திராவிடர் மாணவர் பேரவை" என்ற அமைப்பை ஏற்படுத்தினார். எவரிடமும் பகைமை பாராட்டாத பண்பு அறிஞர் அண்ணாவின் தனிச்சிறப்பு. எனவேதான் அவர் "கத்தியைத் தீட்டாதே, புத்தியைத் தீட்டு" என்று கூறி மாணாக்கர்களை சீர்படுத்தினார். பட்டமளிப்பு விழாவில் பேசும்போது "தமிழ் உமது முரசமாகட்டும், பண்பாடு உமது கவசமாகட்டும்" என்றுக் கூறி மாணாக்கரை பண்படுத்தினார்.

## படைப்புத்திறன்

அறிஞர் அண்ணா ஒரு சிறந்த நாடகப் படைப்பாளர். அந்நாளில் அவர் ஒரு எம்.ஏ., பட்டதாரி. அரசியல் தலைவர் ஆனாலும் பவுடர் போட்டுக்கொண்டு மேடையேறி நடித்தது மட்டுமல்ல, சந்திரமோகன், வேலைக்காரி, ஓர் இரவு, நல்லதம்பி, காதல் ஜோதி, சொர்க்கவாசல், பாவையின் பயணம் முதலிய சிறந்த நாடகங்களைப் படைத்துள்ளார். அண்ணாவிற்கு அறிஞர் என்னும் பட்டத்தை சூட்டிய கல்கி ஆசிரியர் ரா.கிருஷ்ணமூர்த்தி அறிஞர் அண்ணாவின் ஓர் இரவு நாடகத்தைப் பார்த்த பின்பு "ஒரு பெர்னாட்ஷா, ஒரு இப்ஸன், கால்ஸ்வொர்த் தமிழ்நாட்டில் நம்மிடையே இருக்கிறார்" (அறிஞர் அண்ணா, *1969:126*) என்று அறிஞர் அண்ணாவை பாராட்டினார். அவர் திரைப்பட வசனம் எழுதிய திரைப்படங்களில் ஓர் இரவு, சொர்க்கவாசல், நல்லவன் வாழ்வான், எதையும் தாங்கும் இதயம், ரங்கோன் ராதா, தாய் மகளுக்குக் கட்டிய தாலி, காதல் ஜோதி, வண்டிக்காரன் மகன் ஆகியன குறிப்பிடத்தக்கன. கேட்கும்திறன், வாசிக்கும் திறன், நடிக்கும் திறன், படைப்புத்திறன் என அனைத்தையும் அறிஞர் அண்ணாவிடமிருந்து கற்றுக்கொள்ளலாம்.

## பேசுந்திறன்-மொழித்திறன்

அறிஞர் அண்ணா! நாற்பது ஆண்டுகால அவரது பொது வாழ்வில் அவர் ஆற்றிய உரைகள், சட்டமன்ற உரைகள், பாராளுமன்ற உரைகள் அவரது பேச்சாற்றலுக்கு சான்றாகும். பெரியாருடன் இணைந்து பணியாற்றிய காலங்களில் பிற மாநிலங்களுக்கு உடன் செல்கின்றபோது ஆங்கில மொழிப் பெயர்ப்பாளராகவும் செயலாற்றினார். ஒருமுறை இவர் லக்னோ பல்கலைக்கழகத்தில் பெரியாரின் பேச்சை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த திறனை அறிந்து, அங்கே கூடியிருந்தவர்கள் அறிஞர் அண்ணாவை பேசும்படி ஆரவாரம் செய்தது நாடறியும்.

இவ்வாறே ஒருமுறை வடஇந்திய பல்கலைக்கழகத்தில் அறிஞர் அண்ணா அவர்கள் பேச அழைக்கப்பட்டிருந்தார். அறிஞர் அண்ணாவைப் பார்த்தவுடன் இவருடைய கூட்டத்துக்குப் போய் தலைமை வகிப்பதா என அப்பல்கலைக்கழகத் துணைவேந்தர்

மறுத்து விட்டாராம். அறிஞர் அண்ணா பேசிய ஆங்கில உரையைக் கேட்டபிறகு இப்படியொரு உரையை என் வாழ்நாளிலேயே நான் கேட்டது இல்லை என்று கூறி வியந்து பாராட்டினாராம் (ஞா.மாணிக்கவாசகன், 1969:128).

ஒருமுறை இராஜாஜி அவர்கள் கலந்து கொண்ட ஒரு கூட்டத்தில் அறிஞர் அண்ணாவை பேச அனுமதிப்பதற்கு தயங்கியபோது, இவர் எண்ணத்தை பேசிவிடப் போகிறார் பேசட்டும் என்று கூறினார். அறிஞர் அண்ணா பேசிய பிறகு பிரமித்துப் போய் என்ன அற்புதமாக பேசிவிட்டார் என்று இராஜாஜி வியந்து பாராட்டினாராம் (அறிஞர் அண்ணா, 1929:128). இவ்வாறு அறிஞர் அண்ணாவின் எழுதுந்திறன், பேசும்திறன், மொழித்திறன், படைப்புத்திறன், நடிப்புத்திறன் என்று குவிந்துகிடக்கும் திறன்களை ஒவ்வொரு ஆசிரியரும் கற்றுக் கொள்ள வேண்டிய திறன்களாகக் குறிப்பிடலாம்.

## அறிஞர் அண்ணா ஒரு வாழும் வரலாறு

பேரறிஞர் அண்ணா தனிப்பட்ட வாழ்க்கை, சமூக வாழ்க்கை என்று பிரித்து அறிய முடியாதபடி வாழ்ந்தவர். 01.01.1969இல் "தமிழ்நாடு" பெயர் மாற்றுவிழா நடைபெற்றது. அவ்விழாவில் பேசுகிறபோது "உடல் நலம் கெட்டிருக்கிறது, கூட்டங்களில் கலந்துக் கொள்வதோ, நீண்ட நேரம் பேசுவதோ கூடாதென்று மருத்துவர்களின் கண்டிப்பான தடையையும் மீறி வந்திருக்கின்றேன். இந்த ஒரு நிகழ்ச்சியில் கூட கலந்துகொள்ள இயலாத உயிர் இருந்தென்ன, போனாலென்ன என்று துணிந்து வந்திருக்கின்றேன்" (அ.கி.மூர்த்தி, 1969:24) என்று கூறுமளவிற்கு அவர் தமிழக மக்களோடு இரண்டறக் கலந்திருந்தார். அதனால்தான் அவரது இறுதி ஊர்வலத்தில் ஒன்றரைக்கோடி மக்கள் பங்கேற்றனர். தனிமனிதன் தானும் ஒரு வரலாறு ஆக முடியும் என்பதற்கு அறிஞர் அண்ணா ஓர் உதாரணம்.

தேர்ந்த எழுத்தாளர்கள் சிறந்த பேச்சாளர்களாக இருப்பதோ, சிறந்த பேச்சாளர்கள் உயர்ந்த நாடகாசிரியர்களாக இருப்பதோ, உயர்ந்த நாடகாசிரியர் நல்ல நடிகராக இருப்பதோ, நல்ல நடிகர் ஒரு தரமான அரசியல்வாதியாக இருப்பதோ, தரமான அரசியல்வாதி சிறந்த சிந்தனையாளராக இருப்பதோ, தெளிந்த சிந்தனையாளர்

நிர்வாகத் திறமை மிக்கவராகத் திகழ்வதோ உலகில் காண்பது அரிது (அறிஞர் அண்ணா, 1969:131). இத்தனை பேராற்றலும் பெற்றிருந்தார் பேரறிஞர் அண்ணா! எனவே அண்ணாவைப் படி! அண்ணாவைப் போல் படி! அதுதான் உனது நாளைய வாழ்க்கைக்கான வெற்றிப்படி!

**மேற்பார்வை நூல்**


1. சொக்கன், என்., அண்ணாந்துபார், கிழக்குப் பதிப்பகம், சென்னை, இரண்டாம் பதிப்பு, பிப்.2007.
2. மூர்த்தி, அ.கி., அண்ணாவின் மேடைத்தமிழ், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, முதல் பதிப்பு, டிசம்பர் 1997.
3. பேரறிஞர் அண்ணா, அண்ணாவின் சமுதாயப்புரட்சி, அபிராமி பப்ளிகேஷன்ஸ், சென்னை - 1, மே, 1985.
4. பேரறிஞர் அண்ணா, ஆரியமாயை, கண்ணம்மாள் பதிப்பகம், சென்னை, முதல் பதிப்பு, 1995.
5. அறிஞர் அண்ணா, இருளகல (கட்டுரைத் தொகுப்பு), அண்ணா பேரவை வெளியீடு, சென்னை, (அ.இ).
6. மாணிக்கவாசகன், ஞா., அறிஞர் அண்ணா, அருணா பதிப்பகம், மதுரை, முதல் பதிப்பு, மார்ச் 1969.
7. சுந்தர ராமசாமி, தமிழகத்தில் கல்வி (வே.வசந்திதேவியுடன் உரையாடல்), காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில், செப்டம்பர் 2001.

# பேரறிஞர் அண்ணாவின் மொழிக் கொள்கை

**ப. சீனிவாசன்**
விரிவுரையாளர்
கல்வியியல் மற்றும் மேலாண்மையியல் துறை
தமிழ்ப்பல்கலைக்கழகம்

## முன்னுரை

அறிஞர் அண்ணா பன்முக ஆளுமைக் கொண்டவர். அறிஞர் அண்ணா நாடறிந்த பேச்சாளர், எழுத்தாளர், சிந்தனையாளர் மற்றும் ஆட்சியாளர். தமிழ் மீது தனியாத பற்றுகொண்டவர். தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் சரளமாக பேசக்கூடியவர்.

## அறிஞர் அண்ணாவின் ஆங்கிலப் புலமை

இவரது ஆங்கிலப் புலமை ஆங்கிலேயராலேயே வியக்கக் கூடியது. பொதுவாக 'because' என்பது மூன்று முறை ஒரு வாக்கியத்தில் வராது. ஆனால் அறிஞர் அண்ணா இதற்கு மாறாக There is no sentence end with because, because, because is a conjunction என சிறப்பாக கூறியுள்ளார்.

ஒரு முறை A, B, C, D

இல்லாத நூறு வார்த்தைகளை கூறுமாறு அவரிடம் கேட்டபோது அவர்One, Two, Three, Four .......... Ninty Nine, Stop என்று முடித்தார். இந்நூறு சொற்களில் பார்த்தோமானால் இந்நூறும் A, B, C, D அற்ற வார்த்தைகள்.

ஒரு முறையேல் பல்கலைக்கழகத்தில் what is matriculation? என்று கேட்டபோது அறிஞர் அண்ணா After many consideration and

consulation I come one conclusion that occupation has more time in our nation where matricution is nothing but botheration என்று கூறினார்.

## அறிஞர் அண்ணாவின் மொழிப்பற்று

தாய்மொழி மீது தனியாத பற்று கொண்டிருந்த அறிஞர் அண்ணா தாய் மொழி வழி கல்வீயின் ஆதரவாளர். தமிழ்நாட்டிற்கு தமிழ்நாடு எனப் பெயர் வந்தது இவரது காலத்தில்தான். தாய்மொழி வழி கல்வியால் மக்கள் அல்லது நாடு மேன்மையுறும் என நம்பினார். மொழி வல்லுநர்கள் மற்றும் உளவியல் அறிஞர்கள் கூட இதனையே வலியுறுத்துகின்றனர். நமது தேசத் தந்தை காந்தியடிகள் கூட தாய்மொழி வழி கல்வியை வலியுறுத்துகிறார். 14 மாநில மொழிகளை தேசிய மொழிகளாக அறிவிக்க வலியுறுத்தினார்.

## இருமொழிக் கொள்கை

தாய்மொழி உடன் ஆங்கில மொழியைச் சேர்த்து அறிஞர் அண்ணா இரு மொழிக்கொள்கை உடையவர். இருமொழிக் கொள்கையை பள்ளி மற்றும் கல்லூரி கல்வியில் கொணர்ந்தார். இதன் பயனாக தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் தமிழர்கள் புலமை பெற்றவராயினர்.

## தமிழறின் ஆங்கில மொழி செல்வாக்கு

இருமொழி வழி கல்வியால் இந்தியாவிலேயே ஆங்கில மொழியை கையாளுவதில் தமிழர்கள் சிறப்பு பெற்றவரனார்கள். ஆங்கில மொழியைப் பேசுவதில் அதாவது Pronunciationனில் நாம் சிறப்பானவர்கள் எனக் கூறலாம். இந்தியாவில் உள்ள ஏனைய மாநிலத்தவரைவிட நாம் pronunciationனில் சிறந்தவர்கள்.

## இருமொழிக் கொள்கையின் நன்மைகள்

இப்புலமையினால் என்ற Business Process Outsourcing (BPO) என்று சொல்லப்படுகிற வர்த்தகம் இந்தியாவை நோக்கி வந்து கொண்டுள்ளது. இதன் மூலம் இந்தியா கோடிக்கணக்கான டாலர்களை அன்னிய செலவானியாக பெற்றுக்கொண்டுள்ளது. உலகமயமாதலினால் உலக வர்த்தகத்தில் சீன பொருட்களின்

வியாபாரம் பெருகி வருகிறது. சீனர்கள் பொருட்களின் விலையினை மிகவும் குறைத்து கொடுக்கின்றனர். இதற்கு இணையாக மற்ற நாடுகளால் கொடுக்க இயலவில்லை. உதாரணமாக செல்லிடப் பேசிகளை சொல்லலாம். ரூ.16,000 விலையுள்ள நோக்கியா செல்லிட பேசியிலுள்ள வசதிகளை ரூ.4,000 விலையுள்ள செல்லிடப் பேசியிலேயே சீனர்கள் தருகிறார்கள்.

ஆனால் சீனர்களுக்கு ஆங்கிலப் பேச்சறிவும் எழுத்தறிவும் தமிழர்களைப்/இந்தியர்களைப் போன்று இல்லாததால் தற்போது Business Process Outsourcing (BPO) மட்டும் இந்தியர்களது/ தமிழர்களது வெற்றி கொடி பறந்து கொண்டுள்ளது. ஆங்கில புலமையுள்ள ஆங்கிலேயருக்கே இவ்வர்த்தகம் செல்வதில்லை. ஏனென்றால் ஆங்கிலேயர்கள் நம்மைவிட அதிக பணம் கேட்கின்றனர். அதனால் இவ்வர்தகத்தை பொறுத்தவரை நாம் ஆங்கலேயரை ஏகாதிபத்தியம் செய்கிறோம் என்றால் அதில் ஐயமில்லை.

# அறிஞர் அண்ணாவின் கல்வியியல் சிந்தனைகள்

**சா. இரவிவர்மன்**
விரிவுரையாளர்
கல்வியியல் மற்றும் மேலாண்மையியல் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்

## முன்னுரை

கல்வி என்பது தனிமனிதனிடம் விரும்பத்தக்க நடத்தை மாற்றங்களைக் கொண்டுவருவதாகப் பொருள் காணப்படுகிறது. இதனை கருத்தில் கொண்டே கலைத்திட்டம் உருவாக்கப்பட்டு பாடத்திட்டம் மற்றும் பாடநூல்களின் வாயிலாகக் கற்பித்தல் நடைப்பெறுகிறது. இத்திட்டமிடப்பட்ட கல்விச் செயல்பாடுகளைத் தவிர சுற்றுசூழல், சமூகம், தனிமனிதன் போன்ற காரணிகளும் தனிமனிதனிடத்து விரும்பத்தக்க நடத்தைகளை ஏற்படுத்துகின்றன. சில நேரங்களில் தனிமனிதனும் ஒட்டுமொத்த சமூகத்தின் மீது தாகத்தினை ஏற்படுத்தி நடத்தை மாற்றங்களை உருவாக்குவதுண்டு. இவ்வாறு தனிமனிதாக ஒரு பெரும் சமூகத்தின் மீது விரும்பத்தக்க நடத்தை மாற்றங்களை கொண்டுவந்த மாமனிதர்களில் பேரறிஞர் அண்ணா அவர்களும் ஒருவர். இவர் தமிழக அரசின் முதலமைச்சர் பதவியை ஏற்பதற்கு முன்பும் அதன் பின்னரும் அவர் வெளிப்படுத்திய கல்வி சார்ந்த சிந்தனை மற்றும் செயல்பாடுகளை வரிசைப்படுத்தி பகுப்பாய்வு செய்ய இக்கட்டுரை முயலுகிறது.

## அண்ணாவும் கல்வியும்

கல்வியானது மாற்றத்திற்கான திறவுகோல் வளர்ந்த நாடுகள அனைத்தும் கல்வியறிவு பெற்ற மக்கள் வளத்தைப் பெற்றுள்ளன. இந்நாடுகள் அனைத்தும் எல்லாத்துறைகளிலும் மேம்பட்டு நிற்பதற்கு காரணம் அவைபெற்றுள்ள கல்வி வளர்ச்சியே ஆகும். இதனை பிரதிபலிக்கும் வகையில் அறிஞர் அண்ணா

"கட்டிடத்திற்குச் செங்கல் போல வாழ்க்கை முன்னேற்றத்திற்கு படிப்பு தேவை" எனவும் "கல்வி எதற்காக கற்கிறோம்? பகுத்தறிவு பெற, புதிய பொருளைக் காண கல்வி கற்கிறோம். நாட்டிலே நல்லறிவைப் பரப்பக்கூடிய கல்வி வேண்டும். இதற்காகப் புதிய திட்டங்களை வகுக்க வேண்டும்" என எடுத்துரைக்கிறார். மேலும் வளருகின்ற சமுதாயத்திற்கு ஏற்பக் கல்விமுறை அமையவேண்டும் என்பது மறுக்க முடியாதது. சமுதாயம் அனைத்தும் மகிழ்ச்சியாக இருக்கச் செய்யவேண்டும்... சமுதாயத்தை உயர்த்துவதற்குத்தான் கல்வி என்பதை ஒவ்வொருவரும் உணரவேண்டும்" என வலியுறுத்துகிறார்.

## அறிஞர் அண்ணாவும் ஆசிரியர்களும்

ஒரு மாணவனைத் தன் வாழ்நாளில் மிகவும் பாதிக்கக்கூடியவர் பெற்றோர்களை காட்டிலும் ஆசிரியர்களே ஆவர். ஆசிரியர் பணியானது ஒரு வேலையாக கருதப்பட்டது. பின்னர் அது ஒரு பணியாக கருதப்பட்டது. இப்பொழுது அதனை தியாகம் உடைய ஒரு சமூகம் சேவையாக கருதப்படுகிறது. இதனையே அறிஞர் அண்ணா "ஆசிரியர்கள் பணி கைம்மாறு கருதாத தியாகப் பணியாகும்" என குறிப்பிடுவதை மிக ஆழ்ந்து கவனிக்கப்பட வேண்டியதாகும். ஒரு நாட்டினை செல்வச் செழிப்பான நாடாக ஆக்குவதற்கும் பாழ்படுத்துவதற்கு இரண்டு கூறுகள் உள்ளன. ஒன்று கலைத்திட்டம் மற்றொன்று அதனை மாணவர்களிடம் கொண்டு செல்லும் ஆசிரியர்கள் ஆவார்கள். அதனையும் அறிஞர் அண்ணாவின் கருத்தாக்கத்தில் காண இயலுகிறது. இதோ அவருடைய வரிகளில் "இந்த நாட்டிற்கான நிரந்தரமான செல்வத்தை தேடித்தருபவர் யாராவது இருக்கிறார்கள் என்றால் அவர்கள்தான்." அதனை கூறியதோடு மட்டுமல்லாமல் அவர்களைப் "பள்ளிப்பிள்ளைகள் என்னும் நாற்றங்கால் பயிரை நன்றாக முறையாக ஒழுங்காக வளர்த்துவரும் ஆசிரியர்கள் இந்நாட்டின் பாராட்டுக்குறியவர்கள்" என பாராட்டவும் செய்கிறார்.

## அறிஞர் அண்ணாவும் பாடத்திட்டமும்

அறிஞர் அண்ணா பகுத்தறிவு பாசாங்கு செய்யாதவர். அவரின் நினைவு, செயல், கனவு, அனைத்திலும் பகுத்தறிவு

முன்னின்றது. நாடு நலமாக இருக்க சாதி, மத இன பழைமை எண்ணங்கள் மறைந்தொழியவேண்டும் என எண்ணியவர். இதற்கு ஒரு மாமருந்தாக பகுத்தறிவை கருதிவந்தார். பழைமை ஒழிய "உலகில் அறிவுச் சுடர்கள் பகுத்தறிவு புத்தகங்கள் ஏராளமாகப் பரப்பப்பட வேண்டும் மக்களிடையே!" என்றுரைத்தார்.

"பாடத்திட்டத்திலே பகுத்தறிவைப் புகுத்தும் தீவிரமான ஒரு திட்டம் வகுக்கப்படாத வரையில் பகுத்தறிவும் பரவாது நமது நினைப்பும் உயராது" என கூறியதன் மூலமாக பாடத்திட்டத்தில் பகுத்தறிவு இடம்பெறவேண்டும் என எண்ணியவராவார். பாடங்களைத் தாய்மொழியாகிய தமிழ்மொழியில் கற்றால் திறம்பட கற்கலாம் என்பதையறிந்த அறிஞர் அண்ணா தான் தமிழக அரசின் முதல்வராக ஆனபோது கல்லூரிக் கல்வி வரை தமிழ்வழிக் கல்வியை கொண்டுவந்து பாமரர்களின் பிள்ளைகளுக்கும் கல்வி கிடைத்திட வழிவகை செய்தார்.

### மாணவர் மற்றும் பட்டதாரிகள்

மாணவர்களின் மீது அறிஞர் அண்ணா அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டிருந்தார். உலகில் படைவீரர்களைக் கொண்டும், தொழிலாளர் வர்க்கத்தைக் கொண்டும் ஆட்சிமுறையை மாற்றியவர்கள் உண்டு. அறிஞர் அண்ணா ஒருவர்தான் மாணவர்களைக் கொண்டு ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தியவர் என்னும் பெருமைக்கு உடையவர். மாணவப் பருவமானது "வாழ்க்கை களத்தில் இறங்குவதற்கு முன்பு பயிற்சியும் பக்குவமும் அடிப்படைக் கொள்கைகளில் தெளிவும் பெற வேண்டிய பருவமாக கருதுகிறார். மாணவர்கள் சமுதாயத்திற்கு உழைக்கவேண்டும் எனவும் கிராமங்களுக்குச் சென்று பாமரர்களுக்கு அறிவு புகட்டவேண்டும்" எனவும் அறிவுரை வழங்குகிறார். பட்டதாரிகள் அரசியலுக்கு வரவேண்டும் எனவும் "சுதந்திரம், சமத்துவம், சகோதரத்திற்கும் மாறான கொடுமைகளை ஒழிக்க போராட வாரீர்" என அழைப்பு விடுக்கிறார்.

### அறிஞர் அண்ணாவும் நூல்களும்

நூல்களை படிப்பது இரண்டுக்காரணங்களை அடிப்பயையாகக் கொண்டதாகும். அதாவது தகவல்களை பெறவும்

மகிழவும். தொடர்ந்து படிக்கும்போது பழைய எண்ணங்கள் திருத்தியமைக்கப்பட்டு ஆளுமைப் பண்பு வளர்ச்சியடைகிறது என்பது கல்வியியல் மற்றும் மொழியியல் கருத்தாகும். இதனை அறிஞர் அண்ணா தமது பேச்சிலும் எழுத்திலும் கீழ்க்கண்டவாறு வெளியிடுகிறார்.

"மகிழ்ச்சி ஊட்டுவது புதிய எண்ணங்களைத் தூவுவது, பழையக் கருத்துக்களை மாற்றுவது பண்பு தருவது. செயல்புரியும் திறன்அளிப்பது என்பன போன்ற பயன்களைப் பெறுவதற்கே படிக்கிறோம். ஒவ்வொரு வகைப் புத்தகமும் ஒவ்வொரு பயனை, ஒவ்வோர் அளவுக்குத் தருவதுடன் நமது மனத்தை உருவாக்க உதவுகின்றன."

அறிஞர் அண்ணா, வீடுகளில் நூலகம் அமைந்திருக்க வேண்டும் எனவும், ஆனால் "நாம் பூசை அறை, படுக்கையறை, சமையலறைகளுக்கு அளிக்கும் முக்கியத்துவத்தை நூல் அறைக்கு" அளிப்பதில்லை என வருந்துகிறார். நூல்களிலே "தன்னம்பிக்கையூட்டும் ஏடுகள் தேவை; மதியைப் பெருக்கி விதியைத் தொலைத்திடும் விளக்க நூல்கள் ஏராளமாக தேவை" என அறிவுறுத்துகிறார்.

### அரசில் செய்த கல்வி சீர்திருத்தங்கள்

- உயர் கல்வியில் தமிழ்வழிக் கல்வி
- கல்லூரிக் கல்வி வரை இலவசக் கல்வி
- மூன்றாண்டுச் சட்டக்கல்வி
- 10 அரசு கல்லூரிகள் 9 தனியார் கல்லூரிகள்
- பல்கலைக்கழகங்களில் தமிழாராய்ச்சி குறள் ஆராய்ச்சி மையங்கள்.
- இடைநிலைக் கல்வியில் மைய மதிப்பீடு
- மும்மொழிக்கு பதிலாக இரு மொழி வழிக் கல்வி
- மாநகராட்சி பள்ளிமாணவர்களுக்கு இலவச பாடநூல்.

## முடிவுரை

அறிஞர் அண்ணா பன்முக ஆளுமையுடையவர் என்பதை நாம் அனைவரும் அறிந்த ஒன்றாகும். அவர் நிரம்ப கற்றவர் மட்டுமல்ல, கற்றவற்றை வாழ்க்கையில் பயன்படுத்தி பிறர் முன்னேர பாடுபட்டவர். கவிஞராக, கதையாசிரியராக, நாடக ஆசிரியராக, புதின எழுத்தாளராக, பத்திரிக்கை ஆசிரியராக, மொழிப் பெயர்ப்பாளராக, மேடைப் பேச்சாளராக, நடிகராக, கட்சியின் தலைவராக, முதல்வராக, பன்மொழி அறிஞராகத் திகழ்ந்த அவர் கல்வியின் குறும்பகுதிகளாகிய கல்வித்திட்டம், பாடத்திட்டம், பயிற்றுமொழி, ஆசிரியரின் பணிவு, மாணவனின் நோக்கம், கல்வியின் நோக்கம் மற்றும் பாடநூல்கள் பற்றி தமது சிந்தனைகளையும் கருத்துகளையும் தமக்கே உரிய நடையில் பதிவு செய்து சிறந்த கல்வியியல் அறிஞராக விளங்குகிறார்.

# வரலாறு படைத்த அண்ணாவின் வாழ்க்கைச் சுவடுகள்

ஞா. பழனிவேலு
விரிவுரையாளர்
கல்வியியல் மற்றும் மேலாண்மையியல் துறை
தமிழ்ப்பல்கலைக்கழகம்

## முன்னுரை

வரலாறு அனைவரையும் பேசுவது இல்லை. ஆனால் பலராலும் பேசப்பட்டவரை வரலாறு பேசாமல் விடுவதில்லை. தன்னுடைய வாழ்வில் ஒவ்வொரு செயல்களையும் பின்வருபவர் பின்பற்றி உயர்வதற்கு ஏற்ற வழியாக கொண்டு வாழ்பவரே தலைவர். அவ்வாறு தமிழர்களின் தனிப்பெரும் தலைவராய் திகழ்ந்த பேரறிஞர் பெருந்தகை அண்ணாவின் வாழ்க்கைச் சுவடுகளை இக்கட்டுரையில் பதிவு செய்துள்ளேன். அவற்றைக் காண்போம்.

## பிறப்பும் படிப்பும்

"ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்"

என்ற மாதானுபங்கியின் மாசற்ற மொழிக்கு ஏற்ப தன் பெற்றோர் விரும்பிய வண்ணம் பெயரோடும் புகழோடும் வாழ்ந்த அறிஞர் அண்ணா, 15.09.1909இல் திருவாளர்கள் நடராசன் - பங்காரு அம்மாளுக்கு மகனாக காஞ்சிமாநகரில் தோன்றினார்.

"தோன்றின் புகழோடு தோன்றுக" என்பதற்கு இணங்க புகழின் உன்னத நிலை அடைந்த அறிஞர் அண்ணா தன் சிற்றன்னை இராசாமணி அம்மையாரால் வளர்க்கப்பட்டார். அவர் தன் சிற்றன்னையை "தொத்தா" என அழைப்பது இயல்பு.

1914ஆம் ஆண்டு தன் பள்ளி வாழ்க்கையை ஐந்து வயதில் துவங்கினார். அவர் தன் பள்ளிக் கல்வி முழுமையும் பச்சையப்பன் தொடக்கப்பள்ளியில் பயின்றார். 1927இல் பள்ளிப்படிப்பு முடிந்த பின் சிறிது காலம் காஞ்சிபுரம் நகராட்சியில் எழுத்தராகப் பணிபுரிந்தார். 1928இல் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு உரிய சலுகைகளைப் பெற்று அதன் மூலம் சென்னை பச்சையப்பன் கல்லூரியில் இடைநிலை வகுப்பில் சேர்ந்தார். 1934இல் பி.ஏ., (ஆனர்சு) தேர்வில் வெற்றி பெற்றார். பின் 1935ஆம் ஆண்டு எம்.ஏ., பட்டம் பெற்றார். அறிஞர் அண்ணாவின் பட்டறிவுடன் பட்ட அறிவும் இணைந்தது.

**வாழ்வும் வளர்ச்சியும்**

1930 இல் அறிஞர் அண்ணா தனது வாழ்க்கை துணையாக காஞ்சிபுரத்தில் இராணியம்மையை கரம்பிடித்தார். தன் கல்லூரி நாட்கள் அவருக்கு ஏற்ற வலுவான எதிர்காலத்தை இயல்பாகவே அமைக்க அடித்தளமாக அமைந்தன.

1931இல் தமிழரசு இதழில் பெண்கள் சமத்துவம் என்ற கட்டுரையை எழுதி வெளியிட்டார். கல்லூரியின் பொதுச் செயலாளராக தேர்வு செய்யப்பட்டு மாணவர்களுக்காக பணி ஆற்றினார்.

1932 முதல் அறிஞர் அண்ணாவின் முதல் ஆங்கிலக் கட்டுரையான "MOSCOW MOB PARADE" வெளியானது.

1933இல் கல்லூரியின் பொருளியல் மன்றத் தலைவராகத் தேர்வு செய்யப்பட்டார். பின் காங்கேயம் செங்குந்தர் இளைஞர் மாநாட்டில் பங்கேற்று முதல் சொற்பொழிவை ஆற்றினார். 1935இல் சென்னை கோவிந்தப்ப நாயக்கர் பள்ளியில் ஆசிரியராக பணியில் சேர்ந்தார்.

**அண்ணாவும் அரசியலும்**

"தோல்வி வெற்றியின் முதற்படி" என்பார்கள் பெரியோர். அறிஞர் அண்ணாவும் 1935இல் சென்னை மாநகராட்சித் தேர்தலில் நீதிக் கட்சியின் சார்பில் பெத்து நாயக்கன்பேட்டை பகுதியில் நின்று

தோல்வியைத் தழுவினார். பின் Y.W.C.A. வின் சார்பில் நடைபெற்ற "வார்தா" கல்வித் திட்டத்தைப் பற்றிய விவாதத்தில் இராஜாஜி முன்னிலையில் ஆங்கிலத்தில் உரையாற்றினார்.

1936இல் தந்தை பெரியாருடன் வட ஆற்காடு மாவட்டத்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டார்.

1938இல் தமிழகத்தில் நடைபெற்ற இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் கலந்துகொண்டு 4மாத கால சிறை தண்டனையை பெற்றார்.

1939இல் தந்தை பெரியாருடன் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டு நீதிக்கட்சியின் பொதுச் செயலாளராக்கப்பட்டார். பின் "தமிழ்நாடு தமிழருக்கே" இயக்கத்தில் பங்கு பெற்றார்.

1944இல் சேலம் நீதிக்கட்சி மாநாட்டில் திராவிடர் கழகம் என்ற பெயர் மாற்ற தீர்மானத்தை அறிஞர் அண்ணா முன்மொழிந்தார். 1945இல் திருச்சி திராவிடர் கழக மாநாட்டில் கருஞ்சட்டைப் படை அமைப்பினை ஏற்படுத்தினார்.

பெரியாருக்கும் - அறிஞர் அண்ணாவிற்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டது.

1948இல் தமிழ்நாட்டில் இந்தி கட்டாய பாடமாக்கப்பட்டதால் அறிஞர் அண்ணா போராட்டத்தில் ஈடுபட்டு சிறை சென்றார்.

1949இல் திராவிடர் கழகத்தில் பிளவு ஏற்பட்டு செப்டம்பர் 17 அன்று திராவிட முன்னேற்ற கழகம் என்ற புதிய கட்சியினை அறிஞர் அண்ணா துவங்கிவைத்தார். அதன் மூலம் நடந்த பல மாநாடுகளிலும், போராட்டங்களில் அறிஞர் அண்ணா கலந்து கொண்டார்.

1967இல் அறிஞர் அண்ணாவின் தலைமையிலான திராவிட முன்னேற்ற கழகம் தமிழகத்தின் பொதுத்தேர்தலில் அதிக அளவு வாக்குகளைப் பெற்று வெற்றி அடைந்து அறிஞர் அண்ணா தலைமையில் புதிய அரசு அமைத்தது. அதில் அறிஞர் அண்ணா முதலமைச்சராக பதவி ஏற்றார்.

## படைப்புலகம்

அறிஞர் அண்ணா தன் கல்லூரியின் வாழ்விலேயே பல கட்டுரைகளையும், கதைகளையும் எழுதியவர். 1934இல் ஆனந்த விகடன் இதழில் "கொக்கரக்கோ" சிறுகதை வெளியானது. 1942இல் காஞ்சிபுரத்தில் தன் சொந்த இதழாக திராவிட நாடு என்ற இதழைத் தொடங்கினார்.

1943இல் அறிஞர் அண்ணாவின் முதல் நாடகமான சந்திரரோதயம் அரங்கேற்றப்பட்டது. அதில் அண்ணாவும் நடித்தார்.

1949இல் செப்டம்பர் 18இல் "ஆரியமாயை" என்ற நூலை எழுதி அதற்காக சிறை சென்றார்.

மேலும் கட்டை விரல், நீதிதேவன் மயக்கம், காண்ணாயிரத்து உலகம், வேலைக்காரி, யார் கேட்க முடியும்? ஆடியபாதம், பாரதம், திரும்பிப் பார், துரோகி கப்லான், சந்திரமோகன், சந்திரோதயம் போன்ற நாடகத் தொகுப்புகளையும், இரு பரம்பரைகள், மக்கள் தீர்ப்பு, பவழ பஸ்பம், அறுவடை போன்ற சிறுகதை தொகுப்புகளையும், கடைசிக்களவு, குமஸ்தாவின் பெண் போன்ற குறுநாவல்களையும் படைத்துள்ளார்.

## உன்னதத் தலைவன்

அதுவரை மதராஸ் பட்டினமாக இருந்த நாம் வாழும் இப்பகுதியை தான் முதல்வர் பதவி ஏற்றவுடன் 1967இல் ஏப்ரல் 14ஆம் தேதியன்று "தமிழ்நாடு" எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டு சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றினார். இவ்வாறு தமிழுக்கும் தமிழ்நாட்டிற்கும் தொண்டு செய்த ஆற்றல் படைத்த அறிஞர் அண்ணா 1969இல் பிப்ரவரி மாதம் 2ஆம் நாள் இரவு 12.22 மணிக்கு அறிஞர் அண்ணா உயிர் துறந்தார். தமிழ் என்னும் அணையா விளக்கால் ஒளி பெற்ற தீபம் அணைந்தது. "உன்னத தலைவன்" உயிர் துறந்தான்.

## முடிவுரை

காஞ்சி என்றால் நிலையாமை என்பது புறத்தில்... எங்கள் தலைவனே நீ நிலையானக் காஞ்சித் தலைவன்.

ஏடுபல படித்து நீ
அறிஞன் ஆனாய்
உன்னை படித்து நாம்
அறிஞர்கள் ஆகிவிட்டோம்

என்ற கவிக்கோவின் வரிகளுக்கு இணங்க அறிஞர் அண்ணா ஒரு அறிவின் ஊற்று; அறிஞர் அண்ணா எங்கள் மனதில் விளைந்து வரும் செந்நெல் நாற்று; அறிவியல் முதல் அரசியல் வரையில், பண்புகள் முதல் படைப்புகள் வரையில் தன் சுவட்டை மக்கள் மனதிலும் வரலாற்றினும் பதிக்காத இடங்களே இல்லை என்றால் மிகையாகாது. அறிஞர் அண்ணாவே நின் புகழ் தமிழாய் வாழி!

# பேரறிஞர் அண்ணா கற்றோருக்கு வழங்கிய கருத்துரைகள்

**இரா. முத்தையன்**
விரிவுரையாளர்
கல்வியியல் மற்றும் மேலாண்மையியல் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்

### முன்னுரை

அறிஞர் அண்ணா அவர்கள் 7.09.1967ஆம் நாள் மதுரைப் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவிலும் 16.08.1967ஆம் நாள் சீரணியைத் துவக்கி வைத்து வழங்கிய கருத்துரையில் இருந்து சில கருத்துக்களை இங்குக் காண்போம்.

### 07.09.1967ஆம் நாள் மதுரைப் பல்கலைக்கழகத்தில் பட்டமளிப்பு உரை

"இந்தக் கவிதை எம்மான் இயற்றியது என்றியம்பிய சொற்கேட்டும், நெற்றிக்கண் காட்டினும் குற்றம் குற்றமே என்றுரைத்த அரிமாப் பெரும் புலவர் நக்கீரர் என்ற நற்தமிழர் கொண்டிருந்த மாண்பு தெரிகின்றது. அச்சம் தவிர்த்திடுக! நவநிதியைத் தந்திடினும் நந்திக்கிடந்திட இசையாதீர்! வாய்மைதனைக் கற்றிடும் வன்மைதனைப் பெற்றிடுக! அதற்காக நெருப்பாற்றில் நீந்திடவும் துணிந்திடுக! யாந்தமிழ் என்பதனை மெய்ப்பித்திடுக! என்றன்றோ அந்நாள் நிகழ்ச்சி நமக்கெல்லாம் ஆணையிடக் காண்கின்றோம். இந்த திருநாட்டில் பிறந்திட்ட நாமெல்லாம் ஆன்றோர் அமைத்தளித்த அருமரபுதனைக் காத்தல் நீங்காத நற்கடமை என்பதனை உணர்கின்றோம். ஏறு நடை போட்டிடுக! ஏற்றமிகு நிலையதனை இந்நாடு பெற்றிடவே உமதாற்றல் பயன்பட்ட்டும் என்றெல்லாம் புலவர் பெருமக்கள் கூறி நிற்கின்றார்கள் காண இயலவில்லை, கேட்கின்றோம் அவ்வுரையை

என்று கூறும்போது கற்றவர்கள் எவ்வளவு உயர்ந்த பொருள்களை கொடுத்தாலும் நமது கடமையை துணிந்து செய்து வாய்மையை காத்திடவேண்டும் என்கிறார்.

பட்டம் பெற்றிருக்கிறீர்! பல்கலையில் வல்லுநர் ஆகின்றீர்! பல்கலைக்கழகம் ஈன்றெடுத்த நன்மணிகளாகின்றீர்; ஆம்! ஆயின், இஃது முடிவா, தொடக்கமா? அஃதே கேள்வி! பட்டம் பெற்றுள்ளீர்! பாராட்டுக்குரியீர், ஐயமில்லை. ஆயின் பட்டம் எதற்கு? காட்டிக் களித்திடவா? அன்றிப் பணி செய்திடக் கிடைத்திட்ட ஆணையெனக் கொண்டிடவா? நுமக்கா? நாட்டுக்கா? பொருள் ஈட்டிடவா? நாட்டின் பெருமையினைக் காத்திடவா? எதற்கு இப்பட்டம் பயன்பட இருக்கிறது? அஃதே கேள்வி! தான் உண்ட நீரதனை பன்மடங்கு பெருக்கி, பார் மகிழத் தருவதற்கே, சூழ் கொண்டுலவுவது மேகம், அறிகின்றோம். தன் தோகைதனை விரித்துக் கலாப மயில் ஆடுவது, தானே கண்டு களித்திடவா? பிறர் காண பிறர் மகிழ! ஒளிதனை உமிழ்ந்திடும் திருவிளக்கு பொற்குவியல் - புள்ளிக்கலாப மயில் - கார்மேகம், நாட்டைச் செழிக்கச் செய்திடும் வல்லுநர்கள். இசைபட மக்கள் வாழ உமதாற்றலை ஈந்திட வந்துள்ளீர்! இதற்கான அனுமதி சீட்டே இந்தப் பட்டங்கள். இத்தகையோரைப் பயிற்றுவித்து அனுப்பிக் கொடுப்பதுவே பல்கலைக்கழகத்தின் தனிச்சிறப்பு. நாட்டின் பொதுவுடமை, நீவீர் இன்று நமக்கென்று பெற்றுள்ள நற்பட்டங்கள், மறந்திடுவோர் அல்ல, நீவீர். எனினும் எடுத்துரைக்க வந்துள்ளேன். இயம்புகின்றேன். என பட்டம் பெற்ற கற்றவர்களுக்கும் கற்றவர்களை உருவாக்கிய பல்கலைக்கழகத்தின் கடமையைச் சிறப்பாக எடுத்துக் கூறுகின்றார்.

நன்று இது, இது தீது, நமதிது, பிறர் தந்ததிது, மரபு இது, மருள் இது என்பதனை ஆய்ந்தறிந்து கூறுவதற்கும் அவ்வழி நடந்து மக்கள் மாண்பினைப் பெற்றிடச் செய்வதற்கும், ஆற்றல் மிக்க அறிவுப்படை எழுந்தபடி இருந்திட வேண்டும். அதற்கான பயிற்சிக் கூடம், பல்கலைக்கழகம், நாடு பல்வளமும் பெற்றிடும் நல்கலையைக் கற்றிட அமைந்துள்ள நக்கீரக்கோட்டம். 1964 - 1966ஆம் ஆண்டு தேசியக் கல்விக் குழுவினர் இதனை வலியுறுத்தி கூறியுள்ளனர். எவருக்கும் கட்டுப்படாமல், இழுப்பார் பக்கம் சாய்ந்துவிடாமல், சிந்தித்து உண்மையறிந்து, அறிந்ததனை

விளக்கமுடன் எடுத்துரைத்து, ஆளடிமையாகாமல், அச்சமற்றறு நிற்போரை அளிப்பதற்கே பல்கலைக்கழகம் - என்று கருத்துபட அக்குழுவினர் கூறியுள்ளனர். ஆய்ந்தறிதல் வேண்டும். அதற்கேற்ற அஞ்சாமை வேண்டும். இன்றேல், சிந்தனையைச் சிறையிலிட்டுக் கொடுமையைக் கோலோச்சச் செய்வதற்கு உடந்தையானோர் ஆகிவிடுவோம் என்றுரைக்கின்றார், எச்சரித்திருக்கின்றார் பெர்ட்ராண்டு ரசல் எனும் பெருமகனார். ஈராயிரம் ஆண்டுகட்கும் முன்னர் இங்கு அமர்ந்திருந்த புலவர்கள் கூறிச்சென்றார்கள். இவை போன்ற ஏற்றமிகு நல்லுரைகள் பற்பலவற்றை, இடையில் அவை மறந்தோம், அல்லலுற்றோம் இன்று அவனியின் பிற பகுதியிலுள்ள ஆன்றோர் அதனை அறிவிக்கின்றார். பட்டம் பெற்றிடும் இத்திருநாள் உவகை பெற்றிட மட்டுமே அமைந்ததன்று. உறுதி கொண்டிடவும், உள்ளதோர் நன்னாள். நாட்டைக் காத்திடும் நல்ல பணிக்கு நம்மை நாமே ஒப்படைக்கின்றோம் என்பதனை உணரும் நாளே, இந்நாள் என்று மாணவர்களுக்கும் பல்கலைக்கழகத்திற்கும் பணிகளை பாங்காக சுட்டிக்காட்டுகின்றார்.

தேவையற்றவை, தீது தருபவை, பொருளற்றவை, பொருத்தமற்றவை இவையெல்லாம் பழமையின் பெயர் கொண்டோ நமது உடமை என்ற பாசம் காட்டியோ தொகுத்திடுதல் வேண்டும். எங்கிருந்து கிடைத்தினும் ஏற்புடையதெனின், எமதாக்கிக் கொள்வோம் என்ற நோக்கம் தேவை. அதனைத் தந்திடவும் அதன் மூலம் பயன் கண்டிடவும், முனைந்து பணியாற்றிட வேண்டும். “தாய்மொழி” என்றும் தகுதிக்கு ஈடாக, வேறு எந்த தகுதியையும் ஒரு மொழி பெற்றிடத் தேவையில்லை. ஆயினும் நமது தமிழ்மொழி, நமது தாய்மொழி என்பதால் மட்டுமன்று, வளமிக்கது என்பதாலும் எவரும் வியந்து பாராட்டத்தக்கதாகிறது. அங்கே வளம் கெடாமலும் மேலும் வளரவுமான செயல்களைச் செம்மையாக்கித் தருவது உமது கடமையாகும். தமிழ் ஆட்சி மொழியாக எல்லாத் துறைகளிலும் திகழ்வதற்கான சூழ்நிலையை உருவாக்குவதில் வெற்றி பெற்றிட உமது நல்லார்வம் நிரம்பத் தேவை. தமிழ் உமது முரசாகட்டும், பண்பாடு உமது கவசமாகட்டும், அறிவு உமது படைக்கலனாகட்டும், அறநெறி உமது வழித்துணையாகட்டும் உறுதியுடன் செல்வீர், ஊக்கமுடன் பணிபுரிவீர்! ஏற்றமிகு வெற்றியினை ஈட்டிடுவீர், பாட்டு மொழியுடைய நமது தாயகம்

வாழ தரணிக்குத்துணை நின்றிடும் தகுதிபெற, சென்றிடுவீர்! வென்றிடுவீர்! என்று அறிஞர் அண்ணா கற்றோருக்கு கருத்துரையை கனிவுடன் கூறியுள்ளார்.

### 16.08.1967ஆம் நாள் நாடு நலம்பெற சீரணியைத்

### துவக்கி வைத்து ஆற்றிய உரை

அரசு மேற்கொள்ளும் தூய, நல்ல திட்டங்களுக்குத் துணை நிற்பது, உதவுவது, ஒத்துழைப்பது நாட்டுக் குடிமக்கள் அனைவரது பொறுப்பு. ஆனால் எல்லா மக்களும் இதில் நேரடியாக ஈடுபட இயலாது. எனவே சிலராவது தங்கள் நேரத்தில், உழைப்பில் ஒரு பகுதியைச் சமுதாயப் பணிக்கு அளித்திட வேண்டும் என்பதே சீரணியின் அடிப்படை நோக்கம்.

1. ஊதியம் பெற ஓய்வு நேரப் பணி ஆற்றல்
2. தன்னலங் கருதாப் பொதுப்பணி பேணல்
3. தன் மதிப்பையும், தன்னம்பிக்கையும் வளர்த்தல்
4. உழவும் தொழிலும், வளர உறுதுணையாக நிற்றல்
5. கல்வியறிவும், பொது அறிவும் வளர வகை செய்தல்
6. பொது நலம் காண துப்புரவுப் பணி மேற்கொள்ளல்
7. தீண்டாமைக் கொடுமைகளை அகற்றுதல்
8. அன்பு வழியாக சமூகக் கேடு களைதல்
9. திக்கற்றவர்களுக்குத் துணைபுரிதல்
10. அறவழி நின்று அனைவருக்கும் உதவுதல்

மேலும் சீரணியின் நோக்கம் வன்முறை அல்ல, தூய தொண்டாற்றவும் தோழமை வளர்க்கவும், சாதாரண, சராசரி மக்களானாலும் தங்களது ஆற்றலை, தூயத்தொண்டினை - நாட்டு வளத்தைக் கூட்ட மக்களின் வாட்டத்தைப் போக்க அளித்திட

வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். மேலும் நாட்டுக்காகச் செய்யவேண்டிய பணிகள் நிரம்ப இருப்பினும் குறிப்பாகத் துப்புரவு பணியிலும், முதியோருக்கு கல்வி அறிவூட்டுவதிலும் சீரணித் தொண்டர்கள் கவனம் செலுத்த வேண்டும் என்று சீரணித் தொண்டர்களுக்கு அறிவுரைகளை வழங்கியுள்ளார்.

## முடிவுரை

அறிஞர் அண்ணாவின் கருத்துரைகளைக் கேட்டு அவரின் வழியில் செயல்பட்டால் நாட்டில் எதுவும் இல்லாமை என்பதனை இல்லாமல் ஆக்கிவிட முடியும். கல்வி அறிவு பெற்றவர்களாகவும் நாடு வல்லரசு மிக்க நாடாக உலக அரங்கில் சிறந்து விளங்கும் என்பது உண்மையான உண்மையாகும்.

# அறிஞர் அண்ணாவின் பகுத்தறிவுக் கல்வி

இரா. ஆனந்த்அரசு
விரிவுரையாளர்
கல்வியியல் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்

## அறிமுகம்

தொல்காப்பியர் காலத்திற்கும் முற்பட்ட தமிழறிஞர்கள் அமைத்தளித்த பகுத்தறிவு கருத்துக்கள் தந்தை பெரியாரால் மீண்டும் புத்துயிர்ப்பெற்று, பேரறிஞர் அண்ணாவின் சிந்தனையாற்றலாலும் செயல்வன்மையாலும் சொல்லாற்றலாலும் எழுத்துத்திறத்தாலும் செழித்துள்ளது என்று கூறலாம். இவ்வாறு வளர்ந்ததற்கு காரணமான பழந்தமிழர்களின், அறிவு, புலனறிவு, ஆறாவது அறிவு, பகுத்தறிவு, உணர்ந்தறியும் அறிவுப் போன்றவைகள் அறிஞர் அண்ணாவின் பகுத்தறிவு சிந்தனைகளாக வெளிக்கொணரப்பட்டுள்ளன.

## அறிவு

அறிவு என்றால் என்ன? எதை அறிவெனக் கொண்டனர் பழந்தமிழர்? இந்நாள் மக்கள் பெறும் அறிவின் நிலை என்ன? உலக நாடுகளில் அறிவின் வளர்ச்சி எவ்வாறு உயர்ந்துள்ளது? தமிழருடைய நிலையும் நினைப்பும் தாழ்ந்துள்ளமைக்கு யார் பொறுப்பு என்ற வினாக்கள் இளந்தமிழ் நெஞ்சங்களில் வெடித்துக் கிளம்பின. விளக்கங்களும் ஆய்வுரைகளும் குடிசைகளைத் தொட்டுப் பார்த்திட முனைந்தன. 'அறிவு என்பது உயிர் பிறவற்றை உணர்ந்து தெரிந்து கொள்ள முயல்வது' என்ற தமிழின் மறுமலர்ச்சி கட்டம் உருவானது.

## புலனறிவு

உடம்பினால் வெம்மை, தன்மை, வன்மை, மென்மையை மனிதன் உணருகின்றான், கசப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, இனிப்பு, புளிப்பு எனும் சுவைகளை நாவினால் உணர்ந்தறிகின்றான். நல்ல மனம், தீய நாற்றம், நெறி ஆகியவற்றை மூக்கினால் உணர்ந்தறிகின்றான். கண்ணினால் பொருள்களின் வடிவம்,

வண்ணம் ஆகியவற்றை உணர்ந்து அறிகின்றான். செவியினால் இன்னிசையும், ஓசைவேறுபாடும், சொற்களின் பொருள் வேறுபாடும் உணர்ந்து கொள்கின்றான். இவ்வாறு வாய், உடம்பு, மூக்கு, கண், காது ஆகிய ஐம்பொறிகளின் வழியாக உணர்ந்து தெரிந்து கொள்வனவற்றை புலனறிவு அல்லது ஐம்புலனறிவு என்றனர்.

## ஆறாவது அறிவு

புலன்களால் உணர்ந்து பெறுவதைப் போன்றே மனிதன் தன்னுடைய மனதினாலும் பொருள்களை ஒப்பிட்டும் வேறுபடுத்தியும் உணர்கின்றான். பொருள்களின் தன்மையை மனதின் உதவியால் எண்ணி எண்ணி தேர்கின்றான். எத்தன்மைதாயினும் மெய்ப்பொருள் காண முயல்கின்றான், எவர்வாய்க் கேட்பினும் மெய்ப்பொருள் தேட முனைகின்றான். அவ்வாறு மனதினால் உணர்ந்தும், கற்பனை செய்தும் நிகழப்போவதைக் கணித்தும் புதுமைப்படைத்தும், உணர்ந்திடும் அறிவினை ஆறாவது அறிவு என்று போற்றியுள்ளனர்.

## உணர்ந்தறியும் அறிவு

உடம்பினால் அறிவது ஓரறிவுயிர் என்றும், உடம்பினாலும் வாயினாலும் உணர்ந்தறிவது ஈரறிவுயிர் என்றும், உடம்பினாலும், வாயினாலும், மூக்கினாலும் உணர்ந்தறியும் திறன்பெற்றது மூவறிவுயிர் என்றும், அம்மூன்றுடன் கண்ணாலும் உணர்ந்தறிவது நான்கறிவுயிர் என்றும், அவற்றுடன் செவியினாலும் உணர்ந்தறிவது ஐயறிவுடைய விலங்கு என்றும், அவற்றுடன் ஆறாவதாக மனத்தினால் உணர்ந்தறியும் மாட்சியைப் பெற்ற மனிதன் ஆறறிவுடைய உயிர் என்றும் பகுத்தறிந்துள்ளார் பழந்தமிழ்றிஞர். மனித இனம் ஆறறிவு பெற்று சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்பனவற்றின் வகை தெரிந்துணர்ந்த சான்றோர்களை உடையது உலகம் என்றும் கணித்தனர். அச்சான்றோர்களை 'உயர்ந்தோர், அறிவின் முனைவர், அறிவர்' என்று தொல்காப்பியம் குறிப்பிடுகின்றது. விதிவிலக்காக மனிதர்களுள் சிலர் தீயொழுக்கம் உயைடவர்களாகி உலகில் வாழ்ந்துகொண்டு உலகின் வளர்ச்சிக்கும், மகிழ்ச்சிக்கும் தடைக்கற்களாக இருந்து வருகின்றனர். அப்போக்கினையும் கூட அந்நாள் தமிழர் நன்கு பகுத்துணர்ந்து தெரிவித்துள்ளனர்.

## பகுத்தறிவு

தந்தைப் பெரியார் ஒருவரே இருபதாம் நூற்றாண்டில் பழந்தமிழர் பகுத்தறிவுக் கருத்துக்களை மீண்டும் உயிர்ப்பெற்றிட செய்து, தமிழர் உள்ளத்தில் படிந்துள்ள அறிவு மாசுக்களை தீயிட்டு அழித்துவிட்டு புத்தறிவு பூத்திட செய்ய

வேண்டும் என்றார். தமது 'அறிவின் எல்லை' என்ற நூல் தமிழர் மறுமலர்ச்சி காண்பது அது நாட்டுக்கு முழுப்பயன் தராது, அழுகிய நாற்றமடிக்கும் அனைத்தையும் அழித்து புத்தறிவு வேளாண்மை செய்ய வேண்டும், இத்தமிழ் சமுதாயத்தை மாற்றியமைக்க வேண்டும் என்றார். ஆகவே தான் தமது இயக்கத்தை மனப்புரட்சி இயக்கம், அறிவுப் புரட்சி இயக்கம், பகுத்தறிவு இயக்கம் என்று அறிவித்தார். இவரோடு பொதுப்பணியாற்ற புறப்பட்ட அறிஞர் அண்ணா இயக்கத்தின் எழுச்சி மிக்க தளபதியானார், அறிவுப் பணியே தம்முடைய கடமையாக, குறிக்கோளாக, கொள்கையாகக் கொண்டு பகுத்தறிவுப் பாய்ச்சும் 'திராவிட நாடு', 'காஞ்சி' இதழ்களையும் தமிழகத்தில் அறிவியக்கப் பணியாற்றிட செய்தார்.

மக்களை ஏமாற்றித் தந்திரமாக வாழ்ந்து தன்னலத்தை வளர்த்துக்கொள்ளவே வழிகாணும் கூட்டம், பகுத்தறிவுக் கல்வி, வள்ளுவர் வகுத்தளித்த அறிவியக்கம் என்ற அமைப்பு வன்மைப் பெற்றுவிட்டால் தமக்கு அழிவு நேரிடும் என்று அஞ்சி அவ்வியக்கத்தினை கடவுள் எதிர்ப்பு இயக்கம் என்று மக்களுக்கு அறிவு தெளிவற்றவர்களுக்கு எடுத்துரைத்து, ஆண்டவனை துணைக்கழைத்து அறியாமையை வேளாண்மை செய்திடலாயிற்று, எதிர்ப்புகளை எல்லாம் வரவேற்று அந்நூற்றாண்டு முழுவதும் அறிவுப்பயணத்தை தடையின்றி மேற்கொண்டார்.

தொல்காப்பயிர் காலத்திற்கும் முற்ப்பட்ட தமிழர் அமைத்தளித்த பகுத்தறிவு இயக்கக் கருத்துக்கள் தந்தைப் பெரியாரால் மீண்டும் புத்துயிர்ப் பெற்று, பேரறிஞர் அண்ணாவின் சிந்தனையாற்றலாலும், செயல்வன்மையாலும், சொல்லாற்றலாலும், எழுத்து திறனாலும் வளர்ந்து முகடு எய்தி கலைஞரின் பாதுகாப்பில் செழித்துள்ளமையை அறியாத தமிழர் எவருமிலர்.

## நிறைவுரை

அறிஞர் அண்ணாவின் எழுத்து தலைசிறந்த இலக்கியமாகவும் கருத்து கருவூலமாகவும், கற்பனைக் களஞ்சியமாகவும், வரலாற்றின் வடிவமாகவும், அரசியல் ஆராய்ச்சியாகவும், புரட்சிப் பொறியாகவும், பகுத்தறிவுப் பட்டறையாகவும், சீர்த்திருத்த செல்வமாகவும், பல்சுவைப்பகுதியாகவும் விளங்கும். 'திராவிட நாடு' ஏட்டைப் படித்து பாடம் பயின்று பேச்சாளரானவரே தற்கால பகுத்தறிவுப் பேச்சாளர்களில் பெரும்பாலோர் என்பதை கொண்டே அறிஞர் அண்ணாவின் எழுத்தின் பெருமையை இத்தன்மைதென அளவிட்டு கூறலாம்.

# அறிஞர் அண்ணா கவிதையில் கல்விச் சிந்தனைகள்

முனைவர் **சி. சிவக்குமார்**
விரிவுரையாளர்
கல்வியியல் மற்றும் மேலாண்மையியல் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுரையும்
தெய்வத்துள் வைக்கப்படும்

என்ற தெய்வப்புலவரின் குறள்வரிகளுக்குள் தம்மைப் புகுதிக் கொண்ட 20-ம் நூற்றாண்டின் இணையற்ற மாமேதை அறிஞர் அண்ணா அவர் இருண்ட சமுதாயத்தின் விடிவெள்ளி, தென்னகத்தின் திருவிளக்கு, தீன் தமிழர்தம் குல விளக்கு, மடமை என்னும் காரிருளைக் கிழித்து அறிவொளி பரப்பிய ஞாயிறு, சோர்ந்து கிடந்த தமிழினத்தை தம் சொல்லாலும் செயலாலும் எழுத்தாலும் தட்டி எழுப்பிய, தன்மான உணர்ச்சியூட்டிய பகலவன், மொழிக்காக போர் தொடுத்த முதல்வீரன். மக்கள் மனதில் இடம்பிடித்த ஒரு சகாப்தம் இதற்கு காரணம் அறிஞர் அண்ணா என்ற சகாப்தத்தின் பன்முகத் தன்மையே. அவைகளைப் பற்றியும், சமுத்திரவியல் (கடல்) பற்றிய கல்வி சிந்தனைகளைப் பற்றியும் சுருக்கமாக ஆனால் ஆழமாக இக்கட்டுரையில் ஆய்வு செய்வோம்.

## வாழ்க்கையும், இளமைப் பருவமும்

1909-இல் செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள காஞ்சிபுரத்தில் எளிய நெசவாளர் குடும்பத்தில் நடராசன் - பங்காரு அம்மாள் தம்பதியருக்கு செப்டம்பர் 15-ஆம் தேதி அன்று பிறந்தாலும், தனது சிற்றன்னையாகிய தொத்தா என்று அறிஞர் அண்ணாவால் அன்போடு அழைக்கக்கூடிய ராசாமணி அம்மையாரால் வளர்க்கப்பட்டார். உரிய நேரத்தில் திருமணமும் இராணி எனும்

அம்மையாருடன் நடந்தேரியது. அறிஞர் அண்ணா எளிய வாழ்வை செம்மையாக்கியவர். அறிஞர் அண்ணா என்றால் அது அவரையே சேரும்.

கண்ணீர் துளிகளையே கடலுக்கு வைத்தவனைக் கவிதை ரச வாதத்தால் கடலாக்கிப் பாட வந்தவன் அறிஞர் அண்ணா?

நீச்சலடிக்கும் கலையறியேன் நான் நெடுங்கடலில் இறங்குகிறேன், மூச்சடிக்கும் முறையறியேன், நான் முத்தெடுக்க மூழ்கிறேன், நிலத்தில் வசிக்கும் நீர் எனும் ஈர நிலத்தில் மூத்த குளிர் கடல் அல்லவோ? என்றார் அறிஞர்.

பேரளவாலும், பிறப்பதனாலும் நீர்கோளம் "அண்ணன்" நெடுங்கடல் அல்லவோ? பேர் அளவாலும் பேரன்பினாலும் எமக்கெல்லாம் அண்ணனாய் இருந்தவன் நீயன்றோ?

## ஆற்றுநீர் ஊற்றுநீர்

ஆற்றுநீர் ஊற்றுநீர் வேற்றுநீர் என்றே முந்நீர் கொண்டதால் மூத்தக் கடலை முந்நீர் என்றே முத்தமிழ் அழைத்தது. கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்னும் முந்நீர்மை கொண்டத்தால் முந்நூர்கான் நீயும் "உணர்ந்த தமிழோடு உள்ளம் உருகப் புணர்ந்த புணரி" நீ அண்ணா! ஆழம் அறியாமல் காலை விட்டவர் மூச்சுத்தினரி மூழ்கிட, அளவிலான சூழம் கொண்ட "ஆழி" நீ அண்ணா!

வேலை எரிந்த வீணர்க்கும் நலந்தரும் வேலை செய்த "வேலை" நீ அண்ணா! பாரியைப் போல பாவலர்க் கெல்லாம் வாரி வழங்கிய வாரி நீ அண்ணா!

தொய்தல் அறியாத் தூயத்தமிழ் ஆடை நெய்தலைச் செய்த "நெய்தல்" நீ அண்ணா! சப்பென்றிருந்த சமுதாயத்தில் உப்புச் சுவையை ஊட்டிய உபரி நீ அண்ணா, உம்பரந்த அறிவால் பரந்த மனத்தால் பரவைதான் நீயும் அறிஞர் அண்ணா, குட்டையென்றெண்ணிக் குடிக்க நினைத்த அகத்தியர்க் கெல்லாம் அகப்படாக் கடல் நீ அண்ணா! நீ உதய சூரியனின் ஒளியால் எழுந்த வானவரை உயர்ந்து இம் மண்வளம் பெற்றிட ஈரப் பணிகள் இயற்றிய வள்ளலே! "ஆவி" விடினும் ஆழிய தவன் நீ அண்ணா!

உமிழ்நீர் ஊறி உண்ட கடல் போல், தமிழ்போல் உனக்கும் தனியாத பசிதான் அண்ணா? அதனால் அந்த அலை கடல் போலவே கலை நூல் பலவும் கரைத்து குடித்தாய் சங்க நதிகள் சகலமும் உடைய நீ எங்களுக்களித்த செல்வங்கள் எத்தனை அருணோ தயத்தின் அழகுபோல் கடலும் உன் கருணா நிதியைக் காலம் மறக்குமோ அண்ணா!

மதுமதி அழகில் மயங்கி கழித்துப் பொங்கி எழுந்து பூரித்தவன் நீ அண்ணா! நம் சொத்தென மதிக்குமோர் முத்தளித்தவன் நீ அறிஞர் அண்ணா பழைய மாதவன் பள்ளியறை நீ ஆரவாரமற்ற அமைதிக் கடல் நீ அண்ணா! திகட்டாத உனது திர உரையாடலில் மனம்பறி கொடுக்காத மனிதரும் உண்டோ அண்ணா ஆணையில் யாரும் அடக்க முடியாத குரலுடையவன் நீ, நீயோ தீவிரம் எனினும் சிரித்தே ஏற்பவன் தரமிலாத் திட்டையும் தாங்கும் பண்பினன்.

கண்டங்கள் உனக்கே உண்டென்றாலும் அவற்றால் உனக்கோர் ஆபத்தும் இல்லை. உன்னால் தான் அவை உருக்குலைந்து போயின அண்ணா! உப்புக் கடலுனக்கு ஒப்பெனச் சொன்னேன் ஒப்புக் கொள்கிறேன், ஒப்புக்கு சொன்னேன். ஆதவார அலைகடல் எங்கே? அமைதியே உருவாய் அமைந்த நீ எங்கே தமிழை அழித்த தடங்கடல் எங்கே? தமிழையும் காத்தவுன் தனிப்புகழ் எங்கே? அண்ணா.

வற்றாத பெருநீர் வைத்திருந்தாலும் தாகம் எடுத்தால் தணிப்பதற்கே உப்புக் கடலிடம் ஒருதுளி உண்டோ? எங்கள் தாகம் தணிப்பதற்கென்றே பேனாவைப் பெற்றிருந்தவன் நீ கரையை அழிக்கும் கடலெங்கே? எங்கள் கறையை அழிக்கும் உன் கருணை எங்கே? சொல். அறிஞர் அண்ணாவின் நாமம் வாழ்க!

### மேற்கோள் நூல்கள்

அண்ணா தம்பிக்கு எழுதிய கடிதம்
அண்ணாவின் கவிதை தொகுப்பு
அண்ணாவின் வாழ்க்கை வரலாறு

# அறிஞர் அண்ணாவும் கல்வியும்

**ரெ. மாரியய்யா**
உடற்கல்வி ஆசிரியர்
தமிழ்ப் பல்கலைக்கழகம்

## முன்னுரை

"எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு"

கற்கப்படும் நூல்களுக்குக் கருவியாக இருப்பவை எண்ணும், எழுத்துமாகும், அதுபோல் நாம் வாழ்கின்ற வாழ்க்கைக்கு உயர்வைத் தருவது அறிஞர் அண்ணாவுடைய கருத்துகளாகும். எனவேதான் வாழ்கின்ற நமக்கு அறிஞர் அண்ணாவும் அவரது கல்வியும் இருகண்கள்தான் என்பதில் ஐயமில்லை.

## அறிஞரின் அறிவாற்றல்

கல்லூரியில் படிக்கின்றபொழுதே மற்ற நூல்களை படிக்க தொடங்கினார். ஓய்வு நேரங்களில் நூலகங்களிலும், படிப்பகங்களிலுமே அவரை காணமுடியும். தாய்மொழியினை போல் ஆங்கிலத்திலும் நல்ல புலமைப் பெறவேண்டும் என்ற எண்ணம் மேலோங்கியது. நாளடைவில் ஆசிரியர்களும், மற்ற மாணவர்களும் வியக்கும் வகையில் அவருடைய பேச்சும், எழுத்தும் இருமொழிகளிலும் சிறப்புற்றிருந்தது. அப்பொழுது அண்ணா எழுதிய ஒரு கட்டுரையை ஆசிரியர்களே அளவற்ற வியப்புக்கொள்ளும் வகையில் அமைந்திருந்தது. விவாதம் விவேகத்தை வளர்க்கும் என்பது அவருடைய கொள்கை, எனவே கல்லூரியில் நடக்கும் அனைத்து பட்டிமன்றங்களிலும், பேச்சு போட்டியிலும் கலந்து வெற்றி கண்டுள்ளார்.

## பாராட்டுகள்

அவருடைய பேச்சுகள் போல் எழுத்துகளும் பாராட்டை பெற்றது. இருமொழியிலும் திறன் படைத்தவர். ஆதலால் "மாஸ்கோ அணிவகுக்கலாம்" என்ற தலைப்பில் அறிஞர் அண்ணா எழுதிய ஆங்கில கட்டுரை சிறப்புடையதாயிற்று. அதனை அக்கல்லூரியில் உள்ள அனைவராலும் பாராட்டப்பட்டது. 1931 மார்ச் 19ல் தமிழரசு என்ற தன்மான இயக்க ஏட்டில் "மகளிர் கோட்டம்" என்னும் இவரது முதல் கட்டுரை வெளியானது. இது பல பேர் பாராட்டுகளை அந்நாளில் பெற்றது. 1932ல் நீதிகட்சி தலைவர்களும், தொழிலாளர்கள் தலைவருமான சி.பாசுதேவ் அவர்களின் ஆங்கில உரைகளை அறிஞர் அண்ணா தமிழில் மொழிபெயர்ப்பு செய்தார். இது அண்ணாவுக்கு தொழிலாளர்கள் மத்தியில் பெரும் மரியாதையும், பாராட்டையும் பெற்றது. 1934ல் பிப்ரவரி 11ல் ஆனந்த விகடனில் "கொக்கரக்கோ" என்ற சிறுகதைகள் வெளிவரத்தொடங்கியதால் பலரும் அண்ணாவை அறிய ஒரு வாய்ப்பாயிற்று. பின்பு அறிஞர் அண்ணா அவர்கள் இதே ஆண்டில் கல்லூரி படிப்பை முடித்தார்.

## சமூக சிந்தனை

அன்றைய ஆங்கில நாளேடு ஆசிரியர்களான ஜஸ்டிஸ் நாதன், சண்டே அப்சர்வர், பாலசுப்ரமணியன் போன்றவர்களின் தூண்டுதலின் பேரில் நீதிகட்சியில் இவர் உரையாற்ற தொடங்கினார். இவருடைய பேச்சை கேட்பதற்கு மாணவர் உலகம் இவர் பக்கம் திரும்பிற்று. மேலும் சட்டம் படிக்க ஆசைபட்டு சட்டக்கல்லூரியில் சேர்ந்த சில நாட்களிலேயே இவர் படிப்பை நிறுத்திவிட்டார். காரணம் அன்றைய பொருளாதார நிலை, பின்பு அறிஞர் அண்ணாவின் பேச்சாலும், எழுத்தாலும் நாட்டில் ஒருவிழிப்புணர்வு ஏற்படத் தொடங்கியது.

அறிஞர் அண்ணாவின் அறிவு கூர்மையும் மொழி புலமையையும் பாராட்டி அமெரிக்காவின் "ஏழ்" பல்கலைக்கழகம் டாக்டர் பட்டம் வழங்கியது. அறிஞர் அண்ணாவை "தென்னாட்டின் பெர்னாட்ஷா" என்றும் அழைத்தனர். இவருடைய அறிவையும், உடனுக்குடன் எந்த கேள்விக்கும் பதில் சொல்லும் திறன்

படைத்திருந்ததால் இவரை ஒரு பல்கலைக்கழகம் என்றும் அழைத்தார்கள். அறிஞர் அண்ணாவின் பெருமையை உணரச்செய்யும் வகையில் அமைந்ததுதான் இன்றைய அறிஞர் அண்ணா பல்கலைக்கழகம் ஆகும்.

## முடிவுரை

அறிஞர் அண்ணாவின் எழுத்தாலும், பேச்சாலும் சமூகத்தில் புதிய மாற்றம் ஏற்பட்டு நாளடைவில் புதிய சகாப்தம் படைக்க அண்ணாவும் அவரது கல்வியும் வழிவகுத்தது என்பதை யாராலும் மறைக்கவும் மறக்கவும் முடியாததாகும். எனவே வாழ்கின்ற நமக்கு அண்ணாவின் அறிவும் கல்வியும் நமக்கெல்லாம் இரு கண்களாகும்.

**அறிஞர் அண்ணா வாழ்க! அறிஞர் அண்ணாவின் அறிவுச்சிந்தனைகள் வளர்க! வாழ்க வையகம்!**

# அறிஞர் அண்ணாவின் கல்விச் சிந்தனைகள்

**ஞா. சிவகுமார்**
முனைவர்பட்ட ஆய்வாளர்
தமிழ்ப் பல்கலைக்கழகம்

**ஞா. பழனிவேலு**
விரிவுரையாளர், கல்வியியல் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்

## அறிஞர் அண்ணா

காஞ்சி நகரில் பிறந்தவர். கல்வியறிவில் சிறந்தவர். அண்ணாவின் பெயர் சொன்னால் அறியாத பேர்களே இந்நாட்டில் யாவரும் இல்லையப்பா என்ற பெருமைக்குறியவர். காலத்தை உற்றுநோக்கு! கண்திற புது வழியில் நட! நான் வீணுக்கு கூறுவதில்லை! நான் கூறுவது வீண் போவதுமில்லை! போன்ற புரட்சிக் கருத்துக்களுக்கு சொந்தக்காரர்தான் அறிஞர் அண்ணா.

## கல்விச் சிந்தனை

அறிஞர் அண்ணா தாம் வகுத்த இலக்கணங்களுக்குத் தாமே இலக்கியமாக வாழ்ந்து காட்டியவர். அவரது அறிவாற்றல் எளிமை மனிதநேயம் எதையும் தாங்கும் இயல்பு அனைவரையும் அரவணைத்துச் செல்லும் பாங்கு மற்றும் திராவிடநாடு, காஞ்சி, முரசொலி போன்ற இதழ்களை நடத்தினார். அண்ணா தம் கலை இலக்கியப் போர்க்கருவியினைக் கையில் ஏந்தி தாழ்த்தப்பட்டோர் அடக்கப்பட்டோர் ஒடுக்கப்பட்டோர் புறக்கணிக்கப்பட்டோர் களுக்காக குரல் கொடுத்தார். மாணவர்களுக்கென கல்விக் கருத்துக்கள் சிந்தனையை தூண்டும் வகையில் நூல்கள் நாடகங்கள் சிறுகதைகள் புதினங்கள் போன்றவற்றை படைத்துள்ளார். அரவிந்தரின் தத்துவ கூற்றுப்படி கல்வி என்பது வெறும் கடந்த காலத்தையொட்டிய ஒன்றாக அமையாமல் நிகழ்காலத்தை உருவாக்கி வரும் காலத்தேவைக்கு நம்மை தயார்படுத்தும் வகையில் கல்வி அமையவேண்டும் என்று கூறினார். அறிஞர் அண்ணாவின் கல்விச் சிந்தனைகளும் இக்கூற்றை தழுவியவாறே விஞ்ஞானப் பாதையை ஒட்டியும் நிகழ்காலத் தேவைக்கும் மற்றும்

எதிர்காலத்திற்கும் கல்வி பயன்பட வேண்டும் என்று தம் கல்விச் சிந்தனைகளை கூறினார்.

## புத்தகங்கள்

புத்தகங்கள் என்பன மகிழ்ச்சி ஊட்டுவது புதிய எண்ணங்களைத் தூவுவது பழைய கருத்துக்களை மாற்றுவது பண்பு தருவது. செயல் புரியும் திறன் அளிப்பது என்பன போன்ற பயன்களைப் பெறுவதற்காக படிக்கிறோம். ஒவ்வொரு வகை மனத்தை உருவாக்க உதவுகின்றன.

## பாடமுறை மாற்றப்படவேண்டும்

பாமரர்களிடம் படிப்பு இல்லை படித்தவர்களிடம் பண்பு இல்லை. இன்று சொல்லித் தரப்படுகிற பாடமுறையே மாற்றி அமைக்கப்படவேண்டும். சிந்தனையைக் கிளறும்படியான எந்தத் திட்டமும் நம் கையில் இல்லை அப்படிப்பட்ட திட்டத்தை நாம் புதிதாக உருவாக்க வேண்டும்.

## கல்வித்துறையில் ஹிட்லர் முறையும் நமது முறையும்

ஜெர்மனி நாட்டின் ஹிட்லர் தன் ஆட்சியில் கல்வித் துறையில் புகுத்திய புதிய முறைதான் பிள்ளைப் பருவத்திலேயே ஜெர்மனி நாட்டு இளைஞர்களுக்கு ஹிட்லரிடமும் பக்தியும் இராணுவத்திடம் மரியாதையும் நாசிசத் திட்டம் நம்பிக்கையும் கொள்ளச்செய்தது. நாமும்தான் பிள்ளைகளுக்கு கணக்குப் போடுகிறோம். நமது பிள்ளைகளிடம் நான் நான்கு மாம்பழங்கள் வைத்திருந்தேன். அதை இரண்டு பேருக்கு கொடுத்தால் ஆளுக்கு எத்தனை மாம்பழம் என்று கணக்குப் போடுவோம். பிள்ளைகளோ மாம்பழம் ஆளுக்கு எத்தனை என்று சிந்திப்பதைவிட மாம்பழத்தின் சுவை எப்படி இருக்கும் என்று சிந்திப்பதில் நினைப்பை அதிகமாக செலுத்துவார்கள். ஆனால் இப்படியல்லாமல் ஜெர்மனியில் பிள்ளைகளுக்குக் கணக்குப் போடுவது 4 டாங்கிகள் தாம் நம்மிடம் இருக்கின்றன. எதிரியிடம் 8 டாங்கிகள் இருக்கின்றன எப்படி இந்த 4 டாங்கினை கொண்டு எதிரியை தோற்கடிப்பது என்ற முறையில் கேள்வி இருக்கும். இன்று ஒரு மணித்துளிக்கு அறுபது கல் வேகத்தில் செல்லும் வானூர்தி காலை 7 மணிக்கு இங்கிருந்து கிளம்பி இலண்டனில் குறித்த இடத்தில் குண்டு வீசிவிட்டு

வரவேண்டும் என்றால் எத்தனை மணி பிடிக்கும் என்ற கேள்வியிருக்கும். இத்தகைய கேள்விகள் தாம் ஜெர்மானிய நாட்டின் இளைஞர்களுக்கு இராணுவத்திடம் ஆசையையும் நாசிசத்திடம் பற்றையும் கொடுத்தன. இதைப்போல இராணுவ படிப்பையும் ஹிட்லர் கையாண்ட நாசிச முறையையும் நாம் கல்வியில் கடைபிடிக்க வேண்டும் என்று நான் கூற வரவில்லை. கல்வித் துறையில் கற்பித்தல் வழியாக மக்களுடைய மனத்தை எப்பக்கத்திலும் திசை திருப்பலாம் என்பதை வலியுறுத்தவே இதை எடுத்துக்காட்டினேன் என்று கூறி சிந்தனையை தூண்டிவிட்ட பெருமை அறிஞர் அண்ணாவையே சாரும்.

## பாடத்திட்டத்திலே பகுத்தறிவு

பாடத்திட்டத்தில் பகுத்தறிவைப் புகுத்தினால்தான் மக்களுக்குப் பழமையிலுள்ள பாசம் குறையும். மனத்திலுள்ள மாசு நீங்கும் காலத்திற்குத் தக்கதுபோல் கருத்து வளரும்.

## சிற்றூர்களுக்கு மாணவர்கள் செல்ல வேண்டும்

மாணவர்களிடம் படிப்பு இருக்கிறது. படிப்பைப் பாமரர்களுடன் பகிர்ந்துகொள்ள வாய்ப்பிருக்கிறது. ஆனால் திட்டம் வகுக்கப்படவில்லை. சமுதாயத்திற்கு உழைக்கவேண்டும் என்ற ஆர்வமுள்ள மாணவர்கள் சிற்றூர்களுக்குச் சென்று அங்குள்ள பாமரர்களுக்கு அறிவு புகட்டவேண்டும் முன்னேற்றம் சமாதானம் சமதருமம் பகுத்தறிவு ஆகிய அழகான வார்த்தைகளின் வாசனைகளை அவர்களும் நுகரும்படி செய்யவேண்டும். இதுதான் அறிவுப்பிரச்சாரம் அறியாமையை இந்த நாட்டைவிட்டு ஓட்டும் வழி அதுவே. ஆனால் இந்தப் பணி எளிதானது அன்று ஆபத்து நிறைந்தது எந்த நேரமும் எதிர்ப்பு வரலாம். இதை செயலாற்றும் போதுதான் உணரமுடியும் என்றார் அறிஞர் அண்ணா.

## அறுவடை செய்யப் பெற்ற நூல்கள்


1. அண்ணாவின் சிந்தனைகள் - கவிஞர் இளஞ்செழியன் எம்.ஏ
2. அண்ணாவின் சமுதாயப் புரட்சி - அறிஞர் அண்ணா
3. அண்ணா ஓர் அறிவாலயம் - செ.ஆ.கிருட்டினமூர்த்தி

# அறிஞர் அண்ணாவின் பொது வாழ்க்கை

ப. சீரங்கன்
தமிழ்ப் பல்கலைக்கழகம்

அறிவுக் கடலாய், கருத்து மேகமாய், அன்பில் செம்புலப் பெயல் நீராய், பாமரர்களுக்குப் பழகிய உரைநடையாய், இலக்கிய வாதிகளுக்கு வரலாற்று அறிஞர்களுக்கு அரசியல் நாயகனாய் தன்மான வீரர்களுக்குப் பகுத்தறிவாளராய்ப் பேரறிவு படைத்தோர்க்கு கருவாய்த் திகழ்ந்தவர். சி.என்.அண்ணாதுரை எனபதே அவரது முழுப்பெயர். தமிழ்நாட்டு மக்கள் அவரை அன்புப் பெருக்கால் 'அண்ணா' என்றே அழைத்து வந்தார்கள்.

நாளடைவில் அவரது அறிவாற்றலைக் கண்டு, அவரை 'அறிஞர் அண்ணா' என்று அழைக்கத் தொடங்கினார். மக்கள் அவ்வண்ணம் அவரை அழைத்ததற்கேற்ப அறிஞர் அண்ணா அவர்கள் தாழ்ந்து கிடந்த தமிழகத்தை தலைநிமிரச் செய்வதற்குப் பாடுப்பட்ட தனிப்பெரும் தலைவர்களுள் குறிப்பிடத்தக்க பெருமையுடையவர் ஆவார். தம் பேச்சாலும், எழுத்தாலும், தன்னடக்கத்தாலும், தலைமைப் பண்பாலும், நேர்மை உணர்வாலும், நிர்வாகத் திறனாலும், ஈடு இணையற்றவராக விளங்கினார் அறிஞர் அண்ணா.

### அண்ணா விரும்பிய சமூக மாற்றம்

அறிஞர் அண்ணா அவர்கள் பெண்களுக்கு உரிமைகள் தரப்பட வேண்டும், கல்லாமை நீக்கப்பட வேண்டும், இல்லாமை போக்கப்பட வேண்டும் என விரும்பினார். ஏழை, பணக்காரன் பாகுபாடு இருக்கக் கூடாது, சாதி வேற்றுமைகள் நீக்கப்பட வேண்டும் என்றார்.

### எழுத்துப் பணி

'தமிழரசு' எனும் ஏட்டில் 1931ஆம் ஆண்டு "மகளிர் கோட்டம்" என்ற தமது முதல் கட்டுரையை வடித்தார்; அடுத்து

ஆண்டு "சோசையா சாஸ்திரியின் அறக்கட்டளை" சார்பாக நடைபெற்ற போட்டியில் மாஸ்கோவில் மக்கள் பேரணி என்ற தலைப்பில் முதலாளித்துவத்தையும், மார்க்சியத்தையும் ஆராய்ந்து பார்த்து வளமிக்க ஆங்கிலத்தில் தந்த கட்டுரை அனைவரையும் அதிர்ச்சியும் மகிழ்ச்சியும் கொள்ளச் செய்தது.

1934ஆம் ஆண்டு அறிஞர் அண்ணாவின் முதல் சிறுகதை கொக்கரக்கோ ஆனந்த விகடன் இதழில் வெளிவந்தது.

1935ஆம் ஆண்டு சென்னை ஒய்.எம்.சி.ஏ. சார்பில் நடைபெற்ற பேச்சுப் போட்டியில் அறிஞர் அண்ணா அவர்கள் வார்தா கல்வித் திட்டம் பற்றி ஆற்றிய சொற்போர் அவ்விழாவில் தலைமை தாங்கிய இராஜாஜியை வியப்படையச் செய்தது.

## பத்திரிக்கைத் தொடர்புகள்

"நவயுகம்", "விடுதலை" என்ற பத்திரிகைகளில் அறிஞர் அண்ணா தமது கருத்துக்களை எழுதி வந்தார். அறிஞர் அண்ணாவின் கட்டுரைகள் உணர்ச்சி மிக்கவை, அவற்றில் சில:

பரதன் - வீரன் வாதங்கள்

ஊரார் உரையாடல்

ரிப்பன் கட்டடத்துச் சீமான்கள்

அறிஞர் அண்ணா ஆரம்பித்த பத்திரிக்கை, திராவிட நாடு ஆங்கிலப் பத்திரிக்கை, 'ஹோம் லேண்டு'லும் கட்டுரைகள் எழுதினார்.

## திராவிடக் கழகம் தொடக்கம்

1944ஆம் ஆண்டு நீதிக்கட்சியின் மாநாடு சேலத்தில் நடத்தப்பட்டது. அறிஞர் அண்ணாவினுடைய தீர்மானப்படி கட்சியின் பெயர் திராவிடர் கழகம் என மாற்றி அமைக்கப்பட்டது.

## திராவிட முன்னேற்றக் கழகம் தொடங்குதல்

பெரியார் 72-வது வயதில் திருமணம் செய்து கொண்டார். அதை எதிர்த்த அறிஞர் அண்ணா பெரியாரை விட்டுப் பிரிந்தார். மக்களுக்கு சேவை செய்ய புதிய அமைப்பு தேவை என உணர்ந்தார். "திராவிட முன்னேற்றக் கழகத்தை தோற்றுவித்தார்".

1934-இல் அறிஞர் அண்ணா எம்.ஏ. பட்டம் பெற்றார். அதன் பிறகு அவர் சட்டப்படிப்புப் படிக்க விரும்பினார். ஆனால் குடும்பத்தில் அதற்கேற்ற சவுகரியமில்லை. அதையறிந்த சென்னையில் வசிக்கும் மாணிக்க முதலியார் என்பவர் அறிஞர் அண்ணா சட்டக் கல்லூரி சேர்வதற்கு உதவி செய்தார். ஆனால் மாணிக்க முதலியார் சில மாதங்களிலேயே காலமாகிவிட்டார். அதனால் அறிஞர் அண்ணா சட்டக் கல்லூரியில் தொடர்ந்து படிக்க இயலாமற்போயிற்று. படிப்பு முடித்ததும் அறிஞர் அண்ணா வேலை செய்து பொருள் தேட வேண்டியது அவசியமாயிற்று. குடும்பநிலை அம்மட்டில் இருந்தது. அதனால் அவர் சென்னை கோவிந்தப்பன் நாயக்கன் பள்ளியில் ஆசிரியராக சேர்ந்தார். ஆனால் அவர் மனப்பூரணமாக ஈடுபாடு கொள்ளவில்லை. நானிலம் கேட்டு மகிழும் நாவன்மையும் புதிய சிந்தனைகளை உருவாக்கும் கட்டுரை வன்மையும் கொண்ட அறிஞர் அண்ணாவின் இயல்பிற்கு ஆசிரியர் பணி என்றும் சிறிது வட்டம் போதுமானதாக அமையவில்லை. அதனால் அவ்வேலையைவிட்டு பொதுப்பணியில் பெரிதும் அக்கறைக் காட்டினார்.

## நாட்டுப்பற்று

அறிஞர் அண்ணா நாட்டுப்பற்று மிகுந்தவர். அதை விளக்கிடும் எடுத்துக்காட்டுகள் சில, நமது நாட்டின் விடுதலைக்காக சத்தியாக்கிரகப் போராட்டம் நடைப்பெற்றது. வெள்ளையர்கள் பிரித்தாளும் சூழ்ச்சியைக் கையாண்டனர். நீதிக் கட்சியினரை ஆட்சி அமைக்கும்படி வற்புறுத்தினார்கள். நீதிக்கட்சியின் நிர்வாகக் குழுவிலும் இதனைத் தீர்மானமாகக் கொண்டுவந்தார். இது அவரது நாட்டுப்பற்று விளக்கம். 1947-ஆம் ஆண்டு நாம் சுதந்திரம் பெற்றோம். பெரியார் அந்நாளை துக்க நாளாகக் கொண்டாடும்படி அறிக்கை வெளியிட்டார். அறிஞர் அண்ணா நாட்டுப்பற்று மிகுந்தவர். அதனால் தமது தலைவரைவிட நாடு பெரிது என எண்ணினார்.

## பொது வாழ்வில் விருப்பம்

வறுமை நீங்க, குடும்பத்தினர் அறிஞர் அண்ணாவை வேலைக்குப் போகச் சொன்னார்கள். அறிஞர் அண்ணாவுக்கு ஆசிரியர் வேலை கிடைத்தது. ஆனால் அறிஞர் அண்ணாவுக்கு மக்கள் பணியாற்ற வேண்டும் என்ற விருப்பம் இருந்தது. அதனால் ஆசிரியர் வேலையையும் விட்டு விட்டார்.

## நீதிக்கட்சித் தொடர்பு

குழந்தை திருமணத்தடை சட்டம் கொணர்ந்தும், தாழ்த்தப்பட்டவர்களுக்குப் பேருந்தில் இடமளிக்க மறுத்த நிறுவனங்களுக்குப் பேருந்து நடத்த இசைவு வழங்க மறுத்த நீதிக்கடசிதான் தம் பொது வாழ்விற்கு வாய்ப்பளிக்கும் எனத் திடமாக நம்பினார். எனவே நீதிக்கட்சியில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார். (திரு.பாசுதேவ், சண்டே அப்சர்வர் ஆசிரியர் திரு.பாலசுப்பிரமணியம், திரு. டி.எ.வி.நாதன் ஆகியோர் அறிஞர் அண்ணாவிற்கு நீதிக்கட்சித் தொடர்பு ஏற்பட பலமாக விளங்கினார்கள்)

## பெரியாருடன் அண்ணா சந்திப்பு

அறிஞர் அண்ணா நீதிக்கட்சியின் கூட்டங்களில் பேசினார். அவர் பேச்சினைக் கேட்ட மாணவர்கள் அறிஞர் அண்ணாவின் மீது பற்றுக் கொண்டனர். திருச்சியில் நடந்த நீதிக்கட்சி மாநாட்டிலும் கலந்துக் கொண்டார். அங்கு பேசிய பல தலைவர்களின் ஆங்கிலப் பேச்சைத் தமிழில் மொழிப் பெயர்த்தார்.

## அறிவின் சிகரம்

அண்ணாமலை பல்கலைக்கழகத்தின் மாணவர் பேரவையில் தமிழ்த்துறைத் தலைவர்கள் டாக்டர் சிதம்பரநாத செட்டியார் தலைமையில் அறிஞர் அண்ணா அவர்கள் சொற்பொழிவு நிகழ்த்துவதற்கு ஏற்பாடாகியிருந்தது. "இப்பொழுது அறிவின் சிகரமான அறிஞர் அண்ணா அவர்கள் சொற்பொழிவு நிகழ்த்துவார்கள்" என்று குறிப்பிட்டார் தலைவர் டாக்டர் செட்டியார். உடனே அறிஞர் அண்ணா எழுந்ததும் "அறிவின் சிகரம் இப்படி குள்ளமாக இருக்காது, நமது டாக்டர் சிதம்பரநாத செட்டியாரை போல உயரமாகவே இருக்கும்" என்று கூறினார்.

## நிறைவுச் செய்தி

வாளின் முனையைவிட பேனாவின் முனை வலியது. பேச்சாற்றல், ஆட்சி மாற்றங்களை உருவாக்கும். எழுத்துத்திறனும், பேச்சுத்திறனும் உள்ள ஒருவன் உலகமெங்கும் புகழ் பெற முடியும். இவற்றிற்கு எடுத்துக்காட்டு அறிஞர் அண்ணா.

# அறிஞர் அண்ணாவின்
# சமுதாய சிந்தனைகள்

**கோ. சங்கீதா**
இளங்கல்வியியல்
தமிழ்ப் பல்கலைக்கழகம்

## முன்னுரை

இருபதாம் நூற்றாண்டில் தமிழ்நாட்டு அரசியலில் மட்டுமல்லாது இந்திய அரசியலிலும் தமக்கெனத் தனியிடம் கொண்டவர் அறிஞர் அண்ணா. அரசியல் வாழ்க்கையிலும், இலக்கிய பேச்சுகளிலும், மேடை முழக்கங்களிலும், சொற்பொழிவுகளும், சட்டமன்ற அரைகளும் அவற்றின் வழி அவருடைய 'சமுதாயச் சிந்தனைகள்' ஆகியவை அனைத்தும் என்றும் நம் நெஞ்சில் நிற்பவை. இவை எல்லாம் ஒருசேரக் கண்ட அண்ணாவிடம் அறிஞர் அண்ணாவின் சமுதாய சிந்தனைகள்' என்னும் தலைப்பின் கீழ் அறிஞர் அண்ணாவின் நூற்றாண்டு விழா கொண்டாடும் இத் தருனத்தில் என் கருத்தை பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்.

## அறிஞர் அண்ணாவின் சமுதாய சிந்தனைகள்

### சமுதாய சிந்தனை என்றால் என்ன?

மக்கள் கூடி வாழ்கின்ற போது சமுதாயம் உருவாகிறது. தம் எண்ணம், சொல், செயல் ஆகியனவற்றைத் தன் குடும்பம், சுற்றம், நட்பு என்னும் அளவில் இணைத்து நோக்கத்தக்க பயிற்சிக் களமே சமுதாயம். அச்சமுதாயத்தின் உயர்விற்கும், நெறிப்பட்ட இயக்கத்திற்கும் உருவாக்கித் தரப்படுகின்ற கருத்துகள் சமுதாயச் சிந்தனைகளாக மிளிர்கின்றன. எந்தத் துறையாக இருந்தாலும் சமுதாயத்தில் இருக்கிற பண்பின் பிரதிபலிப்பாகத்தான் அந்த துறை

இருக்குமே தவிர சமுதாயத்திற்கு அப்பாற்பட்டதாக எந்தத் துறையும் இருக்க முடியாது என்பது அறிஞர் அண்ணாவின் 'சமுதாயச் சிந்தனைப்' பற்றிய கருத்தாகும்.

## தாழ்த்தப்பட்டோர் பற்றிய அறிஞர் அண்ணாவின் சிந்தனை

தாழ்த்தப்பட்டோர் இழிவு நிலை எவ்வாறெல்லாம் ஏற்படுகிறது என்பதை மிகச் செறிவாக நன்கு மை ஏற்றுச் சொற்களால் அறிஞர் அண்ணா தெரிவிக்கிறார்.

நம் நாடு முன்னேற முதலில் 'அண்டாமை' 'தீண்டாமை' 'நுழையாமை' உண்ணாமை வித்தியாசத்தை ஒழித்தே தீரவேண்டும் என்றார்.

## கலை வளர்ச்சி சிந்தனை

கலை கலைகளை வளர்ப்பதற்காகவும் பண்பாட்டை போற்றுவதாகவும் உணர்வை மதிப்பதற்காகவும் அமைய வேண்டும் மாறாக ஓர் இனம் மற்றொரு இனத்தை அடக்கியாளும் வண்ணமாக இருத்தல் கூடாது என்று கூறுகிறார்.

## மொழி வளர்ச்சி சிந்தனை

மொழி எண்ணுவதை எடுத்துரைக்கும் கருவியாக மட்டுமல்லாது எண்ணத்தை உருவாக்கும் கருவியாகவும் உறுதுணையாகும் கருவியாகவும், வாழ்க்கையினை உயர்திடவும், உணர்ந்திடவும் உதவதக்கதாக இருக்க வேண்டும் என்கிறார் அறிஞர் அண்ணா.

## ஆதிக்க எதிர்ப்பு

சாதியை ஒழிப்பதைவிட தீண்டாமையை ஒழிப்பதற்கு வேறு மார்க்கமில்லை என்று சுட்டிக் காட்டிய அறிஞர் அண்ணா சாதியை ஏற்படுத்தியவர்கள் திருந்திவிட்டார்கள். மற்றவர்கள் சாதியை வைத்துக் கொண்டிருக்கிறார்கள் எனச் சட்டமன்ற பேரவையில் உரைத்துள்ளார்.

# அறிஞர் அண்ணாவின் தமிழ்க்கொடை

ந. மாமலைவாசன்
இளங்கல்வியியல்
தமிழ்ப் பல்கலைக்கழகம்

## முன்னுரை

பேரறிஞர் அண்ணா தமிழ் அன்னையின் தலைமகன். அவர் அன்னைத் தமிழுக்கு அழகு சேர்த்திட அழகுமிகு இலக்கியங்களை, வள்ளலாய் வாரி வழங்கிச் சென்றார். இருபதாம் நூற்றாண்டின் இலக்கியங்கள் அனைத்தையும் தன் பேனாவின் நுனியால் மக்களின் மனதில் பதியவைத்துத் தன் கொடையாக தமிழுக்கு அவர் செய்த தொண்டினை இங்கு காண்போம்.

## கவிதை இலக்கியம்

"கவிதை அல்ல
கவிதையாக ஆக்கிக் கொள்ளலாம்"

என்று தன் கவிதையின் துவக்கத்தில் தன்னைப் பற்றிய சுய விமர்சனத்தை தானே எழுதியவர் அண்ணா.

கதைப்பாடல், வாழ்த்துப்பாடல், முகப்பு விளக்குப்பாடல், இயக்கக் கோட்பாட்டுப்பாடல், தேர்தல் நோக்குப்பாடல், இசைப்பாடல், இதழ் வாழ்த்து, பொங்கல் வாழ்த்து மற்றும் மொழி பெயர்ப்புகள் என தன் கவிதைகளை எழுதியவர் நம் பேரறிஞர் பெருந்தகை.

"கால தேவன் கீறிவிட்ட
கோடுகள் - முகத்தில்
முதுகினிலே பெரியசுமை
உலகம் ஏற்றி வைத்தது!
மகிழ்ச்சி மாய்ந்துவிட்டது!
நம்பிக்கை தீய்ந்து விட்டது!

அவனுக்கு அக்கதி வரச்
செய்தவர் யார்?
திகைத்துக்கிடக்கிறான்
சிந்தனை அற்று
எருதுக்கு இவனும்
உடன் பிறப்பாளனோ!

அறிஞர் அண்ணாவின் கவிதை. தலைப்பு - நீங்கள் படைத்த ஏழை.

இவ்வாறு தன்னுடைய கவிதைகளில் விடுதலை உணர்வு, சாதிவேறுபாடு, பொருளாதார ஏற்றத்தாழ்வு, வைதீக எதிர்ப்பு இவற்றை பேச்சுமுறைத் தோரணையில் ஆடம்பரம் அற்ற மொழி நடையில் தமிழ் மொழிக்கும் மக்களுக்கும் வழங்கியவர் அறிஞர் அண்ணா.

**சிறுகதை இலக்கியம்**

"மூர்த்தி சிறிதெனினும் கீர்த்தி பெரியதென்பார்" பெரியோர். அவ்வழியே குறைந்த அளவினதாயினும் சமுதாயத்தின் மேடு பள்ளத்தையும், உயர்வு தாழ்வையும் அப்படியே படம் பிடித்துக் காட்டி அறியாதவர்களுக்கு அதனை அறிவித்து பாடம் புகட்டும் வகையில் அறிஞர் அண்ணாவின் சிறுகதைகள் அமைந்தன. அவை முறையே,

மூட நம்பிக்கை ஒழிப்பு
பெண் உரிமை
ஆரிய எதிர்ப்பு
முதலாளித்துவ எதிர்ப்பு
சமுதாய ஒப்பீடு
வரலாறு
உருவகம்
உண்மை நிகழ்ச்சிச் சித்தரிப்பு
உளவியல்
பாத்திர நோக்கச் சி.்தரிப்பு
பொதுநிலை

என்னும் பதினொரு விதமான கருப்பொருள்களைக் கொண்டு அமைந்தன. அவற்றில் உத்தி, உள்ளடக்கம், நடை ஆகியவை முக்கிய இடம் பிடித்தன.

1934 இல் கொக்கரக்கோ என்னும் முதல் சிறுகதையை எழுதி வெளியிட்டார். கல்லூரி நாட்களில் சௌமியன் என்ற புனைப்பெயரில் பல படைப்புகளை எழுதியுள்ளார் அறிஞர் அண்ணா.

"சொர்க்கத்தில் நரகம், கருப்பண்ண சுவாமி யோசிக்கிறார், தனபால் செட்டியார் கம்பெனி, தங்கத்தின் காதலன் முதலியன அறிஞர் அண்ணாவின் சிறுகதைகளில் சில.

1940 இல் செவ்வாழை என்னும் சிறுகதையை எழுதினார். இன்றளவும் மக்கள் மனதில் நீங்காத இடம்பிடித்த சிறுகதைகளில் செவ்வாழையும் ஒன்று.

## நாவல் இலக்கியம்

"மகிழ்வூட்டலை முதற்கருவாகவும் அஃதுடன் நன்னெறியூட்டலை முதற் கருத்தாகவும் கொண்டதே சிறந்த நாவல்" என்பார் அ.மாதவையா. அதன்படி அறிஞர் அண்ணாவின் புதினங்கள் யாவும் சமுதாயத்தின் வளர்ச்சிக்காகவும், சமூகச் சீர்கேட்டை சாடுவனவாகவும், சாகா வரம் பெற்ற சரித்திரங்களாகவும் அமைந்தன.

அறிஞர் அண்ணா தன் நாவல்களில் சாதி ஒழிப்பு, பொருந்தா மணக் கொடுமை, போலி சமய வாதிகளை தோலுரித்தல், கலப்பு மண ஆதரவு ஆகியவற்றை பற்றி பெரும்பாலும் அமைந்தன.

நிறைவான கதை அமைப்பு, நவரசங்களின் வெளிப்பாடு, கருத்துக்களை ஆழ்ந்து வலியுறுத்தும் தன்மை, மேலும் குழப்பமற்ற தெளிவான நடையினை உடையதாகவும் அண்ணாவின் நாவல்கள் திகழ்ந்தன.

கலிங்கராணி, ரங்கோன்ராதா, குமாஸ்தாவின் பெண், பார்வதி பி.ஏ., கபோதிபுரக்காதல், பரிசு, குமரிக்கோட்டம், மக்கள் தீர்ப்பு, பவள பஸ்பம், சந்திரோதயம், புதிய பொழிவு, தழும்புகள், வண்டிக்காரன் மகன், வெள்ளை மாளிகையில் போன்றவை அறிஞர் அண்ணாவின் ஆற்றல் மிகு நாவல்களாக வெளிவந்தன.

## நாடக இலக்கியம்

"இயற்றமிழ் இசைத்தமிழ் நாடகத்தமிழென
வகைப்படச் சாற்றினர் மதியுணர்ந்தோரே"

என பிங்கலம் என்ற நூல் உரைக்கிறது. அதுபோல குளிர் மதியாம் நம் அறிஞர் அண்ணாவும் கவிதையாய் இசைத்தமிழும், கதையாய் இயற்றமிழும் கூறி நாடகத்தமிழையும் சொல்லி நல்ல தமிழால் நம் மனதை நெகிழச் செய்கிறார்.

சமுதாய சிற்பியான அறிஞர் அண்ணா நாடகத்தினை நாடக்கூடிய மனங்களுக்கு நல்ல பலக்கருத்துக்களை வாழைப்பழத்தில் ஊசி ஏற்றினாற்போல புரிய வைத்தார்; மனதில் பதிய வைத்தார்.

ஓர் இரவு நாடகத்தை ஓர் இரவில் எழுதிய நம் தென்னாட்டு பெர்னாட்ஷா மேலும் பல சமுதாயச் சிக்கல்களை முடிச்சு அவிழ்க்கும் விதமாக பல நாடகங்களை ஏட்டில் எழுதி, மேடைகளில் நடித்தும், நடிக்கச் செய்தும் பலகோடி மக்களின் உள்ளக் கதவுகளை உணர்வுடன் தட்டியவர்.

சந்திரோதயம், நீதிதேவன் மயக்கம், கண்ணீர் துளிகள், கல்சுமந்த கசடர், வேலைக்காரி, வழக்குவாபஸ், காதல் ஜோதி, சொர்க்கவாசல், பாவையின் பயணம், நல்லதம்பி போன்ற நாடகங்களை எழுதி தமிழ்நாட்டு வேந்தன் தமிழ் நாடக வேந்தனாகவும் நன்மை செய்தார்.

## முடிவுரை

நாவல் நாவாய் ஒட்டி, நாளும் தமிழர்களின் சிந்தனை முத்துக்களை தன் எழுத்தால் மாலையாக்கி, அரசியல் இருளில் மூழ்கிக் கிடந்த தமிழர்களை கரைசேர்த்தப் பெருமை அறிஞர் அண்ணாவுக்கே சேரும் என்றால் மிகையாகாது.

எழுத்தாற்றல், சொல்லாற்றல், சுவையாற்றல் இவற்றில் தன் ஆற்றலைப் புகுத்தி புதியதோர் சூரியனைத் தமிழகத்தில் தோன்றச் செய்தார்.

தன்னுடைய படைப்புகளில் சமுதாய நோக்கத்தினையும், மக்கள் நல்வாழ்வினையும், தமிழக இருளை போக்குவதையும் எண்ணமாகக்கொண்டு அன்னைத் தமிழை அழகு சேர்த்ததுடன் அவள் மக்களையும் நல்ல பாதையில் நடத்திச் சென்றார் அண்ணா.

*அண்ணா நாமம் வாழ்க!* *அவர் புகழ் ஓங்குக!!*

# உழைப்பு மற்றும் உரிமை பற்றிய அறிஞர் அண்ணாவின் கருத்து

**ச. கிருபா**
இளங்கல்வியியல்
தமிழ்ப் பல்கலைக்கழகம்.

## முன்னுரை

*வாழ்க்கையின்*
*அங்கமாம் - உழைப்பு*
*அந்த உழைப்பின்*
*அங்கமாம் - முன்னேற்றம்*
*அந்த முன்னேற்றத்தின்*
*அங்கமாம் - மானிடம்*
*அம்மானிடத்தின்*
*அங்கமாம் - பெண்கள்*
*இவை யாவற்றையும்*
*அங்கப்படுத்திய*
*சமூகம் பற்றி*
*அண்ணாவின் கருத்துக்கள் இதோ!*

வாழ்வின் ஒவ்வொரு செயற்பாட்டிலும் மனிதன் இன்னொருவரையோ, இயற்கையையோ சார்ந்து வாழ வேண்டியிருக்கிறது. மனிதனின் கூடி வாழும் இயல்பே சமுதாயத்தின் தோற்றத்திற்கு வித்திட்டது. மனிதன் நாகரிகம், பண்பாடு முதலானவற்றில் வளர்ச்சி பெற்று பல்வேறு துறைகளில் முன்னேறினர். இச்சூழலில் மக்களிடையே தொழில்வாரியாக பாகுபாடு ஏற்பட்டது. அச்சூழலில் அறிஞர்கள் தமது சீர்திருத்த கருத்துக்களை இதழ்கள் மூலம் வழங்கினர். அவர்களுள் அறிஞர் அண்ணா வழங்கிய சீர்திருத்தக் கருத்துக்கள் மிகவும் குறிப்பிடத்தக்கவை.

## உழைப்பவர் நிலை

தொழிலாளர் வாழ்வில் வளமிருந்தால் நாடும் வளத்துடன் சிறந்து விளங்கும். உழைப்பவர் வாழ்க்கை இருளடைந்து இயற்கைச் செல்வம் கவனிப்பாரற்று இருந்தால் நாட்டில் வறுமை நிலவி, பொருளாதாரம் பாதிக்கப்படும். சமுதாயம் முன்னேறாது. சமுதாயத்தில் உழைக்கும் வர்க்கம், பிறர் உழைப்பில் வாழும் வர்க்கம் என்று வர்க்க பேதங்கள் இருந்துவருகின்றன. அறிஞர் அண்ணா உழைப்பாளர்களின் நிலையைக் குறிப்பிடும்போது,

> "நாணயத்தின் இருபக்கங்கள் போல் ஒரு பக்கம் உழைப்பு என்றால் மறுபக்கம் உரிமை என்று இருந்தால்தான் அது சீரானதாக இருக்கமுடியும் என்பதை வலியுறுத்துகிறார். உழைப்பைக் காட்டி உரிமைகளைச் சுட்டிகாட்டி உழைப்பை மதிக்காமல் இருப்பதோ அதுவும் உலகத்துக்கு உதவுவதாக இருக்கமுடியாது. உரிமைகள் கேட்கப் படுகின்ற அளவுக்கு உழைப்பும் வழங்கப்பட வேண்டும். உழைக்கின்ற அளவுக்கு உரிமைகளும் தாராளமானதாக வழங்கப்படுதல் வேண்டும்."

## கல்விச் சிந்தனைகள்

### மாணவரும் சமுதாயமும்

மனித வாழ்க்கைக்கு கல்வி இன்றியமையாதது; சமுதாயத்திற்கு ஒளி கொடுக்கும் விளக்காகக் கல்வி விளங்குகிறது. சமுதாயத்தில் நிலவும் ஏற்றத்தாழ்வுகளை அகற்றி முன்னேற்றத்திற்கு வழிகாண, கல்வி இன்றியமையாததாகும். சமுதாய முன்னேற்றத்தில் மாணவர் பங்குக்கொள்ள வேண்டுமென்பது அறிஞர் அண்ணாவின் கருத்து. அத்துடன் பொதுநலனையும் மேற்கொள்ள வேண்டும் என்னும் கருத்தின் அடிப்படையில் அறிஞர் அண்ணா பின்வருவனவற்றைக் கூறுகிறார்.

> "தனித்த வாழ்வில் சொந்த குடும்ப முன்னேற்றத்திற்கான அடிப்படையில் பணம் தேடுவது என்பது மட்டுமே வாழ்வின் குறிக்கோள் என்ற முறையில் நீவிர் எல்லாம் ஒழுகிடல் வேண்டும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. நான் மட்டும் அல்ல நாட்டுச் சமுதாயமே அப்படித்தான் கருதுகிறது. பொருளீட்டும் நோக்கத்தோடு

அதையும்விடச் சிறந்த உயர்ந்த மாண்புறும் பொதுநோக்கு பொதுநன்மை ஆகியவற்றுக்காகவும் நீங்கள் உழைத்திட வேண்டும்."

## மாணவரின் வாழ்வியல் நெறிமுறைகள்

1. கருத்துத் தெளிவும், சுதந்திரமும், செயல்திறனும் மிக்கோராய் வாழ்ந்திடும் உள்ளப்பாங்கும், உறுதியும் மாணவரிடத்து அமைந்திடல் வேண்டும்.
2. சமரச நோக்கம், பரந்த மனப்பான்மை, சத்துள்ளது எது? சாரமற்றது எது? என்பன பகுத்துணரும் போக்கு.
3. எந்த பிரச்சினையும் அச்சம், தயை, தாட்சண்யம் விருப்பு, வெறுப்பற்ற நிலையில் நோக்கிடும் நெஞ்ச வலிமை.
4. மற்றவர்களது கருத்தையும், கண்ணோட்டத்தையும் உணர்ந்து மதித்து நடந்திடும் சகிப்புத்தன்மை நன்னெறியுடன் கூடிய சான்றாண்மை மிக, மிக அவசியம் என்கிறார்.

## மகளிர் முன்னேற்றம்

சமுதாயத்தில் மகளிர் பங்கு குறித்து அறிஞர் அண்ணா குறிப்பிடுகையில் "பெண்களின் முன்னேற்றமே நாட்டின் முன்னேற்றம்" என்கிறார். திருமணங்கள் இரண்டு இதயங்களை இணைப்பதாக அமைய வேண்டுமென வலியுறுத்தினார். அன்பால் இணைந்த குடும்பங்கள் அமைந்தால் சமுதாயம் சீராக மேம்பட்டு ஒட்டுமொத்தமாகச் சமுதாயம் முழுவதற்கும் நன்மை பயக்கும் என்கிறார்.

## முடிவுரை

சமுதாயத்தினருக்கு உணவளிக்கும் தொழில்களில் முதன்மையானதாகக் கருதப்படுவது உழவுத்தொழிலாகும். உழவுத் தொழிலின் முக்கியத்துவம், பயன், சமுதாயத்தில் உழைப்பவர்களின் பங்கு, வேளாண்மையின் சிறப்பு முதலியன விளக்கப்பட்டுள்ளன.

அறிஞர் அண்ணா உழைப்பைக் கடவுளாகப் போற்றினார். கடவுள்பெயரால் நிகழும் அநீதியை எதிர்த்துப்போராடினார். மூடநம்பிக்கையினை வெறுத்தார்.

# அறிஞர் அண்ணாவின் நோக்கில் பெரியார்

**பி. தனலெட்சுமி**
தமிழ்ப் பல்கலைக்கழகம்

**முன்னுரை**

அண்ணா என்று
அழைப்பதனால் - என்
செந்நா உயர்வுபெறும்;
அதுபோல்
அண்ணா செந்நா உயர்வுபெற
அடையாளமாய்க் கிடைத்த
பெரியார் பற்றி
அண்ணா நோக்கு இதோ!

அக்காலக்கட்டத்தில் அறிஞர் அண்ணா பின்பற்றிய உயர்தகு மனிதர்களில் "பெரியாரும் ஒருவர் ஆவார். அறிஞர் அண்ணா பெரியாரின் கொள்கைகளால் பெரிதும் ஈர்க்கப்பட்டவர். அப்பெரியாரின் கருத்தின் அடிப்படையில் அண்ணா மொழிந்த மொழிகள் உங்கள் பார்வைக்கு.

பெரியாரை
வாழ்த்தாய் நெஞ்சே!

"சாதியென்றும் சமயமென்றும் சொல்லவேண்டாம்
சாத்திரத்தை ஒருநாளும் நம்பவேண்டாம்
விதியென்றும் வினையென்றும் சொல்லவேண்டாம்
வீணாகக் காலத்தைக் கழிக்க வேண்டாம்.
நாளென்றும் கோளென்றும் சொல்ல வேண்டாம்
நல் வாய்ப்பை அதனாலே இழக்க வேண்டாம்

தமிழினத்தின் தன்மானம் காக்கவந்தோன்
தலைவனாம் பெரியாரை வாழ்த்தாய் நெஞ்சே!"

"கோயிலென்றும் குளமென்றும் போக வேண்டாம்
குழவிக்கல் லிங்கமென்று சொல்ல வேண்டாம்
குடங்குடமாய்ப் பாலதனைக் கொட்டவேண்டாம்
கொட்டியபின் அதைநக்கிக் குடிக்க வேண்டாம்.
அர்ச்சனைக்குத் தட்டேந்தி நிற்க வேண்டாம்
அதில்வேறு தட்சனைகள் வைக்க வேண்டாம்
அறிவுக்கு வித்திட்ட அஞ்சா நெஞ்சன்
அருந்தலைவன் பெரியாரை வாழ்த்தாய் நெஞ்சே!"

"பஞ்சாங்கம் பார்த்தெதையும் செய்யவேண்டாம்
பார்ப்பானை அய்யரென்று சொல்லவேண்டாம்
பாவமென்றும் புண்ணியமென்றும் பார்க்கவேண்டாம்
பரலோகம் செல்லவழி தேடவேண்டாம்.
ஏழுசென்மம் உண்டென்று எண்ண வேண்டாம்
எண்ணியவர் யாருமில்லை நம்ப வேண்டாம்
எத்தர்களின் புரட்டையெல்லாம் எடுத்துரைத்தோன்
எம் தந்தை பெரியாரை வாழ்த்தாய் நெஞ்சே!"

"திதியென்றும் திவசமென்றும் கொடுக்கவேண்டாம்
தின்பவர்கள் பிதுர்களென்று எண்ணவேண்டாம்
கோமாதா குலமாதா ஆகவேண்டாம்
கோமியத்தில் குணநலனைக் காணவேண்டாம்.
சாணியையும் பிள்ளையாராய்ச் செய்யவேண்டாம்
சரணமென்று விழுந்ததனை வணங்க வேண்டாம்
முட்டாள் தனத்தையெல்லாம் முறியடித்தோன்
மூதறிஞன் பெரியாரை வாழ்த்தாய் நெஞ்சே!"

"மதமென்னும் வெறிபிடித்து அலையவேண்டாம்,
மல்லுக்கு அதற்காக நிற்க வேண்டாம்
சிந்திக்கும் முன்எதையும் செய்ய வேண்டாம்
செய்தபின் சிந்தித்து வருந்த வேண்டாம்.

பதினெட்டுப் புராணத்தைப் படிக்கவேண்டாம்
பகுத்தறிவுப் பாதையினை மறக்கவேண்டாம்
எம்மதமும் சம்மதமே என்ற மேலோன்
ஏறொத்த பெரியாரை வாழ்த்தாய்நெஞ்சே!"

## முடிவுரை

"முன்னுரையின்
தொடக்கமாம்
முடிவுரை;
அம்முடிவுரையில்
அறிஞர் அண்ணாவை
வாழ்த்தும் என்
நெஞ்சம் - வாழ்த்தும்
பெரியாரையும்!"

# அறிஞர் அண்ணாவின் பார்வையில் மாணவர்கள்

செ. சுப்புலெட்சுமி
இளம் கல்வியியல் மாணவி
தமிழ்ப்பல்கலைக்கழகம்

## முன்னுரை

அறிஞர் அண்ணா, மாணவத் தோழர்களைத் தமது ஆற்றல் மிக்கப் பேச்சாலும் எழுத்தாலும் கவர்ந்து திராவிட நாட்டு விடுதலைப் போர்ப்படையின் முன்னணி வீரர்களாக ஆக்கியுள்ள பெருமை அறிஞர் அண்ணா அவர்களையேச் சாரும்.

மாணவர்கள் திராவிட நாட்டுப் பற்றும் பகுத்தறிவுப் பண்பும் பெற அறிஞர் அண்ணா அவர்கள் ஆயிரமாயிரம் மேடைகளில் ஆற்றிய சொற்பொழிவுகளையும் திராவிட நாட்டிலும் பிற நூல்களையும் அனைவரும் படித்துப் பயன்பெற வேண்டும்.

## அறிஞர் அண்ணாவின் இலக்கியப் படைப்புகள்

"மகிழ்ச்சி ஊட்டுவது புதிய எண்ணங்களைத் தூவுவது, பழைய கருத்துக்களை மாற்றுவது, பண்பு தருவது, செயல்புரியும் திறன் அளிப்பது என்பன போன்ற பயன்களைப் பெறுவதற்கே படிக்கிறோம். ஒவ்வொரு வகைப் புத்தகமும் ஒவ்வொரு பயனை, ஒவ்வோர் அளவுக்குத் தருவதுடன் நமது மனதை உருவாக்க உதவுகின்றன." அண்ணாவின் இலக்கியப்படைப்புகளில் சில: என் வாழ்வு, கலிங்கராணி, சந்திரோதயம், வேலைக்காரி, ஓர் இரவு, கொக்கரக்கோ.

## மாணவர்களைப் பற்றி அறிஞர் அண்ணா

மாணவர்களின் மீது அண்ணா அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டிருந்தார். உலகில் படைவீரர்களைக் கொண்டும்,

தொழிலாளர் வர்க்கத்தைக் கொண்டும் ஆட்சிமுறையை மாற்றியவர்கள் உண்டு. அண்ணா ஒருவர்தான் மாணவர்களைக் கொண்டு ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தியவர் என்னும் பெருமைக்கு உடையவர். மாணவர் பருவமானது “வாழ்க்கைக் களத்தில் இறங்குவதற்கு முன்பு பயிற்சியும் பக்குவமும் அடிப்படைக் கொள்கைகளில் தெளிவும் பெறவேண்டிய பருவமாகக் கருதுகிறார். மாணவர்கள் சமுதாயத்திற்கு உழைக்க வேண்டும் எனவும் கிராமங்களுக்குச் சென்று பாமரர்களுக்கு அறிவு புகட்டவேண்டும்” எனவும் அறிவுரை வழங்குகிறார்.

மாணவர்கள் காளைப்பருவத்தினர், கலைபயிலும் நிலையினர், நாட்டின் நரம்புகள், விலையில்லா மாணிக்கங்கள், போர்ப்படையினர் ஈட்டி முனைகள், கண்ணுங்கருத்துமாய்க் காரியத்தைச் சாதிக்க வல்லவர்கள் திராவிட நாட்டிலே புதியதோர் சக்தியை உண்டாக்க வல்லவர்கள் என்று கூறுகிறார்.

உங்களுடைய பொறுப்பு பெரிது எல்லோராலும் கைவிடப்பட்ட வேலை உங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. குணப்படுத்துவீர்கள் என்ற நம்பிக்கையில். மூடநம்பிக்கையுள்ள மக்களைத்திருத்த மருத்துவர்களால், யாகத்தால், யோகத்தால், வேதத்தால், சித்தர்களால் முடியவில்லை. மனிதனை மனிதனாக்க மனிதனிடமிருந்து மிருகத் தனத்தைப் பிரிக்க, மனிதனை தேவனாக்க, எண்ணத்திலுள்ள இருளைப்போக்க, மனவளத்தை உண்டாக்க அவர்களால் முடியாததை நீங்கள் முடிக்க வேண்டும். நீங்கள் உங்கள் காரியத்தில் வெற்றி பெற இடைவிடாது பகுத்தறிவுப் பிரசாரம் செய்யவேண்டும், என்று கூறுகிறார்.

மாணவர் கழகம் என்ற தோட்டத்தில் அதன் இலட்சியங்கள் என்ற மணமலர்ச் செடிகளும், செயல் வீரர்களின் கண்ணியம் என்ற தண்ணீரில் தொண்டு என்ற எருவால் வளரவேண்டும். அணுகுண்டு கண்டுபிடிக்கப்பட்டுள்ள காலத்திலே வாழும் மாணவர்களுக்கு அனுமானுக்கு வால் வளர்ந்த கதையைப் பாடமாக்கி வைக்கும் செயல் நாத்திகத்தைக் காட்டிலும் கேடு அல்லவா? பாடத் திட்டத்தில் பகுத்தறிவைப் புகுத்தினால்தான் மக்களுக்குப் பழமையினிடத்திலுள்ள பாசம் குறையும் மனத்திலுள்ள மாசு நீங்கும், காலத்திற்கேற்ற கருத்து வளரும், ஆக்க துறைக்கு ஊக்கம் தரும் ஆட்சிதுறைகளில் மனம் ஈடுபடும்.

"பயப்படக்கூடாது என்பது தான் பல்கலைக்கழகத்தின் பண்பாக இருக்கவேண்டும், பயந்தால் பல்கலைக்கழகத்தின் பண்பே பழிப்புக்கிடமாகும். பிறர் கூறும் கருத்துகளை வாங்கி உங்களுடைய அறிவு என்னும் உரைகல்லில் உரைத்து, சிந்தனையால் நிறுத்து சரியா?, தப்பா? என்று பார்க்க வேண்டும். சரியானதை ஒத்துக்கொள்ளவேண்டும். ஒத்துக் கொண்டதை ஓம்ப வேண்டும். இது பண்புள்ளவர்கள் செய்யவேண்டிய கடமை பல்கலைக்கழகம் வளர்க்கவேண்டிய பொருள். பாடத்திட்டத்திலே பகுத்தறிவைப் புகுத்தும் தீவிரமான ஒரு திட்டம் வகுக்கப்படாத வரையில் பகுத்தறிவும் பரவாது, நமது நினைப்பும் உயராது.

சமுதாயத்திற்கு உழைக்கவேண்டும் என்ற ஆர்வமுள்ள மாணவர்கள் கிராமம் சென்று அங்குள்ள பாமரமக்களுக்கு அறிவு புகட்டவேண்டும். பி.ஏ., எம்.ஏ. பட்டம் பெற்ற மாணவர்கள் ஓராண்டு காலமேனும் சமூகத்திற்குப் பணியாற்ற வேண்டும். முன்னேற்றம், சமாதானம், சமதர்மம், பகுத்தறிவு ஆகிய அழகான வார்த்தைகளின் வாசனைகளை அவர்களும் நுகரும்படி செய்ய வேண்டும். இதுதான் அறிவுப் பிரசாரம்.

மாணவர்கள் உள்ளத்தில் புரட்சிப் புயல் இருக்கும். அநீதியைக் கண்டால் கொதித்தெழுந்து தாக்கும் பண்பு மாணவர்களிடையே மிகுந்து இருக்கும். புறப்பாடு, போரிடு, அநீதி ஒழியட்டும் அல்லது நாம் ஒழியும் வரை போர், இந்த பேச்சுத்தான் அவர்கள் செவியேறும், அகத்திலே அறிவு கோல் ஆர்வம், முகத்திலே வீரக்களை, செயலிலே துடித்துடித்துக் காணப்படும். தலைக்குனிந்து நிற்பது ஆகிய முறைகள் அவர்களுக்குப் பிடிக்காதவன.

"என் நாட்டை விஞ்ஞானிகளின் சோலையாக்குவேன் என் பூமியை இன்ப பிரதேசமாக்குவேன். எங்கும் அறிவு மனம் கமழச் செய்வேன் என் தொண்டு, என் சேவை இதற்குதான். இங்கு நியுட்டன்களையும், பிளேட்டோக்களையும், சிருஷ்டித்து உலவவிடுவேன். இதுவே என் இலட்சியம், என் வாழ்க்கைப்பணி" என்று சூளுரை கொள்ளவேண்டும்.

இலக்கியங்களில் சிறந்தவற்றை நாட்டுக்கு நலம் பயக்கும் ஏடுகளை மனிதனை மனிதத் தன்மையுள்ளவனாக விளங்கத்

தூண்டும் இலக்கியங்களை, அறிவை அகலப்பரப்பும் நூல்களை, அனைவரும் பயன்படுத்தக்கூடிய நிலைமையில் வெளிப்படுத்த வேண்டும்.

முன்னேற்றப் பாதையில் செல்லும் மாணவர்களாகிய நீங்கள் முதன் முதலாகச் செய்யவேண்டிய கடமை, மனிதத் தன்மைக்கு மாறான கருத்துக்கள் நாட்டிலே பரவவொட்டாமல் தடுக்க வேண்டும்.

## முடிவுரை

அறிஞர் அண்ணா, ஒரு முதலமைச்சராக மட்டுமன்றி, ஒரு அறிஞராகவும், சமூக சீர்திருத்த வாதியாகவும், ஒரு சிறந்த அரசியல் வாதியாகவும், மிகச்சிறந்த பேச்சாளராகவும், மக்கள் தலைவனாகவும் இன்றும் தமிழக மக்களால் அவர் நினைவு கூரப்படுகிறார்.

மானம் பெரிது, உயிரல்ல மக்கள் பெரியவர், மதமல்ல, விடுதலை வேண்டும் எவருக்கும் நாம் அடிமையல்ல, நமக்கு யாரும் அடிமையாக இருக்க வேண்டாம். இதுவே நமக்குக் கீதை. எது முறையோ அதன்வழி நடவுங்கள். அறிவுக்கு ஒத்ததைக் கொள்ளுங்கள். எதிர்ப்புக்கு அஞ்சாதீர்கள். மதத்தின் முன் மண்டியிடாதீர்கள். மானமே மனிதனை மனிதனாக்குகிறது என்பதை உணருங்கள். சமத்துவம் நாடுங்கள், சகோதரத்துவம் கோருங்கள் சிந்தித்து முடிவுக்கு வாருங்கள். அதன்படி செயலாற்றுங்கள் செம்மல்களே!

# அறிஞர் அண்ணாவின் மாணவர்கள் பற்றி பகுத்தறியும் திறன்

**த. மனோகரன்**
ஆய்வியல் நிறைஞர்
தமிழ்ப்பல்கலைக்கழகம்

செப்டம்பர் திங்கள் 15ஆம் நாள் தமிழக மக்களின் நினைவில் என்றும் நீங்காது நிற்கும் நன்னாள். இந்நாள் தமிழக வரலாற்றில் தனியொரு இடம் பெற்று, எல்லோராலும் பரிவோடும் பாசத்தோடும், 'அண்ணா' என அழைக்கப் பெற்ற பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் பிறந்த நாள் தோன்றிற் புகழொடு தோன்றுக என்ற திருவள்ளுவரை வாக்கிற்கு இலக்கணமாகத் திகழ்ந்த நாடு போற்றும் நல்லறிஞர் அண்ணா பிறந்த நாள்!

## மாணவர்களும் பகுத்தறியும் திறனும்

இன்றைய இளைய தலைமுறையினரும், மாணவர்களும் எதிர்காலத் தலைவர்களாகவும் மேதைகளாகவும் உருவாகக் கூடியவர்கள். ஆகையால் மாணவர்கள் வளர்ச்சியில் அரசு தக்க கவனம் செலுத்த வேண்டும் என்றார். அவர்கள் தமிழுணர்வுடன் பகுத்தறியும் திறன் படைத்தவர்களாகவும் விளங்கவேண்டும் என விரும்பினார்.

பகுத்தறியும் திறனால் தக்கன எவை? தகாதன எவை? என்பதை அறிந்து, நல்வழியிற் சென்று, நற்பயன் பெற்று நல்வாழ்வு வாழமுடியும் என எடுத்துரைத்தார்.

"கல்வி கற்கும் காலத்தில் கல்வியில் முழுக்கவனம் செலுத்த வேண்டும், கல்வியைப் போன்ற செல்வம் வேறொன்றுமில்லை, அழிவில்லாதது சிறந்த கல்வியே" ஆகும் என வலியுறுத்திக் கூறினார்.

சிந்திப்பதால் பகுத்தறியும் திறனும்
அறிவும் வளரும், அறிவு வளர்ந்த
நிலையில் ஒருவன் தன் முன்னேற்றத்தில்
ஆர்வம் காட்டுவதுடன், தான் வாழும்
நாட்டின் முன்னேற்றத்திற்கும் துணை
நிற்க இயலும் என்பது அண்ணாவின் நம்பிக்கை.

## மாணவர்களுக்கு அறிஞர் அண்ணாவின் அறிவுரை

இளைஞர்கள் குறிப்பாக மாணவர்கள் நலனில் எப்போதும் தனிக்கவனம் செலுத்திய அண்ணா அவர்கள் அவ்வப்போது அவர்களுக்குத் தக்க அறிவுரைகளை அன்புடன் வழங்கி வந்தார்:

மாணவர்கள் கல்வி கற்கும் காலத்தில்
தங்கள் சிந்தனையாற்றலையும்
அறிவையும் வளர்த்துக் கொள்ள வேண்டும்,
எண்ணத்தை வேறு எவ்வழியிலும்
சிதறவிடக்கூடாது
மனத்தைக் கட்டுப்படுத்த வேண்டும்!
கல்வியறிவைப் பெருக்குவதிலேயே
கண்ணும் கருத்துமாக இருத்தல் வேண்டும்!
கருத்தூன்றிப் பாடங்களைப் படிக்க வேண்டும்
காலம் பொன் போன்றது! கடமை கண் போன்றது
என்பதை உணர்ந்து, ஒரு நிமிடமும்
வீணாக்காமல், காலத்தை தக்க முறையில்
பயன்படுத்த வேண்டும், அப்போதுதான்
வெற்றிச் சிகரத்தை எட்டிப் பிடிக்க முடியும்

என்ற அண்ணாவின் அறிவுரைகள் மாணவர்கள் நினைவில் கொள்ளத்தக்கனவாகும்.

## பல்கலைக்கழகங்களின் பொறுப்பு

இன்று நாட்டின் அறிவுக் களஞ்சியங்களாகவும், கருத்துக் கருவூலங்களாகவும் விளங்குபவை, பல்கலைக்கழகங்களே! சிந்தனைத் தெளிவு, மதிநுட்பத்திறன், சேவையுள்ளம் ஆகியவற்றின்

தூதுவர்களாய்த் திகழ்ந்திடும் வருங்காலக் குடிமக்களைத் தயாரித்திடும் பொறுப்பும் பல்கலைக்கழகங்களையே சாரும்.

எனவே, பல்கலைக்கழகங்களின் பொறுப்பு மிகப்பெரியது. இன்று நாட்டின் - நாட்டு மக்களின் வாழ்விலும், வளர்ச்சியிலும், அவற்றிற்கு மகத்தான பொறுப்பும் - பங்கு உள்ளது. அது நாள்தோறும் விரிவாகிக் கொண்டே செல்கிறது. சமுதாயத்தின் பல்வேறு துறைகளையும் சுற்றுச் சார்புகளையும் பக்குவப்படுத்தி, மக்கள் பயனுறு வாழ்வு வாழ்ந்திட - வாழவைத்திடும் பணியினை மேற்கொண்டிடத்தக்க நல்ல குடிமக்களைப் பல்கலைக்கழகங்கள் ஆண்டுதோறும் தயாரித்துத் தரும் பெரும்பணி தொடர்ந்தபடிதான் உள்ளது.

## பட்டதாரிகள்

ஏழை மக்களின் வாழ்வெனும் பாலைவனம் சோலைவனமாகிட வேண்டும். வருங்கால சந்ததிகளாவது வளமெல்லாம் பெற்று வாழ்ந்திட வழிவகை செய்திடுவது பட்டதாரிகளின் கடமையாகிறது.

பல்கலைக்கழகப் பட்டதாரிகளே, சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவத்திற்கு மாறான கொடுமைகளை ஒழிக்கப் போராட வாரீர்.

பலரது உழைப்பில் விளைந்த செல்வத்தின் பயனைத் துய்த்துப் பட்டதாரிகளாகியுள்ளீர்கள். உங்களுக்காகத் தினையளவேனும் ஒவ்வொருவரும் தியாகம் செய்துள்ளனர் என்பதை உணருங்கள் முதலில்!

## ஆசிரியர்கள்

இந்த நாட்டிற்காக நிரந்தரமான செல்வத்தைத் தேடித் தருபவர் யாராவது இருக்கிறார்கள் என்றால் அவர்கள் ஆசிரியர்கள்தான்.

ஆசிரியர்கள் பணி கைம்மாறு கருதாத தியாகப் பணியாகும்.

பள்ளிப்பிள்ளைகள் எனும் நாற்றங்கால் பயிரை நன்றாக முறையாக ஒழுங்காக வளர்த்துவரும் ஆசிரியர்கள் இந்நாட்டின் பாராட்டுக்குரியவர்கள்.

## கல்வி

ஒரு நாட்டின் நிலையான செல்வம், அந்நாட்டில் ஓங்கி எழுந்துள்ள கட்டிடங்கள் அல்ல - அவை இடிந்து அழிந்துவிடும்! அரசியல்வாதிகளுமல்லர் அவர்களும் மாறிவிடக் கூடியவர்கள்! பொறியியல் வல்லுநரும், மருத்துவர்களும், கல்வியாளர்களும் தான் நாட்டின் உண்மையான செல்வங்கள்.

## பகுத்தறிவு

பகுத்தறிவினை ஆயுதமாக உடையவர்கள் பயமறியாதவர்கள். இவர்கள் தான் வீழ்ந்த சமுதாயத்தை உயர்த்த முடியும். இதுதான் ஒரே படை-கடைசி படை, இப்படை வெற்றி பெறும் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

# அறிஞர் அண்ணாவின் மேடைப்பேச்சு

இரா. சத்யா
இளங்கல்வியியல் மாணவி
தமிழ்ப்பல்கலைக்கழகம்

## முன்னுரை

உலகில் சிறந்த கலைகளுள் ஒன்றாகப் போற்றப்பெறும் பேச்சுக்கலை தமிழகத்தில் எப்பொழுது தோன்றியது என்பதை தெளிவாக அறிய போதிய சான்றுகள் இல்லை. எனினும் அத்தகைய பேச்சுக்கலை சிறந்ததொன்றாகவும் தலையெழுத்தையே மாற்றும் மகத்தானதாக மதிக்கப்படுவதன் காரணமாக திகழ்ந்த பேச்சாளர்களுள் ஒருவர்தான் அறிஞர் அண்ணா. அவரின் மேடை பேச்சின் சிறப்பை உள்சென்று தேடி விளக்க விழைகிறேன்.

## பொருளுரை

### பழந்தமிழ் நாட்டில் பேச்சுக்கலை

பழங்காலத் தமிழ் மூலம் வாழ்வின் பல்வேறு கூறுகளையும், பலதுறைகளில் தோன்றி வளர்ந்த கலைகளையும் முழுமையாக உணர்ந்துகொள்ள முடியாவிட்டாலும் இப்பொழுது காணக்கிடைக்கும் சங்ககால இலக்கிய, இலக்கண நூல்களை ஆராய்ந்து ஓரளவு விளங்கிக்கொள்ளலாம். மேடைத்தமிழின் தந்தை என்று போற்றப்பெறுபவர் தமிழ்ப் பெரியார் திரு.வி.க அவர்கள் ஆவர்.

> "பல்கேள்வித் துறைபோகிய
> தோல்லாணை நல்லாசிரியர்
> உறழ்குறித் தெடுத்த உருகெழு கொடியும்"

என்ற பட்டினப் பாலையின் அடிகள் மூலம் முடியாட்சி நிலவிய தமிழகத்தில் சொற்போர்க் கலை பேரெழுச்சி பெற்றிருந்த

தன்மையினை உணருகிறோம். அத்தகைய மேடைப்பேச்சு அண்ணாவின் நாவில் சிறப்புற தவழ்ந்து விளையாடியது என்றும் உண்மை.

## அறிஞர் அண்ணாவும் பிறநாட்டு நாவலர்களும்

கிரேக்க நாடு பண்டைய காலத்தில் பேச்சுக் கலையில் சிறந்து வளர்ந்த நாவலர்களை கொண்டு விளங்கியது. ஓர் காலகட்டத்தில் உலகெங்கும் விடுதலை வேட்கை சுடர்விட்டு எறியத் தொடங்கியது. உரிமைக் குரல்கள் எல்லா திசைகளிலும் ஏழலாயின. இந்நிலையில் ஆபிரகாம் லிங்கன் போன்றோரின் முயற்சியும் நாவன்மையும் பேரளவு தேவைப்பட்டன. அரசியலிலும் மேடைப் பேச்சின் தன்மை சிறப்புற இருந்தது.

## ஆண்டனியும், அறிஞர் அண்ணாவும்

ஆண்டனி என்ற பேச்சாளரைப் போல நாட்டில் கலகம் எதையும் செய்யாமல் ஜனநாயக உணர்வை மக்களிடையே எழுப்பி, ஆளுபவர் செய்யும் கொடுமைகளை உணர்த்தியவர் அண்ணா. தமது சொற்பொழிவுகள் மூலம் தாம் நினைந்த வண்ணம், தம் கட்சிக்கு மக்களை வாக்களிக்க வைத்துப் பெரியதோர் அமைதிப் புரட்சியையே அண்ணா உண்டாக்கிக் காட்டினார்.

## செஸ்டர் பீல்டும் அறிஞர் அண்ணாவும்

1694ஆம் ஆண்டு தோன்றிய செஸ்டர் பீல்ட் சிறந்த மேடைப் பேச்சு நாவலராவார். அவர் எழுதிய பேச்சுக்கலை இலக்கணங்கள் யாவும் அண்ணாவின் பேச்சுக்கலை இலக்கணத்திற்கு பொருத்தி வருகிறது.

## பெஞ்சமின் டிஸ்ரலியும் அறிஞர் அண்ணாவும்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் முன் பகுதியில் தோன்றிய பெஞ்சமின் டிஸ்ரலியும், வில்லியம் இவார்ட் கிளாஸ்டனும் அந்நூற்றாண்டு அரசியல் வரலாற்றினை முழுமையாக

தம்மகப்படுத்திக்கொண்ட இருபெரும் காவலர்களாக இங்கிலாந்து நாட்டில் திகழ்ந்தவர்கள். இவர்களுடைய தாக்கம் 1950ல் சென்னை நகரில் நடந்த மேதின விழாவில் ஆட்சியாளர்களின் தொழிலாளர் விரோத கொள்கைகளை கண்டித்து, அண்ணாபேசிய அடக்குமுறை கொள்கைகளை எதிர்த்து நகைச்சுவை உணர்வுடன் அவர் ஆற்றிய மேடைப்பேச்சினை உதாரணமாகக் கூறலாம்.

## அறிஞர் அண்ணாவின் சொற்பொழிவு உத்திகள்

### எடுத்தல் (பேச்சுத் தொடக்கம்)

1. இடத்துக்கு ஏற்ற தொடக்கம், 2. பொருளுக்கு ஏற்ற தொடக்கம், 3. காலத்துக்கு ஏற்ற தொடக்கம் போன்றவை எடுத்தலாகக் கொள்ளலாம். ஏனெனில் எடுத்தல் என்பது தொடக்கம் என்று அமையும். அண்ணாவின் பேச்சுத் தொடக்கம் திரு.வி.க. அவர்களின் பேச்சுத் தொடக்கம் போன்றே அமைந்துள்ளது. அவர் தியாகராயர் கல்லூரி மாணவர்களிடையே 9.8.1951இல் அவர் ஆற்றிய சொற்பொழிவின் தொடக்கம் சிறப்பாக உள்ளது. அவை,

> "அன்புள்ள தலைவர் அவர்களே! கல்லூரி முதல்வர் அவர்களே! பெரியோர்களே! தோழர்களே! என்னை நீங்கள் பேச அழைத்ததற்காகப் பெருந்தன்மையோடு நன்றி செலுத்துகிறேன். தமிழ் மன்றத்தின் துவக்க விழாவில் கலந்து கொள்வதால் என்னென்ன, பலர்பலன்கள் இருக்கும் என்பதை நீங்கள் அறிந்து கொள்ளாமல் இருக்க முடியாது"

என்ற இந்த தொடக்கம் விளித்தலும், நன்றி கூறலும், சுருக்கமாகக் கூறப்பெற்று, கேட்கும் மாணவர்களை தன்பால் ஈர்க்கும் தன்மையால் பேச்சுத் தொடக்கம் சிறப்புற அமைந்துள்ளது.

### தொடுத்தல் (பேச்சை விளக்குதல்)

பேச்சின் தொடக்கத்தை அடுத்து கூற எண்ணிய கருத்துகளை சங்கிலி தொடர்போல பின்னிப் பிணைந்துப் பேசுவதான தொடுத்தலையும் அண்ணா சிறப்புற மேற்கொண்டதை பின்வரும் கருத்தால் அறியலாம்.

"மலைக்கு முதற்பொருள் மணமுள்ள மலர் அதுபோல பேச்சுக்கு முதற்பொருள் சுவையும், பயனும் உள்ள கருத்துக்கள் என்று அண்ணாவும் கூறியுள்ளார்."

"கருத்தற்ற பேச்சு
காகிதப் பூவால் தொடுக்கப்பட் மாலையாம்"

என்ற அவரின் கருத்து அவரின் தொடுத்தல் சிறப்பினை நமக்கு உணர்த்துகிறது. அவர் தமது விளக்குதல் உத்தியில் உவமை, எடுத்துக்காட்டுகள், கருத்தை தொடர்புபடுத்திப் பேசுதல் போன்ற தன்மையிலும் பிற பேச்சாளர்களுக்கு ஓர் உதாரணமாகத் திகழ்கிறார்.

**உரையை முடித்தல்**

ஒரு சொற்பொழிவின் முடித்தல் பகுதியை முடிவுரை எனலாம். "முடித்தல் ஒரு சொற்பொழிவின் ஆற்றல் மிக்க அங்கம்" என்று அறிஞர்கள் கூறுவர். அறிஞர் அண்ணா அவர்கள் தம் மேடைப்பேச்சில் எடுத்தலிலும், தொடுத்தலிலும் செலுத்தும் கவனத்தை தவறாமல் முடித்தலிலும் அண்ணா செலுத்துவார். அவர் கையாண்டு முடித்தல் உத்திகளை பற்றி கண்டால், அவரது முடிவுரை கூறும் திறனை அறியலாம். ஓர் விழாவில்

"இதுவரை நான் பொதுவாக இந்தியா குறிப்பாக தமிழ்நாடு மக்கள் நினைப்பு, நிலை உயர்ந்த அளவுக்கு இல்லை, அது தாழ்ந்திருக்கிறது என்பதையும், தாழ்ந்ததை உயர்த்தப் பகுத்தறிவுப் பிரசாரம் என்ற ஒரே மார்க்கந்தான் உண்டென்றும், மாணவர்கள்தான் அம்மார்க்கத்தைக் கடைபிடிக்கத் தகுதியானவர்கள் என்றும், உடனே சர்க்கார் மக்களுக்கு என்றும், மாணவர்கள் அந்தப் பணியை வெற்றிகரமாக செய்துமுடிக்க ஓர் திட்டம் வகுக்கவேண்டும் என்றும் கூறினேன்"

இம்முடித்தல் பகுதியுள்ள தாம் சொற்பொழிவு ஆற்றிய கருத்துகளை தொகுத்து சுருக்கமாக உரைத்து முடித்திருப்பதைக் காண்கிறோம். இதையே போன்று, உணர்ச்சியின் உச்சியில்

நிற்குமாறு தம் எண்ணங்களை எழுச்சி மிக்க சொற்றொடர்களாக மாற்றி அமைத்து சிறக்கச் செய்த அண்ணாவை நாவலர்களுள் சிறந்தவர் என்பது திண்ணம்.

## முடிவுரை

> "பகையத்துச் சாவார் எளியர்; அரியர்
> அவையத்து அஞ்சா தவர்"

என்று தன் குறள் மூலம் உலகுக்கு உணர்த்தினார் வள்ளுவர். ஆனால் அதையே தன் வாழ்வில் உணர்த்தி காட்டியவர் அண்ணா என்றால் அதில் மாற்று கருத்தில்லை.

# நாடகத்துறையில் அறிஞர் அண்ணாவின் பங்கு

**கோ. பிரியதரிசினி**
இளங்கல்வியியல் மாணவி
தமிழ்ப்பல்கலைக்கழகம்

## முன்னுரை

கலை என்றால் படைப்பாளர்கள் மூலம் தான் அது மிளிர்வுறுகிறது. அத்தகைய படைப்புகள் மூலம்தான் படைப்பாளர் தன் சமூகக் கருத்தைத் தெரிவிக்கவும், சமூகத்தையே மாற்றும் வண்மையும் உடையவனாக இருக்கிறான். அவ்வாறு சமூகத்தையே மாற்றி அமைத்த ஓர் படைப்பாளரான நாவலர் தான் அறிஞர் அண்ணா. அவரின் நாடகப் பங்கினையும் நாடகச் சிந்தனையையும் பின்வருமாறு சமர்ப்பிக்கிறேன்..

## அறிஞர் அண்ணாவின் நாடகங்கள்

அண்ணாவுக்கு நாடகம் பார்ப்பதில் நாட்டம் மிகுதி. எனவே தாமே நாடகங்கள் புனைந்து நடித்துள்ளார். சந்திரோதயம், சந்திரமோகன், நீதிதேவன் மயக்கம் ஆகிய நாடகங்களை அண்ணா தீட்டினார். அவற்றில் தாமே பாத்திரங்கள் ஏற்று நடித்தார். பின்பு ஓர் இரவு, வேலைக்காரி ஆகிய பல நாடகங்களை படைத்தளித்தார்.

## அறிஞர் அண்ணாவின் நாடகப் பற்று

நாடகங்களை அண்ணா விரும்பி போற்றினார். படைத்தளித்தார். முத்தமிழும் நிறைந்ததால், நாடகம் எளிதில் மக்களை வயப்படுத்தும் என்ற அடிப்படையை அறிந்தவர் அவர். ஆதலால்தான் தாமும் பாத்திரமாக மேடைகளில் தோன்றி நடித்தார்.

## அறிஞர் அண்ணாவின் நாடகச் சிந்தனை

"நாடகங்கள் அறிவு வளர்ச்சியின் பண்ணை நிலையங்களாக விளங்கவேண்டும்" என்று கருத்துரை வழங்கியவர் அண்ணா. ஆதலால் தான் சமூக சீர்திருத்த கருத்துக்களை எடுத்துக்கூற வேண்டும் என்ற துடிப்பில் நாடகங்கள் பல எழுதி, நடத்தி, நடித்து வருவாராயினார். தன்மான அறிவு, சாதி ஒழிப்பு, கடவுள் பெயரால் நடைபெறும் அக்கிரமங்களை அம்பலப்படுத்துவது முதலான பல பகுத்தறிவுக் கருத்துக்கள் அவர் நாடகங்களில் உயிர் நாடியாக அமைந்தன.

"எவனொருவன் இந்திரியங்கள் எனும் துட்டக் குதிரைகளுக்கு அறிவெனும் கடிவாளமிட்டு அடக்கி, நன்னெறி என்னும் பாதையிலே செலுத்துகின்றானோ அவனே அரனடி எனும் திருத்தலத்தை அடைவான். இடையே இச்சையெனும் நச்சுக்கொடி கிடக்கும். பச்சென்று இருக்கிறதே என்று பார்த்தாலோ சிக்கினோரைச் சீரழிக்கும். அதற்கு நிராசை எனும் சாட்டைகொண்டு குதிரையைத் தட்டவேண்டும்."

இப்பகுதி சந்திரோதயம் நாடகத்தில் வரும் அழகர் மடாதிபதி பேசுவதாக வரும் உரையாடல். மதியழகன் அப்பாத்திரமேற்று நடித்தவர். சிறையில் உடனிருந்த மதியழகன் இப்பேச்சைப் பேசிக் காட்டியதாக மடல் குறிப்பு ஒன்று கூறுகிறது. சமுதாய நிலைமைகளை உள்ளவாறு விளக்கிக் காட்டும் இப்பகுதி மிகவும் புகழ்வாய்ந்த பகுதி என்பது குறிப்பிடத்தக்கது.

## ஓர் இரவின் சிறப்பு

"இரும்புப் பெட்டிக்கும் இதயத்துக்கும் ஈஸ்வரன் சம்பந்தம் வைக்கவில்லையே அம்மா? என்று உழவன் ஒருவன் கூறுவதாக ஓர் இரவு நாடகத்தில் அண்ணா எடுத்துக் காட்டினார். இக்குறிப்பு நாடகம் சமுதாய நிலையை படம்பிடித்துக் காட்ட எவ்வளவு துணை புரிகிறது என்பதை எடுத்துக் காட்டுகிறது.

## நாடக தந்தை அறிஞர் அண்ணா

நாடகமாடுவது இழுக்காகாது என எண்ணி, அண்ணா முதலான மிகப்பெரும் படிப்புப் படித்தவர்கள் இத்துறையில்

இறங்கியது, பின் நாட்களில் எத்தனையோ படித்தவர்கள், படித்து தொழில் செய்வோர், பதவியில் உள்ளோர் ஆகியோரை நாடகப் பணியில் ஈடுபட வைத்தது. அதாவது நாடகத் துறையை மதிப்பு மிக்கதாக்கிய பெருமையில் அண்ணாவுக்கு பெரும் பங்கு உண்டு.

## மடல் வழி நாடகங்கள்

அண்ணா நாடகங்களைப் பற்றிய செய்திகளை பின்வீச்சாக கடிதங்களில் வழங்கினார். அண்ணா இந்நினைவுகளை நண்பர்களோடும் மடல்வழி தம்பியரோடும் பகிர்ந்துகொள்வதில் அவர் பெறும் மகிழ்ச்சி ஒப்பற்றது. இவ்வகையில் அமைந்த இந்நினைவு கோவைகள், மடல்களில் பதிவு செய்யப்பெற்றுள்ள முறையே ஒரு வகை நாடக உத்தியாகும். அண்ணாவின் நாடகங்களும் ஏனைய கழகத்தோர்கள் சி.பி.சிற்றரசு, கருணாநிதி ஆகியோர் புனைந்த நாடகங்களும் கழகத்தின் கலைப் பகுதியாக விளங்கி வந்தன.

## அறிஞர் அண்ணாவின் நாடக முனைப்பு

நாடகம் மூலமும் இசை மூலமும் அடிப்படையாக சமுதாய சீர்திருத்த கருத்துக்களை எடுத்துக்கூறியாக வேண்டும் என்ற துடிப்பு காரணமாக நாடகங்கள் நடத்தி வந்தார் அண்ணா. மாற்றார்கள், கூத்தாடுகிறான்; பவுடர் பூசுகிறான்; அரசியல் மேடையை நாடக மேடையாக்குகிறான்; அடுக்குமா? ஆகுமா? நாடகமாடுபவன் நாட்டில் அரசியல் கட்சி நடத்துவதா? - என்றெல்லாம் சரமாரியாக கூர்மையானக் கணைகளைத் தொடுத்தனர். அவ்வாறு கூறிய அவர்கள் தாம் அலுத்துப்போனார்கள். ஆனால் அண்ணாவின் நாடகப் பணி நின்றுவிடவில்லை.

> "உன் அண்ணனே ஒரு கூத்தாடிதான் நாடாள்வோரின் மூலம் கிடைக்கும் நன்மைகளை விடச் சற்று அதிகமாகவே நாடகமாடிகள் மூலம் மக்களுக்கு கிடைத்திருக்கிறது என்ற நம்பிக்கை கொண்டவன்"

என்று அண்ணா தம்மைப் பற்றி சொல்லிக்கொண்ட இக்கூற்று நாடகங்கள், அரசியலை வளர்க்க உதவும் கொள்கை பரப்பு கருவியாக அமைவதை வரவேற்கிறேன்.

நாடகாசிரியர் என்னும் முறையில் அண்ணா பாராட்டுதல்கள் பல பெற்றிருக்கின்றார். கல்கி, அண்ணாவை "பெர்னார்ட்சா" எனப் புகழ்ந்ததை நாடறியும், நாடகங்கள் பார்ப்பதில் ஆர்வம் மிகுந்த அண்ணா நாடகங்களுக்கு தலைமை தாங்கி விருப்பு வெறுப்பின்றி நடிகர்களைப் பாராட்டத் தவறுவதில்லை. சிறு வயது முதற்கொண்டு தெருக்கூத்துப் பார்ப்பதிலும் அவர் மிகுந்த ஆர்வம் உடையவராக இருந்துள்ளார். இவ்வாறாக வளர்ந்திருந்த நாடகக் காதல், அவரை மடல் இலக்கியத்திலும், நாடக இலக்கியம் படைத்தளிக்கத் தூண்டியிருக்கிறது.

## முடிவுரை

பேரறிஞர் அண்ணா

"பொதுமேடை வானின் முன்பு ஒளிர்ந்த
மின்மினிகள், விண் மீன்கள், பிறை மதியங்கள்
யாவும் ஒதுங்க பேரொளி வீசிப் புதுமை
பொழுது மலரச் செய்யும் வெங்கதிரோன்."

என்று புகழாரம் சூட்டினால் அது மிகையாகாது. பகுத்தறிவு பாசறையில் புகுந்து தளபதியாக விளங்கிய அண்ணா, அன்னைத் தமிழை அரியாசனத்தில் ஏற்றும் மாபெரும் பணியில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர். தமிழ் மேடையை, தமிழ் உரைநடையை, தமிழ் இலக்கணத்தை, தமிழ் நாடகத்தை, தமிழ்க் கதை கருவூலங்களை வளர்த்த அவர்தம் படைப்புகள் தமிழ் நெஞ்சங்களில் என்றும் நிலைத்து நிற்கின்றன.

# மாணவர்களைப் பற்றி அறிஞர் அண்ணா

**வை. சிங்காரவேலு**
ஆய்வியல் நிறைஞர்
தமிழ்ப்பல்கலைக்கழகம்

பேரறிஞர் அண்ணா அவர்களின் நூற்றாண்டு காணும் இந்நேரத்தில் அந்தப் பேரறிவாளர் அவர்களின் "கல்வியியல் சிந்தனைகள்" என்ற கட்டுரையினைச் சமர்ப்பிப்பதில் பெருமை அடைகிறேன்.

**மாணவர் உலகம்**

மாணவன் நினைத்தால் நடத்திக் காட்டுவான் என்ற மகிமை அவரின் கருத்தோட்டத்தில் என்றுமே இருந்ததுண்டு. வன்முறை, தறிகெட்டத்தனங்கள், மூட நம்பிக்கைகள், சாதி பேதம் காணுதல் போன்ற இருட்டு எண்ணங்கள் திருட்டுத்தனமாய்க்கூட மாணவர் சமுதாயத்தில் நிலவக்கூடாது என்ற உயரிய கருத்து கொண்டவர்!

"கல்விக்கூடங்கள்" அவரை விரும்பி அழைத்தன. மாணவர்கள் அண்ணாவின் நாவன்மையால் ஈர்க்கப்பட்டார்கள். அண்ணாவின் எழுத்துக்களையும், பேச்சுக்களையும் ஆர்வத்துடன் படித்தனர். அண்ணாவின் படைவரிசையில் போர்வீரர்களாக மாணவர்கள் சேர்ந்து பணியாற்ற விரைந்தனர்" - என்கிறார் திரு.தோப்பூர்.திருவேங்கடம்.

மாணவர் உலகம் குறுகிய எண்ணங்கள் குதுகலிக்கும் கூடாரமாக இருக்கக்கூடாது. அவர்களது சிந்தனைகள் சுதந்திரக் காற்றை சுவாசித்து தூய தென்றலில் சிறகடித்துப் பறந்து சமதர்ம உலகம் காணும் வேட்கை கொண்டவையாக இருக்க வேண்டும் என்று விரும்பியவர் அண்ணா அவர்கள்!

**கல்வியின் நோக்கம்**

"கல்வி" என்பதற்கு விளக்கம் தந்த நம் முன்னோர்கள் எல்லோரும் "கல்லுதல் - அறியாமையை உள்ளத்தில் இருந்து

அகழ்ந்து எடுத்தல்" என்றே விளக்கம் தந்தனர். அண்ணா அவர்களின் கல்வியியல் சார்ந்த சிந்தனைகள் அந்த விளக்கத்திற்கு இம்மியளவும் வேறுபட்டதல்ல.

"மாணவர்கள் பெறும் கல்வி அறியாமை, மூடநம்பிக்கை, பழமைவாதம், பகட்டு, படாடோபம், சமுதாயச் சீர்கேடுகள், சாதியொழிப்பு போன்றவற்றை மக்கட் பெருமன்றத்தினின்றும் கல்வி எடுக்கும் கருவி" என்றே அவர் எழுதினார் பேசினார்.

பச்சையப்பன் கல்லூரி, அண்ணாமலை பல்கலைக்கழகம் போன்ற மிகப்பெரும் கல்விச் சாலைகள் தந்த படித்த இளைஞர்கள், பொறியாளர்கள் அவர்பால் ஈர்க்கப்பட அண்ணாவின் கல்விக் கருத்துக்கள் காந்தமாய் விளங்கின.

சமுதாயத்தில் நிலவும் ஏற்றத்தாழ்வினைக் களைய, சமதர்ம மக்கட் கூட்டம் உருவாகக் கல்வி ஒன்றே கருவி என்று நம்பியவர் அண்ணா அவர்கள்.

"படித்த உங்களிடம் இருந்து பண்பும், பயிற்சியும் பெற்றவர்கள் பலர் தொழிலாளர் தலைவர்களாக வரவேண்டும். உங்களைப் போன்ற நடுத்தர வகுப்பினர் உள்ளன்பு வைத்து உங்களிலேயே தக்கவரைத் தலைவராக ஆக்க வேண்டும். தலைவர்களை உங்களிலேயே உற்பத்தி செய்யுங்கள்" என்று அண்ணா கூறினார். இதன் பொருள் என்ன?

"பொதுமக்கள், உழைப்பாளிகள், தொழிலாளர்கள் பல்வேறு உடல் உழைப்பு மேற்கொண்டு வாழ்க்கை நடத்துவோர், விவசாயிகள் இவர்கள் தங்களின் எதிர்காலம் பற்றிக்கூடச் சிந்திக்க நேரம் இல்லாதவர்கள். ஆனால் இவர்களை வழிநடத்துகின்றவர்கள் படிப்பாளிகளாக இருந்தால் ஆற அமர யோசித்து நல்ல முடிவு எடுத்து அவர்களின் வாழ்க்கைத்தரம் உயரச்செய்யமுடியும். அதற்குக் 'கல்வி'யைவிடச் சிறந்த ஊடகம் வேறு எதுவும் இல்லை" என்று விளக்கம் தருகிறார் அறிஞர் அண்ணா.

"சமதர்மம், பகுத்தறிவு, முன்னேற்றம் ஆகியவற்றின் உண்மைப் பொருளை மக்கள் உணர்ந்து கொள்ள மாணவர்கள் அயராது பாடுபட வேண்டும். மாணவர்கள் அளிக்கும் கருத்து விளக்கங்கள் சமுதாய மாற்றத்திற்கு வழி செய்யவேண்டும்.

“கருத்துப் பரப்புதல்” பணியில் மாணவர்கள் தங்களை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும்” அண்ணா அவர்களின் இவ்வெண்ணங்கள் கல்வியைப் பற்றிய அவரின் ஆழமான எண்ண ஓட்டத்தினை நமக்குப் படம் பிடித்துக் காட்டுவன என்றே கூறலாம்.

மாணவர்களாகிய உங்களிடம் எல்லோராலும் கைவிடப்பட்ட கேஸ் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. மனிதனை மனிதனாக்க மனிதனிடம் இருந்து மிருகத் தன்மையைப் பிரிக்க மக்களிடத்திலே மனவளத்தை உண்டாக்க நீங்கள் பாடுபட வேண்டும். மூடநம்பிக்கையுள்ள மக்களைத் திருத்த டாக்டர்களால் முடியாது; உங்களால் தான் முடியும் என்று சொன்னார் அண்ணா.

பகுத்தறிவு, உலகளாவிய சிந்தனை, சமுதாய உழைப்பு, மனித எண்ணங்களுக்கு மாறான கருத்துக்கள், பாமரர் முன்னேற்றம், கிராமப்புற வாழ்வியல் வன்முறை தவிர்த்த நன்முறை இவைகளைப் பரப்புகின்ற உள்ள தோழர்களாக மாணவர்களும் அவர்கள் பெறும் கல்வியும் அமையவேண்டும் என்பது அண்ணா அவர்களின் அவா ஆகும்.

பழமையை விரட்டுதல், வைதீக எண்ண எதிர்ப்பு, சாதித் துவேஷங்கள், சம்பிரதாய முறைகள், முரட்டுப் பிடிவாதங்கள், அர்த்தமற்ற பற்று, பாசங்கள் இவைகளைக் களைதல் கல்வியறிவின் விளைவுகளாக இருக்கவேண்டும். சாதாரண வாழ்க்கை முறைகளில் மலிந்து காணப்படும் போட்டி - பொறாமைகள், சண்டை - சச்சரவுகள், எல்லைப் பிரச்சனைகள், மோதல்கள் - முட்டல்கள் போன்ற இரண்டாந்தர சிந்தனைகளைச் சீறிவிரட்டும் புயலாகக் ‘கல்வி’ உருப்பெற வேண்டும். அஞ்ஞானம் அகற்றல் என்பது கல்வியின் முதன்மைப் பணியாக இருத்தல் வேண்டும். “புது வாழ்வு பெற - முழு வாழ்வு பெற மாணவர்களுக்குப் பகுத்தறிவும், சுயமரியாதை உணர்ச்சியும் தேவை” - என்கிறார் அண்ணா.

## முடிவு

“Education is an instrument of eradicate ignorance, poverty, social inequalities among the people” - என்ற மேலை நாட்டுத் தத்துவஞானி என்பாரின் கருத்து பேரறிஞர் அண்ணாவின் “கல்வியியல் சிந்தனைகளோடு ஒத்திருப்பதைக் கூறி இக்கட்டுரையை நிறைவு செய்கிறேன்.

# அறிஞர் அண்ணாவின் கல்வி சிந்தனைகள்

**மு.ஆ. சரவணன்**
இளங்கல்வியியல் துறை
தமிழ்ப்பல்கலைக்கழகம்

*சங்கே முழங்கு! சங்கே முழங்கு!! சங்கே முழங்கு!!!*
“எங்கள் வாழ்வும், எங்கள் வளமும் மங்காத தமிழென்று சங்கே முழங்கு”

## முன்னுரை

பெரியாரின் இயக்கமே தமிழருக்கு வாழ்வளிக்கும், வல்லமை தரும் அவரின் பகுத்தறிவு விளக்கமே தமிழர்களை தலை நிமிரசெய்யும், என்றும் உறுதிகொண்ட பெரியாரை தலைவராய் ஏற்று பொதுதொண்டு ஆற்றவந்தவரே தென்னாட்டு காந்தி பேரறிஞர் அண்ணா இவரின் பேருறைகள், கடிதங்கள், சொற்பொழிவுகள் போன்றவைகளை கேட்கும் பொழுது நேரம் போவதுகூட தெரியாது. அறிஞர் அண்ணா அவர்களின் சிந்தனைகள் சமுதாய சீர்திருத்ம் உள்ளவனவாகவும், தமிழ் மொழியில் பற்று கல்வி சிந்தனை போன்றவற்றை அவரின் பேருறைகள் மூலம் காண முடிகிறது.

## சமுதாய சிந்தனை

இளம் வயதிலேயே இவர் நிற அடிப்படையிலான பிரிவினையில் மிகவும் பாதிக்கப்பட்டமையால், இவர் இன அடிப்படையிலான கொள்கையை மிகவும் வெறுத்தார். திராவிட நிறம் கருப்பு, கருப்பான நிறம் உள்ளதால் இவ்ரை கேலிசெய்யும் போது திராவிட இனத்தையே கேலி செய்வதாக உணர்ந்தார். எந்த துறையாக இருந்தாலும் சமுதாயத்தில் இருக்கிற பண்பின் பிரதிபலிப்பாகத்தான் அந்த துறை இருக்குமே தவிர சமுதாயத்திற்கு அப்பாற்பட்டதாக எந்த துறையும் இருக்க முடியாது என்று கூறினார்.

மதம், மொழி, கலை, மனோநிலை, குடிமக்கள் என்ற உணர்ச்சி வரலாற்று பழந்தத்துவம் இவகைள் தாம் நம் இன

இயல்புகள் என்றுரைத்த அண்ணா, பார்பனிய ஆதிக்கத்தை எதிர்த்தார். திராவிட இனம் உயர்வு பெற விரும்பியதை அவரின் மொழிகள், இலக்கிய படைப்பு மூலம் தெரிந்துகொள்ள முடிகிறது.

## பார்பனிய எதிர்ப்பு

தனிப்பட்ட முறையில் எந்த பார்பனரையும் எதிர்த்தவர் அல்லர் அவர்களின் கொள்கைகளை மட்டுமே எதிர்த்தார். அவர்களை திருத்தும் விதமாக

> "தவறு செய்தவர்களையெல்லாம் அடியோடு ஒதுக்கி வைத்துவிட்டு அவர்களை ஒரு பரம்பரையாக்கி கொண்டால் பிறகு சமூகம் வெறும் சாக்கடைச்சேறு நிரம்பிய இடம், அதன் நாற்றத்தை சகிக்கமாட்டாத கூட்டம் இவை மட்டும் கொண்டதாகி விடும் அதுவல்ல சமூகத்தை திருத்தும் வழி"

என பார்ப்பனர்களிடம் அன்போடு கேட்டுக்கொண்டார்.

இதே போன்று மத எதிர்ப்பு, ஆதிக்க எதிர்ப்பு, கடவுள் மறுப்பு, இந்தி எதிர்ப்பு சிந்தனைகளும். கடவுள் மறுப்பு, சமுதாய சீரமைப்பு, தாழ்த்தபட்டோர் உயர்வு, மொழிவளர்ச்சி சிந்தனைகள், கலைவளர்ச்சி சிந்தனைகள், அரசியல் விழிப்பு சிந்தனைள் போன்றவைகள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை.

கல்வியானது பார்பனிய சமூகத்திற்கும், ஆதிக்கவர்க்கத்திற்கும் மட்டுமே உரியதானதால் சாமானியர்களும் கல்வி கற்க சமுதாய மாற்ற பெறவும், சாமானியர்கள் கல்வி அறிவு பெறுதலை அவசியம் என்றுரைத்தார்.

## அறிஞர் அண்ணாவின் அரசியல் கல்வி சிந்தனை

மக்கள் கண்டறிய தக்கவும் தேவைப்பட்டபோது மாற்றியமைக்க தக்கதுமான ஓர் ஆட்சி முறைவேண்டும். நோக்கம் குறித்து அமைந்திடவும் எதிர்பாராத பயன்பெற்றுவிட இயலாது போயின் மாற்றிடவும் தக்கதான ஆட்சிமுறை அமைய சாமான்யர்களுக்கு கல்வி அறிவு, மற்றும் தேசப்பற்று பெற்றிருத்தல் அவசியம் என கூறினார். ஜனநாயக நாட்டில் அனைவருக்கும் கல்வி

அளித்தல் வேண்டும். தாழ்த்தப்பட்டோர், விவசாய மற்றும் மிகவும் பின்தங்கியவர்களுக்கு கல்வி அளிப்பதன் மூலம் நல்ல அரசியல் தலைவர்களை தேர்ந்தெடுக்க முடியும் என்று கூறும்போது அண்ணா அவர்களின் ஜனநாயக முறையினை ஆதரிப்பது நாம் தெரிந்துகொள்ள முடிகிறது.

## அறிஞர் அண்ணாவின் கல்வி சிந்தனைகள்

கல்வியானது, அறிவும், ஆராய்ச்சி திறனும், காரணம் காரியமிக்க சிந்தனையையும் செயல்முறைகளும் போற்றி வளர்க்கப்படும் விதமாக கல்வி அமைத்தல்வேண்டும். மேலும் ஒரு நாட்டின் அறிவு களஞ்சியங்களாகவும் கருத்து கருவூலங்களாகவும் விளங்குபவை அந்நாட்டின் கல்வி கூடங்களே.

சிந்தனை, தெளிவு, மதிநுட்ப திறன்,தேவையுள்ளம், ஆகியவற்றின் தூதுவர்களாகத் திகழும் வண்ணம் வருங்கால குடிமக்களை தயாரித்திடும் பொறுப்பு கல்வி கூடங்களுக்கு உண்டு என்றும், சமுதாயத்தின் பல்வேறு துறைகளையும், கற்று சார்புகளையும் பக்குவபடுத்தி மக்கள் பயனுறு வாழ்வு வாழ்ந்திட மக்களுக்கு கல்வி மிகவும் அவசியம் என கருதினார்.

இந்த கல்வியானது பழங்காலத்தில் ஆட்சி பீடத்தில் இருப்போருக்கும் செல்வந்தர்களுக்குமான கல்வி புகட்டும் விதமாக அமைந்திருந்தது. எனவே தான் அம்மாதிரியான குருகுல கல்வி முறையினை வன்மையாக சாடியுள்ளார். ஆனால் அனைவரும் தற்பொழுது கல்வி கற்பதினால், கல்வி புகட்டுவதில் சாமானியர்களின் வாழ்வையும், தாழ்வையும் கருத்தில் கொண்டு பணியாற்றும் பாங்கினை பெற்று செயல் புரியவேண்டும் என்ற சூழல் உருவாகியுள்ளது.

இவ்வாறு அமையும் கல்வியானது ஜனநாயக உணர்வையும் நெறிமுறைகளையும் நன்கு ஊட்டி, உணர்த்திட வல்லவனாக இருத்தல்வேண்டும். ஜனநாயக முறையில் மற்றவர் கருத்துகளை மதித்து, இணைந்து செயல்புரிந்திடும் பண்பும் வேற்றுமைகளை பேசி தீர்த்து நல்வழி கருத்தோட்டமும் அமைய அவசியம். எனவே கல்வி கூடங்களில் கற்பிக்கப்படும் கல்வியன்று ஜனநாயக அடிப்படையில் அமையவேண்டும் என கூறினார்.

## கல்வி பணிக்கான வேண்டுகோள்

1967ல் பேசுகையில் கல்வியை பரப்புவது என்பது முற்றிலும் அரசாங்கத்தால் செய்யப்பட வேண்டிய வேலை என்ற இருந்துவிடாமல், பண வசதியும், வாய்ப்பு படைத்தவர்களும் கல்வி கூடங்களாகிய அறிவாலயங்களை துவக்குவதில் ஈடுபட வேண்டும். இந்தியாவில் குறிப்பாக தமிழ்நாட்டில் கல்வி பணியை வளர்ப்பதில் தனியார் நிறுவனங்கள் தலைசிறந்த பணியாற்றி இருக்கின்றன. எ.கா.அண்ணாமலை பல்கலைகழகம், பச்சையப்பன் கல்லூரி, போன்றவைகளை சொல்லலாம் என்று ஒரு பேருரையில் கூறியுள்ளார்.

## மாணவர்களுக்கு

இப்போதைய கல்வி தேர்வு முறைக்கும் மாணவர்களின் அறிவுக்கும் சம்மந்தமில்லை, ஆனால் மாணவர்களின் தரத்தை தேர்வுகள்தான் நிரூபிக்கும் என்று உலகம் ஒத்துக்கொண்டிருக்கும் வரையில் மாணவர்கள் தேர்வில் வெற்றியை அடைய பாடுபடவேண்டும். ஆசிரியர்களுடன் கேள்வியை கேட்கும் பொழுது, பயனுள்ளதக்க கேள்விகளை கேட்டு தங்களது துறை சார்ந்த அறிவினை பெற்றிடல் வேண்டும்.

மேலும் கல்வியானது விதி விதி என்று சொல்லபடும் மயக்கிய எழுத்துகள் அடங்கிய ஏடுகளாக இல்லாமல், மாணவர்களின் சிந்தனை திறனை தூண்டும்விதமாகவும், கால மாற்றத்திற்கு ஏற்றாற்போல பாடத்திட்டங்களை மாற்றியமைக்கவும் வேண்டும். இப்பாட திட்டமானது பகுத்தறிவு தரும் பாடப்பொருளை உள்ளடக்கியிருப்பது அவசியம் என்று உரையாற்றி இருக்கிறார் அண்ணாமலை பல்கலைகழகத்திலே.

அதே போல ஆசிரியர்கள் கற்பிப்பது சரியான எடுத்துக் காட்டுகளுடன் மாணவர்களுக்கு புரியும் விதமாக கற்பித்தலை அமைத்திடவேண்டும். ஏனெனில் ஒரு மாணவன் தவறு செய்யும் பொழுது அது தனி மாணவரை மட்டும் பாதிக்கும். ஆனால் ஒரு ஆசிரியர் தவறு செய்யும்போது அது ஒரு சமூகத்தையே பாதிக்கும். எனவே கற்பிப்பதில் ஆசிரியர்கள் மிகவும் கவனமுடனும்

திறமையுடனும் செயல்படுதல் வேண்டும் என்று கூறும்பொழுது அவரின் கல்வி சார்ந்த சமுதாய சிந்தனை நமக்கு புலப்படுகிறது.

அறிஞர் அண்ணா அவர்களின் கல்வி, இலக்கிய, மற்றும் சொற்பொழிவாற்றும் திறனை கவுரவிக்கும் விதமாக 1968ஆம் ஆண்டு அண்ணாமலை பல்கலைகழகம் அவர்களுக்கு டாக்டர் பட்ம் வழங்கி கவுரவித்தது.

## முடிவுரை

அறிஞர் அண்ணாவின் கல்வி சிந்தனை உயர் குலத்தோர் மட்டுமின்றி சாமானியர்களும் கல்வியறிவு பெற்றிடவேண்டும் என்றும், பாடப்பொருள் மற்றும் மாணவர்களின் தன்மைக்கு ஏற்றாற்போல் கல்வியை அளிப்பது ஆசிரியர்களின் திறன் அமைவதால் மட்டுமே தனிமனித வளர்ச்சியும், நாட்டின் வளர்ச்சியும் அமையும் என்பது அண்ணா அவர்கள் கருத்தாகும்.

# அறிஞர் அண்ணாவின் பார்வையில் கல்வி

**வி. மனோகரன்**
ஆய்வியல் நிறைஞர்
தமிழ்ப்பல்கலைக்கழகம்

## முன்னுரை

தமிழரைத் தட்டி எழுப்பிய தலைவர் பேரறிஞர் அண்ணா. அறிஞர் அண்ணாவின் எழுத்துக்கள் காலத்தை வென்று வாழும் காலப்பெட்டகம். பேரறிஞர் அண்ணா தமிழிலும், ஆங்கிலத்திலும் ஆற்றல் வாய்ந்தவராக திகழ்ந்தார். சொற்பொழிவில் சுவையைக் கூட்டியவர் அண்ணா. தமிழர் எழுச்சி பெற தன்மான உணர்வினைப் பட்டை தீட்டிக்கொள்ள பேரறிஞர் அண்ணாவின் கல்விச் சிந்தனைகள் பேருதவி செய்தது. நாம் தொழும் தெய்வங்கள், கோவில்கள் மட்டுமல்ல கல்விச்சாலைகளுமே! என்பதற்கினங்க பேரறிஞர் அண்ணா அவர்களின் கல்விச்சிந்தனைகள் பற்றி ஓரிரு செய்திகளை இக்கட்டுரையில் காண்போம்.

## கல்வி நீரோடை

கல்வி நீரோடை வாழ்க்கை என்னும் வயலை வளமாக்குவது. வாழ்வின் வளம் பெருகவேண்டுமானால் கல்வி நீரோடையின் தயவுவேண்டும் என்று அறிஞர் அண்ணா கூறினார். மேலும் இந்த நீரோடையின் ஆதிக்கத்தை யார் பெற்று இருக்கிறார்களோ அவர்களுக்கு வாழ்க்கை வளம் ஏற்படுகிறது. ஆரியர் இந்த கல்வி நீரோடையைத் தமது ஆதிக்கத்தில் வைத்துக் கொண்டுள்ளனர். எனவே அவர்கள் இனத்திலே வாழ்வு தழைக்கிறது. அந்த நீரோடைக்கு வெகுதொலைவில் இருப்பதால் தமிழரின் வாழ்வு தற்குறித்தனம் நிரம்பிய தரிசு நிலம் போல் இருக்கிறது. பெரியவர்கள், கல்வி நீரோடையின் நிலை பற்றிச் சிந்திக்கத் தவறிவிட்டார்கள். அதனாலேயே நம் இனச் சிறுவர்கள், கல்வித்துறையிலே, பிற்போக்கான நிலை பெற்றனர் என பேரறிஞர் அண்ணா கூறினார். விளையாத கழனி - படிப்புவராத இனம்!! ஏன்

விளையவில்லை! நீர்பாசனம் இல்லை, ஏன் நீர்பாசனம் கிடைக்கவில்லை நீரோடை நம்மிடம் இல்லை, வேறு நிலத்தாரின் ஆதிக்கத்தில் இருக்கிறது. படிப்பு ஏன் வரவில்லை? கல்வி எனும் நீர் பாய்ச்சப்படவில்லை? ஏன்? கல்வி நீரோடையின் ஆதிக்கம் வேறு இடத்திலே இருக்கிறது. உண்மையாகவா? உண்மைதான் என புள்ளி விவரங்களுடன் அறிஞர் அண்ணா கல்வியில் பார்ப்பனர் ஆக்கம் பற்றி மனம் நொந்து விளக்கினார்.

## கல்வி அனைவருக்கும் பொது

கல்வி அனைவருக்கும் பொதுவானது. குளம் வெட்டுபவனுக்குக் குளத்துநீரை உபயோகிக்க முடியாதபடி இருப்பதுபோல, கல்வியை பராமரிக்க பொதுமக்கள் அனைவரும் வரிப்பணம் செலுத்தியபோதிலும், அதனால் நாட்டு மக்களுக்குப் பயன்விளையவில்லை என்று அறிஞர் அண்ணா எடுத்துரைத்தார். சிறுபான்மையிரான பார்ப்பனர் 100க்கு 53 பேர் கல்வியறிவு பெற்றிருக்கத் திராவிடர் 100க்கு 8 பேருக்குக் குறைவாகவே கல்வியறிவு பெற்றிருக்கின்றனர். திராவிட இனத்தில் கல்வியறிவு வறண்ட பாழ்நிலமாகக் காணப்படும்பொழுது, பார்ப்பனரின் கல்வியறிவு செழித்தோங்கி வளர்ந்துள்ளது. கல்வி அனைவருக்கும் பொது என்ற வழி சென்றால் தான் கல்வி நீரோடை நாடெல்லாம் பாயும் என அறிஞர் அண்ணா எடுத்துரைத்தார்.

## அறிஞர் அண்ணாவின் கல்விச் செல்வம்

பாறைக்கடியிலே, சுரங்கங்களினூடே இருக்கும் தங்கக் கட்டிகள்கூட,தோண்டி எடுத்து, மாசு நீக்கி, பளபளக்கச் செய்யும் போதுதான் அதன் ஒளி உணர் தன்மை நமக்கே உரைக்கும். அதுபோல மாணவச் செல்வங்களையும் பட்டை தீட்டி, மேலும் ஒளியேற்ற, அவர்களுக்கு அழியாச் செல்வமாம், கல்விச் செல்வத்தை அள்ளிக்கொடுக்க வேண்டிய நிலையில் ஆசிரியர்கள் இருக்கிறார்கள் என்பார் நம் பேரறிஞர்.

## அறிஞர் அண்ணாவின் பகுத்தறிவுப் பாடங்கள்

மாணவர்களின் தரம் என்பதும் கல்வியில் வெற்றி என்பதும் மதிப்பெண் அடிப்படையிலேயே முடிவு செய்யப்படுகின்றது

என்பதை இவ்வுலகம் ஒத்துக்கொண்டிருக்கிறது என்கிற காரணத்தால் ஆசிரியர்கள் மாணவரின் தேர்வு வெற்றிக்கு சற்றே கூடுதல் கவனம் செலுத்தவேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். மாணவர்களுக்கு சிந்தனையைத் தூண்டும் கேள்விகளைக் கேட்கும் திறனை ஆசிரியர்கள் ஊக்குவிக்க வேண்டும். மாணவர்களின் ஐயங்களைத் தீர்க்க ஆசிரியரிடத்தே இம்மியளவேனும் தயக்கம் இருத்தல் கூடாது. போதனையில் வராத சந்தேகங்கள் இன்று மாணாக்கருக்கு சிந்தனையில் வந்துள்ளது. அந்த அளவிற்கு பிரச்சினைகளும், போராட்டங்களும் புத்துயிர் பெற்றிருக்கின்றன. இப்புவியிலே அதனாலேயே, பாடத்திட்டங்களை இன்றைய சூழலுக்கேற்றார்போல் திருத்தியமைத்து, பகுத்தறிவுப் பாடங்களை மாணாக்கருக்கு வழங்கவேண்டும் என்றார், பேரறிஞர் அண்ணா அவர்கள்.

## கல்வி நூல்கள் பற்றிய அறிஞர் அண்ணாவின் கருத்து மலைகள்

எண்ணங்களை எழுச்சி புகுத்தல், பண்பூட்டும் செயல்களைத் திறப்படுத்துதல், என்பதற்காகவே கல்வி அமைய வேண்டும். கல்வி நூல்களும், அறிவுக்குத் தெளிவு தருபவையாகவும், ஒழுக்கத்திற்கு வித்திடுவதாயும், தன்னம்பிக்கைக்கு தனிவழி காட்டுவதாயும் தான் நூல்கள் இருக்க வேண்டும் என்பார் அண்ணா. இழித்தும், பழித்தும் பேசிடும் நூல்கள் இருக்கலாகாது என்பார் பேரறிஞர். எதிலும் சுவையும், பலனும் இணைந்தே இருக்கவேண்டும் என்பார் அண்ணா.

## வீட்டிற்கோர் புத்தகச் சாலை

மனிதன், தன் அடிப்படைத் தேவைகளாக உணவு, உடை, இருப்பிடம் போன்றவை தீர்ந்தவுடன் அவன் முன்னுரிமை அளிக்க வேண்டியது கல்விச் சோலையைத் தன்னகத்தே கொண்ட புத்தகச் சாலையேயாகும். நமது பாதையில் நாம் நேராக நடந்துசெல்ல பெருந்துணை புரிவது கல்வியேயாகும். விரிவான அறிவும், விளக்கமான சிந்தனையும், தெளிவான பேச்சும், தேர்ந்த நல்லொழுக்கமும் பெற கல்வியே அடிப்படைத் தேவை. அடிப்படை எண்ணங்களுக்கு ஆதாரமாக இருப்பவை புத்தகங்களே! அந்த புத்தகங்களைக் கொண்ட ஒரு புத்தகச் (சோ)சாலை ஒவ்வொரு வீட்டிலும் இருக்கவேண்டும் என்பார் நம் பேரறிஞர் அண்ணா.

## அறிஞர் அண்ணாவின் பார்வையில் பல்கலைக்கழகங்கள்

அறிவாற்றலை விரும்புவோருக்கு அதனை அதன் உண்மையான அளவிலும், நேரிய முறையிலும் சீரிய முறையிலும் செம்மைப்படுத்தியும் கொடுக்க வேண்டியதே, பல்கலைக் கழகங்களின் தலையாயப் பணி. உலகின் கருத்துக்களுக்கு ஓங்கு தன்மை அளிப்பதும், குறிக்கோள்கள், கொள்கைகளில் தனியாண்மையைக் காக்கவேண்டிய காரியப்பணியில் முன்னிற்பவை, பல்கலைக்கழகங்களே, என்பார் பேரறிஞர் அண்ணா.

## புத்தகங்களின் தேவை பற்றி அண்ணா கூறுவன

புதிய செய்திகளைத் தெரிந்துகொள்ள மட்டுமல்ல, பழைய செய்திகளை மறந்துபோகவும் கூடப் புத்தகங்கள் தேவைப்படுகின்றன. மக்கள் மனதிலே உலக அறிவு புகவும், தங்கள் நாட்டைப்பற்றியும், பிற தேசத்துவங்கள் பற்றியும் அறிய, ஏடுகள், புத்தகங்கள் போன்றவை வேண்டும். அந்த புத்தகங்கள் நிபுணத்துவம் கொண்டவையாக இருக்கவேண்டும் என்பதில்லை அடிப்படை உண்மைகளை அறிவிக்கும் நூல்களாக இருந்தாலே போதுமானது.

## முடிவுரை

அடுக்கடுக்காய் நிகழ்ச்சிகளைச் சொல்லிக்கொண்டே போகும் அலை எழுத்தாளர்களே அறிஞர் அண்ணாவின் கல்வியியல் சிந்தனைகளைப் பற்றிக் கூற தடுமாறும்போது நாமெல்லாம் முழுமையும் முடிவில் கூறமுடியும் என்பது முடியாத காரியமே. மானத்தோடு வாழ, ஒருவனை ஒருவன் தாழ்த்தாமல் வாழ்வதற்கும் உண்மைப் பொருளுணர்ந்து உரைப்பதற்கும், கல்வியியல் சிந்தனைகளும், கல்வியியல் வழிவந்த கற்றல் திறன்களும் தேவை என்பதை மிகத் தெளிவாக தன் கல்விச் சிந்தனைகளில் கடைமடை திறந்து கருத்துச் செரிவைக் கொட்டுபவர் நம் பேரறிஞர் அண்ணா அவர்கள்.

# பேரறிஞர் அண்ணாவின் கல்விப்பணி

**வே. அய்யாத்துரை**
தமிழ்ப்பல்கலைக்கழகம்

## முன்னுரை

சின்ன காஞ்சிபுரத்தில் சாதாரண குடும்பத்தில் பிறந்த எளிய மனிதரான அறிஞர் அண்ணா அவர்கள் இந்த நாட்டின் ஒப்புயர்வற்ற தலைவராக வாழ்ந்தவர். தமிழர்கள் எல்லோரும் அறிஞர் அண்ணா என்று ஆசையோடு தம்பியர்கள் கூடியிருக்க வாழ்ந்தவர். அவர்தான் அந்த மாமேதைதான் பேரறிஞர் அண்ணா. தமிழ்ச் சமுதாயத்தின் இணையற்ற அத்தலைவரான பேரறிஞர் அண்ணா ஒரு சகாப்தம். அவர் மக்களுக்கு பல பணிகள் செய்தவர். மக்கள் மனதில் நீங்காட இடம் பிடித்தவர் அவருடைய கல்விப்பணி குறித்து இங்கு காண்போம்.

## உடலுரை

தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர் என்று பாடிய புதுமைக் கவிஞர் பாரதியின் வாக்கிற்கேற்ப தமிழ் முழக்கமிட்ட அத்தலைவரின் பெயரால் படிப்பகங்களும் நூலகங்களும் திறந்து அத்தமிழ் மகனின் வரலாற்றைப் படித்துணர்ந்து தங்களை உயர்த்திக் கொண்டவர்கள் தமிழர்கள். பாலை எத்தனை முறை பருகினாலும் கசப்பதில்லை. தேன் திகட்டுவதில்லை. வாழையை, மாங்கனியை பலாச்சுளையை எத்தனை முறை தின்றாலும் அவைகள் வெறுப்பினை உண்டாக்குவது இல்லை. ஏன்? அவகைளின் சுவைகள் அப்படி. அறிஞர் அண்ணாவின் சிந்தனைகள் மற்றும் அவர் ஆற்றிய பணிகளை நினைவு கூறும்போது அது நமக்கு ஒரு புத்துணர்வும் புதுவேகமும் அளிக்கிறது.

"எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு" என்பது வள்ளுவர் வாக்கு.

எண்ணையும் எழுத்தையும் கற்றுத்தரும் ஆசிரியர்களே சமுதாயத்திற்கு உயிர்நாடி போன்றவர்கள். மண்ணை குயவன் பானையாக உருவாக்குகிறான். அது சமையல் செய்யப் பயன்படுகிறது. கல்லை சிற்பி சிலையாக உருவாக்குகிறான் அது வழிபாட்டுக்குப் பயன்படுகிறது. அதுபோன்றுதான் ஆசிரியர்களும் மாணவர்களை பெரும் அறிஞர்களாகவும் உருவாக்க முடியும். அத்தகைய உயர்ந்த பணி ஆசிரியப்பணி. ஆசிரியப்பணி ஆகவே தான் எழுத்தறிவித்தவன் இறைவனாவான் என்று புகழ்பாடினார் நம் முன்னோர். ஆம் அத்தகைய உயர்ந்த ஆசிரியப் பணியில்தான் தன் வாழ்க்கையைத் தொடங்கினார் அறிஞர் அண்ணா.

அறிஞர் அண்ணாவின் பள்ளி வாழ்க்கை அமைதியானது. தானுண்டு, படிப்புண்டு என்றிருப்பார். எப்போதும் அவர் கையில் புத்தகம் இருந்துகொண்டே இருக்கும். நல்ல புத்தகம் நல்ல நண்பனைப்போல் என்ற பழமொழிக்கேற்ப புத்தகத்தையே நண்பனாகக் கொண்டிருந்தார். அவர் ஆங்கிலமும் தமிழும் படிக்கும் அழகைக் கண்டு ஆசிரியர்களே வியந்து போற்றுவார்கள்; எப்போதும் ஆசிரியர்களை தெய்வமாக மதித்து வந்தார்.

மாணவர் உலகம் தனி உலகம். உணர்ச்சியால் உந்தப்படுபவர்கள் மாணவர்கள். ஆனால் வருங்காலத்தைச் செப்பனிடும் கல்வியை பல்கலைக்கழகத்தின் மூலமாக பெறுகிறார்கள். அவர்களால் எதையும் சாதிக்கமுடியும். ஆனால் உணர்ச்சி வசப்படும் அவர்கள் உடனே வன்முறையைத்தான் கையாளுவார்கள். அதற்காக மன்றம் அமைத்து சிறப்புமிக்க சொற்பொழிவாற்றச் செய்வது கல்லூரிகளில் நடைபெறும் வழக்கம். ஒரு சமயம் அறிஞர் அண்ணா பல்கலைக்கழகத்திற்கு சொற்பொழிவாற்ற வந்தபோது, சூழ்நிலை அறிந்து பேசினார். நாகரிகம் சிறிதும் வழுவாமல் தான் எடுத்துக்கொண்ட இளம் உள்ளம் என்ற தலைப்பிலிருந்து நழுவாமல் அனைவரும் பாராட்டும்படி பேசினார்.

"உலகத்தோ டொட்ட எழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலாதார்"

என்ற வள்ளுவர் கொள்கைக்கேற்ப அங்குள்ள பேராசிரியர்களின் கொள்கை அறிந்து அவர்கள் குறைசொல்லாத வண்ணம் பேசினார்.

கற்றது பிறர்க்கு கற்பிக்கவே என்ற மந்திரமொழி சொன்னவர் அறிஞர் அண்ணா அவர்கள். மாணவர்களே சமூகத்திடமிருந்து நீங்கள் பெற்ற உபகாரத்தை எந்தவிதத்திலாவது திருப்பி செலுத்திவிடாமற் போனால் சமூகத்தின் பெருநிதிப்பேழை வறண்டுவிடும். நாளாவட்டத்தில் பொதுவாழ்வே பாலைவனமாகிவிடும் என்பது அறிஞர் அண்ணாவின் அறைகூவல். மாணவர்களிடம் உலக நல்லறிஞர் பல்லோரும் ஆழ்ந்தறிந்து ஆராய்ந்து போற்றிப்பேணி மேன்மையாக பக்குவப்படுத்தி உருவாக்கியுள்ள நற்சிந்தனைகளின் சிறப்பு தொகுப்பு, செழுமையான எண்ணங்களின் செறிவான சுருக்கப்பதிப்புதான் பட்டப்படிப்பு. இது சீர் மிகுந்தது. பட்டதாரிகளே நீங்கள் சிறப்பாகப் பெற்றுள்ள சிந்தனைத் தொகுப்பினை மக்கள் மன்றத்தில் விவரித்து விளக்கவுரையாற்றிடுங்கள். செறிவாகத் தெரிந்துள்ள செழுமையாக எண்ணங்களை நாடெங்கும் விளக்கிப் பரப்பிடுங்கள் என்று அவர் அறிவழைப்பை வழங்குகிறார்.

## முடிவுரை

அறிஞர் அண்ணா வரலாறு படைத்தவர் அவர் பேசினார் பேச்சாளர்கள் உருவானார்கள். அவர் எழுதினார் எழுத்தாளர்கள் உருவானார்கள். மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கு மணம் உண்டு என்று கூறிய அறிஞர் அண்ணா இறந்து விட்டார். எழுந்து நில்லுங்கள் விழித்துக்கொள்ளுங்கள் உங்களுடைய இலட்சியங்கள் நிறைவேறும் வரை நிற்கவேண்டாம் என்று இயம்பிய விவேகானந்தரைப்போல வீறுடன் பேசிய அறிஞர் அண்ணா இறக்கவில்லை அவர் செய்த பணிகளின் மூலம் நம்மோடு இன்றும் இருக்கிறார்.

# அறிஞர் அண்ணாவின் கல்விக் கொள்கைகள் பற்றிய சிந்தனைகள்

**ப. ரெங்கமணி**
தமிழ்ப்பல்கலைக்கழகம்

இருபதாம் நூற்றாண்டின் இடைக்காலத்தில் இந்திய வரலாறு இணையற்ற ஒரு தலைவரைப் பார்த்து வியந்தது. அவர் வேறுயாருமல்ல பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆவார்.

பண்புடையார் பட்டுண்டு உலகம் அதுவின்றேல்
மண்புக்கு மாய்வது மண் - என்றார் நம் தெய்வப்புலவர்.

பண்புள்ளம் கொண்ட பெரியோர்களால் தான் இன்றளவும் உலகியல் தொடர்ந்து நடைபெறுகிறது. இத்தகைய பண்பாளர்களில் ஒருவராகவும் அறிவின் உருவமாகவும் திகழ்ந்தவர் அறிஞர் அண்ணா அவர்கள் ஆவார். அவர் பேச்சும், எழுத்தும் தென்றலாகவும் மணந்தன. தீப்பொறியாகவும் திகழ்ந்தன. புதுமைகள் நிரம்பிய புதிய வரவாகவும் விளங்கின. அறியாமையில் அழுந்திய மக்களை அறிவுத்தேரில் ஏற்ற அவர் அரும்பாடுபட்டார். பல புரட்சிக் கருத்துக்கள் அவரிடமிருந்து பொங்கி எழுந்தன. அதன் காரணமாக அவர் பல எதிர்ப்புகளை எதிர்கொண்டார். எத்தனை எதிர்ப்புகள் வந்தபோதும் அஞ்சாமல், அயராமல் அவர் ஆற்றிய பணிகளைக்கண்டு இலக்கிய வரலாறு இவர் போல் உண்டா என்று வியந்தது. அரசியல் அரங்கம் அவரை தலைவர்களின் தலைவராக எண்ணி வ்ாழ்த்தியது. மக்கள் நெஞ்சிலே அவர் அறிஞர் அண்ணாவாக திகழ்ந்தார்.

அறிஞர் அண்ணா அவர்கள் தம் இளவயது முதலே பள்ளிப்படிப்பில் அதிக நாட்டம் உள்ளவராக திகழ்ந்தார். கல்வியில் சிறந்து விளங்கினார். கல்வி கற்கும்போது பெரும்பாலான மாணவர்கள் பாடங்களை நன்றாக புரிந்துகொண்டு சொந்தமாக எழுதுவதில்லை. மனப்பாடம் செய்தே எழுதுவது வழக்கம்.

ஆனால் அறிஞர் அண்ணா அதற்கு விதிவிலக்காக திகழ்ந்தார். பாடங்களை கவனமாக கேட்ட பின்பு அவற்றை தமது சொந்த நடையில் எழுதி தேர்வுகளில் சிறப்பான மதிப்பெண்கள் பெற்றார். வகுப்பிலும் முதல் மாணவராக அறிஞர் அண்ணா தேர்ச்சி பெற்றார். ஏழ்மையின் காரணமாக பட்ட மேற்படிப்பில் சேர இயலாத சூழ்நிலையில், அவரது படிப்பாற்றலும், கல்வித்திறனும் அவருக்கு ஊன்றுகோலாக அமைந்து அவரை ஊக்கப்படுத்தி அவரின் பட்ட மேற்படிப்பிற்கு வித்திட்டது. அறிஞர் அண்ணா அவர்கள் கல்லூரியில் பயின்று வரும் போதே தமிழ் மட்டுமல்லாது ஆங்கிலத்திலும் தமது சொந்த நடையில் கட்டுரைகள் எழுதுவதில் வல்லவராக திகழ்ந்தார். கட்டுரைகளை சிறிய தொடராகவோ, பெரிய தொடராகவோ எந்த முறையில் வேண்டுமானாலும் எழுதும் அரிய ஆற்றல் அவரிடம் இருந்தது. இதைக்கண்டு அவரது கல்லூரிப் பேராசிரியர்கள் வியந்தனர்.

கல்லூரியில் சேர்ந்த மாணவர்களில் சிலர் ஆடம்பரப் பழக்க வழக்கங்களுக்கு அடிமை ஆகிவிடுவதுண்டு. ஆனால் அறிஞர் அண்ணாவோ எப்போதும் ஒரே தன்மையுடையவராகவே விளங்கி வந்தார். கல்வி கற்பது அறிவை வளர்த்துக் கொள்வதற்காகத்தானே தவிர, ஆடம்பர வாழ்க்கைக்காக அல்ல என்ற உள்ளம் அவருக்கு இளமை முதலே இருந்தது. அதே எளிமையை அவர் தமது வாழ்நாள் முழுவதும் கடைபிடித்தார். அவரது கல்லூரி வாழ்க்கை இன்றைய கல்லூரி மாணவர்கள் கடைபிடிக்க ஒரு முன் உதாரணம் ஆகும்.

ஒவ்வொருவரும் ஒவ்வொரு துறையில் சிறந்து விளங்குவர். ஆனால் ஒருவர் எல்லா துறைகளிலும் சிறந்து விளங்க முடியுமா என்ற வினாவிற்கு விடையாக அறிஞர் அண்ணா திகழ்ந்தார். ஆம் அவர் எல்லா துறைகளிலும் மதிநுட்பம் கொண்ட பல்துறை விற்பன்னராக விளங்கினார். பேச்சு, எழுத்து, நாடகம், நடிப்பு, கலை, அரசியல், பத்திரிகை போன்ற பல துறைகளிலும் அவர் தடம் பதித்தார். அவரின் அறிவூட்டும் கட்டுரைகள் பல புகழ்பெற்ற வரலாற்று சிறப்புடையன. ஏறத்தாழ அறுபது ஆண்டுகளுக்கு முன்னார் அவர் எழுதிய கட்டுரைகளை இன்றும் படித்தால் சுவையும், படிப்பவருக்கு பயனும் அளிப்பன. குறிப்பாக "திராவிட நாடு" எனும் வாராந்திர இதழில் தமிழனுக்கு "ஜாதி"யும் கிடையாது. தமிழில் "ஐ"வும் கிடையாது எனக் கூறியதன் மூலம் அவரது தமிழ் சொல் வன்மை புலப்படும்.

அறிஞர் அண்ணா அவர்களிடம் தமிழ் மட்டுமல்லாது ஆங்கில அறிவும் மேலோங்கி நின்றது. அமெரிக்காவின் யேல் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக வெளிநாட்டு அறிஞராக அண்ணா கலந்து கொண்டார். அவரிடம் மாணவர்கள் கலந்துரையாடும் நிகழ்ச்சி நடைபெற்றது. அப்போது ஒரு மாணவன், "வாட் இஸ் யூனியன்?" என கேட்க "ஆனியன் இஸ் யூனியன்" என மதிநுட்பமாக பதிலளித்தார்.

### அண்ணாவின் பட்டமளிப்பு விழா உரை

1967ஆம் ஆண்டு அண்ணாமலை பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா உரையின்போது அவர் ஆற்றிய உரை மாணவர்களுக்கு மிக பயனுள்ளதாக அமைந்தது. அதில் அவர் மாணவர்களின் தலையாய கடமைகளை வலியுறுத்துகின்றார். அது மட்டுமல்லாது ஒவ்வொரு பல்கலைக்கழகத்தின் கடமை குறித்தும் அந்த உரையில் குறிப்பிடுகின்றார். அதாவது

The common man has become the birth place of a potential ruler and the duty today, the responsibility today of the Universities is to fashion out of him an individual fitted and equipped for the task of making democracy fruitful and effective.

The supreme task before the University is to give those who seek a vision of knowledge in its true proportions and perspectives to maintain the sovereignity of ideas and ideals in the world.

திறமையான ஆட்சியாளர்களின் பிறப்பிடமாக சாதாரண மனிதன் திகழ்கிறான். அந்த மனிதனை செம்மையாக்கி, சீர்படுத்தி, நெறிப்படுத்தி, இச்சமுதாயத்தில் மக்களாட்சியை வெற்றி பெறச் செய்வதே நமது பல்கலைக்கழகங்களின் இன்றைய கடமையாகும். மேலும் அதன் பங்கு தரமான கல்வியை மாணவர்களுக்கு அளிப்பதோடு மட்டுமல்லாமல், அதனை பயின்ற மாணவர்கள் அதை இவ்வுலக நன்மைக்காக நடைமுறைபடுத்தவேண்டும் என்றும் வலியுறுத்துகிறார்.

### மாணவர்களைப்பற்றி அறிஞர் அண்ணா

மாணவர்கள் அறிவு தாகத்தினை தக்க விதத்தில் தீர்த்திடல் வேண்டும். அறிவின் பல்வேறு கூறுகளையும் தெரிந்து தெளிந்து

வழிகாட்டிடல் வேண்டும். கருத்துத் தெளிவும் சுதந்திரமான செயல்திறனும் படைத்தவராய் வாழ்ந்திடும் உளப்பாங்கும் உறுதியும் மாணவர்களிடம் அவசியம் அமைந்திடல் வேண்டியது மிக மிக முக்கியமாகும். மேலும் மாணவப்பருவம் குறித்து அறிஞர் அண்ணா விடுத்த அறிக்கையில் அவர் கூறியதாவது:

"வாழ்க்கை எனும் பொய்கையிலே, பகலவன் எனும் ஒளிப்பட்டு, விஷகிருமிகள் ஒழித்திடும் பருவம். மணமும் குளிர்ச்சியும் மருவி மக்களை மகிழ்விக்கும் தென்றல் போல, சுருதியும், தாளமும் அமைந்து, சொற்சுவையும் பொருட்சுவையும் இயைந்து கேட்போருக்குக் களிப்பூட்டுவதோடு கருத்தூட்டும் இசை போல் உள்ளது. உள்ளத்திலே ஊறிடும் உணர்ச்சியினை அறிவிக்கும் ஆற்றல் மிக்கது மாணவப்பருவம் என்று உரைக்கிறார்.

மாணவர்கள் வைரங்களாக திகழவேண்டும். வைரத்திற்கு அதிக மதிப்பிருப்பதற்கு காரணம் பூமியின் வெகு ஆழத்தில் அது இருப்பதேயாகும். நிலத்தின் கீழே தோன்றினால் கிளிஞ்சல்கள், சுண்ணாம்பு, நிலக்கரி, அதற்கும் கீழே அழுத்தி வைக்கப்பட்டிருக்கும் வைரத்திற்குதான் மதிப்பு மிகவும் அதிகம். அதைப்போல் மாணவர்கள் தங்களது நோக்கங்களையும், இலட்சியங்களையும் மனதின் ஆழத்தில் அழுத்திவைத்து அதற்கு ஏற்றாற்போல் செயல்படவேண்டும். அவர்கள் பெறுகின்ற கல்வி அவர்களுக்காக மட்டுமல்ல, சமுதாயத்திற்காக கல்வி பெறுகிறார்கள் என்பதை உணர்ந்து செயல்படவேண்டும். அவர்களின் செயல்கள் சமுதாயத்திற்கு பயன் பெறுவதில் வைரங்களாக திகழ வேண்டும்.

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற அவரது முப்பெரும் கொள்கையினை மாணவர்கள் மட்டுமல்லாது, தமிழக மக்கள் அனைவரும் பின்பற்ற தமிழகம் ஒருநாள் அனைத்து துறைகளிலும் முன்னேறி உலகிற்கே முன்மாதிரியாக விளங்கும்.

# அறிஞர் அண்ணாவின் கல்விச் சிந்தனைகள்

கொ. பிரபாகரன்
தமிழ்ப்பல்கலைக்கழகம்

## முன்னுரை

"இரத்தப் புரட்சியை விடக் கோடி மடங்கு உயர்ந்தது கருத்து புரட்சி. இந்தப் புரட்சியால் மக்கள் வாழ்க்கையில் பல மாறுதல்களை எழுப்பிடலாம். ஆனால் அவர்களின் எண்ணம் திருந்தி விட்டதாகவோ, அறிவு வளர்ந்து விட்டதாகவோ சொல்ல முடியாது. கண்மூடி மக்களுக்கு வெறியையும் ஆத்திரத்தையும் ஊட்டினால் அவர்கள் இரத்தப்புரட்சி செய்ய முற்பட்டு விடுவார்கள். வெறியும் ஆத்திரமும் அடங்கிய பிறகு தலைவர்கள் சிலர் தாங்கள் எண்ணிய நோக்கத்தையடையலாம். பொது மக்களுக்கு வேறொரு வழியைக் காட்டி அதில் கண்மூடிகளாகவே அவர்களை அழைத்துச் செல்லலாம். அதுபோல் வெறியும், ஆத்திரமும் ஊட்டவல்ல வேறு தலைவர்கள் தோன்றி இரத்தப் புரட்சியினால் அழிவு வேலை செய்யத் தொடங்கினால் மறுபடியும் வேறொரு வகையில் இரத்தப் புரட்சியே விளையும்.

கருத்துப் புரட்சியில் இந்தத் தொல்லை இல்லை. மக்கள் எண்ணக் கற்றுக் கொள்வார்கள். எதையும் அறிவுடன் ஆராய்ந்து நோக்க முயல்வார்கள். கருத்துக்களில் புதுமை ஒளி வீசத் தொடங்கும். ஆட்டு மந்தைகளைப் போல் தலைவர்களுக்குப் பின்னே கண்மூடிகளாகச் செல்லமாட்டார்கள். தலைவர்களை வழிபடாமல் அவர்களின் நோக்கங்களைப் போற்றித் தொண்டு செய்ய முற்படுவார்கள். வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் சீர்திருத்தம் ஓங்கும். வெறியும் ஆத்திரமும், அடங்கி அறிவும் ஆராய்ச்சியும் விளங்கும்" என்று அறிஞர் அண்ணாவின் 'தீ பரவட்டும்' என்னும் நூலில் முன்னுரை பறைசாற்றுகிறது. இதிலிருந்து இரத்தப் புரட்சியை விட கருத்துப் புரட்சியே

சாலச்சிறந்தது என்பதே அறிஞர் அண்ணாவின் கல்விச் சிந்தனையின் மையக் கருத்தாகும் என்பது புலனாகிறது. அறிஞர் அண்ணாவின் கல்விச் சிந்தனைகள் குறித்து ஆய்வதே இக்கட்டுரையாகும்.

### 1. பட்டம் பெறுவதன் நோக்கம்

"அரைத்தெடுத்துப் பூசி மகிழ்தற்கன்றோ சந்தனம், அடுப்பு எரிப்பதற்கோ? பட்டம் பெறுவதும் பயிற்சி பெறுவதும் நாட்டினருக்கு நல்வாழ்வு தந்திட வேண்டும்" என்று 07.09.1976ல் மதுரைப் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவில் உரையாற்றிய அறிஞர் அண்ணா மேலும்,

"பட்டம் பெறுவோர் எங்கிருந்தாலும் உண்மைச் சமூகத் தொண்டு ஆற்றவேண்டும்" என்றும் குறிப்பிட்டு, கல்வி கற்றுப் பட்டம் பெறுவதால் தனிமனிதனுக்கன்றி சமுதாயத்திற்கு நலம் தரவே என்னும் கல்விச் சிந்தனையை முன்மொழிகிறார் அறிஞர் அண்ணா.

### 2. எழுச்சியுறு சமுதாயத்திற்கு ஏற்றமிகு கல்வி

"நாட்டை வளர்க்கும் வகையில் நாட்டு மக்களை முன்னேற்றும் வகையில், இன உணர்ச்சி மட்டும் இயல்பில் ஏடுகள் எழுதப்படுதல் வேண்டும்." நாட்டின் நிலையறிய ஏடுகள் உறுதுணையாக இருத்தல் வேண்டும். அங்கனமில்லாத ஏடுகள் எத்தனை கலையழகு மிளிர்வனவாயினும் நாட்டிற்கு நலம் பயப்பவையன்று. நாட்டிற்கும் ஏட்டிற்கும் தொடர்பு இருத்தல் வேண்டும் என்று பச்சையப்பன் கல்லூரியில் மாணவர்களிடையே ஆற்றிய சொற்பொழிவில் கல்வியினுடைய ஒரு சாதனமாகிய ஏடுகள், மடமைச்சேற்றிலே மூழ்கிக்கிடக்கின்ற ஒரு சமுதாயம் உண்மை உணர்ந்து, உத்வேகம் அடைந்து உயரிய நிலையை எட்ட வேண்டுமானால் ஏடுகள் எத்தகைய செய்திகளை நல்கவேண்டும் என்னும் கல்விச் சிந்தனையை வழங்குகிறார் அறிஞர் அண்ணா.

### 3. ஆய்வின் பயன்

"திராவிட இலக்கியம், மெய்யறிவியல், கலை, சிற்பம் ஆகியவை திறன்மிகு ஆராய்ச்சிக்குச் சிறந்த பயனுள்ள துறைகளாக

இயங்குகின்றன. வெறும் புகழுக்காக மட்டும் அல்லாமல் நம் பண்டைய மரபு வழியில் உண்மைப் பயனும் அழகுமுள்ள எல்லாவற்றையும் நேரிய முறையில் பாராட்டவே இந்த ஆய்வும் ஆராய்ச்சியும் நமக்குத் தேவை" என்று 18.11.1967ல் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் ஆற்றிய சொற்பொழிவில் கல்வியின் ஒரு கூறாகிய ஆய்வினுடைய நோக்கம் எதுவெனத் தெள்ளத் தெளிவாக எடுத்துரைக்கிறார் அறிஞர் அண்ணா.

### 4. அடிமை வாழ்வை அகற்றும் கல்வி

"அடிமை வாழ்வை அறுத்தெறியுங்கள்! மானமே பெரிதென மதியுங்கள். சிந்தித்து நல்ல தீர்ப்பு கூறுங்கள்! செயலில் காட்டுங்கள்! இதற்குத் தேவை கல்வி" என்று 19.02.1948ல் சென்னைக் கிறித்துவக் கல்லூரியின் தமிழ்ப் பேரவை ஆண்டுவிழாவில் உரையாற்றி, பொட்டுப் பூச்சியாய், புன்மைத் தேரையாய் அற்பமான அடிமை வாழ்வு நடத்துகின்ற ஒரு சமுதாயம் அவ்வாழ்விலிருந்து வீறு பெற்று எழுந்து விடுதலை விடியலைக் காணவேண்டுமானால் அதற்குத் தேவை கல்விச் சூரியனே என்று பறைசாற்றுகிறார் அறிஞர் அண்ணா.

### 5. கல்வியின் பயன் - பகுத்தறிவு

"ஜெர்மனி தேசத்துப் பாடத்திட்டத்தில் ஆங்கிலேயரை வெல்வது எதிர்ப்பது. நாசிசம் தொடர்பான பாடத்திட்டங்களே உள்ளது. அதனால் அவர்களது மாணாக்கர்களுக்குத் தேச பக்தி மிகுதியாயிற்று." ஆனால் நமது தேசத்தில் மாம்பழக் கணக்கு, குடும்பக் கணக்கினை அடிப்படையாகக் கொண்டுள்ளது. இது அறிவினை வளர்க்கும். ஆனால் ஆற்றலை? பாடத்திட்டத்தினுள் பகுத்தறிவைப் புகுத்தினால் தான் பழமையின் பாசம் குறையும். மக்கள் மனத்திலுள்ள மாசு நீங்கும். காலத்திற்கேற்ற கருத்து வளரும் என்று 23.09.1947ல் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பொதுப் பேரவையின் தொடக்கவிழாவில் 'நிலையும் நினைப்பும்' என்கிற தலைப்பில் உரையாற்றி அறிவியல் யுகத்தில் நாம் உச்சானிக் கொம்பிலே இருந்தாலும் மூடநம்பிக்கை எனும் அதள பாதாளத்திலே விழுகின்ற நிலையினை போக்கக்கூடியது கல்வியே என்னும் தன்னுடைய கல்விச் சிந்தனையை வெளிப்படுத்துகின்றார் அறிஞர் அண்ணா.

## 6. மூடநம்பிக்கையை அகற்றும் கல்வி

இந்த காலத்திலே தானே முயன்று இன்ப நல்வாழ்வைத் தேடிக் கொள்வதுதான் "லோகாயுதம்." இல்லாத இறைவனை நோக்கித் தவஞ்செய்து மறு உலகத்திலே நன்மைகளைத் தேடுவது தான் "ஆத்மார்த்தம்" உலக வாழ்வை விரும்பாதவர்கள் எவரேனும் உண்டா? ஆனால் சில போலி பக்தர்கள் லோகாயுதம் வெறுத்து ஒதுக்கக்கூடியதைப் போலவும் ஆத்மார்த்தம் ஒன்றே விரும்பக் கூடியதைப் போலவும் பேசி நடித்து வருகின்றனர்.

மனிதனை மனிதனாக்க - மனிதனிடமிருந்து விலங்குத் தன்மையைப் பிரிக்க - மக்களிடத்திலே மன வளத்தை உண்டாக்க நீங்கள் பாடுபடவேண்டும். மூடநம்பிக்கையுள்ள மக்களைத் திருத்தப் பட்டம் பெற்ற மருத்துவர்களால் முடியாது. உங்களால் தான் முடியும். நாட்டின் உயிர் நரம்புகளான நீங்கள் உங்கள் செயலிலே வெற்றிபெற இடைவிடாது பகுத்தறிவு சொற்பொழிவுகளைச் செய்ய வேண்டும்.

முன்னேற்றப் பாதையிலே செல்லும் மாணாக்கர்களாகிய நீங்கள் முதன்முதலாக செய்யவேண்டிய கடமை யாதெனில் மனிதத் தன்மைக்கு மாறான கருத்துக்கள் நாட்டிலே பரவவொட்டாமல் தடுக்க வேண்டும். சமுதாய முன்னேற்றம் தேவை என நினைக்கும் மாணவர்கள் சிற்றூர்களுக்குச் சென்று அங்கேயுள்ள பாமரர்களுக்கு கல்வியறிவு புகட்ட வேண்டும். ஏனெனில் கல்வியறிவு மட்டுமே மனிதனிடத்தில் உள்ள மூடநம்பிக்கைகளை அகற்றும் என்று 08.08.1951ல் தியாகராயர் கல்லூரியில் ஆற்றிய சொற்பொழிவில் கல்வியின் மூலமே மூட நம்பிக்கைகளை அகற்ற முடியும் என்று கல்விச் சிந்தனையை முன்வைக்கின்றார் அறிஞர் அண்ணா.

## 7. சாதிகளைச் சாடும் கல்வி

"அமெரிக்க தேசத்தில் வில்லியம் முதலியார் இல்லை. ஆபிரகாம் செட்டியார் இல்லை, சாதிகள் மட்டுமே சாதனைகளுக்குத் தேவையான மூலதனம் எனில் விஞ்ஞான சாதனைகளை புரிந்த மேலை நாட்டவர்கள் நம்மைவிட அதிக சாதிகளைப் படைத்துச் சாதனை புரிந்து இருப்பார்கள் என்று அறிஞர் அண்ணா கூறுவதன் மூலம் "இருட்டறையில் உள்ளதடா உலகம், சாதிகள் இருக்கின்றன

என்பாரும் இருக்கின்றனரே” என்று புரட்சிக்கவிஞர் வருந்திப் பாடுவதற்குக் காரணமான சாதிகளை ஒழித்துக்கட்டுவதற்குச் சாதனமாக இருக்கக்கூடியது கல்வியே என்னும் கருத்தினை விதந்தோதுகின்றார் அறிஞர் அண்ணா.

## முடிவுரை

தமிழ்ப்பேச்சுலகில் விடிவெள்ளியாய் திகழ்ந்தது மட்டுமின்றி அனைத்து வகையினரையும் ஈர்க்கும் வகையில் பேசிய ஒரே பேச்சாளர் பேரறிஞர் அண்ணா.

தலைமை உரை, துவக்க உரை, பாராட்டுரை, வானொலி உரை, சட்டமன்ற உரை, பட்டமளிப்பு உரை என அறிஞர் அண்ணாவின் சொற்பொழிவுகள் பல வகைப்படும்; எண்ணிரந்த நூல்களையும் எழுதியுள்ளார்.

கவின்மிகு கருத்துச் செறிவும், ஒன்றையொன்று விஞ்சும் பலவகை நயங்களும் கொண்டவை அவர்தம் பேச்சுக்களும், எழுத்துக்களும் இவரது அன்றைய கல்விச் சிந்தனையின் பேச்சுக்கள், எழுத்துக்கள், இன்றைக்கும் மக்களுக்கு வழங்கப்படும். கல்வியானது எத்தகைய நோக்கங்களைக் கொண்டதாக இருக்க வேண்டும் என்றும் கல்விச் சிந்தனைகளை வெளிப்படுத்தக் கூடியனவாக இருக்கின்றன என்பது தெள்ளிதின் விளங்கும். எதையும் செய்யத் துணிந்த சமூகத்தின் அடிப்படையான கல்வியில் மாற்றத்தினை ஏற்படுத்துவதன் மூலமே ஏற்றத் தாழ்வுகளற்ற, சாதி பேதமற்ற, விஞ்ஞான அறிவு கொண்ட சமுதாயத்தினை நாளைய உலகுக்கு அளிக்க முடியும் என்பதே அறிஞர் அண்ணாவின் கல்விச் சிந்தனைகளாகும்.

# அறிஞர் அண்ணா உணர்த்திய எழுத்தறிவு நிலை

**ஆ. பழனிச்சாமி**
தமிழ்ப் பல்கலைக்கழகம்

## அண்ணாவும் கடித இலக்கியமும்

எழுத்தாளனுக்கும், படிப்பாளனுக்கும் இடையே நெருக்கத்தையும் வலிமையையும், உறவையும் மிக விரைவில் உருவாகக்கூடிய எளிய வடிவமே கடிதம். இதன் மூலம் கடித இலக்கியம் என்ற தனி இலக்கியம் கண்ட பின்னர் கழகத்தவருக்குத் தம் கருத்துக்களை பகிர்ந்துகொள்ளும் முகத்தான் கடித இலக்கியம் என்ற ஒரு புதிய பகுதியை தொடங்கி நடத்தி வந்தார்.

இவ்வியக்கம் தொடங்கியதற்கான நோக்கத்தை கூறுகையில் "கிழமைதோரும் நாட்டு நடப்புகளைக் காண்பதால் என் உள்ளத்தில் எழும் எண்ணங்களை உன்னிடம் எடுத்துக்கூறி உன் இசைவு எத்தகைய செயல்முறை கிடைக்கும் என்பதை கண்டறியும் சுவை மிக்க சீரிய முயற்சிக்காக 'தம்பிக்குக் கடிதம்' என்பதை துவங்கினார். மேலும் 1938ல் விடுதலை இதழில் 'பரதன் பகிரங்க கடிதம்' என்ற மடலை 02.09.1938ல் எழுதினார். இதுவே அறிஞர் அண்ணாவின் முதல் கடிதம் எனலாம். இதைத் தொடர்ந்து 1943ல் 'அவருக்கு இவர் எழுதினார்' என்றும் கற்பனை மடலைத் தீட்டினார். மேலும் சமதர்மன் என்ற புனைபெயரில் தமிழ் பண்டிதர்கட்கு என்ற மடலில் தமிழ் அறிஞர்களின் போக்கை சுட்டியுள்ளார் (18.8.1943). இவர் தமிழ்நாடு, இனம், நாடு, இலக்கியம், பொருளாதாரம், அரசியல், இயக்க செயல்முறை, வரலாற்று நிகழ்ச்சிகள் முதலியவற்றை கருபொருளாக்கிக்கொண்டு எழுதப்பெற்றது கடிதங்கள் இதன்மூலமாக தமிழ்மொழியை மக்களுக்கு புரியும் வகையில் செய்தார்.

## எழுத்தறிவற்ற நிலையை அறிஞர் அண்ணா உணர்த்திய விதம்

நந்தி துர்க மலை எங்கே உள்ளது?
தெரியாது.

நிதி மந்திரியின் பெயர் என்ன?
தெரியாது.

காவிரியின் பிறப்பிடம் என்ன?
தெரியாது.

பாலாற்றில் நீர் ஏன் இல்லை?
சொல்லத் தெரியாது.

நூல் ஆலைகள் எவ்வளவு உள்ளன?
கணக்கு அறியார்.

தாராபுரம் எந்தத் திசையில் உள்ளது?
தெரியாது.

தாமிரபரணி எத்தனை மைல் நீளம் உள்ளது?
திகைப்பர்.

இவற்றைப் பற்றி தெரிந்துகொள்ளவும் முயல மாட்டார்கள் - ஆனால் அனுமத் பிரபாவம் தெரியும்

அரச மரத்தைச் சுற்றினால் என்ன பயன் கிடைக்கும் என்பதைக் கூறத் தெரியும்.

பேய், பில்லி, சூனியம் பற்றிய கதைகளைக் கூற தெரியும். - ஆனால் நாம் ஏறிச்செல்லும் இரயிலைக் கண்டுபிடித்தவர் யார் என்பது தெரியாது. இந்த மக்களின் அவல நில்லையைப் போக்க முயற்சித்தார் பேரறிஞர் அண்ணா.

உலகின் பார்வை நமது நாட்டின் பக்கம் நன்றாகத் திரும்பும் படியான முறையிலும் அளவிலும் நாம் நமது நாட்டின் உயர்வு பற்றியும் நமது பேராற்றல் பற்றியும் பாட்டு மொழியிலேயே பேசிவிட்டோம்.

என் நாடு பொன்னாடு என்று இதற்கோற் ஈடு என்று
திருபுகழ்பாடினோம் - இங்கே
வானை முத்தமிடும் வளமான மலைகள்
வற்றாத ஆறுகள், வளம் பெருக்கும் ஏரிகள்,
செந்நெற் கழனிகள், செங்கரும்பு தோட்டங்கள்,
கனி குலுங்கும் சோலைகள் ஏராளம்,
முத்துக்கள் உண்டு கடலில்
தங்கம் உண்டு பூமியில்
என்று ஆனந்தக்களிப்புடன் பாடியிருக்கின்றோம்.
எல்லாம் சரி!

உமது நாட்டுக் கல்வி நிலையைக் கூறு என்று கேட்டார். நாம் வெட்கித் தலைகுனியும் நிலையில் இருந்தோம். வேத வேதாந்திகள் சித்தாந்த சிறார்மணிகள், திருவருள் பெற்றவர்கள் எமது நாட்டில் உண்டு என்று பேசலாம், பேசுகிறோம் இன்னும் பேசிக்கொண்டே இருக்கத்தான் செய்கிறார்கள் - ஆனால்,

கண்ணனுக்கு கையெழுத்து போட தெரியுமா?
என்றால் தெரியாது என தலையை ஆட்டுகிறான்
முத்தனோ மறந்து விட்டது என்று
கூறுகின்றான்
முனியன் கையெழுத்துப் போடுகிறான் ஆனால்
முன்னெழுத்தும் கடையெழுத்தும் பிழையாக இருக்கிறது.
இடையிலுள்ள எழுத்துக்களே தொடர்பற்றவையாக
உள்ளன. இந்த நிலை இருக்கிறது நாட்டு
மக்களுக்கு மிகப் பெரும்பாலானவர்களுக்கு

கூரியவாள், பலமான கேடயம், அஞ்சா நெஞ்சு ஆனால் வீரனுக்கு அழகு. இந்த நிலை நாட்டுக்கு சிறப்பு. நாட்டுநிலை, உலக நிலைக்கு ஏற்ப வளர்ந்தாக வேண்டும். இதற்கு வீட்டுநிலை மாறவேண்டும் என்றார்.

"வீட்டிற்கோற் நூல் நிலையம்" என்றஇலட்சியம், நாட்டிற்கோர் நல்ல நிலை ஏற்படச் செய்யவேண்டும் என்ற திட்டத்துக்கு அடிப்படை மலை கண்டு, நதி கண்டு, பொருள் வளம் கண்டு ஒரு நாட்டை உலகம் மதிப்பது அன்று. அந்த நாட்டு மக்களின்

மண்வளத்தைக் கண்டும் - மாநிலம் மதிக்கும் பொருளாதார வளத்தையும், கல்வி வளத்தையும் குறிக்கும். ஆனால் அதிகமாக நமது நாட்டிலே எழுத்தறிவற்றவர் ஏராளம். இது பெருங்கேடு என்றார்.

## முடிவுரை

ஐம்பதாண்டு அரசியல் வானில் செய்ய வேண்டிய சமுதாய வாழ்வில் பத்தாண்டுகளில் அறிஞர் அண்ணா எய்திட வைத்தார். இதற்கு காரணம் இவருடைய தமிழ்தான்.

புலவர்களுக்கும், கவி வானவர்களுக்கும், இலக்கிய இலக்கண விற்பன்னர்களுக்கும் மட்டுமே விளங்கிக் கொண்டிருந்த தமிழைப் பாமரரும் சுவைக்கும் சுந்தரத்தமிழாய் ஆக்கினார். தமிழ்சீர்மையை செதுக்கி காட்டினார். செயற்கை வண்ணத்தாலும் ஓட்டு தொகைகளாலும் அகிலத்தின் ஒப்பற்ற மொழி என்று ஒப்புதல் பெற்ற மொழி பல உண்டு. ஆனால், தமிழ்மொழி எனும் கிளி இயல்பான வண்ணத்தால் மிளிருவதுதான் தமிழ். எனவே அறிஞர் அண்ணா தமிழின் எழிலை எடுத்துத்தான் காட்டுகிறார். இதன் மூலம் அறிஞர் அண்ணா இலக்கிய சுவையை தமிழர்கள் பருகவேண்டும் என்ற அவாவின் உந்துதலில் தான் தமிழ் சிறப்பு பெறதொடங்கியது.

# பல்துறை அறிஞர் அண்ணா

**வி. கோதண்டராமன்**
சுவாமி தயானந்த மேல்நிலைப்பள்ளி

## முன்னுரை

1950-1960களில் அறிஞர் அண்ணா நூறாயிர கணக்கான மக்களால் தலைவராக ஏற்றுக்கொள்ளப்பட்டவர். அவரது அறிவாற்றலும் ஆளுமை பெருந்தன்மையும், பெருமிதமும், எளிமையும் நாவன்மையும் அவரை மக்கள் தலைவராக்கினர். அவரது பேச்சாற்றலும், எழுத்தாற்றலும் கோடிக்கணக்கான மக்களை அவர்பால் ஈர்த்தன. உருவத்தால் சிறியவராயினும், உள்ளத்தால் பெரியவர். விடுதலை பெற்ற இந்தியாவில் குறிப்பிடத்தக்க மக்கள்தலைவர்கள் பதின்மரில் அறிஞர் அண்ணா முதல்வரிசையர். தமிழ்நாட்டுத் தலைவர்களில் தனிச்சிறப்பிடம் பெறுபவர் தலைமைப் பண்புகள் பல நிறைந்த அறிஞர் அண்ணா பெரும்பான்மையான மக்களால் தேர்ந்தெடுக்கப்பெற்று, தமிழக முதல்வரானார். அறிஞர் அண்ணாவின் நாவும் பேனாவும் அவர்தம் தலைமைக்கு நிலைபேறு அளித்தன.

அறிஞர் அண்ணா என அழைக்கப்பெறும் காஞ்சிபுரம் சி.என்.அண்ணாதுரை பிற்காலத்தில் அறிஞர்களால் பேரறிஞர் என மதிக்கப்பெற்றார். அறிஞர் அண்ணாவின் பல்துறை ஆற்றல்கள், சிந்தனை ஆற்றல், எழுத்தாற்றல், அறிவுக்கூர்மை, கருத்துருவாக்கம், கருத்துப் பிரசாத உத்திகள் இவற்றைக்கொண்டு அறிஞர் அண்ணாவைத் தமிழ்ச் சிந்தனையாளர் உலகம் பேரறிஞர் எனப்போற்றியது. நுண்ணறிவும், நூலறிவும், பட்டறிவும், ஒருங்கமைந்த அண்ணாவை தமிழ்கூறும் நல்லுலகம் பேரறிஞர் எனப் பெருமைப்படுத்தியது. 1940-1960களில் தமிழகத்தின் தலைச்சிறந்த பேச்சாளராக அறிஞர் அண்ணா திகழ்ந்தார். அவருக்கு நிகர் அவரே. அறிஞர் அண்ணா ஒரு புதியதொரு சொற்பொழிவு

பாணியை உருவாக்கிய முன்னோடி. அவர் வழியில் தமிழ் சொற்பொழிவு புதிய வடிவமும், பொழிவும் பெற்றது. மேலும் அவர் ஆங்கில சொற்பொழிவை ஆற்றும் புலமையும், வல்லமை பெற்றவர்.

அவரது மேற்கத்திய, கிழக்கத்திய சுற்றுப்பயணம் கல்வி வளர்ச்சியில் அந்நாடுகள் எவ்வாறு ஒளிர்கின்றன என்ற கல்வியியல் சிந்தனை, தனது நாடும் கல்வியின் மூலம் பொலிவுபெற மதுரை காமராசர் பல்கலைகழக முதலாம் பட்டமளிப்பு விழா தலைமை உரையிலிருந்தும், அண்ணாமலை பல்கலைக்கழகம் பட்டமளிப்பு தலைமை உரையிலிருந்து இக்கட்டுரையில் காண்போம்.

தாமின் புறுவது உலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார். - குறள் - விளக்கம்.

தனக்கு இன்பம் கொடுத்த கல்வியினால் உலகோர் பயனடைவதை கண்டு சான்றோர் மேன்மேலும் மகிழ்ச்சி அடைந்து தாம் கற்ற கல்வியை மேலும் வளர்த்துகொள்வார்.

### அறிவு, அற்றம் காக்கும் கருவி

கல்வி என்பது பிரபஞ்ச இரகசியத்தை ஆராய்ந்து காண உதவும் கருவியாகும் என தொடங்கும் வரிகள் அவரது ஆழ்ந்த கல்வி சிந்தனைக்கு சிகரமாகும்.

## அறிஞர் அண்ணாவின் கல்வி மறுமலர்ச்சி சிந்தனை

தற்கால கல்வி அமைப்பு முறை பொருத்தமுடைய பல்வகை மாற்றங்களை பெறவேண்டும் என கூறி உள்ளார். கல்வி என்பது சமூக தேவையை ஒட்டிதான் அமையவேண்டும் என சிலர் வாதிடுகின்றனர். ஆனால் உண்மையை சொன்னால் சரியான கல்விமுறை மூலமாகதான் நல்ல சமூக அமைப்பை உருவாக்கமுடியும் என்று அறிஞர் அண்ணா கூறுகின்றார். சமூக குற்றங்கள் அனைத்திற்கும் தவறான கல்வி முறையே என்கிறார். "ஒரு பள்ளி கூடத்தை திறக்கின்றவன் பத்து சிறைச்சாலைகளை மூடுகின்றான்" என்பது ஒரு அரேபிய பழமொழி எனவே நல்ல கல்விமுறை நல்ல நாட்டுவளர்ச்சியை தருவதும் மட்டும் இன்றி சமுதாய குற்றங்களையும் குறைய செய்யும் என்கின்றார்.

நமது நாட்டு அரசியல் போக்குகள் நல்ல கல்வி முறை அமைவதற்கு இடையூறாக இருந்துவருகின்றன. இரண்டாவதாக எந்த கல்விமுறை சிறந்தது என்று சரியாக கணித்து அறியும் அமைப்புகள் இல்லாது இருக்கின்றன என தனது உரையில் கூறி உள்ளார். இதன் பலனாக புதிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனங்கள், பல்கலைகழகங்கள் துவங்கப்பட்டு கல்வியில் பல அறிய பெரிய செயல்களை செய்துவருகின்றனர்.

## அறிஞர் அண்ணாவின் தாய்மொழி வழியில் கல்வி

அறிஞர் அண்ணா அனைத்து நிலைகளிலும் தாய்மொழி வழியில் கல்விபயில்வது சிறந்ததாக கூறுகிறார். குழந்தை பருவத்தில் மூளையில் பதிவாகும் பல கருத்துக்கள் ஒருவருடைய வளர்ச்சி பருவத்தில் அவருடைய பலவிதமான நடவடிக்கைகளுக்கு காரணம் ஆகின்றன என்று மனவியல் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். எனவேதான் தாய்மொழி கல்வி குழந்தைகளுக்கு நல்ல அறிவு வளர்ச்சியும், ஆழ்ந்த சிந்தனையும் தரவல்லது என்று கூறுகிறார்.

## அறிஞர் அண்ணாவும் பெண்கல்வியும்

அறிஞர் அண்ணா தனது பல்கலைகழக பட்டமளிப்பு விழா உரையில் பெண் கல்வியை பற்றியும் அதன் முக்கியத்தும் பற்றியும் கூறியுள்ளார். ஒரு ஆண்மகனுக்கு கல்விபோதித்தால் அது அவனுடன் முடிந்துவிடும். ஆனால் பெண்ணுக்கு கல்வி போதித்தால் அது ஒரு குடும்பத்தையே சென்றடையும் என்று பல பெண்களுக்கான தொழில் நுட்ப கல்லூரிகளும், பயிற்சி கல்லூரிகளும் தொடங்கவித்திட்டார். மேலும் பெண் கல்விக்கு பல சலுகைகள் அறிவித்தார்.

## அறிஞர் அண்ணாவும், சிறுபான்மையினர் கல்வியும்

அறிஞர் அண்ணா தனது உரையில் தாழ்த்தப்பட்ட சமூகத்தினர் மேன்மை அடைய அவர்களுக்கு பல ஆதிதிராவிட நல பள்ளிகளும், ஆதிதிராவிட நல உறைவிடங்களும் துவங்க வித்திட்டார். அவர்கள் தொழில்கல்வி, பயிற்சிகல்வியில் சேர்ந்து பயில பல சலுகைகள் அளித்திட்டார்.

### அறிஞர் அண்ணாவின், சிந்தனையில் ஆசிரியர்கள்

அறிஞர் அண்ணா ஒரு நல்ல ஆசான் எவ்வாறு இருக்கவேண்டும் என்று கூறியுள்ளார். நல்ல ஆசான் என்பவர் கருத்துஞானம் உள்ளவராகவும், ஒழுக்க சீலராகவும், உதாரண புருஷனாகவும் மாணவர்கள் மதிக்கத்தக்கவராகவும் இருக்க வேண்டும் என்று கூறுகிறார்.

### அறிஞர் அண்ணாவின் சிந்தனையில் மாணவர்கள்

அறிஞர் அண்ணாவின் சிந்தனையில் ஒரு மாணவர் என்பவர் எவ்வாறு இருக்கவேண்டும் என்றும் கூறிஇருக்கின்றார். மாணவர்கள் ஆசிரியர் இடத்தில் பக்தியும், மரியாதையும் கொண்டவனாக இருக்கவேண்டும் என்றும் அவர் சொல்லி கொடுக்கும் விசயங்களை ஆர்வத்தோடு கேட்டு கல்வியை விருப்பத்தோடு கற்பவராக இருக்கவேண்டும் என்று கூறியுள்ளார்.

### அறிஞர் அண்ணாவின் சிந்தனையில் கல்வி சாலைகள்

உண்மையான கல்வி சாலை என்பது மாணவர்களை பட்டதாரிகளாக ஆக்குவதுடன் நின்றுவிடாமல் அவர்களை சமூகத்திற்கு பயனுள்ள குடிமகனாக ஆக்குவதாக இருக்கவேண்டும் என்று கூறுகிறார்.

### முடிவுரை

வீட்டிற்கும், நாட்டிற்கும் புகழினைத் தேடி தருவது கல்வி. பல்துறையிலும் பல்வகையிலும் கல்வியில் அனைத்து இந்திய நிலையில் நாம் ஆற்றிய சாதனைகள் பல. அளித்திட்ட புதிய திட்டங்கள் பல. இவ்வளர்ச்சியின் சிறப்பும் தொடர்ந்து பெருக வேண்டும். தொடர்ந்து உழைக்க வேண்டும். நோக்கமுடைய, பொருத்தமுடைய கல்வி வேண்டும், தாய்மொழி வளர வேண்டும், தாய்மொழி மூலமே கல்வி வேண்டும் எல்லா வகையிலும் மேன்மேலும் நம்நாடு மேன்மையுற வேண்டும்.

பெருகட்டும் கல்விச் சிந்தனைகள்!
மிளிரட்டும் கல்வியும், பண்பாடும!!

வளரட்டும் தமிழகமும், தமிழ் பல்கலைகழகமும்!!!

# அறிஞர் அண்ணாவும் தமிழ்க் கல்வியின் சிறப்பும்

**மு. கோகுல்ராம்**
சுவாமி தயானந்த மேல்நிலைப்பள்ளி

## முன்னுரை

அறிஞர் அண்ணாவின் தமிழ் முத்தமிழுக்கும் புதுமுகம் காட்டியது. அண்ணாவுக்கு தமிழ் இனித்தது, தமிழுக்கு அண்ணாவும் இனித்தார். தமிழ்மொழியால் தன்னை அடையாளம் காட்டியவர் அறிஞர் அண்ணா. இவருடைய மேடைப்பேச்சு என்று சொன்னால் அனைவரும் இவருடைய பேச்சைக்கேட்க அலைகடலென தமிழகமெங்கும் மக்கள் கூட்டம் காணப்படும். இதன் மூலம் தமிழ் பேச்சு மூலம் மக்கள் மனதில் நீங்கா இடம் பிடித்தவர்களில் இவரும் ஒருவர். இவர் தன்னுடைய பேச்சு ஆற்றலால் மக்களிடம் பகுத்தறிவை புகுத்தி மூட நம்பிக்கைகளை புறமுதுகிட்டு ஓட செய்தவர் பேரறிஞர் அண்ணா ஆவார். அறிஞர் அண்ணாவின் எழுத்துக்கள் இலக்கியத்திற்கு வளம் சேர்த்ததன் மூலம் தமிழுக்கும் நலம் சேர்த்தார். அந்த வகையில் சிறுகதை, நாவல், நாடகம், இலக்கியம் போன்றவைகளை அண்ணாவின் எழுத்துக்களால் வெளிச்சம் காட்டினார்.

## தாய்மொழிப் பற்று

ஒரு நாட்டிற்கு அரசியல் விடுதலை என்பதுகூட கிடைத்துவிடும் மொழி, இனம், பண்பாடு இவற்றின் விடுதலை என்பது மக்களின் மனமாற்றத்தின் அடித்தளத்திலிருந்து தான் உருவாக முடியும். பல்வேறு அரசியல் மொழி, பண்பாட்டுக் கூறுகளின் ஆதிக்கத்திற்கு உட்பட்டிருந்த தமிழகத்தின் தொன்மைச் சிறப்புகளை கலக்க முறை செய்யும் பணி அளப்பரிய ஒன்றாகும். அறிஞர் அண்ணாவின் திராவிட நாடு கோரிக்கையை

முழங்கியபோது தமிழின் இயல்பான தன்மை, தொன்மை நலம், வலிமை, ஆழ்மை, அரசியல் தன்மை இவற்றில் ஆழ்ந்த கவனம் செலுத்தினார். அறிஞர் அண்ணாவின் அரசியல் அணுகுமுறைகள் தமிழ், இலக்கிய கலை பண்பாட்டு முழக்கங்களோடு வெளிக்கொணர முயற்சித்தார்.

மொழிதான் மனிதனின் சிந்தனை வேர் என்பதில் தெளிவாக நின்றார் அறிஞர் அண்ணா. மொழி, இலக்கியம், பண்பாடு, இனம் இவை ஒன்றோடொன்று இணைந்தும், பிணைந்தும் ஊடுருவல் புரிந்து தமிழாய்த் தோற்றமளிப்பது என்பதை முழுவதும் உணர்ந்திருந்தார்.

தமிழினம் தன் மீது படிந்துள்ள கரைகளை தன் நிறமாக்கிக் கொண்ட அவலத்தைக் களைந்து தன் சுயத்தைத் துலக்கும் விழிப்பில் தம் பேச்சையும், எழுத்தையும் அமைத்துக் கொண்டார். படித்த இளைஞர்களையும், எளிய கல்வியுடையவர்களையும் ஈர்க்கும் வகையில் கட்டுரை, சிறுகதை, நாவல், நாடகம் போன்ற பல்வேறு வகைமைகளில் தமிழ்மொழி, இனம், அரசியல் சிந்தனைகளை நுட்பமாகக் கிளர்ந்தார். அவ்வாறே தம் இயக்கத் தொண்டர்களோடு நெருங்கி உரைக்கும் உணர்வோடும் உறவோடும் உத்தியாக கடித இலக்கியத்தினை பயன்படுத்தினார்.

## அறிஞர் அண்ணாவும் இலக்கியமும்

எழுத்தாளனுக்கும், படிப்பாளனுக்கும் இடையே நெருக்கத்தையும் வலிமையையும், உறவையும் மிக விரைவில் உருவாக்கக்கூடிய எளிய வடிவமே கடிதம். இதன் மூலம் கடித இலக்கியம் என்ற தனி இலக்கியம் கண்ட பின்னர் கழகத்தவருக்குத் தம் கருத்துக்களை பகிர்ந்துகொள்ளும் முகத்தான் கடித இலக்கியம் என்ற ஒரு புதிய பகுதியை தொடங்கி நடத்திவந்தார்.

இவ்வியக்கம் தொடங்கியதற்கான நோக்கத்தை கூறுகையில் "கிழமைதோறும் நாட்டு நடப்புகளைக் காண்பதால் என் உள்ளத்தில் எழும் எண்ணங்களை உன்னிடம் எடுத்துக்கூறி உன் இசைவு எத்தகைய செயல்முறை கிடைக்கும் என்பதை கண்டறியும் சுவைமிக்க சீரிய முயற்சிக்காக 'தம்பிக்குக் கடிதம்' என்பதை

துவங்கினார். மேலும் 1938ல் விடுதலை இதழில் 'பரதன் பகிரங்க கடிதம்' என்ற மடலையும் 02.09.1938ல் எழுதினார். இதுவே அறிஞர் அண்ணாவின் முதல் கடிதம் எனலாம். இதைத் தொடர்ந்து 1943ல் 'அவருக்கு இவர் எழுதினார்' என்றும் கற்பனை மடலைத் தீட்டினார். மேலும் 'சமதர்மன்' என்ற புனைப்பெயரில் 'தமிழ்ப் பண்டிதர்கட்கு' என்ற மடலில் தமிழ் அறிஞர்களின் போக்கைச் சுட்டியுள்ளார். (18.8.1943). இவர் தமிழ்மொழி, இனம், நாடு, இலக்கியம், பொருளாதாரம், அரசியல், இயக்க செயல்முறை, வரலாற்று நிகழ்ச்சிகள் முதலியவற்றை கருபொருளாக்கிக் கொண்டு எழுதப்பெற்றது கடிதங்கள் இதன் மூலமாக தமிழ்மொழியை மக்களுக்கு புரியும் வகையில் செய்தார்.

## முடிவுரை

இவ்வாறு தனக்கே உரித்தான அறிய மேடைப்பேச்சின் மூலமாகவும், தன் நூல்கள் மற்றும் இலக்கியங்கள் மூலமாகவும் கல்வியல் சிந்தனைகளை உலகிற்கு புகுத்தினார்.

# பேரறிஞர் அண்ணாவின் கல்விச் சிந்தனைகளின் நோக்கங்கள்

**க. தமிழ்ச்செல்வன்**
தமிழ்ப் பல்கலைக்கழகம்

## முகவுரை

அறிஞர் அண்ணாவின் சிந்தனையானது இருளை போக்கும் விடிவெள்ளியாக புதுமைக் கருத்துக்களை புதிய நடைகளில் பொக்கிசமாய் அள்ளித்தெளித்து வீராவேசமாக அழகு நடையில் வழங்கிய கருத்தை கேட்பவர்களையும் மெய்மறக்கச் செய்தது என்பது மிகையாகாது. அவர் கல்விக்காக ஆற்றியபணி சிறப்பானது.

## கல்விச் சிந்தனைகள்

அறிஞர் அண்ணா படைத்த கதைகள், கவிதைகள், நாடகங்கள் அனைத்திலும் கல்விச் சிந்தனை தழுவியே இருக்கிறது. கல்லூரி வாழ்நாளில் பிரஞ்சுபுரட்சி, உரோமர்களின் அழிவுக்குக் காரணம், முதலாளி தொழிலாளி தகராறு, அரசியல் தகிடுதத்தங்கள், விதவையின் கண்ணீர், மதத்தலைவர்களின் அட்டூழியங்கள் ஆகிய அனைத்தையும் கவர்ச்சியுடன் நகைச்சுவை மிளிர அழகுபட கேட்கக்கேட்கத் தெவிட்டாத விதத்தில் சொற்பொழிவு ஆற்றுவதில் கைவந்த கலைஞராகத் திகழ்ந்தார்.

## கல்வியும் அறிவும்

அறிவுப்படை அணிவகுப்பு நமது முதற்பணி இதுவே ஒப்பற்ற நாட்டின் வெற்றி என்றும் நாடு என்பது மக்களால் நிரப்பப்பட்டிருக்கும் ஒரு அமைப்பு. ஏடு என்பது நாட்டு மக்களால் கற்கப்படுவது, கையாளப்படுவது செய்யப்படுவது, போற்றப்படுவது என்று நயமாக கல்வியின் சிறப்பை

எடுத்துரைத்தார். அந்தந்த நாட்டிலுள்ள ஏடுகளைப் பார்த்தல் அந்தந்த நாட்டு மக்களைப் பற்றி, நாகரித்தைப் பற்றி, வாழ்க்கை வளங்களைப் பற்றிப் பாங்குற, எளிதாக ஏமாற மார்க்கமின்றித் தெளிவாகத் தெரிந்துகொள்ளமுடியும் என்றும், நாட்டிலுள்ள ஏடுகள் நாட்டில் உள்ளதை, நடப்பதை, மக்கள் மனவாழ்க்கை முறைகளை வகுத்துக் காட்டும் கண்ணாடியாக காட்சியளிக்க வேண்டும் என்று வலியுறுத்தனார். ஒரு காலத்திய கல்வியானது பிறிதொரு காலத்தின் நிலைக்கும் கருத்திற்கும் பொருந்தாவெனின் அவற்றை மாற்றப்பட வேண்டும் என கூறினார்.

## அறிஞர் அண்ணா கல்விச்சிந்தனைகளின் நோக்கங்கள்

- கல்வியறிவு பெறுவதினால் மட்டுமே ஒருவன் பகுத்தறிவைப் பெறமுடியும்.
- கல்வியால் சமூக இருளைப் போக்கி சிறந்த ஒளிமிக்க நாடாக விளங்க வைக்கமுடியும்.
- அறிவு ஒளி ஒன்றே வாழ்வின் வெளிச்சமாகும்.
- நடைமுறை வாழ்வில் விழிப்புணர்வு ஏற்பட கல்வி அவசியமாகிறது.
- கல்வியறிவால் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற தாரக மந்திரத்தை உணர்ந்து செயலாற்ற முடியும்.
- கல்வியறிவால் மொழிப்பற்றை வளர்க்கமுடியும்.
- கல்வியால் பல திறமைகளை வளர்த்துக்கொள்ள முடியும்.
- ஒருமைபாட்டை வளர்க்கவும், மனிதநேயம் வளரவும், வாழ்க்கை சிறக்கவும், நாடு உயரவும் கல்வி அவசியமாகும்.
- கல்வியேடானது அனைவருக்கும் பொருந்தக்கூடியதாக இருக்கவேண்டும்.
- கல்வியறிவு மட்டுமே நாட்டில் முதல் வெற்றியாகும் என்று கல்வியின் சிறப்பை அழகாக வலியுறுத்தியுள்ளார்.
- சமூக சீர்திருத்தம் அடைய கல்வி அவசியமாகும்.

# முடிவுரை

1969 பிப்ரவரி திங்கள் 2-ம் நாள் நள்ளிரவு 12.30 மணிக்கு எல்லோரும் உறங்கும்போது தமிழ்த்தாய் பெற்றெடுத்த இணையில்லா பெருமகன் மீளா உறக்கத்தில் ஆழ்ந்தார். பாரதமே பதறிக் கதறியது. எதையும் தாங்கி வந்த இதயம் இப்போது சென்னை கடற்கரையில் அமைதியாக உறங்குகிறது.

அறிவுச்சுடர் அணைந்தாலும் அவர் படைத்த கல்விச் சிந்தனை நம்மோடு இன்றும் என்றும் நிலைத்திருக்கும். அவர் அறிவால் பெற்ற கல்வி நம் சமூகத்திற்கு என்றும் ஒரு ஒளி விளக்காய் ஒளிர்ந்துகொண்டே இருக்கும். எனவே அவர் காட்டிய அன்பு வழி நடப்போம்.

# பேரறிஞர் அண்ணாவின் தமிழ்க் கல்விச் சிந்தனைகள்

**ஆ. ஏஞ்சல் புனிதவதி**
தமிழ்ப் பல்கலைக்கழகம்

## முன்னுரை

"பெற்றதாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவ வானினும் நனி சிறந்தனவே"

என்னும் பொன்மொழிக்கேற்ப பிறந்த நாட்டையும், தாயையும், தமிழ் மொழியையும் உயிரினும் மேலாக மதித்து வாழ்ந்தவர். பேசினால் ஆங்கிலத்தில் தான் பேசுவது தமிழ் மேடைகளில் ஏறி எனக்கு தமிழ் பேச தெரியாது எனச் சொல்லிய லண்டன் சென்று படித்த ஆங்கில மேதாவிகள் வாழ்ந்த காலத்தில் சரளமாக அழகுத்தமிழில் பேசித் தமிழ் உள்ளங்களைத் தொட்டவர் அறிஞர்.சி.என்.அண்ணாதுரையின் கல்விச் சிந்தனைகளை இக்கட்டுரையில் காண்போம்.

## தமிழின் பெருமை

தமிழன் தன்னை மறந்திருந்த காலத்தில் அவனுடைய வரலாற்றுச் சிறப்புகளை அவர் பேசிய மொழியின் மாண்பினை, இலக்கிய கருவூலங்களை எல்லாம் எடுத்து வைத்து செந்தமிழின் சிறப்பைக் காண்பித்தவர் அறிஞர் அண்ணா, தமது திராவிட நாடு என்னும் இதழ் வாயிலாகத் தம்பிக்கு வரைந்த கடிதங்களில் தமிழினத்தின் பெருமைகளையும், தமிழன் இன்று தாழ்ந்து போனதின் காரணங்களையும் சுட்டிக் காட்டினார்.

## மொழியைப் பயன்படுத்திய விதம்

பார்ப்பனீயத்தால் தமிழுக்கு விளைந்த கேட்டினை எடுத்துக்காட்டி ஆரியமாயை என்னும் நூலினை எழுதியவர்.

ரோமாபுரி ராணிகள், ரங்கோன் ராதா, பார்வதி பி.ஏ. என்னும் நூல்கள் வாயிலாகத் தமிழகத்தில் மொழிப்புரட்சி செய்தார். பண்பாட்டுப் புரட்சியால் தமிழனின் பண்டைய பெருமைகளை எடுத்துக்கூறலானார். எதுகை மோனை பிசகாமல் அடுக்குச் சொற்களை அள்ளி அள்ளித் தந்தார். அவ்வாறே எழுதவும் செய்தார். மக்களின் சிந்தனையைத் தூண்டினார். அறிஞர் அண்ணா சிறுகதைகள் பல புனைந்தார். கவிதைகளும் எழுதினார்.

## தமிழைப் பயன்படுத்தும் முறை

தமிழர் வாழ்வு தழைக்க, தமிழ் மனம் நாடெங்கும் செழித்துக் கொழிக்க, தமிழர் தமிழராய் வாழ தன்மானத்துடன் வாழ, தமிழன் தன்னைத்தான் உணர்ந்து, தன்னம்பிக்கைபெற்று தன்னையும் தன்னைச் சுற்றிலுமுள்ள சமுதாயத்தின் சூழ்நிலையைத் தெரிந்து, புரிந்து, தெளிந்து, வாழும்நிலைக்கான வகையில், வழியில் முறையில் முத்தமிழ் விளங்குதல் வேண்டும். பயன்படுத்தல் வேண்டும்.

## உழைத்தவை

அறிவுலக மேதையான பேரறிஞர் அண்ணா ஏழை எளிய மக்களிடையே தம் பேச்சாற்றலால் அறிவுப் புரட்சியை உருவாக்கியவர். எழுச்சிமிகு எழுத்தாற்றலால் இளைஞர்களின் இதயங்களை கவர்ந்தவர். கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்னும் தாரக மந்திரத்தை வழங்கிய அவர் எழுத்துரிமைக்காகவும், மொழியுரிமைக்காகவும், ஏழை எளியவர்களின் நல்வாழ்வுக்காகவும் போராடி; பலமுறை சிறைவாசம் சென்றவர். மூடப்பழக்கவழக்கங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் எழுத்தும் பேச்சும் அமைந்தன.

## விழிப்புணர்வு ஊட்டியது

பெண்கல்வி நாட்டில் எந்த அளவுக்கு உயருகிறதோ அந்த அளவுக்கு நாடு மேம்பாடு அடைகிறது என்று பொருள் என்று பேரறிஞர் அண்ணா பேசினார். தொழிலாளர் நலம் குறித்தும் உழைப்பின் மேன்மைக் குறித்தும் அவர் மக்களிடையே விழிப்புணர்வு உண்டாக்கினார்.

## முடிவுரை

அறிஞர் அண்ணா நம்மை விட்டுப் பிரிந்தாலும் அவர்விட்டுச் சென்ற அழியாச் செல்வங்களான கருத்து மணிகள் நம் காதுகளில் ஒலித்துக் கொண்டே இருக்கின்றன. பேரறிஞர் அண்ணா மிகச் சிறந்த அரசியல்வாதியாக, தத்துவ மேதையாக, மனிதநேய மாமனிதராக, மக்கள் போற்றும் தலைவராக, தலைச்சிறந்த சிந்தனையாளராக, சீர்த்திருத்தவாதியாக விளங்கி, தமிழுக்கும் தமிழ்நாட்டுக்கும் பெருமைச் சேர்த்தார். அவரால் தமிழ் தழைத்தது. அவரது வாழ்வு தமிழ் வாழ்வாகவே மலர்ந்து மணம் வீசியது. எனவே நாமும் அவருடைய சிந்தனையை ஏற்று வாழ்வோம்.

# பேரறிஞர் அண்ணாவின் கல்விக் கருத்துகள்

**ச. இரவிச்சந்திரன்**
ஆய்வியல் நிறைஞர்
தமிழ்ப் பல்கலைக்கழகம்

## முன்னுரை

அறிஞர்கள் பலர். ஒவ்வொரு அறிஞர்களின் வாழ்க்கை மற்றும் நாட்டிற்கு அவர்களின் அற்பணிப்புகளைப் பற்றி ஆராய்ந்து பார்ப்போமானால், அவையெல்லாம் எண்ணிலடங்காதவை. எழுத்து பேச்சு ஆற்றல்மிக்க அறிஞர்களில் மாபெரும் அறிஞர், பல நூறு ஆண்டு கண்டு பின்னர் தமிழ் மண்ணுக்குக் கிட்டிய மாபெரும் புதையல் - வழிகாட்டி முன்னோடி! அறிஞர் அண்ணா ஆவார்.

"சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை
இகல்வெல்லல் யார்க்கும் அரிது"

என்ற தெள்ளுதமிழ் வள்ளுவனின் வாய்மொழிக்கினங்க எல்லோராலும் குறை கூற இயலாத மாமனிதர் அறிஞர் அண்ணா ஆவார்.

பேரறிஞர் அண்ணா அவர்களின் படிப்பாற்றல் மற்றும் கல்விச் சிந்தனைகள் யாவற்றையும் அனைவரும் ஆர்வத்துடன் அறிந்துகொண்டு வாழ்க்கையில் முன்னேற ஆர்வம்கொள்ள வேண்டும்.

## கல்வி

காஞ்சிபுரத்திலுள்ள பச்சையப்பன் தொடக்கப்பள்ளியில்தான் அண்ணாவின் பள்ளி வாழ்க்கைத் தொடங்கிற்று. உயர்நிலைப்பள்ளி இறுதிவகுப்பு (எஸ்.எஸ்.எல்.ஸி) வரை அங்கேயே அவர் கல்வி பயின்றார்.

சின்ன வயதிலேயே அறிஞர் அண்ணாவிற்கு நிரம்ப நினைவாற்றல் இருந்தது. ஒருமுறை பாடத்தைப் படித்தாலே அதில் உள்ள கருத்துக்களைச் சிந்தையில் பதித்துக்கொள்ளும் திறன் படைததவராக அவர் விளங்கியுள்ளார். பார்ப்பவர்களுக்கு, பள்ளி நூல்களையே தொடாத விளையாட்டுப் பிள்ளைபோல் தோற்றமளிக்கும் அவர், குறிப்புகளை மட்டும் நிறைய எடுத்து குவித்துவிடுவார். பிற்காலத்தில் அரசியலில் 'தேர்தல் புலி'யாகத் திகழ்ந்ததைப்போன்றே அந்த நாட்களில் தேர்வுப் புலியாக வீறு நடைப்போட்டுள்ளார் அறிஞர் அண்ணா.

ஆனால் அறிஞர் அண்ணா கொண்டிருந்த, உழைத்துப் படிக்காமலே புள்ளிகள் பெற்றுவிடும் போக்கு, எல்லா மாணவர்களுக்கும் இயைந்தது அன்று; பயன் தருவதும் அன்று. விளையாட்டுத் தனமாகப் படிக்காமலே வெற்றி பெற்றுவிடுவோம் என்ற கவலையற்ற போக்கு, பள்ளி இறுதி வகுப்பில் அவரைப் பழிவாங்கியே விட்டது. இதை மாணவர் உலகு நன்கு மனத்தில் பதியவைத்துக்கொள்ள வேண்டும்.

"இரண்டு தடவை பள்ளி இறுதி வகுப்புத் தேர்வில் தவறிப் போய், அதன் பிறகுதான் தேர்ச்சிப் பெற்றேன்" என்று அறிஞர் அண்ணாவே ஓரிடத்தில் கூறியுள்ளார்.

பள்ளி இறுதி வகுப்பில் ஏற்பட்ட இந்த தோல்விகள் ஒரு வகையில் அவருக்கு நலம் பயப்பனவாக முடிந்தன. உழைத்துப் படிக்கவேண்டும் என்னும் உறுதியையும், எதையும் ஊன்றிப் படிக்கவேண்டும் என்ற எச்சரிக்கையையும் அவரால் அறிந்துகொள்ள முடிந்தது. அவருடைய கல்விப் பாதையிலும், கருத்தூன்றி சிந்திப்பதிலும் ஒரு பெருந்திருப்பமே உண்டாயிற்று. அதன் பிறகு கல்லூரி வாழ்வில் தோல்வி என்பது அவரைத் தொட்டுப்பார்த்ததாகக்கூட தெரியவில்லை. தோல்விக்குப்பின் வெற்றி என்பதற்கு அறிஞர் அண்ணாவே ஓர் அடையாளச் சின்னம்!

## கல்விச்சலுகையில் கல்லூரிப் படிப்பு

இந்நிலையில் ஓர் இனிப்பான செய்தி வந்தது. பிற்பட்ட வகுப்பினருக்குக் கல்விச் சலுகை உண்டென்றும், அந்தச்

சலுகையைப் பயன்படுத்தி அவர் கல்லூரிப் படிப்பைத் தொடராலம் என்பதே அச்செய்தி.

இதைப்பற்றி அறிஞர் அண்ணாவே நெஞ்சம் நெகிழக் குறிப்பிட்டுள்ளார்.

"நான் படித்ததுகூட பிற்பட்ட வகுப்பினருக்குரிய சலுகைகளைப் பெற்றுதான். கல்லூரியில் படிக்கும் அளவுக்கு செல்ல இயலாத நிலையில் இருந்ததால், எங்கள் ஊரிலேயே கொஞ்ச சாலம் எழுத்தனாக (clerk) நான் பணிபுரிய நேர்ந்தது. நான் முற்போக்கு இனத்தைச் சேர்ந்தவனாக இருந்திருந்தால் நான் கல்லூரிக்குச் சென்றிருக்க முடியாது. கல்லூரிப் படிப்புப் பெற்றிருக்க முடியாது."

இவ்வாறு கல்விச் சலுகை தந்த மனத்தெம்போடு காஞ்சிப்புரத்தை விட்டுச் சென்னைக்கு சென்று, அங்குள்ள பச்சையப்பன் கல்லூரியில் பி.ஏ.ஆனர்ஸ் வகுப்பில் சேர்ந்து கல்வியைப் பயின்றார் அண்ணா.

எழுத்து-பேச்சு ஆகியவற்றால், பச்சையப்பன் கல்லூரி மாணவர்கள் மனத்தில் மட்டுமல்ல, பேராசிரியர்கள் கூட்டத்திலும் பேரிடம் ஒன்றைப் பிடித்துக்கொண்டுவிட்ட அறிஞர் அண்ணா-அக்கல்லூரியை விட்டு, 1934ஆம் ஆண்டு கலை முதல்வன் (எம்.ஏ) பட்டம் பெற்று, தமிழகத்தின் தலைமகனாக உயரப்போகும் தளபதியாக வெளியேறினார்.

**கல்விச் சிந்தனைகள்**

கல்வியைப் பற்றி கல்விச் செல்வராம் அறிஞர் அண்ணா அவர்கள் சிந்தி உள்ள கருத்து மணிகள் ஆழ்ந்த சிந்தனைக்கு உரியன; அறிவுக்கு மெருகைத் தருவன.

"படிப்பே இல்லாமல் திறமை பெற முடியாது. அப்படி யாராவது இருந்தால் விதிவிலக்காக ஓரிருவர் இருக்கலாம். ஆனால், படித்ததனால் திறமைப் போய்விட்டது என்று யாரும் சொல்ல மாட்டார்கள்."

"கட்டிடத்திற்குச் செங்கல்போல் வாழ்க்கை முன்னேற்றத்திற்குப் படிப்புத் தேவை; திறமைத் தேவை; முயற்சித் தேவை."

"பொதுக்கூட்டத்தில் நிகழ்காலத்தைக் காண்கிறோம் என்றால், பள்ளியில் வருங்காலத்தை ஓரளவு காண்கிறோம். அதன் மூலம் பயன் கிடைக்கும் என்று எதிர்பார்ப்பது இயற்கை."

"வளருகின்ற சமுதாயத்துக்கு ஏற்ப கல்விமுறை அமைய வேண்டும் என்பது மறுக்க முடியாதது. சமுதாயம் அனைத்தும் மகிழ்ச்சியாக இருக்கச் செய்யவேண்டும்; நிறைவாக இருக்கச் செய்ய வேண்டும். மக்கள் நிம்மதியாக வாழ்கின்றார்கள் - அவர்களின் பிற காலச் சந்ததியினரும் வாழ வழி செய்து வாழ்கின்றார்கள் என்ற நிலையை ஏற்படுத்தத்தான் மாணவர்கள் கல்வி பெறுகின்றார்கள் 'சமுதாயத்தை உயர்த்துவதற்குத்தான் கல்வி' என்பதை ஒவ்வொருவரும் உணரவேண்டும்."

"மாணவர்கள் வைரங்களாக இருக்கவேண்டும்; வைரத்திற்கு அதிக மதிப்பு இருப்பதற்குக் காரணம் பூமியின் வெகு ஆழத்தில் அது இருப்பதே ஆகும். நிலத்தின் கீழே தோண்டினால் கிளிஞ்சல்கள் இருக்கும்-சுண்ணாம்பு கிடைக்கும்-நிலக்கரி கிடைக்கும். அதற்கும் கீழே தோண்டினால் பெட்ரோலியம் கிடைக்கும்-அதற்கும் கீழே அழுத்தி வைக்கப்பட்டிருக்கும் வைரத்துக்குத்தான் மதிப்பு அதிகம். அதைப்போலவே, மாணவப் பருவத்தை அழுத்தி வைத்து வைரமாக திகழுங்கள்! நீங்கள் பெறுகின்ற கல்வி உங்களுக்காக மட்டுமல்ல! சமுதாயத்திற்காகக் கல்வி பெறுகின்றீர்கள் என்பதை உணர்ந்து செயல்படுங்கள்!"

"தன்னிடத்தில் படித்த மாணவர்கள் உயருவதிலேதான் ஆசிரியர் தொழிலின் சிறப்பு மேலாடுகிறது. ஆசிரியர்கள் பணிக் கைம்மாறு கருதாத தியாகப் பணியாகும் என்பதை உணர்ந்து செயல்படுங்கள்!"

"மதச்சார்புள்ள அரசாங்கம் கல்வி நிலையங்களை ஏற்று நடத்தினால் அங்கே மனிதனின் சிந்தனா சக்திக்கு இடமிருக்காது"

"கல்வி எதற்காகக் கற்கிறோம்? பகுத்தறிவு பெற. புதிய பொருளைக் காண கல்விக் கற்கிறோம். நாட்டிலே நல்லறிவைப் பரப்பக்கூடிய கல்வி வேண்டும். இதற்காகப் புதிய திட்டங்களை வகுக்கவேண்டும்."

"குழந்தை இல்லாதவர்கள் பணத்தைச் சேமித்து வைப்பதற்காக வாரிசு (வழித்தோன்றல்) தேடவேண்டியதில்லை. அந்தச் சொத்துக்கு அரசாங்கமே வாரிசாக இருக்கவேண்டும். தனிப்பட்டவர்களிடம் சொத்து இல்லாமல் அரசாங்கத்திடம் சொத்து இருந்தால் அதை நல்லதொரு கலாசாலை (நூலகம்) அமைக்கவும், நல்ல விஞ்ஞான முறையை ஏற்படுத்தவும் பயன்படுத்தலாம்.

## முடிவுரை

தமிழகத்தின் விடிவெள்ளியாக விளங்கிய அறிஞர் அண்ணாவின் சிறப்புக்களையும், கல்விச் சிந்தனைகளையும், இக்கட்டுரையில் பகிர்ந்தேன். இம்மாமேதையின் சிந்தனைகளை 21ஆம் நூற்றாண்டிலும் போற்றி, அவ்வழியில் நடந்து சிறப்பிப்போமாக!

# அறிஞர் அண்ணாவின் சமுதாய மாற்றச் சிந்தனை

**இ. ஜாஸ்மின்**
ஆய்வியல் நிறைஞர்
தமிழ்ப் பல்கலைக்கழகம்

## முன்னுரை

தென்னகத்தின் திருவிளக்காய்த் தீந்தமிழர்தம் குலவிளக்காய்த் திகழ்ந்து காலஞ்சென்ற அறிஞர் அண்ணாதுரை இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற மேதை; மடமை என்னும் காரிருளைக் கிழித்து அறிவொளி பரப்பிய ஞாயிறு; சோர்ந்து கிடந்த தமிழினத்தைத் தம் சொல்லாலும், எழுத்தாலும் தட்டி எழுப்பித் தன்மான உணர்ச்சியை ஊட்டியவர், தமிழ்மக்கள் யாவரும் தலை நிமிர்ந்து வாழ வழிகாட்டியவர். 20ம் நூற்றாண்டு வரலாற்றில் தமிழ்மொழி, தமிழ் இனம், தமிழ்நாடு, தமிழர் பண்பாடு எனவும் அவற்றின் மறுமலர்ச்சிக்கு முதன்மையாகப் பணியாற்றியவருள் முதன்மையாக விளங்கியவர் பேரறிஞர் அண்ணா.

## கல்வியின் முக்கியத்துவம்

நல்ல கல்வியும் நல்ல சிந்தனையும் ஒருங்கே பெற்ற சமுதாயமே உலகில் தலைநிமிர்ந்து நிற்கமுடியும் என்பது யாருமே மறுக்க முடியாத உண்மை. கல்வி கற்றவரால் மட்டுமே எதையும் அறிவுப்பூர்வமாக, ஆதாரப்பூர்வமாக சிந்திக்க இயலும்; உண்மையில் பகுத்தறிவு உள்ளவராக ஆகமுடியும் எனவே கல்வி மனித சமுதாயத்திற்கு மிக மிக அவசியம்.

1. கல்வி மனதைத் தூய்மைப்படுத்தி உன்னதமாக்கி நற்பண்புகளை உள்ளத்தில் உருவாக்கும் கருவியாகச் செயல்படுகிறது.
2. நற்பண்புகள்தான் பண்பாட்டையும் கலாச்சாரத்தையும் நாகரிகத்தையும் உருவாக்கும் விதமாக வித்தாக அமைகிறது. மேலும் அதனை அழியாமல் சீர்மைப்படுத்திச் செம்மையாக

வாழ வழிவகை செய்கிறது. விலங்குத் தன்மையுள்ள மனிதனை மனிதத் தன்மைக்கு உயர்த்துவது கல்வி ஒன்று மட்டுமே இத்தகைய கல்வியின் மாண்பைத் திருவள்ளுவர்

ஒருமைக்கண் தான் கற்ற கல்வி ஒருவர்க்கு
எழுமையும் ஏமாப்புடைத்து

என உணர்த்தியுள்ளார்.

எல்லோரும் எல்லாவற்றையும் முழுமையாகக் கற்றுக் கொள்ள முடியாது. அதனால் வாழ்வில் பயன்மிக்கதை முதலில் கற்று அதனை முதன்மையோடு நடைமுறை வாழ்வில் செயல் வடிவமாகக் கொண்டு வந்தால் மட்டுமே கல்வியின் முழுமையான பயனை அடைய முடியும். அவ்வாறு பெறும் கல்வியானது பகுத்தறிவு உடையதாக சமுதாய மக்களிடம் சென்றடைய விரும்பியவர் அறிஞர் அண்ணா கல்வியின் மூலமே பகுத்தறிவை பெற முடியும் என்பதை வலியுறுத்திய அறிஞர் அண்ணா, அந்த பகுத்தறிவுக்கு விளக்கம் கூறும் முறையில் அண்ணாமலைப் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் ஆற்றிய உரையில் "Rationalism is nothing but the annihilation of dubious modes of thought and action" எண்ணத்திற்கும் (சொல்லிற்கும்) செயலிற்கும் உள்ள வேறுபாட்டை - இரட்டை வாழ்க்கை முறையை ஒழித்து வாழ்வதுதான் பகுத்தறிவு ஆகும்.

## பகுத்தறிவு சிந்தனை மூலம் சமுதாய மாற்றம்

கல்வியானது முழுப் பயனைக் கொடுக்க வேண்டுமென்றால் அதற்கு நூல்கள் துணைபுரியவேண்டும். மனித அறிவு வளர்ச்சியில் புத்தகங்களுக்கு முக்கியப் பங்கு உண்டு என்பதை யாரும் மறைக்கவோ, மறுக்கவோ முடியாது உலக வரலாற்றில் மாற்றங்களக்குப் பல புத்தகங்கள் வித்திட்டன. கார்ல் மார்க்ஸ் எழுதிய மூலதனம் என்ற நூல் அடித்தட்டு மக்களின் வாழ்க்கையையே மாற்றி அமைத்தது. அதுபோல் மடமை என்னும் காரிருளில் இருந்த நம் மக்களுக்கு வழிகாட்டுவதாக பகுத்தறிவு நூல்கள் பல எழுதி சிந்திக்கச் செய்தவர் அறிஞர் அண்ணா.

"தொட்டனைத்தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு"

எனும் குறளுக்கு ஏற்ப அறிஞர் அண்ணாவின் நூல்களை படிக்க அறிவு வளம் நாளுக்கு நாள் பெறுவர்.

பி.ஏ. ஆனர்சில் படித்துக்கொண்டிருந்த போதே அவர் சமுதாயச் சீர்திருத்தம் பற்றி பேசினார். சாதிவெறி, மதவாறி, மூடப் பழக்கங்கள் ஆகியவற்றை எதிர்த்து முழங்கினார்.

"சாதிகள் ஒழியவேண்டும்" "தீண்டாமை ஒழிய வேண்டும்" "கலப்புத் திருமணங்கள் செய்துகொள்ள வேண்டும்" என்பன போன்ற தலைப்புகளில் அறிஞர் அண்ணா நிகழ்த்திய உரைகள் கேட்டவர்களை சிந்திக்கவைத்தன. அவருடைய உயிரோட்டமுள்ள தமிழ்நடை மாணவர்களைக் கவர்ந்தது.

## முடிவுரை

சமுதாயத்தில் சமத்துவம் நிலவ வேண்டுமாயின் பொருளாதாரப் புரட்சியினால் மட்டுமே அது இயலும் என்ற கோட்பாட்டை அறிஞர் அண்ணா ஏற்கவில்லை. அறிவுத்துறையிலே ஒரு பலமான புரட்சி ஏற்பட்டால் ஒழிய பொருளாதாரப் புரட்சியில் மட்டுமே புது வாழ்வு கிடைக்காது எனக் கூறும் அண்ணா, அறிவாயுதம் மட்டுமே புரட்சியை ஏற்படுத்தும் என்பதை தன் தீர்க்கமான முடிவாக காட்டி சமுதாய வளர்ச்சியைத் தரும் மாணவர்களை நல்ல பகுத்தறிவு சிந்தனையாளராக உருவாக்க வேண்டும். அதற்கேற்ற கல்வியை ஆசிரியர்கள் தரவேண்டும் என்ற அறிஞர் அண்ணாவின் கல்விச் சிந்தனைகள் வழிகாட்டி விளங்குகின்றன.

# அறிஞர் அண்ணாவின் பகுத்தறிவு கல்விச் சிந்தனைகள்

சீ. செல்வகுமாரி
ஆய்வியல் நிறைஞர்
தமிழ்ப் பல்கலைக்கழகம்

## முன்னுரை

இந்த உலகில் தமக்காக வாழாமல் பிறருக்காகவே வாழ்பவர் மிகமிகச் சிலரே! அந்தச் சிலர்தாம் நந்தா விளக்கினைப் போல் எந்த நாளும் புகழொளி வீசித் திகழ்கின்றனர். அவர்கள் தங்கள் இன்ப துன்பங்களைப் பற்றி எண்ணுவதே இல்லை. இரவும் பகலும் மற்றவர் நலம் பற்றியே சிந்திக்கின்றனர். செயல் புரிகின்றனர், வெற்றி பெற்று உலக உத்தமர்களின் வரிசையில் தங்கள் பெயரையும் பொறித்துக் கொள்ளுகின்றனர். வரலாறு அவர்களை வாழ்த்துகிறது. வையகம் அவர்களைப் போற்றுகின்றது. அத்தகு சிறப்புப் பெற்ற உத்தமர்களுள் ஒருவர்தான் அறிஞர் அண்ணாதுரை அவர்கள். அறிஞர் அண்ணா என்று அனைவராலும் அன்போடும், பாசத்தோடும் அழைக்கப்படும் அவர் ஒரு பெரிய மேதை, தலைசிறந்த அரசியல்வாதி, தன்னேரில்லாப் பேச்சாளர், எழுத்தாளர், ஆங்கிலமொழி வல்லுநர், தமிழ்ப் பேச்சிலும், எழுத்திலும் ஒரு மறுமலர்ச்சியை உண்டாக்கியவர்.

## அறிஞர் அண்ணாவின் பகுத்தறிவுக் கல்விச் சிந்தனைகள்

நம் சமுதாயத்தில் காணப்படும் சில அநீதிகளைக் கண்டு அண்ணா கொதித்து எழுந்தார். மடமைகளை ஒழிக்கவேண்டும். சாதிக் கொடுமைகளை அழிக்க வேண்டும். பெண்களுக்கு உரிமை வழங்கப்பட வேண்டும். அவர்களும் ஆண்களோடு சரிநிகர் சமானமாய் வாழவேண்டும். கல்லாமை, இல்லாமை ஆகிய இரண்டையும் இல்லாமல் செய்யவேண்டும். அதற்காகப் போராட வேண்டும் என்று அறிஞர் அண்ணா விரும்பினார்.

- சிறுகதைகள் சொல்லி மக்களைச் சிந்திக்க வைத்தார். உதாரணங்கள் எடுத்துக்காட்டி உள்ளங்களைக் கவர்ந்தார்.
- அஞ்சா நெஞ்சம் படைத்தவனே தலைவன் ஆவதற்குத்த குதி உடையவன். அவன் தான் மேற்கொண்ட கொள்கைக்காகத் தன்னையே தியாகம் செய்யவும் தயாராக இருக்க வேண்டும். மக்கள் அவனையே விரும்புகிறார்கள்.
- பழைமையில் ஊறித் திளைத்த மனம் புதுமையை நாடாது. பழைமைக்கு ஆபத்து என்றால் அது பதறித் துடிக்கும். புதுமையைப் பரப்ப முயற்சி செய்பவரைக் கல்லாலும், சொல்லாலும் அடிக்கும். அறிஞர் அண்ணா ஒரு சீர்திருத்தவாதி, சமுதாயத்தைச் சீர்திருத்த வேண்டும் என்பார்.
- நேர்மைக்காக வாதாடுவதிலும், அவருக்கு இணை அவர்தான்! பெரிய மனிதர்களாயினும் சரி, சிறிய மனிதர்களாயினும் சரி அனைவரும் அவர் பார்வையில் ஒன்றே.
- எதையும் தெளிவாகச் சொல்லும் வல்லமை வேண்டும். சொல்லும் போது சோர்வு இல்லாது இருக்க வேண்டும். அஞ்சாமல் சொல்லவேண்டும். இந்தத் தகுதி ஒருவனுக்கு இருந்தால் அவனை எளிதில் வெல்ல முடியாது.
- எங்கும் எதிலும் சமத்துவம் வேண்டும்.
- பெண்களின் உரிமைக்காகவும், கல்விக்காகவும் இவர் பரிந்து பேசினார்.
- அறிஞர் அண்ணாவும், பெரியாரும் நாடு முழுவதும் பயணம் செய்து கல்விக்காகவும், சமுதாய விழிப்புணர்விற்காகவும் போராடினர்.
- அறிஞர் அண்ணாவின் சிறுகதைகளும், நவீனங்களும் மக்கள் நடுவில் பெரும் நாடகங்களும் மேடைகளில் நடிக்கப்பட்டன. மக்களின் மனமாற்றத்திற்கு அவை வழிவகுத்தன.
- புரட்சிக்கவிஞர் பாரதிதாசனின் கவிதைகளைச் சொல்லுக்குச் சொல் ரசித்தவர் அறிஞர் அண்ணா. புரட்சிக் கவிஞரின் கவிதைகளை நாடெங்கும் பரப்பியவரே அண்ணா என்று கூடச் சொல்லலாம்.

- ❖ பெற்ற தாயையும் பிறந்த பொன்னாட்டையும் ஒவ்வொருவரும் போற்றிக் காக்க வேண்டும். நாட்டுப்பற்று இல்லாதவன் மண்பொம்மை போன்றவன். அவன் இருந்தும் இல்லாத நடைப்பிணம். உண்டு, உறங்குவது மட்டும் வாழ்க்கை ஆகாது. உணர்ச்சி உடையவனே மனிதன். நாட்டுப்பற்று இல்லாதவனிடம் வேறு பல திறமைகள் இருக்கலாம். ஆனால், அவனை நாடு மதிப்பது இல்லை என்கிறார் அறிஞர் அண்ணா.
- ❖ விடாமுயற்சி வெற்றி தரும். சரித்திரத்தைப் புரட்டிப் பார்த்தால் அந்த உண்மை நன்கு விளங்கும் என்கிறார் அறிஞர் அண்ணா.
- ❖ தமிழும், ஆங்கிலமும் அறிஞர் அண்ணாவின் இரு கண்கள் என்கிறார். அவர் ஆங்கில மொழியில் வல்லவர். தாய்மொழியாம் தமிழிலோ பெரும் புலவர். இவர் ஆட்சிக் காலத்தில் தமிழே அரசாங்க அலுவலகங்களில் ஆட்சி மொழியாக இருக்கும் என்று சொன்னார்.
- ❖ இவர் ஆட்சி காலத்தில் திருவள்ளுவரின் திருக்குறள் அரசாங்க பஸ்களில் எழுதப்பட்டது. எந்தெந்த வகைகளில் தமிழுக்குப் பெருமை வழங்க இயலுமோ அந்தந்த வகைகளில் அதை வழங்கினார் அறிஞர் அண்ணா. 1968ம் ஆண்டு இரண்டாவது உலகத் தமிழ் மாநாடு சென்னையில் நடைபெற்றது. அதனை ஏற்று நடத்தும் பொறுப்பும் அறிஞர் அண்ணாவிடம் ஒப்படைக்கப்பட்டது.
- ❖ நம் மாநிலத்திற்குத் தமிழ்நாடு என்று பெயரை அறிஞர் அண்ணா சூட்டினார்.
- ❖ அறிஞர் அண்ணா ஒரு முறை 5 நாட்கள் மேல் பல்கலைக் கழக விருந்தினராகத் தங்கி இருந்தார். அப்போது பல்கலைக் கழக மாணவர்களுக்குத் திருக்குறள் வகுப்பு நடத்தினர். திருக்குறள், தொல்காப்பியம் ஆகியவற்றின் ஆங்கில மொழிபெயர்ப்புகளை மாணவர்களுக்கு அன்பளிப்பாகக் கொடுத்தார்.

## இறுதிப் பயணம்

புற்று நோயினால் அவதிப்பட்ட அவர் 1969ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 2ம் தேதி இரவு 12.22 மணிக்கு அறிவுலக மேதை அறிஞர் அண்ணா இயற்கை எய்தினார்.

## முடிவுரை

மதி நிறைந்த அந்த அறிஞர் அண்ணா, மக்கள் விரும்பிய அந்த அறிஞர் அண்ணா, இன்று நம்மிடையே இல்லை. லட்சக் கணக்கானவர்களின் இதயத்தைக் கொள்ளை கொண்ட மன்னன், அறிவுலக மேதை, நம் அண்ணன் பூமித்தாயின் மடியில் படுத்திருக்கிறார். வங்கக்கடல் அவரது புகழைத் தாலாட்டாகப் பாடிக் கொண்டிருக்கிறது. தவழ்ந்து வரும் தென்றலோ அறிஞர் அண்ணாவின் பொன்னுடலை மெள்ளத் தழுவிக் கொண்டிருக்கிறது. அறிஞர் அண்ணா துயிலில் ஆழ்ந்திருக்கிறார். ஆம்! அவர் மீளாத் துயிலில் ஆழ்ந்திருக்கிறார். இனி அவர் எழுந்துவர மாட்டார். இனிய தமிழில் பேசி இதயம் கவர மாட்டார். அவரது தத்துவங்களோ எத்திசையும் பரவி, அவரது மெத்த புகழ் பாடி, என்றும் நின்று வாழும், வாழ்க, அவர் புகழ்.

## மேற்கோள் நூல்கள்


*1. நாட்டுக்கு உழைத்த நல்லவர் ... அண்ணாத்துரை*

ஆசிரியர் தி.சு.கலியபெருமாள்

*2. பேரறிஞர் அண்ணாவின் தன் வரலாறு*

டாக்டர் அண்ணா பரிமளம்

# அறிஞர் அண்ணாவின் பார்வையில் தமிழ்க் கல்வி

பெ. பெரியதம்பி
ஆய்வியல் நிறைஞர்
தமிழ்ப் பல்கலைக்கழகம்

## முன்னுரை

வரலாற்றுச் சிறப்பு படைத்த வண்டமிழ் நாட்டில் கலைவாணர் நிலையமாம் காஞ்சிபுரத்தில் பிறந்தவர். அறிஞர் அண்ணா தம் முனைப்பால் ஒரு கட்சியின் தலைமை ஏற்றதோடல்லாமல் தொண்டுள்ளத்தால் ஆட்சித் தலைமை பெற்று மனித நேயத்தால் மக்கள் தலைமைக்கும் உயர்ந்தவர். நாம் வாழும் சமுதாயத்தில் மாற்றத்தையும், மறுமலர்ச்சியையும் ஏற்படுத்தவல்ல ஆற்றல் வாய்ந்தது கல்வியே என அறிந்தவர்.

## கல்விநிலை

வேதவேதாந்திகல், சித்தாந்த கிரோன்மணிகள், திருவருளால் பெற்றவர்கள், எமது நாட்டிலே உண்டு என்று பேசலாம். பேசுகிறோம். ஆனால் உமது நாட்டின் கல்விநிலையைக் கூறு என்று கேட்டால் நாம் வெட்கித் தலைகுனியும் நிலை இருக்கிறது. இது பெருங்கேடு. "பலமான கேடயம், அஞ்சா நெஞ்சு ஆனால் அந்த வீரனின் விழி பழுது" இந்நிலை நாட்டுக்குச் சிறப்பளிக்காது. நாட்டுநிலை உலகநிலைக்கேற்ப வளர்ந்தாக வேண்டும். இதற்கு வீட்டுநிலை மாறவேண்டும் என எண்ணினார்.

## வீட்டிற்கோர் புத்தகசாலை

முன் சந்ததியருக்கு இருந்ததைவிட அதிகமான வசதிகள், நமக்கு உள்ளன. இருந்தும் மனவளம் குறைவாகவே இருக்கிறது. மனவளத்தை அதிகரிக்கவோ, பாதுகாக்கவோ நாம் முயற்சி செய்வதில்லை. வழிவகை தேடிக்கொள்வதில்லை.

ஒவ்வொரு வீட்டிலும் வசதி கிடைத்ததும் அல்லது வசதி ஏற்படுத்திக் கொண்டதும் அமைக்கவேண்டிய புத்தக சாலையில் நாட்டு வரலாறு உலக நாடுகளின் நிலையைக் குறிக்கும் நூல்கள் இவை முதலிடம் பெறவேண்டும். பொதுவாகவே மக்களின் அறிவுக்குத் தெளிவும், ஆண்மைக்கு உரமும் ஒழுக்கத்துக்கு வலிவு தரதக்க நூல்கள் இருக்கவேண்டுமே தவிர வாழுமிடத்தை வகையற்றது என்றுகூறி விண்ணுலகத்துக்கு வழிகாட்டும் நூல்களும், மாயா விளக்கத்தையும் மனமிருட்சியையும் தரும் ஏடுகளும், தன்னம்பிக்கையைக் கொடுத்து, விதியை அதிகமாக வலியுறுத்திப் பெண்களை இழித்தும், பழித்தும் பேசிடும் நூல்கள் இருத்தல் ஆகாது.

இந்த அடிப்படையில் வீட்டிற்கோர் புத்தகசாலை அமைத்துக்கொண்டால் நாட்டுக்கு நல்ல நிலை ஏற்படும் எனக் கருதினார்.

## கல்வி வள்ளல்

வட்டத் தலைநகரங்கள் வேறு இடங்களில் உயர்நிலைப் பள்ளி இல்லாத காலம் அது. 6 ஏக்கர் நிலமும் ரூ.25,000மும் தந்தால் அரசாங்க உயர்நிலைப்பள்ளி அமைக்க ஏற்பாடு செய்ய வழி இருந்தது. காஞ்சியை அடுத்த வாலாஜாபாத்தில் பேராசிரியர் அ.மு.பரமசிவாநந்தம் ஓர் உயர்நிலைப்பள்ளி அமைக்க எண்ணி நீதிக்க அல்லாடிய நிலையில் அறிஞர் அண்ணா தாமே வலியச் சென்று உதவுவதாகக் கூறி ‘நீதி தேவன் மயக்கம்’, ‘சிவாஜி கண்ட இந்து இராஜ்யம்’ ஆகிய நாடகங்களை நடத்தி அதன் முழு வருவாயினையும் அளித்தார். பள்ளியில் உள்ள கல்வெட்டு இன்றும் அதற்கு சான்று பகரும்.

## எதிர்கொள்ளவேண்டிய தடை

கல்வி என்பது தண்ணீர், அதை சமூக விருட்சகத்தின் வேரில் ஊற்றினால் மட்டும் போதாது. அந்த மரத்தின் வேரிலுள்ள சாதி வேற்றுமையும், பேத புத்தியும் பணத்துக்கு அடிமைத்தனமுமாக புழுக்கள் அதை வளரவிடாமல் தடுக்கின்றன. அதைக் கொன்றே ஆகவேண்டும் என்ற கல்வியால் மேனிலை பெறவிரும்பும் சமுதாயம் எதிர்கொள்ளவேண்டிய தடைகளை எடுத்தியம்புகிறார்.

எதிர்காலத்தை உருவாக்கும் மாணவர்களுக்கு அறிஞர் அண்ணா தரும் அறிவுரை.

தமிழ் உமது முரசாகட்டும்
பண்பாடு உமது கவசம் ஆகட்டும்
அறிவு உமது படைகளாகட்டும்
அறநெறி உமது வாழ்க்கைத் துணையாகட்டும்

இளைஞர் உள்ளங்களில் பதியுமாறு பகுத்தறிவுக் கருத்துக்களைப் பக்குவமாக விதைத்தார். சீர்திருத்க் கருத்துக்களைச் செழுமையாக விளக்கினார். நாற்றமெடுத்த நச்சுக் கருத்துக்கள் நாட்டை நலிவிழக்கச் செய்து வருவதை நயம்பட எடுத்துரைத்தார். அவரின் உரைகள் இளைஞர்களுக்கு இன்பமூட்டின. எல்லோரிடையேயும் நாடுகாக்கும் நல் விழிப்பை உண்டாக்கின.

## தமிழா கற்பர்?

இந்தி, அகில இந்தியா எனும் ஏகாந்தியத்திற்கு முத்திரை மொழி.

இந்தியத் துறை அலுவலகப் பணிகளுக்கானத் தேர்வுகள் இந்தியில் நடைபெறும் என்பது கண்டித்தற்குரியது இந்தத் தேர்வுகளில் இந்தியாவின் மற்ற தேசிய மொழிகள் குறித்து யோசிக்கக்கூட இல்லை என்பது கண்டனத்திற்குரியது. இந்நிலைமையினால் இந்தியாவின் ஒருமைப்பாட்டுக்கே ஆபத்து விளையக்கூடும்.

ஆட்சிமொழியாக இந்தி என்று ஆகிவிட்டதற்குப் பிறகு எவரும் அம்மொழியிடம் பயபக்தி விசுவாசம் காட்ட முற்படுவரே அன்றி தமிழா கற்பர்? என வினவி மும்மொழித் திட்டத்தை எதிர்த்தார்.

## தமிழுடன் ஆங்கிலம்

ஈராயிரம் ஆண்டுகட்கு முன்பிருந்தே ஏற்றம் பெற்றது. தமிழ்மொழி! அம்மொழி போதும் தமிழர்க்கு, தமிழக அரசுக்கு எனினும் தமிழர் தரணி எங்கேனும் தொடர்பு கொண்டிட அறிவு

திரட்டிட வாணியம் நடத்திட உறுதுணையாகத் தமிழுடன் உலகப் பொதுமொழி ஆங்கிலம் தேவை என்றுரைத்தார்.

ஆங்கில மொழியின் துணைபெறின் அகில உலகப் பேச்சுத் தொடர்புக்கு மட்டுமல்ல உலகநாடுகள் பலவற்றிலும் இன்றுவரை மலர்ந்துள்ள கருத்துக்களை அறிந்து தொடர்புகொள்ள வழி கிடைக்கிறது என இருமொழிக் கொள்கையை வலியுறுத்தினார் சட்டமன்றத்தில் தீர்மானமாக நிறைவேற்றினார்.

## தமிழ்

முதலமைச்சராய் பதவியேற்றபோது தமிழில் பதவியேற்பு உறுதிமொழி எடுத்துக்கொண்ட அவர் வட சொற்களுக்கு மாற்றாக தமிழ்ச் சொற்களை அரசு மடல்களில், ஆவணங்களில் பயன்படுத்த ஆணை பிறப்பித்தார்.

1968 உலகத் தமிழ்நாட்டுத் தொடக்கவிழாவில் திருக்குறள் ஆராய்ச்சிக்காக சென்னை, அண்ணாமலை, மதுரை ஆகிய மூன்று பல்கலைக்கழகங்களும் ரூ.3 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.9 இலட்சம் தமிழ்நாடு அரசு ஒதுக்குவதாக அறிவித்தார்.

தமிழின்பால் வைத்துள்ள பற்றுதலை உலகறிய பத்து தமிழறிஞர் சிலைகளை சென்னை கடற்கரையில் திறந்து வைத்தார்.

## தமிழ் வழிக்கல்வி

ஆங்கிலத்தின் மூலம் வரக்கூடிய எல்லாக் கல்வியறிவும் ஜப்பானிய மொழியில் மொழி பெயர்க்கப்பட்டுக் கற்பிக்கப்படுகிறது. அவர்களும் சிறந்த கல்விபெற்று முன்னேறி விட்டனர். அவர்கள் முன்னேற்றம் உலகிலுள்ள சிறந்த முன்னேற்றம் அடைந்த பல நாடுகளை வியப்பில் ஆழ்த்தியுள்ளது. ஆனால் சென்னை அவசரப்பட்டு ஆங்கிலத்தின் மூலம் தொழிற்கல்வி முதலியவற்றைக் கற்பிப்பதை விட்டுவிடப்போவதில்லை; அந்த எண்ணம் இப்போது இல்லை. பல முக்கியப் பிரச்சனைகள் இருக்கையில் நாம் முதலில் அவற்றை எல்லாம் முடித்துவிட்டுப் பின்னர் மொழியை பற்றி சிந்திக்கலாம் என்று கூறினார் அறிஞர் அண்ணா.

## தமிழ்க் கலைகள்

தமிழருக்கு தமிழ்நெறி, தமிழ்முறை, ஒழுக்கம், வீரம், கற்பு, காதல், எனும் பண்புகளைத் தரக்கூடிய கலையாக இருத்தல் வேண்டுமேயொழிய வேறோர் இனத்தைப் புகழ்வதும், அதற்கு ஆதிக்கமளித்து, தமிழ்மக்கள் மனதிலே தன்னம்பிக்கை அற்றுப் போகும்படியும் தமது இனத்தைப் பற்றிய தாழ்வாகக் கருதிக் கொள்ளும்படியான நிலைமை உண்டாக்கும் கதை, காவியம், கட்டுரை, இலக்கியம் என்பவைகளைக் கொளுத்தவேண்டும்.

## முடிவுரை

பொய்மையும் கயமையும், வகுப்புப் பித்தமும் வகுப்பு மாச்சாரியமும் இல்லாமையும் கல்வியால் வெகுண்டோட வேண்டும். அதற்குத் தேவைப்படும் தூய்மையும், வாய்மையும், அஞ்சாமையும் பணியாற்றும் தன்மையும் நம்முள் இன்று பிறந்திட வேண்டும்.

# அறிஞர் அண்ணாவின் நாட்டு நலப்பணி அமைப்பின் சிந்தனைகள்

**பொ. ராமமூர்த்தி**
ஆய்வியல் நிறைஞர்
தமிழ்ப் பல்கலைக்கழகம்

## முன்னுரை

அறிஞர் என்றாலே ஆய்வாளர், எதையும் சிந்தித்து, ஆராய்ந்து முடிவு எடுப்பவர். அறிஞர் அண்ணாவும் தாம் எடுத்த கொள்கையில், ஈடுபாடு சிந்தனைத்தெளிவு, விடாமுயற்சி, அஞ்சாமை, மனிதநேயம், நாகரிகம்பேணல், கடின உழைப்பு போன்றவற்றைப் பின்பற்றினார். இக்கட்டுரையில் அவரின் கல்வியியல் சிந்தனைகள் பற்றிப் பார்ப்போம்.

## பெண் கல்வி

இந்தியா சிறந்த நாடாக (குறிப்பாக தமிழ்நாடு) வரவேண்டும் என்று பாடுபட்ட தலைவர்களில் அறிஞர் அண்ணாவும் ஒரு முக்கிய நபர். அப்போதெல்லாம் "அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பு எதற்கு" என்ற நிலை இருந்தது அதை நீக்க, நாட்டின் வளமைக்கும், நாட்டின் சிறப்பிற்கும் பெண் கல்வி தேவை என்பதை உணர்த்தி பெண்கல்வி வளர்ச்சிக்கு மிகவும் பாடுபட்டார். "ஒரு பெண் படித்திருந்தால் ஒரு குடும்பம் படித்த மாதிரி" என்ற கொள்கையை திறம்படி எடுத்துக் கூறினார். எல்லாத் துறைகளிலும் பெண்கள் படித்து வேலையில் அமர வேண்டும் என்பதை வலியுறுத்தினார். பெண்கள் குடும்பத்தில் ஒதுக்கப்படுவதை அடிமை படுத்தபடுவதை எதிர்த்து அவர்களுக்கும் சமஉரிமை உண்டு என்பதைக் கூறினார். ஒரு விளக்கு வீட்டில் எரிந்தால் எவ்வளவு பிரகாச ஒளி தருகிறதோ அதைப்போல பெண்கல்வியும் குடும்பத்தை சிறப்புறச் செய்யும். அவர் முதலமைச்சராக இருந்தபோது சட்ட சபையிலும் குறிப்பிட்ட சதவீதம் M.L.A. Seat பெண்களுக்கு

கொடுக்கப்பட்டு அவர்களின் தொண்டும் ஈடுபாடும் மக்களுக்கு பயன்படும் வகையில் நிறைவேற்றிக்காட்டினார்.

## சமூக வேறுபாடின்றி அனைத்து தரமக்களுக்கும் சமமான கல்வி

அறிஞர் அண்ணா படிக்கும் காலத்தில் சமூகத்தில் ஒரு குறிப்பிட்ட மக்கள்தான் உயர்கல்வி பெறமுடியும் என்ற நிலை மக்களிடையே பரவிக்காணப்பட்டது. எனவே இதை சிந்தித்த அறிஞர் அண்ணா எல்லா நிலையில் உள்ள மக்களும் பொருளாதார வேறுபாடின்றி, சமூக ஏற்றத்தாழ்வின்றி சாதிமத வேறுபாடின்றி உயர்கல்வியைப் பெறமுடியும் என்று கருதி அதற்காக அயராது உழைத்து பெரும்பாடுபட்டார். பொருளாதார நிலையில் பின்தங்கியிருக்கும் மக்கள் அரசு தரும் உதவித்தொகையைக் கொண்டு படிக்கலாம் தாழ்த்தப்பட்ட நிலையில் உள்ள மக்கள் அரசு தரும் சலுகைகளைச் சரியாகப் பயன்படுத்தினால் உயர் கல்வியைப் பெறலாம் போன்ற சலுகைகளை எல்லா மக்களும் உணரும்படி தன்பேச்சு ஆற்றல் மூலம் தெளிவாக வெளிப்படுத்தினார். நான் பள்ளியில் படிக்கும்போது ஒருமுறை அண்ணாதுரை முதலமைச்சராக இருந்தபோது அவரை சந்திக்க ஒரு வாய்ப்புக் கிடைத்தது. அப்போது அவரும் மற்ற அமைச்சர்களும் காரில் வந்தபோது எங்கள் ஊரில் அவரது காரை நிறுத்தி அவருக்கு வரவேற்பும், கரும்புச்சாறும் (Sugarcane Juice) கொடுக்கப்பட்டது. அப்போது அவர் தாழ்த்தப்பட்ட மக்களைப் பார்த்து இந்த ஊரில் யாராவது தாழ்த்தப்பட்ட மாணவன் பட்டம் பெற்று இருக்கிறானா என்று கேட்டார். இதிலிருந்து அனைத்து மக்களும் உயர் கல்வி பெற வேண்டும் என்ற அவரது பரந்த நோக்கம் தெளிவாக அறியப்படுகிறது. எனவே கல்வி மூலம் தான் அனைத்து மக்களும் தேவையான உரிமைகளையும், வசதிகளையும் பெறமுடியும் என்ற கருத்தை அனைத்துத்தர மக்களுக்கும் தெளிவாகப் புலப்படுத்தினார்.

## கல்வியின் பயன்கள்!

அறிஞர் அண்ணா ஒரு சிறந்த பேச்சாளர் எப்போதும் பல நூல்களைப் படித்துக்கொண்டே இருப்பவர் பல நூல்கள் படிக்கும் போதும், பலதரப்பட்ட மக்களோடு பழகும்போதும், அவைகளில்

உள்ள கருத்துக்களை உண்மையாக, சிந்தித்து, மக்களுக்கு பயன்தரும் வகையில் முடிவு எடுப்பார். கல்வி கற்றலின் பல நன்மைகளைத் தெளிவாக எடுத்துக் கூறியிருக்கிறார். கல்வி கற்பதால் ஒரு மனிதன், தன் மிருகத்தன்மையிலிருந்து விடுபட முடியும், கோபத்தைக் கட்டுப்படுத்த முடியும், பொறுமையைக் கடைபிடிக்க முடியும், நுண்ணறிவுத் திறனை வெளிப்படுத்த முடியும் என்பதைப் பல எடுத்துக்காட்டுகளுடன் விளக்கியிருக்கிறார். கல்வி கற்றலால், மனிதன் மனித நேயத்தை வளர்ப்பதால் மக்கள் ஒற்றுமையாக வாழமுடியும், பல அறிவியல் மேதைகள், பொறியாளர்கள், மருத்துவர்கள், சட்ட அறிஞர்கள், பேராசிரியர்கள், பலதுறைகளிலும் வல்லுநர்கள் உருவாக முடியும். எனவே கல்வி கற்றலினால் ஒருநாடு சிறந்தநாடாக, வல்லரசாக மாற முடியும் என்பதை அவர் தெளிவாக எடுத்துக் கூறியிருக்கிறார்.

## அறிஞர் அண்ணா மறுமலர்ச்சித்திட்டமும், அறிஞர் அண்ணா சீரணி இயக்கமும்

பொருளாதாரம் மற்றும் கல்வி நிலையில் பின் தங்கிய மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த மறுமலர்ச்சித் திட்டத்தை ஏற்படுத்தினார். மறுமலர்ச்சி என்பது பாதிக்கப்பட்ட மக்களுக்கு மீண்டும் மகிழ்ச்சியான வாழ்வை ஏற்படுத்துவது எடுத்துக்காட்டாக விதவைத் திருமணம், கலப்புத் திருமணம், ஆதரவற்ற முதியர்வகளுக்கு நல உதவித்தொகை முதலியனவாகும். வேலையில்லா இளைஞர்களுக்கு அறிஞர் அண்ணா சீரணி இயக்கம் மூலம் வேலை கொடுப்பது, சீரணி இயக்கத்தில் உள்ள இளைஞர்கள் மக்களின் பிரச்சனைகளைப் புரிந்துகொண்டு அவைகளை நீக்க அவர்களுக்குத் தேவையான ஆலோசனைகளையும், சேவைகளையும் ஏற்படுத்துவது முதலியனவாகும்.

## முற்போக்குச் சிந்தனையும், மூடநம்பிக்கையை நீக்குதலும்

அறிஞர் அண்ணா உயர்ந்த கல்விச் சிந்தனைகளையும், வருங்கால மாறுதல்களையும் உணரக்கூடிய ஆற்றலைப் பெற்றிருந்தார். எனவே அவருடைய திட்டங்கள் எல்லாம், எல்லா மக்களுக்கும் பயன்படும் விதத்தில் அமைந்திருந்தன. அறிஞர்

அண்ணாவின் முற்போக்கு சிந்தனைத் திட்டத்தில் ஒன்று "ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசி மக்களுக்குக்கொடுப்பது" இன்று அந்த திட்டம் நமது தமிழக முதலமைச்சர் அவர்களால் நிறைவேற்றப்பட்டு இருக்கிறது. மக்கள் மூடநம்பிக்கையால் பாதிக்கப்படுவதைக் கண்டு மனம் வருந்தினார். மூடநம்பிக்கையை நீக்க பெரும் பாடுபட்டார். மூடநம்பிக்கை என்பது அறியாமையாலும், கோழைத்தனத்தாலும் ஏற்படுவது. எனவே மூடநம்பிக்கைப் பற்றி பல்வேறு கருத்துக்களை மக்கள் நன்கு உணரும்படி எடுத்து கூறியிருக்கிறார்.

## NSS அமைப்பு (நாட்டு நலப்பணித் திட்டம்)

அறிஞர் அண்ணா மக்களுக்குச் சேவை செய்த காலத்தில் ஹிந்தி ஆதிக்கம் அதிகம் இருந்தது. அதை எதிர்த்து அவர் போராடினார். அப்போது NCC அமைப்பு பள்ளி, கல்லூரிகளில் இருந்தது அதிலும் ஹிந்தி அதிகமாகப் பயன்பட்டது.

எனவே அறிஞர் அண்ணாவின் சிந்தனையில் ஒரு புதிய திட்ட அமைப்பு உருவாகியது. அதுதான் NSS அமைப்பு (நாட்டு நலப்பணித் திட்டம்) எனவே நாட்டு நலப்பணித் திட்டத்தை முதன் முதலில் உருவாக்கி செயல்படுத்தியவர் அறிஞர் அண்ணாதான். இன்று தமிழ்நாடு மட்டுமல்லாமல் இந்திய அளவில் உள்ள அனைத்து மாநிலங்களிலும் உள்ள எல்லா பள்ளி, கல்லூரிகளிலும் NSS அமைப்பு திறன்பட செயல்படுகிறது.

NSS திட்டத்தின் Motto, நமக்கல்ல, உனக்காக "It is not for us; but for you" இதில் கூறப்பட்ட கருத்துக்கள் மாணவர்கள் படிக்கும் போதே சமூகத்தில் உள்ள மக்களோடு பழகுதல், அவர்களின் பிரச்சனைகளைத் தெரிந்து கொள்ளுதல், அவர்களுக்கு உதவி செய்தல் போன்ற மனப்பாங்கை வளர்த்துக்கொள்ள வேண்டும். இத்திட்டத்தில் இரண்டுவிதமான பணி உண்டு ஒன்று தொடர்பணி, மற்றொன்று சிறப்பு முகாம் பணி. இன்று நம் தமிழகத்தை பொருத்தவரை NSS அமைப்பு பற்றியும் அதன் பணிபற்றியும் தெரியாத மக்களே இல்லை என்று கூறமுடியும். அந்த அளவிற்கு இத்திட்டம் இன்று சிறப்பாக செயல்பட்டு கொண்டு இருக்கிறது.

## தாய்மொழிக் கல்விக்கு முன்னுரிமை

தாய்மொழிக் கல்வியே ஒரு புதிய கண்டுபிடிப்புக்குக் காரணம் என்பதை அனைவரும் அறிந்த ஒன்று தாய்மொழியில் கல்வி கற்றால்தான் மாணவர்கள் எல்லா கல்வித் திறன்களையும் எளிதாகப் பெறமுடியும். மாணவனுடைய பேச்சாற்றல், எழுத்தாற்றல், ஆராய்ந்து முடிவெடுக்கக்கூடிய கருத்துக்கள் போன்றவைகளைத் தாய்மொழிக் கல்வி மூலம்தான் எளிதாகப் பெற முடியும் என்பதை அறிஞர் அண்ணா தெளிவாக எடுத்துக் காட்டுகளுடன் கூறியிருக்கிறார். தாய்மொழிக் கல்வி பற்று இருந்தால் அவனுக்குக் கண்டிப்பாக நாட்டுபற்று வரும் என்பதை வலியுறுத்தினார். தாய்மொழிக் கல்வியே, ஒரு மனிதனுக்குப் பண்பு, பாசம், அன்பு, புதுமை, ஆர்வம், ஆராய்ச்சி போன்றவற்றை எளிதாகத் தரும் என்பதைத் தெளிவாக அறிஞர் அண்ணா கூறியிருக்கிறார்.

## முடிவுரை

அறிஞர் அண்ணாவின் கல்வியியல் சிந்தனையால் நம்முடைய தமிழக மக்கள், மாணவர்கள் மட்டுமல்லாமல் இந்திய அளவிலும், உலக அளவிலும் மக்கள் பெரும் விழிப்புணர்வைப் பெற்று நன்மை அடைந்துள்ளனர். அவர் வகுத்துத்தந்த சிந்தனைகளில் மிக முக்கியமானது மனிதன், மனிதனை நேசிக்க வேண்டும், மக்களுக்கு முடிந்த வரையில் தொண்டு செய்ய வேண்டும் என்பதைத் தெளிவாகப் புலப்படுத்துகிறது.

# ஆற்றல்களின் திருவுருவமான அறிஞர் அண்ணா

**சி. சிவகலா**
இளங்கல்வியியல்
தமிழ்ப் பல்கலைக்கழகம்

### அன்பின் உருவமாய்

அறிஞர் அண்ணா தன் அன்பால் தான் எண்ணற்ற தம்பிகளை பெற்றார். அவர் அன்பின் உருவமாக இருந்ததால் தான் இந்த நாட்டு மக்களுக்கு எல்லாம் அண்ணாவானார்.

### எளிமையின் உருவமாய்

அறிஞர் அண்ணா எளிமையே உருவானவர், வானளவு அவர் புகழ் உயர்ந்துள்ளது. ஆனால் அவர் சாதாரணமான எளிய தொண்டனைப் போல ஆடம்பரம் இல்லாமல் வாழ்ந்தார்.

### அறிவின் உருவமாய்

அறிஞர் அண்ணா எல்லாத் துறையிலுமே ஈடு இணையற்ற மதிநுட்பம் உடையவர். அதனால்தான் இந்த நாட்டு மக்கள் ஒருமுகமாக மனமுவந்து அண்ணாவை அறிஞர் அண்ணா என்று சிறப்பித்தார்கள் அப்படி அழைப்பதிலே பெருமை அடைந்தார்கள்.

### சொல்லின் உருவமாய்

அறிஞர் அண்ணா சொல்லின் செல்வர் மேடைப்பேச்சில் புரட்சி கரமான புதுமைகளைச் செய்தவர். தமது பேச்சால் லட்சக்கணக்கான மக்களை மணிக்கணக்காக ஓர் இடத்தில் அமரச் செய்யும் வகையில் வல்லமை படைத்தவர். நிதி வசூல் செய்யும் அளவிற்குப் பேச்சுக் கலைக்குப் பெருமை தந்தவர்.

தம் பேச்சால் தமிழ் மக்களின் நீண்டகாலத் தூக்கத்தைக் கலைத்தவர். தமிழ்ப் பெரும் மக்களுக்குத் தம் இனிய சொற்களால் வழிகாட்டியவர்.

### எழுத்தின் உருவமாய்

அறிஞர் அண்ணா பேச்சுத்துறையில் எத்தனை சிறந்தவரோ அந்த அளவு எழுத்து துறையிலும் ஈடு இணையற்றவர். அரசியலைச் சுவையாகக் கதைபோல விளக்கும் ஆற்றல் பெற்றவராக இருந்தார். கற்றவர்கள் கூட எளிதாகப் புரிந்துகொள்ள முடியாத செய்திகளைக் கல்லாதவர்களுக்கும் புரிந்துகொள்ளும்படி எழுதும் திறமை மிகுந்தவர்.

### கலையின் உருவமாய்

அறிஞர் அண்ணா கலை உள்ளம் படைத்தவராக இருந்தார். புரட்சிகரமான எழுத்துக்களைப் புகுத்திய நல்ல நாடக ஆசிரியர் திரைப்பட வசனகர்த்தா. இவை மட்டுமல்ல நல்ல நடிகராகவும் சிறந்த ஓவியராகவும் இருந்தார்.

### முடிவுரை

பசுமை எண்ணங்களைப் படர விட்டு மறைந்த மாமேதை அறிஞர் அண்ணா அவர் வாழ்க்கையில் தான் எத்தனை சுவையான சம்பவங்கள் அரிய தகவல்கள் என அவரிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டியவை நிறைய உள்ளன.

# அறிஞர் அண்ணாவின் சொற்பொழிவில் கல்விச் சிந்தனை

**து. பிரகாஷ்**
இளங்கல்வியியல்
தமிழ்ப் பல்கலைக்கழகம்

## முன்னுரை

தமிழக வரலாற்றில் சமூகம், அரசியல், கல்வி மொழி, மற்றும் பலவற்றுக்கெல்லாம் உயிரும் உணர்வும் அளிக்க வந்த தென்னாட்டுக் காந்தி, முடிசூடா மன்னர் சமுதாயத்தைக் காக்க வந்த நடமாடிய வள்ளுவம் அறிஞர் அண்ணா அவர்கள் தமிழுக்கும், தமிழ்நாட்டுக்கும் உயிராலும் உணர்வாலும் தொண்டுகள் பல செய்த அண்ணா அவர்கள் சொற்பொழிவில் தமிழ் பண்பாடும் கல்விச் சிந்தனைப் பற்றி சாறு சுவைப்போம் நாம் சற்று.

## தொல்காப்பியரும் அறிஞர் அண்ணாவும்

"அன்று பார் புகழ்ந்த நாலந்தா பல்கலைக்கழகம்
இன்று காஞ்சிபுரத்திடம்தான் கையேந்தி நின்றது"

உளவியல் முறையில் மாணவர்களுக்கு கல்வி கற்கும் முறையில் சிறந்தது கண், செவி, புலன் மூன்றும் சமஅளவில் பங்கேற்று கற்கும் கல்விமுறை தான் அவன் வாழ்வின் இறுதி வரையிலும் நிலைபெறும் என்பது சிக்மன் ப்ராய்டுவின் கருத்து அதை பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்பு உணர்ந்த தொல்காப்பியர் இயல், இசை, நாடகம், இம்மூன்றின் மூலம் பெறும் கல்வியியல் இயலானது அறிவின் மூலம் பெறும் கல்வி, இசை காதினால் பெறப்படும் கல்வி, இவை இரண்டும் உள்ளடக்கியது நாடகம். எனவே, ஒரு மாணவனிடம் கல்வி எளிமையில் அவன் பெற வேண்டுமானால் சொற்பொழிவினை விட நாடகம் மூலம் அறிவு மிகுதி இதனை உணர்ந்த அறிஞர் அண்ணா,

"ஆயிரம் மேடைச் சொற்பொழிவுகள் மூலம் வலியுறுத்தி சென்றடையும் செய்தியை விட ஒரு நாடகத்தை கண்டுபெறும் அறிவு மிகுதி"

என உணர்ந்த இவர் நாடகத்துறையை வளர்க்க முனைந்தார். அதனால் இவர் நாடகக் கூற்றின் மூலம் சமூகம், பண்பாடு கல்வி, மொழி என்றக் கொள்கைகளை மையமாகக் கொண்டு நாடகங்களை இயற்றினார் என்பது அறிய முடிகிறது.

## அறிஞர் அண்ணாவின் கல்விக் கொள்கை

தாய்மொழி வழிக்கல்வி முறை, சமுதாயச் சீர்திருத்தக் கல்விமுறை, நாடகக் கல்விமுறை (ஒளி ஒலிக் கல்விமுறை), செயல்வழிக் கற்றல் முறை மரபுவழிக் கல்விமுறைகளை வலியுறுத்தி தமிழக உலாவந்த மேடைப் பேச்சுக் கலையரசன், நாட்டின் நாகரீகக் கண்ணாடி, பாமர மக்களின் பல்கலைக்கழகம். உணர்ச்சியைத் தூண்டிவிட்டு உள்ளத்தில் புதைந்து கிடக்கும் அன்பையும், அறிவையும், தூய்மையும் வெளிப்படுத்தி மக்களைப் பண்படுத்தும் மகத்தான கலை. அக்கலையில் சிறந்து விளங்கியவர் இவர் வாழ்நாளில் முழங்கிய மேடைகள், கல்வியின் மேம்பாட்டுத்தரம் மேம்பட பல்துறை அறிவினைப் பெருக்க வேண்டும் என முழங்கியவர்.

## கல்வி உளவியல்

மாணவர்கட்கு ஆசிரியர் பாடம் கற்பிக்கும்போது சொற்களையும் பொருளையும் கோவை போல் அளித்தால் மட்டுமே ஆர்வத்துடன் கவனிப்பர், இந்த நெறியை உணர்ந்த அண்ணா அவர்கள் சமுதாயத்துக்கு எதுகை, மோகை, சந்தம் போன்ற நயத்துடன் கருத்துக்களை மக்களிடம் கூறினார். இவர் இதனாலே "அடுக்கு மொழி அறிஞர் அண்ணா" என்று போற்றப்பட்டவர்,

எ.கா. மாதமோ சித்திரை மணியோ பத்தரை
இன்னும் ஏன் நித்திரை
என்று தூங்கும் மனத்தை சுண்டி எழுப்பியவராவார்.

## தாய்மொழி வழிக்கல்வி

ஒரு மாணவரின் அடிப்படைக் கல்வி தாய்மொழி வழி மூலம் அமைந்தால் தான் அவனுடையக் கல்வி சிறக்கும்

என்றுணர்ந்த அறிஞர் அண்ணா அவர்கள் அந்நியமொழி ஆக்கிரமிப்பால் சமுதாயச் சீர்கேடுகள் கல்வித்தரம் சீர்குலையும் என உணர்ந்து இந்தி மொழி கட்டாயப் பாடமாக்கப்படுவதையும் எதிர்த்து போராட்டங்களில் பங்கேற்று பேசியதால் சிறையிலும் அடைக்கப் பட்டார். அவர் விதைத்த வித்து தமிழுக்கென்று ஒரு தமிழ் பல்கலைக்கழகம் உருவாக வித்தாக அமைந்தது எனலாம்.

## சமுதாயக் கல்விச் சீர்திருத்தம்

"அண்ணாதுரையென்னும் அண்ணல் தமிழ்நாட்டு
வண்ணான் அழுக்கெடுப்பில் வாய்மொழியின்
பண்ணாவான் சிற்பன் எழுத்தோவியத்தில் செல்வரசு,
நாவாயின் அற்புதஞ் சூழ் மாலுமி யென்ற நாடு"

சமுதாயத்தினர் மக்கள் வளர்ச்சிக்கும், அவர்களுடைய உணர்வுகள் மேம்படவேண்டும் என்று உணர்ந்த பெரியார் கோடு போட்டார், மேடைகளில் அறச்சாலைகள் அமைத்தார் அறிஞர் அண்ணா. ஆழ்ந்தக் கருத்துக்களை அழகுபட தந்து சமுதாயத்தில் பெண்களுரிமைகள், மூடநம்பிக்கைகளை எதிர்த்து, வாழ்வியல் நெறிகளை, அடுக்கு மொழியில் இடத்திற்கு ஏற்றார்போல் கருத்துக்களை வலியுறுத்தியவர் ஆவார்.

இவர் பேசும்போது தோழர்களே! என்று எளியமுறையில் தொடங்கிய பின் கருத்துக்களை நுழைத்து விடும் பாங்குடையவர்.

"இவரை அறிஞர் அண்ணா வாழ்நாளெல்லாம் பேச்சை மூச்சாகக் கொண்டு வாழ்ந்தவர்" என்று கூறுகிறார் ஔவை.து.நடராஜன்.

## அறிஞர் அண்ணாக் கண்ட மனித நேயம்

அன்பும் அறமும் பின்னிப் பிணைந்த உணர்வுடைய அறிஞர் அண்ணா அவர்கள் மனித சமுதாயத்திலே, சமத்துவம், சகோதரத்துவம், விடுதலை நிலை வேண்டுமென தன்னுடைய மேடைகளில் முழங்கியவர் அறிஞர் அண்ணா. இவர் பகைவரையும் தன் தோழனாகக் கொண்டவர்.

"மாற்றான் வீட்டுத் தோட்டத்து மல்லிகை
பூவுக்கும் மணம் உண்டென்றார்"

இவர் சிறுகதை (புதினம்) நாவல், கடிதம், சொற்பொழிவு மற்றும் அரசியல் வாழ்வில் தனதுக் கொள்கையாகவும், மூலக் கருவாகவும் கொண்டு வாழ்ந்தவர் இவர்.

"பேசாத நாளெல்லாம் பிறவா நாள் எனக் கருதியவர்"

**கல்வி உளவியல் கொள்கை**

வகுப்பில் நுழைந்தவுடன் காட்டாறு போல் பாடம் நடத்துவதைவிட ஆர்வமூட்டல், அறிமுகம் உத்தி, பாட வளர்ச்சி என்று பாடம் கற்பிக்கும் "ப்ராங்களின் முறை"யை தனது மேடைப் பேச்சில் அமைத்தவர். தோழர்களே! என்று ஆர்வமூட்டி தன் கருத்துக்களை நுழைத்துவிடும் வழக்கம் கொண்டவர் மேற்கோள்களையும், நகைச்சுவை உணர்வுடன், இடத்திற்கும் நிலைமைக்கும் தகுந்தாற்போல் கருத்துக்களைத் தொடுக்கும் திறன் உடையவர். அவரின் மேடைத் தமிழ் வகுப்பறை போல் அமையும் என அகி.மூர்த்தி குறிப்பிடுவது சான்றாகிறது.

**முடிவுரை**

பேச்சால், எழுத்தால் மக்களின் மனதில் நீங்கா இடம் பிடித்தவர், இவரின் சொற்பொழிவோ திறமோ தனிபாணி ஆகும்.

அடுக்கு மொழி அறிஞர் அண்ணா என்ற அடைமொழிக்கு சொந்தக்காரராக விளங்கியவர் இவர் 32 ஆண்டுகால பொதுவாழ்வில் அவர் பேசாத துறையே இல்லை என்று கூறலாம். நாள்தோறும் ஆற்றிய ஆற்றொழுக்கான சொற்பொழிவுகளின் மூலம் எதிர்கால வாழ்விற்கும், கல்விச் சீர்திருத்தத்திற்கும் பெருந்தொண்டாற்றியவர் என்று அவரின் சொற்பொழிவுகள் மூலம் அறியமுடிகிறது.

"வீழ்ந்தது உடலல்ல, விதை இன்றுக் காய்ச்சு
பழமாகி சாறாக நமக்கு தாகம் தணிக்கிறது
மண்ணுக்கும் பெண்ணுக்கும்
பொன்னுக்கும் போர் தொடுப்பார்
போர்களின் வேர்கள்
இவையன்றி வேறென்ன?
மொழிக்காகப் போர் தொடுத்த
முதல் வீரன் நீ அண்ணா!

"வாழ்க அறிஞர் அண்ணா நாமம்"

# அறிஞர் அண்ணாவின் கவிதைகள்

**ஜெ.ப. ஷீலாதேவி**
இளங்கல்வியியல்
தமிழ்ப் பல்கலைக்கழகம்

## முன்னுரை

மொழிப்பற்றும் நாட்டுப்பற்றும் ஊட்டிய 'மனோண்மணியம் சுந்தரம்பிள்ளை', விடுதலை வேட்கையை மீட்டிப் புதுமைக்கருத்து வித்திட்ட 'மகாகவி பாரதி', எங்கள் வாழ்வும்/வளமும் மங்காத எங்கள் தமிழென்று சங்கே முழங்கு என்று முழங்கிய 'புரட்சிகவி பாரதிதாசன்' போன்றோர் போற்றிப் புகழ்ந்த புகழும் பெற்றவர் டாக்டர் பேரறிஞர் அண்ணா.

இவர் எழுதிய கவிதைகள் பற்றிய கருத்தினை பின்வரும் பகுதியில் காணலாம்.

## அறிஞர் அண்ணாவின் கவிதைகள்

கவிதைக் கொள்கைகளை நெஞ்சில் நிறுத்திய அறிஞர் அண்ணா, தன் கவிதையைப் பற்றி அவரே கூறுகிறார்.

"பாடுகிறான் அண்ணன் ஓர்கவிதை என்று
பரிவாலே எண்ணிடாதீர் உடன்பிறந் தாரே!
சீர் அறியேன், அணி அறியேன் சிந்தை வந்தும்
செய்திதனைத் தெரிவித்தேன்; ஆசையாலே"

என்று முப்பத்தைந்து ஆண்டுகள் எழுத்தால் இவ்வையத்தை ஆண்ட அறிஞர் 'பணியுமாம் பெருமை' என்னும் பண்பு நிறைந்த அறிஞர் அண்ணா நான் எழுதுவது கவிதையல்ல கதை ஆக்கிக்கொள்ள என வேண்டுகோள் விடுக்கிறார்.

அனைவரும் ஒன்றே!

"கோட்சே கூட்டம் இன்னும்
கொடி கட்டி ஆளுவதா?
கொலைக்காரன் கும்பலின் கோட்டம்
தரைமட்ட மாக்கோணும்
குலமும் ஒன்னு, கடவுளும் ஒன்னு
என்றே தான் ஓதணும்"

என அனைவரும் ஒன்றே. ஏற்றத்தாழ்வு கிடையாது என்று கூறுகிறார்.

நாட்டின் நிலைமையை,

தங்கம் விளையும் நம்நாட்டினிலே
தரித்திரம் இருப்பதும் எதனாலே...?
தட்டிக் கேட்டிடும் தமிழ்வீரர்
சட்டசபைக்குள் இல்லாமையால்...!

தட்டிக் கேட்டிடும் தமிழ்வீரர்
சட்டசபைக்குச் செல்லாததேன்...?

வெட்டிப் பேச்சு வீணர்கள்தம்
வெறும் பேச்சு வெற்றிபெற்றதனால்...!

வடநாடு வாழ்வதும் எதனாலே...?
தென்னாட்டைச் சுரண்டும் வலியாலே...!

சுரண்டும் வல்லமை எதனாலே...?
சர்க்கார் டில்லியில் இருப்பதாலே...!

தமிழர் உண்மையை அறியாததேன்
தினசரி ஏடுகளின் புரட்டாலே...!

தெளிவைப் பெறுவது எப்போது...?
தேர்தல் பொறுப்பறியும் போது...!

என தமிழரின் நிலையை நயமாக எடுத்துரைக்கிறார்.

முடிவுரை

"அறிவின் உருவம்
அன்பின் சின்னம்
உயர்ந்த எழுத்தாளர்
ஒப்பற்ற நாடகாசிரியர்
சிறந்த கவிதையாளர்
செந்தமிழ்ச் சொல்லாளர்
நல்ல நடிகர்
நலம்தரும் தோழர்
காஞ்சியில் பிறந்தவர்
கன்னித்தமிழ் வளர்த்தவர்
அனைவருக்கும் அண்ணா
அவர் முழுப்பெயர்
அண்ணாதுரை"

அண்ணாதுரையாக பிறந்து மக்கள் மனதில் அண்ணாவாக விளங்குகின்ற அறிஞர் அண்ணாவின் கவிதைகளில் சிலவற்றைப் பார்த்தோம். அவரது கொள்கைப்படி நடப்போமாக!

# மாணவர்களுக்கு அறிஞர் அண்ணாவின் அறிவுரைகள்

**சி. கண்ணன்**
ஆய்வியல் நிறைஞர்
தமிழ்ப் பல்கலைக்கழகம்

## முன்னுரை

பயிரெல்லாம் 'மழைவாழ்க' என்று கூறும்!
மண்ணெல்லாம் 'தமிழ் வாழ்க' என்று கூறும்!
கண்ணெல்லாம் 'இமை வாழ்க' என்று கூறும்
உயிரெல்லாம், எங்கள் உடல் அணுக்களெல்லாம்
உயிர் 'அண்ணா வாழ்க' என்றே உரத்துக் கூறும்.

பேரறிஞர் அண்ணா சிறந்த எழுத்தாளர், பேச்சாளர், சிந்தனையாளர், 'தென்னாட்டின் பெர்னாட்ஷா' என்று அழைக்கப்பட்டவர். பேரறிஞரின் கல்வியியல் சிந்தனைப் பற்றி இனி காண்போம்.

## வீட்டுக்கொரு புத்தகச்சாலை

வீட்டுக்கொரு புத்தகச்சாலை வேண்டும் என்று அறிஞர் அண்ணா 1948ம் ஆண்டு வானொலியில் பேசினார், அப்போது சொல்கிறார் வீடுகளில் மேஜை, நாற்காலி, சோபாக்கள் இருக்கும், பீரோக்கல் இருக்கும், அவைகளில் வெள்ளி தாம்பாளமும், விதவிதமான வட்டில்களும், பன்னீர் செம்பும் இருக்கும், பித்தளைப் பாத்திரங்கள் இருக்கும். உடைகள் சிறு கடையளவு இருக்கும். மருந்து வகைகள் சிறு வைத்தியசாலை அளவுக்கு கூட இருக்கும். அப்படிப்பட்ட வசதியுள்ள வீடுகளிலேயும் கூட புத்தகச்சாலை இராது. இருக்கவேண்டும் என்ற எண்ணம் வருவதே இல்லை. அவசியமும் தோன்றுவதில்லை. வெள்ளி செம்பு சீரங்கத்தில்

வாங்கினோம். தேவர் கல்யாணத்தின்போது, இரத்தின ஜமுக்காளத்தை திருவண்ணாமலை தீபத்தின் போது வாங்கினோம் என்று கூறுகிறார்கள். ஆனால் 10 நல்ல புத்தகங்களை காட்டி இன்ன இடத்தில் இதை வாங்கினோம் என்று கூறமாட்டார்கள். வாழ்க்கையில் அடிப்படைத் தேவைகளுக்கு அடுத்த இடம் அலங்காரப் பொருள்களுக்கு தரப்படும் நிலைமாறி புத்தகசாலைக்கு அந்த இடம் தரப்படவேண்டும். உணவு, உடை, அடிப்படைத் தேவை. அந்த தேவையைப் பூர்த்தி செய்தானதும், ஒவ்வொரு வீட்டிலும் முதல் இடம் புத்தகச்சாலைக்கு தரப்படவேண்டும் என 1948ல் வானொலியில் பேரறிஞர் அண்ணா உரையாற்றினார்.

## குறள்வழி நடக்க வேண்டும்

"உலகந்தோ டொட்ட ஒழுகல் பல கற்றும்
கல்லார் அறிவிலா தார்
என்றார் வள்ளுவர்"

உலகத்தில் பல்வேறுபட்ட குணம் படைத்தவர்கள், மாறுபட்ட பழக்கவழக்கங்களைக் கொண்டவர்கள் வாழ்கிறார்கள். இவர்களோடு ஒத்து நின்று எப்படி வாழ முடியும்? என்று சிலர் வினா எழுப்பலாம். 'உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே' என்று முன்பே வரையறுத்து வைத்திருக்கின்றார்கள். அதற்கு உலகம் நமக்கு தெரிய வேண்டும். கண்ணுக்குத் தெரிந்த உலகத்தைப் புரிந்துகொள்ள நிலவியல், வரலாறு இவ்விரண்டும் துணையாக இருக்கின்றன. உலக அறிவை வளர்க்கவேண்டும். அதில் தெளிவு காணவேண்டும் வள்ளுவரின் வழியில் செல்லவேண்டும் அப்போதுதான் நம்நாடு தலைநிமிர்ந்து தழைத்தோங்கி நிற்கும்.

## மாணவர்களுக்கு அறிவுரை

மாணவர்கள் தங்களுக்குரிய இலக்கணத்துடன் திகழ வேண்டும். நாம்பழம் பெருமை வாய்ந்தவர்கள். இலக்கியத்தின் பேழை, பண்பாட்டுச் சோலை என்று போற்றப்படுவார்கள் இன்று கல்வி நிலையில் பின்தங்கி இருக்கிறோம். 5 வயது சிறுவன் பள்ளியில் சேர்ந்து ஆறு ஆண்டுகள் படிக்கிறான். பிறகு அத்துடன் தன் படிப்பை முடித்துவிட்டு வேலைக்குச் சென்றுவிடுகிறான். இதனால் என்ன பயன் ஒரு மரம் வளர்ந்து, பூத்து, கனி கொடுத்தால்

தான் அது பயனுடையதாக இருக்கும் அம்மரம் தளிர், பூ முதலியவற்றோடு கீழே சாய்க்கப்பட்டு விறகாகப் பயன்படுத்தப் பட்டால் அம்மரத்தினால் பயன் ஏதும் கிடையாது. ஆகையால் மாணவர்கள் நன்றாக கற்கவேண்டும் என்று பேரறிஞர் அண்ணா அறிவுறுத்தினார்.

## முடிவுரை

அறிஞர் அண்ணா ஓர் பல்கலைக்கழகம், உலகத் தலைவர்கள் அனைவரோடும் ஒப்பிட்டு பேசக்கூடியவர். அவருடைய சிந்தனைகள் அனைவராலும் போற்றக்கூடியது என்று சொன்னால் மிகையாகாது.

# அறிஞர் அண்ணாவின் கல்விச் சிந்தனை

செ. உத்திராபதி
இளங்கல்வியியல்
தமிழ்ப் பல்கலைக்கழகம்

## முன்னுரை

ஒட்டு மொத்தப் பின் தங்கிய தமிழினத்தை தம்படைப்பாலும், போராட்டத்தாலும் ஆட்சித் திறத்தாலும் சீர் தூக்கிய நிலைக்கு நடத்திச் சென்ற தன்னிகரில்லாப் பணிக்குரியவர் அறிஞர் அண்ணா.

"யாதானும் நாடாமல் ஊராமல் என்னொருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு" குறள் – 397

என்னும் வள்ளுவன் விடுத்த வினாவிற்கானத் தீர்வை தீர்க்கமாகப் புரிந்து கொண்டார். அறிஞர் அண்ணா பதினான்கு துறைகளில் வல்லவரானவர். கல்வியில் தனக்கென புதிய அனுகுமுறையையும், செயல்பாடுகளையும் வகுத்து நீட்சி பெறச் செய்தலமையை காணலாம்.

## அண்ணாவின் இந்தி எதிர்ப்பு

கல்வியும், மொழியும் கால ஓட்டத்தின் இரட்டைச் சக்கர வண்டி என்பதை அறிஞர் அண்ணா தெளிவாக உணர்த்திருந்தார். இந்தி ஆட்சிப்புலத்திலும் , கல்விப்புலத்திலும் நுழைவது தாய் மொழி செழிப்பின்மையாகிவிடும், என்பதால் இந்தி எதிர்ப்பு உண்டாயிற்று. ஆதலால், 1938,48,63 ஆகிய ஆண்டுகளில் சிறைச் சென்றார் .

ஒருவர் தம் தாய் மொழியில் கற்றலே உணர்தலுக்கு உட்படும் என்ற கல்வியின் உள்ளார்ந்த எண்ணத்தை உணர்ந்திருந்தார். தாய் மொழில் கற்றலே முதிர்ச்சி பெற்ற அறிவின் வளர்ச்சியை முழுமையாகப் பெற முடியும் என அறிந்தார். மேலும் இந்தியைப் பற்றி தனது நாடாளுமன்ற உரையில்

வாஜ்பேயிடம், இந்தியில் முப்பது நாட்களுக்கு மேல் கற்றுக் கொள்ள என்ன இருக்கிறது, என்று வினவியது சரியாக்கப்பட்டது.

## குலக்கல்வித்திட்டம்

1953 சூலை 15 இல் பேராயக்கட்சி குலக்கல்வித்திட்ட திணிப்பை கொண்டு வந்தது. அறிஞர் அண்ணா தம் தம்பி மார்களுடன் போராட்டத்தில் ஈடுபட்டார். அதனால் அவர் பேராயக்கட்சியினரால் சிறையில் அடைக்கப்பட்டார். தாழ்த்தப்பட்ட மிகவும் பிற்படுத்தப்பட்ட சீர்மரபினர்களை ஒடுக்குவதாக இருந்த இத்திட்டத்தை அறிஞர் அண்ணா தம் கூரிய அறிவால் தகர்த்தெரிந்தார். அதனால் கல்வியில் புரட்சிக் கண்ட கோமானாக அறிஞர் அண்ணா திகழ்ந்தார்.

## படைப்புகள்

அறிஞர் அண்ணாவின் முதல் கட்டுரையே மகளிர் முன்னேற்றம் என்பதாகும். பார்ஹி பி.ஏ, என்ற படைப்பிற்கு பெயர் வைத்திருந்ததை நோக்கும் போது பெண்களும் பட்டம் பெற வேண்டும் என்ற அவா இருந்திருப்பதை அறியலாம். இருபத்தொன்பது புனைப்பெயர்களில் அவரின் படைப்புகள் வெளி வந்துள்ளது. இராமாயணம் எரிக்கப்பட வேண்டியது, என ரா.பி. சேதுபிள்ளை, ச.சோமசுந்தர பாரதியார் ஆகியோருடன் சொற்போர் நடத்தி திகைக்க வைத்த அறிஞர் அண்ணாவின் நுண்ணறிவு போற்றத்தக்கதாகும்.

அறிஞர் அண்ணா எழுதிய நாடகங்கள், வரைந்த திரை ஓவியங்கள், தீட்டிய உரைகள், நாடறிந்த நாடாளுமன்ற உரைகள், நடத்திய இதழ்கள் என படைப்புகள் யாவும் கல்விச் சிந்தனை குன்றாதிருப்பவை என்பதைப் புலப்படுத்துகின்றன.

## ஆட்சித் திறம்

அறிஞர் அண்ணாவின் ஆட்சிப்பீடம் மார்ச் 6 –1967 இல் அமைந்தது. அவரின் முதல் நிதி நிலை அறிக்கையின் கல்லூரி புதுமுகவகுப்பு வரை இலவசக்கல்விக்கான ஏற்பாட்டினைச் செய்தார்.

காந்தியடிகள் இறக்கும் ஒருநாள் முன்னர் ஊதியமின்றி சேவை செய்யும் லோக் சேவக் சங்கம் என்பதினை கருத்தில் கொண்டு சீரணித் திட்டம் கொண்டு வந்தார். அதன் பொருட்டு ஆகஸ்ட் 18 இல் முதியோர்க்கல்விக்கு

அடித்தளமிட்டார். தம் ஆட்சியில் தமிழ்க்கல்விக்கு முக்கியத்துவம் அளித்துள்ளார். மும்மொழித்திட்டத்தை எதிர்த்த அண்ணா 1968 – இல் இரண்டாம் உலகத்தமிழ்நாடு நடத்தினார். அதனால் அகத்திணையும், புறத்திணையும் சிறப்பித்த தமிழ்ச் சான்றோர் 10 பேருக்கு சிலை அமைத்தார். நடத்தினார். அதனால் அகத்திணையும், புறத்திணையும் சிறப்பித்த தமிழ்ச் சான்றோர் 10 பேருக்கு சிலை அமைத்தார்.

அறிஞர் அண்ணா அமெரிக்காவின் யேல் பல்கலைக்கழகத்தின் மாணவர்கள் கலந்துரை நிகழ்ச்சிக்குச் சென்றார். அங்கு அவர் மாணவர்களின் கேள்விக்கு சிந்தனை மிகுந்த பதிலளித்தார். ஆதலால் வெல்லோஷிப் பட்டம் பெற்ற முதல் அயல்நாட்டவர் என்ற பேற்றினை அறிஞர் அண்ணா பெற்றார்.

முடிவுரை

எதிர்காலத்தில் தமிழ்மொழி அழிந்து சிதைந்து போகுமோ என்று சஞ்சல மடைந்து வந்தேன். அதைக் காப்பாற்ற இதோ அண்ணாதுரை வந்துவிட்டார். இனி நான் அமைதியோடு சாவேன், என தமிழ்ப் பெரியர் திரு.வி.க செப்புகின்றார். இங்கு தமிழ் மொழி என்று தமிழ்க்கல்வியை ஒக்கும். சாமானியனுக்கும் கல்வி சென்றடைய வேண்டும் என்பதற்கு அறிஞர் அண்ணாவின் கல்விச் சிந்தனை அடித்தளமிட்டது என்பதை எவராலும் மறுக்க முடியாது.

# அறிஞர் அண்ணாவின் கல்விச் சிந்தனைகள்

பெ. ராஜேந்திரன்
தமிழ்ப் பல்கலைக்கழகம்

## முன்னுரை

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற பொன்மொழியின் சொந்தகாரர், தமிழ் அவரது உயிர் மூச்சு இருபத்தி நாலு மணிநேரமும் தமிழ், தமிழர், தமிழகம் என்றே சிந்திப்பவர், தமது நாட்டுக்கும், மக்களுக்கும், மொழிக்கும் தம்மை முழுமையாக அர்பணித்து கொண்டவர். இவர் சிறந்த பண்பாளர், அரசியல் தலைவர், சமூக சிந்தனையாளர், எழுத்தாளர், பேச்சாளர் அறிஞர், நாடகக் கலையை வளர்த்தவர் என்று அநேக பரிமானங்கள் உண்டு இவருக்கு. காலத்தைவென்று நிற்கும் அந்த மாமனிதர் தான் - அறிஞர் அண்ணா.

## பிறப்பும், வளர்ப்பும்

கோயில் நகரம் என்று போற்றப்படும் காஞ்சிபுரத்தில், திருவாளர் நடராசன், திருமதி.பங்காரு அம்மாள், இருவருக்கும் 1909 ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 15ம் நாளில் பகுத்தறிவு பாசறையின் தலைவனான அண்ணா பிறந்தார். கோடான கோடி தமிழர்களால் அண்ணா என்றழைக்கப்படும் மாமனிதர் உருவத்தில் குறுமுனி அகத்தியர், இதயத்தில் இமயம் . எளிய குடும்பத்தில் பிறந்து பின்னாளில் ஏற்றம் பெற்றாலும் என்றென்றும் எளிமையாகவே வாழ்ந்தவர் அவர்.

## கல்வி

காஞ்சிபுரத்திலுள்ள பச்சையப்பன் தொடக்கப்பள்ளியில் இறுதி வகுப்பு வரை பயின்றார். பின்னர் சென்னை பச்சையப்பன் கல்லூரியில் 1928 ம் ஆண்டு இடைநிலை (Intermediate) வகுப்பில் சேர்ந்து முதல் மாணவனாக வெற்றி பெற்றவர். பொருளாதார நெருக்கடியால் மேற்படிப்பை தொடர முடியாத நிலைமை ஏற்பட்டது. இவரது வறுமையை அறிந்த அன்றைய பச்சையப்பன் கல்லூரி முதல்வர்

திருவாளர் சின்னத்தம்பி, பிற்படுத்தப்பட்டோருக்கான சலுகைகளை பெற்று கொடுத்து படிப்பை மேலும் தொடரச் செய்தார். முதல்வரது உதவியால் பொருளியல் துறையில் கலை முதல்வர் (B.A.Hons) பட்டம் பெற்றார் .

## எழுத்துலகப்பணி

1931 ம் ஆண்டு தமிழரசு என்ற பத்திரிகையில் "மகளிர் கோட்டம்" என்ற கட்டுரை எழுதினார். "கம்பன் வீட்டு கட்டுத்தறிம் கவி பாடும் " என்பது போல அறிஞர் அண்ணாவின் தேனினும் இனிய தீந்தமிழ்ச் சுவை கேட்பவரின் மனதைக் கொள்ளை கொள்ளும் அளவிற்கு கவிதை நயமும், கனிரசம் கொட்டும் இனிமையும் தவழும் அவரது தமிழ்பேச்சு அவரது ஆங்கில கட்டுரைகளில் சிறந்த கற்பனை வளமும், நடை அழகும் , கருத்துச் செறிவும், எதுகை மோனையும் போட்டி போட்டுக் கொண்டு விளையாடும்.

## அண்ணாவின் பண்பு

- தவறு கண்ட இடத்திலேயே தட்டி கேட்கும் பண்பு கொண்டவர் .
- தமக்கு சரியென்று பட்டதை செய்ய ஒரு போதும் தயங்கியதில்லை .
- உண்டு களித்து உறங்குவதே வாழ்க்கையில்லை . ஓயாமல் உழைப்பதே வாழ்க்கை என்று கூறியவர் .
- வாழ்க்கை நெறிக்கும் , மனிதனின் பகுத்தறிவுக்கும் உதவாத காவியமென நினைக்கும் பொருந்தாத நூல்களை எரிக்க நினைத்தவர் .

## அறிஞர் அண்ணாவின் தமிழ்த் தொண்டு

- உலக மறைகள் அனைத்தையும் , தத்துவங்களையும் தன்னுள் கொண்ட திருக்குறளின் ஆராய்ச்சியை செய்யும் மாணவர்களுக்கு நிதியுதவி அளித்தவர்.
- அரசு பேருந்துகளில் திருவள்ளுவரின் உருவபடத்தையும் , திருக்குறளையும் இடம் பெற செய்தவர் .
- பல்கலைக் கழகங்களில் கலைக்கண்காட்சிகளும் , கருத்தரங்குகளும் நடத்தப்பட்டன.

- இந்தியா முழுவதும் தமிழ் மொழியை தழைக்க வேண்டுமென்பதற்காக இந்திய பல்கலைக்கழகங்களில் தமிழ் ஆராய்ச்சி செய்வதற்காக தமிழக அரசு நிதியுதவி அளித்தது.

## கல்வி பணியில் அறிஞர் அண்ணாவின் சாதனைகள்

- மதிய உணவுத் திட்டம் : பள்ளிகளில் மதிய உணவுத் திட்டத்தை அமுல்படுத்திய பெருமை காமராசரையே சேரும். அறிஞர் அண்ணா அத்திட்டத்தினை மேலும் விரிவுபடுத்தினார் .
- ஏழை மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்துவதற்காக கல்வி உதவித் தொகையும் , புத்தகங்களும் , சீருடைகளும் அளிக்கப்பட்டன.
- பார்வையற்ற மாணவர்களுக்காக பிரெயில் முறையில் புத்தகங்களை தயாரிக்க தனியாக அச்சகம் ஒன்றை ஏற்படுத்தியவர்.
- கல்லூரிகளில் தமிழ் வழிக்கல்வியை அறிமுகப்படுத்தியவர் .

## பேரறிஞரின் மணிமொழிகள்

- "படிப்பே இல்லாமல் திறமை பெற முடியாது" . அப்படியாராவது பெற்றிருந்தால் அதனை விதிவிலக்காக கொள்ள வேண்டும் . ஆனால் படித்ததினால் ஒருவருடையதிறமை போய்விட்டது என்று யாரும் சொல்லமாட்டார்கள் .
- "கட்டடத்திற்கு செங்கல் போல "வாழ்வின் முன்னேற்றத்திற்குப் படிப்பு தேவை, திறமையும் , முயற்சியும் தேவை .
- பொதுக்கூட்டத்தில் நிகழ்காலத்தைக் காண்கிறோம் என்றால் பள்ளியில் வருங்காலத்தை ஓரளவு காணலாம்.
- "வளர்கின்ற சமுதாயத்திற்கேற்ப"கல்விமுறை அமைய வேண்டும் என்பதை மறுக்க முடியாது .
- மாணவர்கள் கல்வி பெறுவது மக்கள் நிம்மதியாய் வாழவும் , அவர்களுடைய பிற்காலச் சந்ததியினரின் வளமான வாழ்வுக்கு வழிவகை செய்யவுந்தான் .
- மாணவர்கள் "வைரங்களாய்" இருக்க வேண்டும் . மண்ணின் அடியாழத்தில் இருக்கும் வைரத்திற்குத் தான் மதிப்பு . சுண்ணாம்புக்கல், நிலக்கரி , பெட்ரோல்

இவை மண்ணிலிருந்து தோண்டி எடுக்கப்பட்டாலும் வெகு ஆழத்தில் புதைந்து கிடக்கும். வைரத்திற்கே மதிப்பு அதிகம் . மாணவ பருவத்தை அழுத்தி வைத்து இளைஞர்கள் வைரமாய்த் திகழ வேண்டும் .

- ❖ நீங்கள் கல்வி பெறுவது உங்களுக்கு மட்டுமல்ல இந்த சமுதாயத்திற்காகவும் என்பதை உணர்ந்து செயல்படுங்கள் .

- ❖ தம்மிடத்தில் படித்த மாணவர்கள் உயர்வதில் தான் ஆசிரியர் தொழிலின் சிறப்பு அறியத்தக்கதாகிறது . ஆசிரியப்பணி "கைம்மாறு கருதாத தியாகப் பணி" .

- ❖ கல்வியை எதற்காகக் கற்கிறோம் ? பகுத்தறிவு பெற , புதிய பொருளைக்காணவே கற்கிறோம் . மதச்சார்புள்ள அரசாங்கம் கல்வி நிலையங்களை ஏற்படுத்தினால் அங்கே மனிதனின் சிந்தனைச் சக்திக்கு இடம் இருக்காது .

## முடிவுரை

எளிய குடும்பத்தில் பிறந்து ஏற்றம் பெற்றாலும் இறுதிவரை எளிமையாக வாழ்ந்து காட்டினார் . 1968 ல் புற்று நோயால் பாதிக்கப்பட்டு அறுவை சிகிச்சை செய்து கொண்டார் . அயராது தமிழுக்காகவும் , தமிழ் நாட்டுக்காகவும் ஓய்வில்லாமல் உழைத்தால் 1969 ம் ஆண்டு ஜனவரி மாதம் அடையாறு புற்று நோய் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார் .

வாழ்வில் கொஞ்சம் கொஞ்சமாக போராடி புகழின் உச்சத்துக்கு வந்தவர் அறிஞர் அண்ணா. அதே போல் சிறிது சிறிதாக உடல் நலம் தேறி வந்து விட மாட்டாரா ? என்று ஏங்கிய மக்களையெல்லாம் ஏமாற்றி விட்டார் . காலத்தை வென்ற அந்த மாமனிதனின் பொன் மொழிகள் வைரங்களாய் நம் இதயங்களில் . . . .

# அறிஞர் அண்ணா கவிதையில் மொழிக் கல்வியின் ஆளுமை

**ந. லாவண்யா**
விரிவுரையாளர்
ஏ.டி.எம். மகளிர் கல்லூரி

மற்றவர்களெல்லாம் மண்ணுக்கும் பெண்ணுக்கும், பொன்னுக்கும் போர் தொடுப்பார்கள். போர்கள் தான் வேர்கள் என்று உரைப்பார்கள். ஆனால் அண்ணாவோ மொழிக் கல்விக்காக போர் தொடுத்த முதல் வீரன் அண்ணா. இத்தகைய புதுப்போரை எந்தச் சரித்திரமும் இதுவரைக் கண்டதில்லை.

## மொழி சமூகத்தின் முகவரி

மொழி என்பது வெறும் காகிதத்தின் முகத்தில் எழுதும் வரி அல்ல அது ஒரு சமூகத்தின் முகவரி என்று உரைத்தார். மொழி என்பது வெறும் சப்தக் காற்று அல்ல, அது ஒரு பண்பாட்டின் மூச்சு என்றுரைத்தார். மொழி என்பது வெறும் அர்த்தங்களின் ஆடை அல்ல, அது ஓர் இனத்தின் மான ஆடை என்றுரைத்தார்.

## தாய்மொழி தாயின் ரத்தம்

விழியிழந்தவன் காட்சியைத்தான் இழக்கின்றான். வழியிழந்தவன் வீட்டைத்தான் இழக்கின்றான், மொழி இழந்தவனோ தன் முகத்தையே இழந்து விடுகின்றான் என்று கவிதையில் கனல் அறிஞர் காற்றாக வீசுகிறார் அண்ணா. தாய்மொழி என்பது வெறும் சத்தமல்ல அது ஒரு சத்த வடிவான தாயின் ரத்தம் என்று உருக்கமாக உரைத்தவர் அறிஞர் அண்ணா. என் மொழி எனக்கிருக்க உன் மொழியால் பேசு, என உரைத்தவர்தான் அண்ணா, மேலும் கவிதையில் உரைக்கும் போது உனக்கு தெரியாதா மொழி என்பது விழி என்று உன் விழியால் நான் எப்படிப்பார்க்க முடியும் என்றுரைப்பார்.

## செப்பு மொழிதான் தமிழ்

செப்பு மொழி பதினெட்டுடையாள் எனில் சிந்தனை ஒன்றுடையாள் என்ற பாரதி பாட்டை செப்பு மொழி ஒன்றுடையாள் என்று நீ திருத்தினால் சிந்தனை பலவுடையாள் என்று நம்மை திருத்திக் கொள்ள வாய்ப்பளித்த வல்லவர் அறிஞர் அண்ணா. தேசிய மொழி என்பதென்ன? என்ற கேள்வியை கேட்டு தேசிய விலங்குதானே! என்று சிந்தனையை எழுப்பிய எழுச்சி நாயகன் தான் அறிஞர் அண்ணா. வெள்ளையனிடமிருந்து விடுதலை பெற்றது உன்னிடம் அடிமை ஆகவா? என்று நெருப்புக் குரலில் கேட்டவர் அண்ணா.

## அறிஞர் அண்ணாவே பாட சாலை

அன்று அகரமாய் நின்றவனின் ஆணையை ஏற்றுப் போர்களம் நோக்கிப் புறப்பட்ட மறவர்களின் புகழ்மிக்க வரலாற்றின் பொன்னெழுத்துக்கள் தான் அறிஞர் அண்ணா. அன்று அண்ணா பாடசாலைகளை விட்டு வெளியே வந்தார். அப்போது தான் அண்ணா ஒரு பாடம் ஆனார். அந்த யுத்தத்தில் அறிஞர் அண்ணா ரத்தத்தை சொரிந்தார். அப்போது தான் வாடிய தமிழ் பயிருக்கு பாசனம் கிடைத்ததை மறுக்க இயலாது. அன்று சிறையில் அடைபட்டார் அண்ணா. அப்போது தான் சுதந்திரம் உங்களுக்கு சுயம் வர மாலை சூட்டியது அப்பொழுது.

அறிஞர் அண்ணா இழந்து விழுந்தார். அப்போது தான் நீங்கள் உயிர்பெற்றழுந்தார் என்பது மறுக்க முடியாத உண்மை. அன்று தேகங்களையே திரிகளாக்கி தீபங்களாக எரித்தவர் அண்ணா, அப்போது தான் தமிழன்னை ஆலயத்தில் தீபாராதனை நடந்தது. மெழுகுத் திரி கூட எரியும்போது கண்ணீர் வடிக்கும் நீங்களோ சிரித்துக் கொண்டல்லவா எரிந்தீர்கள்.

## தமிழின் இமைகள்

தமிழின் இமைகளே உங்களை என் கண்ணீரால் கௌரவிக்கிறேன் என்று எழுச்சியுடன் அறிஞர் அண்ணாவின் மொழிக் கல்வி உணர்வை இதன் மூலம் உணர முடிகிறது.

அது ஓர் இளவேனிற் காலம் உன் "கைக்கிளைகளில் காதல் மலர்களின் பூப்பு. அண்ணா எழுதுகோல் தலை குனியும் போதெல்லாம் தமிழ் தலைநிமிர்ந்தது. அறிஞர் அண்ணாவின் பேரை மகுடம் கழற்றும் போதெல்லாம் தமிழ் மகுடம் தரித்தது. நாம் வெறும் கடித உரைகளாய் இருந்தோம் உன் எழுதுகோல் தான் எங்கள் மீது முகவரியை எழுதியது. உன் விரல்கள் வெளிச்சம் தூவிய மெழுகுத் திரிகள்.

இயேசுவின் விரல் பட்டதும் தண்ணீர் திராட்சை ரசமானது. ஆனால் உன் விரல் பட்டதும் சாக்கடை அரசியல் சந்தனமானது.

நாங்கள் துளைக்கப்பட்ட மூங்கிலாய் இருந்தோம். உன் விரல்களோ எங்கள் காயங்களிலிருந்தே கானங்கள் இசைத்தன. உன் எழுதுகோல் எழுதுகோல் அல்ல. அது ஊன்றுகோல். அதனால் தன்மானப் பாதையில் தடுமாறாமல் நடந்து சென்றோம் நாங்கள். உன் எழுதுகோல் எழுதுகோல் அல்ல திறவுகோல் அதனால் எங்கள் இருட்டுச் சிறைக்கதவு உன் மொழி கவிக் கல்வியால் திறக்கப்பட்டது. என் எழுதுகோல் எழுதுகோல் அல்ல. அது மந்திரக்கோல், அதனால் எங்கள் கண்ணீர் வேர்வையால் மாறியது. உன் வாக்கியங்கள் எங்கள் வயல்களுக்காக ஓடி வந்த நதிகள். உன் பேனாவின் அடிச்சுவட்டில் எங்கள இதயங்கள் நடந்தன. தாய்மொழிக் கல்வி காக்க வந்த காவலனே இன்னும் என் மூச்சில் நான் வாழுகிறேன். வாழ்க அறிஞர் அண்ணா.

## மேற்கோள் நூல்கள்


1. அண்ணா தம்பிக்கு எழுதிய கடித நூல்
2. அண்ணாவின் கவிதை தொகுப்பு நூல்
3. அண்ணாவைப் பற்றிய கலைஞர் சொற்பொழிவு
4. கூரியர் மெயில் (International Journal)

# அறிஞர் அண்ணாவின் கல்விச் சிந்தனைகள்

**க. கண்ணகி**
இளங்கல்வியியல்
தமிழ்ப் பல்கலைக்கழகம்

வாழ்க தமிழ்! வளர்க தமிழகம்!

தமிழாய்ந்த தமிழன்! தமிழ்ப் பேரறிஞன்! செயலாக்கச் சிந்தனையாளன்! நலிந்தோர்க்கெல்லாம் நன்மை பெயர்த்திடும் உறுதுணைவன்! அனைவருக்கும் அவனே அண்ணா!

- தன்னிடத்திலே படித்த மாணவர்கள் உயர்வதிலேதான் ஆசிரியர் தொழிலின் சிறப்பு மேலிடுகிறது; "ஆசிரியர்களின் பணி கைமாறு கருதாத தியாகப் பணியாகும்" என்று அறிஞர் அண்ணா அவர்கள் ஆசிரியர் பணிக்கு இலக்கணம் கூறியுள்ளார்.
- மேலும் மாணவர்களுக்கு பின்வருமாறு அறிவுரைகளைக் கூறியுள்ளார். படிப்பே இல்லாமல் திறமைபெற முடியாது. அப்படி யாராவது இருந்தால் விதிவிலக்காக ஓரிருவர் இருக்கலாம். ஆனால் படித்ததினால் திறமை போய்விட்டது என யாரும் சொல்லமாட்டார்கள் என்று படிப்பின் அவசியத்தை மாணவர்களுக்கு உணர்த்தியுள்ளார்.
- "கட்டிடத்திற்கு செங்கல் போல" வாழ்க்கை முன்னேற்றத்திற்குப் படிப்புத் தேவை, முதிர்ச்சி தேவை, திறமை தேவை.

சமுதாயத்தை உயர்த்துவதற்குத்தான் கல்வி என்பதை ஒவ்வொருவரும் உணர வேண்டும். மனிதனுக்கு இருக்கிற

காலம் மிகவும் குறைவு இந்த குறைந்த காலத்திற்குள் இதைத்தான் செய்ய வேண்டும்-அதை இப்படிச் செய்ய வேண்டும் என்பதை எளியவர்க்கும் விளங்கும்படிச் செய்வது மாணவர்களின் கடமை ஆகும். "கறக்க வேண்டிய இடத்தில் முறைப்படி கறந்தால்தான் பால் கிடைக்கும்" அதனால் பயன் கிடைக்கும் என்று படிப்பின் அவசியத்தை அண்ணா மேற்கோளிட்டு காட்டியுள்ளார். மேலும் கற்றவர்களுக்கு மொழியின் அவசியத்தை பின்வருமாறு விளக்கியுள்ளார். "மொழி எண்ணுவதை எடுத்துரைக்கும் கருவி மட்டுமல்ல; எண்ணத்தை உருவாக்கும் கருவியும் கூட" என்று மொழியின் அவசியத்தை கூறியுள்ளார். தமிழுக்கு இயற்கையிலேயே மணம் உண்டு, ஆனால் வேற்றுமொழிச் சொற்களை கலந்தால்தான் தமிழுக்கு இனிமை கூடும் என்றனர் சிலர். இதைக்கேட்ட அண்ணா தமிழுக்கு செயற்கை அழகு தேவையில்லை இயற்கை அழகே அதிகம் இருக்கிறது என்பதையும் அழகு தமிழிலே எடுத்துரைத்தார்.

- மேலும் தமிழில் உள்ள திருக்குறள் போன்ற நூல்களையும் கவிஞர்களையும் பாராட்டுவதில் வல்லவர். திருக்குறளை பின்வருமாறு பாராட்டுகின்றார். ரஷ்யாவோடு நாம் போர்க்கருவிகளிலே போட்டியிட முடியாது. விஞ்ஞான வளர்ச்சியிலே போட்டியிட முடியாது. ஆனால் இலக்கியத்திலே போட்டியிடலாம் அப்படிப்பட்ட இலக்கியச் செல்வம் நம்மிடத்திலே உள்ளது. அதில் தலையாயச் செல்வம் திருக்குறள் அதன் வழி மாணவர்கள் எல்லோரும் நடக்கும்படி கூறியுள்ளார்.

- குழந்தை இல்லாதவர்களைப் பார்த்து அவர்களின் சொத்தை அரசாங்கத்திடம் ஒப்படைக்க வேண்டும். அதன் மூலம் வரும் வருவாயை ஒரு கலாசாலை அமைக்கவும் நல்ல விஞ்ஞான முறையை ஏற்படுத்தவும் பயன்படுத்தலாம் என்று கல்வியின் தேவையை மக்களுக்கு கூறியுள்ளார். மேலும் மாணவர்களை பார்த்து "நிலத்தின் கீழே தோண்டினால் கிளிஞ்சல்கள் இருக்கும், சுண்ணாம்பு இருக்கும். அதற்கும் கீழே தோண்டினால் பெட்ரோல் கிடைக்கும்-அதற்கும் கீழே தோண்டினால் அழுத்தி வைக்கப்பட்டிருக்கும் வைரம் கிடைக்கும் அதைப்போல மாணவ

பருவத்தை வைரமாக அழுத்தி வைத்திருங்கள்" என்று கூறியுள்ளார்.

- நீங்கள் பெறுகின்ற கல்வி " மாணவர்களே! உங்களுக்காக மட்டுமல்ல சமுதாயத்திற்காக கல்வி பெறுகின்றீர்கள் அதை உணர்ந்து செயல்படுங்கள்"! என்று கூறியுள்ளார்.

- பொதுக்கூட்டத்தில் நிகழ்காலத்தை காணலாம் எனில் பள்ளிக்கூடத்தில் வருங்காலத்தை ஓரளவு காணமுடியும் அதன் மூலம் பயன் கிடைக்கும் என்று எதிர்பார்ப்பது இயற்கை என்று மேற்கோளிட்டு கூறுகிறார்.

- மேலும் பல்கலைக்கழகங்கள் செயலாக்கச் சிந்தனை உள்ள மாணவர்களை உருவாக்கித்தர வேண்டும்-சாதி, மதங்கள் காணாத சமுதாய மறுமலர்ச்சியின் தூதுவர்களாக பட்டதாரிகள் அனைவரும் உதவுமாறு அவர்களை உருவாக்க வேண்டும் என்று பல்கலைகழகங்களுக்கு அறிவுரைக் கூறியுள்ளார்.

- " பழையன கழிவதும் புதியன புகுதலும் வழுவல கால வகையினானே" என்ற கருத்திற்கு இணங்க மாணவர்கள் பக்தி நூல்களை படிப்பதை விட்டுவிட்டு விஞ்ஞானமும் புதுமை கருத்துக்களுடன் கூடிய நல்ல நூல்களையும் படித்து சமூகப் பணிக்கு தங்களை அற்பணிக்க வேண்டும் என்று மாணவர்களின் கடமையை கூறியுள்ளார். மாணவர்கள் அறிவும் ஆற்றலும் சிந்தனைச் சிறப்பும் எண்ணத் தெளிவும் பல்கலைக்கழகப் பட்டத்துடன் நின்று விடாமல், அதற்கு அப்பால் மாணவர்களிடம் தொடர வேண்டும் என்றும் வீட்டுக்கொரு புத்தக சாலையை நிறுவ வேண்டும் என்று சிந்தனைகளை மாணவர்களுக்குக் கூறியுள்ளார்.

- மேலும் அவர்களை தமிழ் நூலான புறநானூற்றில் கூறியுள்ள கருத்துக்களை பின்பற்றும்படி வற்புறுத்துகிறார். இதையே "கடமை! கண்ணியம்! கட்டுப்பாடு!" என்ற தாரக மந்திரத்துடன் சிந்தியுங்கள்! செயல்படுங்கள்! என்று கட்டளையிடுகிறார்.

அறிஞர் அண்ணா வழியில் நடப்போமாக!

# பேரறிஞர் அண்ணாவும் தாய்மொழி சிந்தனையும்

**த. சிவக்குமார்**
அரவியல் நிறைஞர்
தமிழ்ப் பல்கலைக்கழகம்

## முன்னுரை

தமிழகம் ஈன்றெடுத்த சிந்தனையாளர்கள் எண்ணற்றோர். அவர்களில் பேரறிஞர் அண்ணாவின் சமூகப் பொருளாதார சிந்தனைகள் தன்னிகர் அற்றவை. அவரது கருத்தும் எழுத்தும் தலைசிறந்தவை; இலக்கியமாகவும், கருத்துப்பெட்டகமாகவும், கற்பனை வளம் கொழிப்பதாகவும், புரட்சிப் பொறிபறக்கும் உலைக்களனாகவும், பகுத்தறிவுப் பாசறையாகவும், சமூகசீர்திருத்த வளாகமாகவும் பன்முகப் பார்வைக் கொண்டவை.

சமூகச் சீர்திருத்தம் என்ற கருத்தியல் தாக்கத்தோடு நின்றுவிடாது அரசியல்வாதி என்ற செயல்முறைத்தாக்கமும் அவரது கருத்தின் பரிமாணமாகத் திகழ்ந்தது. அவ்வப்போது தோன்றி மறையும் விண்கற்கள் போன்றவையல்ல. அவரது கருத்தும் சிந்தனையும்; எந்நாளும் நிலைத்து நிற்கும் துருவவிண்மீன் போன்றவை அவை. உலகம் அடுத்த தேர்தலைப்பற்றி சிந்திக்கும் எண்ணற்ற அரசியல்வாதிகளைக் கண்டு உள்ளது. ஆனால் அண்ணா போன்று அடுத்தடுத்தத் தலைமுறைகளைப் பற்றி சிந்தித்த அரசியல் விற்பன்னர்கள் (Statesmen) ஒரு சிலரே. நடமாடும் பல்கலைக்கழகமாய் திகழ்ந்த அறிஞர் அண்ணாவின் கல்வியல் சிந்தனைகளை ஈண்டு காண்போம்.

## கல்வியின் நோக்கங்கள்

கல்வி எதனைத் தர வேண்டும் என்ற கேள்விக்கு விடைகள் எண்ணற்றவை. அறிஞர் அண்ணாவின் கருத்து என்ன?

தோற்றம், எண்ணம், செயலில் அமைதி; அமைதியின் வழியே ஆர்வம், ஆர்வத்தின் வழியே மக்களுக்கு வழிகாட்டுதல் இவையே கல்வியின் நோக்கம் என்று 12.08.68-இல் தான்பயின்ற பச்சையப்பன் கல்லூரியில் டாக்டர்.மு.வ. அவர்களின் படத்திறப்பு விழாவில் கூறியது நினைவு கூறத்தக்கது.

"மாணவர்களுக்கு, ஆற்ற வேண்டிய பணிகளையும், தொண்டுகளையும், போற்ற வேண்டிய கொள்கைகளையும், பண்புகளையும் பல்கலைக்கழங்கள் வழங்க வேண்டும்" என்றும்; "முழுமைபெற்ற மனிதர்களை உருவாக்க வேண்டும்" என்றும் மதுரை பல்கலைக்கழக முதலாம் பட்டமளிப்பு விழாவில் அண்ணா முழங்கியது நாற்பதாண்டுகள் கழிந்த பின்னரும் அமைதிக்கல்வி, தலைமைப்பண்புகள் போன்ற நவீன கல்வி சிந்தனைகளின் பின்புலத்தில் போற்றி மகிழத்தக்கது.

"அறிவு ஒளி புகமுடியாது அல்லல்படும் எளிய மக்கள் வாழும் பகுதிகளில் அறிவு பணி தொய்வின்றி நடைபெற வேண்டும்; அவர்கள் துன்பம் துடைக்கப்படும் என்ற நம்பிக்கை அவர்களுக்கு பிறக்கச் செய்ய வேண்டும்."

"விதைத்த உடனே அறுவடை காண முடியாது; விதைத்து, முளைத்த பின் களை நீக்கி, நீர்பாய்ச்சி, காவல் காத்து கதிர்முற்றிய பின்னர்தான் அறுவடை காண இயலும். அகழ்வாரைத் தாங்கும் நிலப் பொறையுடன் பணியாற்ற வேண்டும்."

"மதத்தையே பெரிது என்று நம்பிக்கொண்டு பொருளை விரயம் செய்வோரிடம் அன்புடன் பேசி திருத்த முயலுங்கள். அவர்களின் தாராள மனப்பான்மையை கல்விச்சாலை அமைக்க மெல்ல எடுத்துக் கூறுங்கள்."

## தாய்மொழிக் கல்வி

தமிழ் மொழியை தன்னுயிரினும் உயர்வாக கருதிய அறிஞர் அண்ணா மொழிப்போராட்ட வீரர்களைப் புகழ்ந்து பேசுகையில், "கருங்கற் சுவரும் காவற்கூடமாகுமோ! இரும்பு கம்பியும் பெருஞ்சிறையாகுமோ!" என்றவர் அத்தகையோர் இருக்கும் சிறைச்சாலையே ஒரு அறச்சாலை என்கின்றார்.

*பொன்னிழந்து விட்டால் வேறு*
*பொருள் விளைக்கலாகும் ; நாளும்*
*உண்ணும் சோறிழந்தால் வேறு*
*உணவு தேடலாகும் ; மொழிக்*
*கண்ணிழந்து விட்டால் வாழ்வுக்*
*காட்சி காண்பதேது? பின்னர்*
*மண்ணில் வாழ்வதெற்கு? இதனின்*
*மடிதல் மேலதன்றோ?*

என்ற இலங்கை கவிஞரின் எழுத்துக்களை மேற்கோள் காட்டி மொழிப்பற்றின் உயிர் நாடியைத் தொடும் அண்ணாவின் சிந்தனைகள் எஞ்ஞான்றும் வழிகாட்ட கூடியவை.

## நூலகக் கல்விக்கு முதலிடம்

அறிஞர் அண்ணாவின் வாழ்விலும் கருத்திலும் நூலகங்கள் பெரும்பங்கு வகிக்கின்றன. சென்னைப் பல்கலைக் கழகம் மற்றும் பச்சையப்பன் கல்லூரி நூலகங்களும் கன்னிமரா நூலகமும் அவரை யேல் பல்கலைக்கழ சப் பெல்லோஷிப் வரை உயர்த்தியது வரலாற்று உண்மை.

23.01.48 நாளிட்ட திராவிடநாடு இதழில் இரண்டாம் உலகப்போரின் போது சேதமுற்று பின்னர் புதுப்பிக்கப்பட்ட, 50 நூறாயிரம் நூல்களைக்கொண்ட இலண்டன் நூலக சிறப்பை வருணிக்கும் அவரது எழுத்தில் நல்லறிவை வழங்கும் நூலகம் அஷ்ட ஐஸ்வரியத்தையும் வழங்குமிடமாக' வடித்தெடுக்கப்படுகின்றது. ஒரு நூலகம் திறக்கப்படுகையில் நூறு சிறைச்சாலைகள் மூடப்படுவதாக விவேகானந்தர் கூறியது ஈண்டு எண்ணத்தக்கது.

## கல்வி நிலையங்கள் எப்படி இருத்தல் வேண்டும் ?

"கல்வி நிலையங்கள் அனைவருக்கும் பொதுவானவை. இளையோருக்கு அறிவையூட்டி, அவர்களை முன்னேற்றமடையச் செய்வதும், ஒற்றுமை மனப்பான்மையை உண்டாக்கி அனைவரையும் சகோதரர்கள் போல வாழச் செய்வதுமே கல்வியின் அடிப்படை நோக்கமாகும். முன்னேற்றத்திற்கும் ஒற்றுமைக்கும் முரண்பாடு உண்டாக்கக் கூடிய எதுவும் மக்கள் அனைவருக்கும் பொதுவாக உள்ள கல்வி நிலையங்களில் இடம்பெற விடக்கூடாது."

- (நல்லயோசனை 3.3.48)

## மாணவர் கடமை

பாடங்களைக் கற்று தேர்வில் வெற்றி பெறுவது மட்டுமா மாணவர் கடமை? சமுதாயத்தில் அவ்வப்போது தலைகாட்டும் பிரச்சனைகளுக்கு தீர்வுகாணப் போராடுவதும் மாணவர் கடனே என்றார் அண்ணா 1956-இல் மாணவர்களை அரசியலுக்கு அழைக்கவில்லை அவர்; ஆனால் சமுதாய விழிப்புணர்வுடன் வாழ வற்புறுத்துகின்றார்.

## அறிவுடைமையே பெருமை

"அறிவற்றங் காக்குங் கருவி செறுவார்க்கும்
உள்ளழிக்க லாகா அரண்"

உலக வரலாற்றில் முதன் முதலில் அறிவைக் கருவியாகக் கற்பித்த வள்ளுவரின் வழி வந்த அறிஞர் அண்ணா ஒவ்வொரு நிலையிலும் அறிவைப் போற்றுதலைக் காணலாம். அவருடைய எழுத்தில் கீழ்க்கண்ட வார்த்தைகள் பன்முறை ஆளப்பட்டிருப்பதே இதற்கேற்ற ஒரு சான்றாக விளங்கும். அறிவாயுதம்; அறிவாலயம் ; அறிவாலயப் பயிற்சி ; அறிவகம் ; அறிவிடம் ; அறிவுக் கோயில் ; அறிவுலகம்; அறிவுரைகள் ; அறிவுக்கண் ; அறிவுக்கதிர் ; அறிவுத் தாகம் ; அறிவு நாள் ; அறிவுப்பணி; அறிவுப்படை ; அறிவுப்பருவம் ; அறிவுப் புயல் ; அறிவுப் போர் ; அறிவூர் ; அறிவு முடக்கம்; அறிவு வளர்ச்சி விழா ; புத்தறிவு ; ஏழாம் அறிவு (ஏய்த்தல்)

## யாரெல்லாம் கல்வியாளர்?

அறிஞர் அண்ணாவின் வாய்மொழியில் பள்ளிக்கூட ஆசிரியர்கள் மட்டுமல்ல இதழாசிரியர், நூலாசிரியர், நூலகர், சமுதாயப் பணியாளர், சமுதாயச் சிந்தனையாளர் ஆகிய அனைவரும் கல்வியாளர்களே.

## குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பு

இன்று ஒவ்வொரு வணிக நிறுவனத்திலும் நாம் எழுதிவைத்துள்ளோம் குழந்தையை வேலைக்கனுப்புதல் கேவலம் என்று 43 ஆண்டுகளுக்கு முன்னர் அவர் எழுதியதை நோக்குவோம்:-

"நாளைய நாட்டின் தூண்களாக வேண்டிய சிறுவர் சிறுமியரில் ஒன்றரை கோடி பேர் இன்று (1965) கல்வியற்று, வளர்ச்சியற்றுத் தொழிகளில் ஈடுபட்டிருக்கின்றனர். துள்ளித் திரியும் பருவம் ; பள்ளிக்குச் சென்றிட வேண்டிய நிலையினர் ; ஆனால் அவர்கள் வயிற்றும் பசியைப் போக்கிக்கொள்வதற்காக வேலைகளில் ஈடுபட்டிருக்கின்றனர்....

உலகத்தில் வேறு நாகரீக நாடுகளில் நடைபெறும் நல்லாட்சிகளில் இந்த நிலைமை இல்லை. இதனையறிந்து நாம் வேதனைப் படவேண்டும் இவ்வேதனை நல்லாட்சி மலருவதற்கான சாதனை ஆகவேண்டும் ; ஆகுமாயின் அரும்புகள் மலரும்" - எனகின்ற அவரது வரிகள் சமுதாயச்சிந்தனையுடைய அணைவருக்கும் அருமருந்தாகும்.

## குலக் கல்விக்கு எதிர்ப்பு

பெற்றோர் செய்யும் தொழிலை குழந்தைகள் கற்க வழி செய்த குலக்கல்வித் திட்டத்தைக் கடுமையாக எதிர்த்தார். கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள்ள வலியுறுத்திய ஆதாரக் கல்வித்திட்டம் தவறான அணுகுமுறையின் காரணமாக குலக்கல்வித் திட்டமாக உருமாறி இறுதியில் கைவிட வேண்டி நேரிட்டதற்கு அண்ணா போன்றோரின் எதிர்ப்பும் ஒரு முக்கியகாரணம்.

## முடிவுரை

அறிஞர் அண்ணா சமுதாய நோய் தீர்க்க முயன்ற ஒரு சீர்திருத்தவாதியே தவிர கல்வியாளர் அல்ல. ஆயினும் சமுதாய மாற்றம் கல்வி என்ற ஊடகத்தின் வழியாக மட்டுமே சாத்தியம் என்று உணர்ந்த பேரறிவாளன் ஆகிய அவர் கல்வி பற்றி கூறிய சில கருத்துகளை வெளிப்படுத்த முயன்றதின் விளைவே இவ்வுரையாகும்.

## மேற்கோள் நூல்கள்

திராவிட நாடு - சி. என். (அண்ணாதுரை)
காஞ்சி - சி. என்.(அண்ணாதுரை)
அண்ணா ஒரு அறிவாலையம் - முனைவர்.ப.ஆறுமுகம்
அண்ணா - வெற்றி வீரன்

வாசல், பாவையின் பயணம், நல்ல தம்பி ஆகிய நாடகங்களே இதற்கு உதாரணம். மேலும் நாவல் மற்றும் சிறுகதைகளையும் அண்ணா சமூக சீர்திருத்தத்திற்காக பயன்படுத்தாமல் இல்லை. அவர் எழுதிய நாவல்களான கொக்கரக்கோ, சொர்க்கத்தில் நரகம், கருப்பண்ணச் சாமி யோசிக்கிறார். தனபால் செட்டியார் கம்பெனி, தங்கத்தின் காதலன் ஆகியனவும் மேற்கோள்களே. கலிங்க ராணி, ரங்கோன் ராதா, குமாஸ்தாவின் பெண், பார்வதி பி.ஏ., சுபோதிபுரக் காதல் பரிசு, குமரிக்கோட்டம், மக்கள் தீர்ப்பு ஆகிய நாவல்களும் அறிஞர் அண்ணாவின் இலக்கியப் பாதையில் கல்விச் சிந்தனை வழியாக இருந்து உதவியது என்பதை உணரலாம்.

## அறிவியல் பாதையில் அறிஞர் அண்ணாவின் கல்விச் சிந்தனை

ஆகாய விமானத்தை கண்டுபிடித்தவர் யார் என்றால் இந்நாட்டு மக்களுக்கு தெரியாது. எமனுக்கு வாகனம் எது என்றால் எருமைக்கடா என்று சொல்லத் தெரியும் எனக் கூறியவர் அறிஞர் அண்ணா. இந்த புதிய சிந்தனையை உலகில் எவரும் சொல்லவில்லை. அனைவருமே அறிவியலை அர்ப்பமாக கருதினர். அண்ணா மட்டும்தான் அறிவியலை உலக உயர்வுக்கு உகந்தது என்று கூறினார். ஆனால் அரசியல்வாதிகளோ, சமயவாதிகளோ இதைப் பொருத்து கனவிலும் கருத்தில் எடுத்துக்கொள்ளவில்லை. அவர்கள் மக்களின் அறியாமையை பயன்படுத்தி அரசியல் செய்தனர். அறிஞர் அண்ணா அப்படி இல்லை.அறிவியல் ரீதியாக மனிதன் மனிதனால் நன்மை அடைந்தான், அடைகிறான், அடையப் போகிறானே தவிர திடமற்ற மற்ற மனிதர்களால் இல்லாத இறைவனை நம்பி எள்ளளவும் நேரத்தை வீணாக்காதே என்று ஒவ்வொரு வினாடியும் சமுதாயத்திற்கு அறிஞர் அண்ணா உணர்த்தி வந்தார்.

## அறிஞர் அண்ணாவின் அரசியலில் கல்விச் சிந்தனை

ஒரு சமுதாயத்தின் உயர்விற்கு மற்ற அனைத்தையும் விட கல்வி மிக இன்றியமையாதது என்பதில் அண்ணா உறுதியான நம்பிக்கை கொண்டிருந்தார். ஒரு அரசியல்வாதியாக மட்டுமல்லாமல் சமுதாயத்தை சீர்திருத்த துடைக்கும் ஒரு தலைவனாக தமிழ் மக்களிடையே அறியாமையும், அச்சமும் நீக்கி, அநீதியை எதிர்ப்பதற்கு வேண்டிய துணிவையும், மன உறுதியையும் பெறுவதற்கு கல்வியே முதல் தேவை என்று ஒவ்வொரு அரசியல் மேடையிலும் முழங்கினார். எடுத்தேன், கவிழ்த்தேன் என்கிற பாணியில் அண்ணா ஒரு போதும் அரசியல் நடத்தியது இல்லை. அவருடைய அரசியல் பார்வை வரலாற்றுத் தேவைகளை அடிப்படையாகக் கொண்டது. வரலாற்றிலிருந்து நிறைய பாடங்களைக் கற்றவர்

அறிஞர் அண்ணா. அதனால்தான் ஒரு காலக்கட்டத்தில், தேசிய நீரோட்டத்தில் கலந்தபடியே, தமிழர்களின் நலனைப் பாதுகாக்க முடியும் என்ற முடிவுக்கு வந்தவர் அண்ணா. இந்திய எதிர்ப்பில் தீவிரமடைந்த காலக்கட்டத்தில் ஆட்சியில் அமர்ந்தவர் அண்ணா. அண்ணா இந்தி, ஆங்கிலம், தமிழ் என்ற மும்மொழித் திட்டத்தை கைவிட்டு தமிழ், ஆங்கிலம் என்ற இருமொழித் திட்டத்தை கல்வியில் புகுத்தினார். நீண்ட காலத் தவணையில் இது சரியான ஏற்பாடுதான் என்று சொல்லமுடியாத நிலைமையும் கூட உருவாயிற்று. இருப்பினும் மேற்கண்ட அரசியல் சாதனைகள் அனைத்திற்கும் அறிஞர் அண்ணாவின் கல்விச் சிந்தனையே காரணமாக இருந்தது என்பது சந்தேகத்திற்கு இடமில்லை.

## முடிவுரை

அறிஞர் அண்ணா திறமையான இதழாசிரியர். ஆற்றல் மிகுந்த சீர்திருத்தவாதி, எழுத்தாளர், மிகச்சிறந்த பேச்சாளர், சமூகக் கொடுமைக்கு எதிராகப் போராடிய தளபதி என்பதையெல்லாம் விட மனிதப் பண்பு மிக்க பெருந்தலைவர் என்று மக்களால் போற்றப்படுவதற்கு அடிப்படையாக அமைந்திருந்தது அண்ணாவிடம் இருந்த கல்விச் சிந்தனையே. இறுதி வரை எளிமையான வாழ்க்கை வாழ்ந்தவர். கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்பதனை பொன்மொழிகளாக அளித்தவர் அண்ணா. இவர் 1969இல் மறைந்தாலும் அண்ணாவின் கல்விக் கனவு நிறைவேறி உள்ளது என்பதில் நம் பெருமைக் கொள்ளத்தான் வேண்டும். அண்ணா அவரின் உயர்ந்த பண்பினால் அமெரிக்காவின் ஏல் பல்கலைக்கழகத்தால் சப்-பெல்லோசிப் என்ற பட்டத்தை பெற்றார். அங்கு அவர் ஆற்றிய ஆங்கில உரை இன்றளவும் பேச்சாளர்கள் அனைவரும் இயங்கக் கூடியதாக உள்ளது. கல்வியை கண்ணாகக் கருதி அறிஞர் அண்ணா வழி நடந்து நாளைய பாரதத்தை வல்லரசாக்குவோம்! வாழ்க அண்ணா நாமம்! வளர்க அண்ணாவின் புகழ்!

# அறிஞர் அண்ணாவின் சிந்தனைகள்

இரா. அனுசூயா
ஆய்வியல் நிறைஞர்
தமிழ்ப் பல்கலைக்கழகம்

## முன்னுரை

'தென்னாட்டு காந்தி, தென்னாட்டு பெர்னாட்ஷா, இந்நாட்டு இங்கர்ஷால், அறிஞர் அண்ணா' என்றெல்லாம் போற்றப்பட்ட காஞ்சித் தலைவன் சி.என்.அண்ணாத்துரை எளிய நெசவாளர் குடும்பத்தில் 15.09.1909 அன்று தற்போதைய காஞ்சிபுரத்தில் நடராசன் என்பவருக்கும் பங்காரு அம்மாளுக்கும் மகனாய்ப் பிறந்தார். இவரது வளர்ப்புத்தாய் (சிற்றன்னை) இராசாமணி அம்மையார் ஆவார்.

"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று".

என்ற வள்ளுவனின் வாய்மொழிக் கேற்ப இப்பூவுலகில் அவதரித்து, அழியாப் புகழ் எய்திய அறிஞர் அண்ணாவின் கல்விச் சிந்தனைகளைப் பற்றி இக்கட்டுரையின்கண் காண்போம்.

## அறிஞர் அண்ணாவின் இளமைக் கல்வி

1914 – இல் காஞ்சிபுரம் பச்சையப்பன் தொடக்கப் பள்ளியில் சேர்ந்து பயின்றார். பின் பச்சையப்பன் உயர்நிலைப்பள்ளியில் இறுதி வகுப்பு வரை படித்தார். 1927 – இல் காஞ்சிபுரம் நகராட்சியில் சில தினங்கள் பணிபுரிந்தார். 1928 முதல் 1933 முடிய சென்னை பச்சையப்பன் கல்லூரியில் மாணவராக இருந்தார். கல்லூரி மக்கள் நெருக்கடி மிகுந்த ஜார்ஜ் டவுன் பகுதியில் இருந்தது. அண்ணா கல்வியில் மிகுந்த கவனம் செலுத்தினார். அப்போது சின்னத்தம்பி பிள்ளை என்பவர் கல்லூரி முதல்வராக இருந்தார். பேராசிரியர் ஆர்.கிருஷ்ணமூர்த்தி "இளைஞர் அண்ணாத்துரையிடம் தனித்தன்மை இருந்ததை நான் கவனித்து இருக்கிறேன்" என்று குறிப்பிடுகிறார். தேர்வு விடைத்தாட்களில்

அண்ணா எழுதிய பதில்களில் தனித்தன்மை வெளிப்பட்டதைக் கல்லூரிப் பேராசிரியர்கள் கவனித்ததாகக் கூறுகிறார்கள். இதன் மூலம் அறிஞர் அண்ணா கல்வியில் ஆர்வம் மிக்கவராக இருந்தது புலனாகிறது.

## அறிஞர் அண்ணாவின் பண்பு நலன்கள்

அறிஞர் அண்ணா மிகச்சிறந்த பேச்சாளர்; எழுத்தாளர்;சீர்த்திருத்தவாதி; இளைஞர்களின் இதய வேந்தர்; பிறரை மதிக்கும் பண்பாளர்; ஆங்கிலத்தில் பேசுவதைத் தமிழில் மொழி பெயர்க்கும் சிறந்த மொழி பெயர்ப்பாளர்; தாய் மொழிப்பற்று மிக்கவர்; நாடகங்கள், உரைநடை, சீர்திருத்த கருத்துள்ள கதைகள் எழுதுவதில் வல்லவர்.

## முக்கிய நிகழ்வுகள்

1930-இல் அறிஞர் அண்ணாவுக்கும் இராணி அம்மையாருக்கும் திருமணம் நடந்தது. 1938-இல் 'விடுதலை' மற்றும் 'குடியரசு' இதழ்களின் துணை ஆசிரியர் பொறுப்பை ஏற்றார். 'ஜஸ்டிஸ்' என்ற ஆங்கில ஏட்டிற்கும் துணை ஆசிரியராக விளங்கினார். 17.09.1949 - இல் திராவிட முன்னேற்றக் கழகத்தின் முதல் பொதுச் செயலாளராகப் பொறுப்பேற்றார். பகுத்தறிவுப் பகலவன் பெரியாருடன் நெருங்கிய தொடர்பு கொண்டு அவர் அன்புக்கு பாத்திரமானார். அவருடன் இணைந்து அரசியலில் ஈடுபட்டார். தன் கழகத் தோழர்களிடம் தோழமையோடு பழகுபவர். இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் பங்கேற்றவர். இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டை நடத்தியவர்.

## இந்தி எதிர்ப்புப போராட்டம்

அறிஞர் அண்ணா பெரியார் தலைமையில் நடந்த முதல் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் பங்குபெற்று நான்கு மாதங்கள் சிறைத் தண்டனையை அனுபவித்தார். 26.01.1965 அன்று முதல் இந்திய யூனியன் ஆட்சி மொழியாக்க, நாடாளுமன்ற ஆட்சிமன்றக் குழு சிபாரிசு செய்ததை எதிர்த்து, ஜனவரி 26-ஐ துக்க நாள் என தி.மு.க அறிவித்தது.

## கல்வித்துறையில் அறிஞர் அண்ணா

நம் கல்வித்துறைக்கு இருமொழித் திட்டத்தை அமுலாக்கி, நம் தாய்மொழி பெருமையை நிலைநிறுத்தியவர். "எண்ணித் துணிக கருமம்" "கடமை கண்ணியம் கட்டுப்பாடு" என்ற கொள்கை வழி நின்று செயலாற்றியவர். 'அறிஞர்

அண்ணா' அமுலாக்கிய இருமொழித் திட்டமே இன்றும் நமது தமிழக அரசால் பின்பற்றப்பட்டு வருகிறது. ஆசிரியர்களுக்கு அறிவுரையாக "ஒரு சமுதாயத்தில் எழுச்சியும் வீழ்ச்சியும் ஆசிரியர்கள் கையில்" என்ற செய்தியைக் கூறினார். 02.06.1968 அன்று சென்னையில் அறிஞர் அண்ணா செய்தியாளருக்கு அளித்த பேட்டியில் "ஒரு நாட்டின் நிலையான செல்வத்திற்கும் பெருமைக்கும் ஊன்றுகோலாக இருப்பது கல்வியே. கல்வியில் முன்னேற்றம் அடையாவிடில், ஒரு நாடு முற்போக்கு அடைய முடியாது. சமுதாயத்தின் உதவியை நாட கல்வி என்னும் குறிக்கோளை விட வேறு ஒரு குறிக்கோள் இருக்க முடியாது" எனக் கூறினார்.

மொழிப்பற்று மிக்க அறிஞர் அண்ணா கல்வித்துறைக்கு அளித்த சீதனங்கள் பல. ஆற்றல் வாய்ந்த அவரது எழுத்தும் பேச்சும் தமிழ் உரைநடையில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தின. நாவாலும் பேனாவாலும் அறிஞர் அண்ணா ஆற்றிய பணி அளிவிடற்கரியது. சிறுகதை, நாவல், கட்டுரை, நாடகம் ஆகிய அனைத்து இலக்கிய வடிவங்களிலும் ஈடுபட்டு, உழைத்துப் புதியபாணியை அவர் உருவாக்கியுள்ளார். அடுக்கு மொழியில் பேசுவதில் திறமை வாய்ந்தவர். இவர் தமிழகத்தின் முதல் பேச்சாளராகத் திகழ்ந்தார். பேச்சிலும், எழுத்திலும் பல புதுமை செய்து விழிப்புணர்வுக்கு வித்திட்டார். அடுக்குத் தொடர்களும் எதுகை மோனைகளும் காவிரியைப் போல், கங்கையைப் போல் அவரது பேச்சில் ஊற்றெடுத்தன. அறிஞர் அண்ணா ஒரு அறிவாலயமாகத் திகழ்ந்தார். கன்னிமரா நூல்நிலையத்தில் அவர் கைபடாத நூல்களே இல்லை. அவர் நூல் பல பயின்று, தன்னையே நூல் நிலையமாக ஆக்கியவர். கருத்தாலும், நடையாலும், சொல்லும் வகையாலும் அண்ணாவுக்கெனத் தனிவழி அமைந்திருந்தது. நாவன்மையால் சொற்பொழிவுகளில் புதிய பாணியை உருவாக்கி மேடைத் தமிழுக்கு வளம் சேர்த்தார். அவரது பேச்சில் தமிழகமே கட்டுண்டு கிடந்தது.

"சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை
இகல்வெல்லல் யார்க்கும் அரிது"

என்ற குறளின் இலக்கணமாகத் திகழ்ந்தவர். அவரது பன்முகச் சாதனைகளை அங்கீகரித்து பெருமை சேர்க்கும் வகையில் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் அண்ணாவுக்கு டாக்டர் பட்டம் அளித்து பெருமைப்படுத்தியது.

மாணவர்களுக்கு திருக்குறள் வகுப்பு நடத்தினார். என்னே அவரது மொழிப்பற்று! அங்கு அறிஞர் அண்ணாவிடம் பல கேள்விகள் கேட்கப்பட்டன. ஆங்கிலத்தில் 'Because' என்ற சொல்லைக் கொண்டு வாக்கியம் அமைக்கும்

படி கேட்டனர். உடனே அறிஞர் அண்ணா "No sentence begins with because. A sentence never ends in because, because because is a conjuction" எனக் கூறினார் Define state எனக் கேட்ட கேள்விக்கு அறிஞர் அண்ணா "State is an onion"எனப் பதிலிறுத்தார் A B C D - இல்லாத சொற்களைக் கூறும்படி கேட்டுக்கொண்டனர். உடனே அறிஞர் அண்ணா "One to ninetynine" எனப் பதிலளித்தார். இந்நிகழ்ச்சியிலிருந்து அறிஞர் அண்ணாவின் ஆங்கிலப் புலமையை அறிய முடிகின்றதல்லவா?

## முடிவுரை

அறிஞர் அண்ணா நமக்குக் கிடைத்த அரும்பெரும் பொக்கிஷம் அவர் நம்மை விட்டுச் சென்றது நமக்குப் பேரிழப்பாகும். 03.02.1969 அன்று பேரறிஞர் அண்ணா நம்மை மீளாத் துயரில் ஆழ்த்திவிட்டுச் சென்றார். அவர் மறைந்தாலும் அவரது புகழ் இவ்வுலகு உள்ள வரை நிலைத்து நிற்கும்.

# அண்ணாவும் வாழ்வியலும்

இரா. சுரேந்திரன்
தமிழ்ப்பல்கலைக்கழகம்

## முன்னுரை

இந்த மாய உலகில் தமக்காக வாழாமல், பிறருக்காகவே வாழ்பவர் மிகச் சிலர். அவ்வாறு வாழ்ந்தவர்கள் இவ்வுலகில் "நந்தா விளக்கினைப்" போன்று ஒளி வீசி திகழ்கின்றனர். சமூக மக்களின் நலம்பற்றியே அக்கறை கொண்டும் வெற்றியும் பெற்று "உலக உத்தமர்" வரிசையில் தங்கள் பெயரினை பொறித்தும், வரலாறுகளில் வரைந்தும், மக்கள் தங்கள் இதயக் கோவில்களில் நினைத்து வழிபடவும் ஊன்றுகோலாய் உள்ளனர். இந்த சமூக சிந்தனையாளர் வரிசையில் அறிஞர் அண்ணாவும் ஒருவர் என்பது மிகையன்று. இவரை சற்று வாழ்வியல் நிகழ்வோடு இத்தருணத்தில் காண்போம்.

## பிறப்பும், வளர்ப்பும்

அறிஞர் என்று அன்போடும், பண்போடும் அழைக்கப்படும் அண்ணா, காஞ்சிபுரத்தில், நடராசன் - பங்காரு அம்மையார் தம்பதிக்கு 15 செப்டம்பர் 1909ல் பிறந்தார். குள்ளமான தோற்றம், அகன்ற நெற்றி உடையவர். சிறிய தாயார் -இராசமணியம்மமையார் இவரை ஆளாக்கினார். அண்ணா சிறிய தாயாரை "தொத்தா" என்று அன்புடன் அழைத்தார்.

## இளமை கால நிகழ்வுகள்

சிறு பிள்ளையாக இருந்த போது காஞ்சிபுரத்திலிருந்து சென்னைக்கு "பார்க்பேர்" பொருட்காட்சி காண வந்தனர். வண்ண பலூன் மீது ஆசை கொண்டு, அழத் தொடங்கினார். வழிப்போக்கரான திருடன் அண்ணாவின் பெற்றோருடன் நயமாக பேசி, பணமா முக்கியம் நான் வாங்கித் தருகிறேன் என்று சிறுபிள்ளை அண்ணாவை தூக்கி நடக்க, பெற்றோருக்கும் - திருடனுக்கும் தூரம் நீண்டது. அண்ணா அழுதார். அருகிலிருந்தோர் சந்தேகப்பட்டு அண்ணாவை காப்பாற்ற அண்ணாவின் கழுத்து செயின் தான் காரணம் என்பது இவரின் வாழ்வியலில் பின் நாளில் மறக்க முடியாத நினைவாகும்.

## தொடக்க கல்வி

தொடக்க கல்வியைக் காஞ்சி - பச்சையப்பன் கல்லூரியில் தொடர்ந்த இவர், பத்தாம் வகுப்பு தேர்வில் இரண்டு முறை தோல்வி பெற்றார். பிறகு தனது குடும்பச் சூழ்நிலைக் காரணமாகக் காஞ்சி நகரசபை குமாஸ்தாவாக சிலகாலம் பணியாற்றினார்.

## அரசு சலுகை

"மனிதன் நினைப்பது எல்லாம்நடப்பதும் இல்லை" ; "நடக்கும் என்பதும் நடக்காமல் போகும்". அப்படி ஒரு வாய்ப்பு அறிஞர் அண்ணாவுக்கும் ஏற்பட்டது. பிற்பட்ட வகுப்பு மாணவர்கள் சம்பள சலுகையால் மட்டுமே மேற்படிப்பு தொடரலாம் என்றது அரசு. இன்றைய சேத்துப்பட்டி பச்சையப்பன் கல்லூரி அன்று சைனாபாசர் உயர்நிலைப் பள்ளியாக அறிஞர் அண்ணா உயர்கல்வி தொடர வாய்ப்பளித்தது. அக்கல்லூரி சூழல் அண்ணாவின் எழுத்து வன்மையும், பேச்சு வன்மையும் வெளிப்பட அடிப்படை காரணமாய் அமைந்தது. இவரது கல்விக் கற்றலில் தமிழிலும், ஆங்கிலத்திலும் தனி நடையாக கல்லூரி விவாதம், மேடை விவாதம், பட்டிமன்றம் போன்றவையால் பேராசிரியர்கள் வியக்கும் வண்ணம் இவர் சொல்திறனை வெளிப்படுத்தினார்.

## நீதிக் கட்சியின் மொழிபெயர்ப்பாளர்

நீதிக் கட்சி என்ற தொழிலாளர்களின் தலைவர் "பாசுதேவ்" ஆங்கிலம் மட்டுமே பேசுவர். தம் கருத்துக்களை தொழிலாளர்களிடம் எடுத்துக் கூற தகுதியான மொழி பெயர்ப்பாளராக அறிஞர் அண்ணாவை அழைக்க பாசுதேவின் மேடைகளில் பங்கேற்று அறிஞர் அண்ணா பேசியது அனைவரையும் கவர்ந்தது.

## மேற்படிப்பு

அப்போது பி.யூ.சி. படிப்பு இல்லை. "இண்டர் மீடியாட்" என்ற இரண்டாண்டு படிப்பில் சேர்ந்து முதல வகுப்பில் தேர்ச்சி பெற்றார். குடும்பச் சூழ்நிலையால் முதல் மேற்படிப்பு தொடராமல் பறிதவித்த இவரை "பச்சையப்பன் கல்லூரி தலைவர் அழைத்து வாழ்த்து தெரிவித்து, பி.ஏ., ஆனர்ஸ் வகுப்பில் சேர உதவி புரிந்தார். தாங்கள் புத்தகம் மட்டும் வாங்கித் தந்தால் போதும் என்றார் அறிஞர் அண்ணா. மேலும் அரசியல். சரித்திரம், பொருளாதார பாடங்களைக் கற்று அவற்றில் கைத்தேர்ந்தவராக வெளிப்பட்டார்.

## திறமை

பல பட்டிமன்றங்களில் தீண்டாமை ஒழிப்பு, கலப்பு திருமணம் போன்றவைகளில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த பேசி வந்தார். இவரது பேச்சு கல்லூரி மாணவர்களை கவர்ந்திருக்க இவரது புலமைக்கு "மாஸ்கோ" அணிவகுக்கலாம் - என்ற கட்டுரையும் இவரது திறமைக்கு ஒரு சான்றாகும். பிறகு பி.ஏ., ஆனர்ஸ் (எம்.ஏ.,) - வுக்கு நிகரான பட்டம் பெற்றார். அப்போதே அவருக்கு "திருமணம்" நடந்தது. அறிஞர் அண்ணாவின் துணைவியார் எல்லோராலும் "அண்ணி" என்று அழைக்கப்பட்டார். பெயர் "ராணி" அம்மையார் சிறந்த பண்பாளர், புத்தகம் படிப்பவர், சுவை உணவு சமைப்பவர் என்பது இவரது வாழ்க்கை குறிப்பிலிருந்து அறிய முடிகிறது.

## சமூகச் சீர்திருத்தம்

படித்தவர்கள் படிப்பின் வழியிலே செல்ல வேண்டும் என்பது நம் அனைவரின் விருப்பம். "அறிஞர் அண்ணாவின் பெற்றோரும் அதையே விரும்பினர். ஆனால் அறிஞர் அண்ணாவோ, சமூகத் தொண்டினை செய்ய வேண்டும் என்ற எண்ணம் பெரியார் மூலம் உருவாக, சாதிக் கொடுமை, கலப்பு திருமணம், சமூக மூடப் பழக்க வழக்கம் பற்றி அவர் எழுதிய "கோடி வீட்டு கோபால் கறுப்பாடு" என்ற கதை இவர் சிறந்த நாடக ஆசிரியர் என்பதை வெளிப்படுத்துகிறது.

## வேலைத் தேடுதல்

காஞ்சிபுரம் சர்.இராமசாமி முதலியார் இவர் எனது "ஆங்கில வாரிசு" என புகழ்ந்தது இவரின் இருமொழி புலமைக்குக் உதாரணமாய் அமைந்தது. சென்னை சைன பாசர் நடுத்தர பள்ளி ஆசிரியராக நான்கு மாதமும், அண்ணாமலை பல்கலைக்கழக விரிவுரையாளராக மூன்று மாதமும், சர்.முத்தையாச் செட்டியார் அந்தரங்கக் காரியதரசியாக சில நாட்களும் பணியாற்றினார்.

## நீதிக்கட்சி மாநாடு

நீதிக் கட்சி கூட்டங்களில் திறமையுடன் சொற்பொழிவாற்றி "ஜபல்பூர்" சென்று தொழிலாளர் முன்னேற்றம் அடைய இரு தொழிற்சங்கம் இணைய வேண்டும் என்றார். திருச்சி மாநாட்டில் பார்வையாளராகி அமர்ந்திருக்க, வழக்கறிஞர் கொடுத்த வாய்ப்பும், திருப்பூர் இளைஞர் மாநாடும் பெரியாரிடம் அண்ணாவிற்குத் தொடர்பு ஏற்பட்டது. அதன் பிறகு பெரியார் அறிஞர்

அண்ணாவின் அரசியல் குரு ஆனார். 1944-ல் நடைபெற்ற மாநாட்டில் அறிஞர் அண்ணா கோரிக்கைகளை முன் வைத்தார்.

**அவை பின்வருமாறு**

- ❖ வெள்ளையர்கள் கொடுத்த விருது, கௌரவப்பட்டங்களை வீசி எறிய வேண்டும். இனி அதுபோல் நடக்க கூடாது.
- ❖ அவர்கள் அளித்த பதவிகளைக் களைத்தெறிய வேண்டும்.
- ❖ சாதியை ஒழிக்க பெயருக்கு பின்னால் சாதி பெயர்கள் எழுதுவதை தடை செய்ய வேண்டும்.
- ❖ நீதிக் கட்சியின் பெயரை "திராவிடர் கழகம்" என மாற்ற வேண்டும் என்று கூறி, முப்பத்து ஐந்து மணிநேர விவாதங்களுக்கு இடையே தீர்மானம் நிறைவேற்றப்பட்டு வெற்றி கண்டார்.

## கழகம் கண்டவர்

அறிஞர் அண்ணா பிரிந்ததும், அவருடன் திராவிட கழகத்தைச் சேர்ந்த பலரும் வந்தனர். "திராவிட முன்னேற்றக் கழகம்" என பெயரிட்டு உலகம் முழுவதும் சூறாவளி பிரச்சாரம் செய்து கல்லூரி, பள்ளி மாணவர்களை இணைத்தார். நாடகங்களை ஒரு கருவியாக கையாண்டு அவரே இயக்கியும்,நடித்தும் மக்களை தம் பக்கம் திருப்பி 1949-ல் கழகத் தேர்தலில் ஈடுபட்டு 1957-ல் வெற்றி பெற்றார்.

## அமெரிக்க விருது

அமெரிக்காவில் ஹெண்டன் சீப் என்ற மாணவன் அவர் பெயரில் சப்-பெல்லோஹீப் என்ற ஒன்றை உருவாக்கி, விருந்தினராக ஐந்து நாள் ஏற்று, உபசரித்து உலகம் போற்றும் தலைவராகச் சிறப்பு பெற்றவர் நம் அண்ணாதுரை. இவ்விருது 1068 ஏப்ரல் 13ல் வழங்கப்பட்டது. பிறகு ஜப்பான் சென்று ஜப்பான் மக்களின் உழைப்பு பற்றியும், சிங்கப்பூர் சென்று சிங்கப்பூரின் முன்னேற்றத்திற்கு தமிழர் பாடுபட வேண்டும் என்றும் பேசி நாடு திரும்பினார்.

## உடல் நலம் சீர்கேடு

உலகப் பயணம் சென்று திரும்பிய அண்ணாவிற்கு உணவுக் குழலில் ஏற்பட்ட வலியால் அவருக்கு புற்றுநோய் என கண்டறியப்பட்டது. அமெரிக்கா சென்ற

இவருக்கு இருமுறை அறுவை சிகிச்சைச் செய்ய அமெரிக்க மெமோரியல் மருத்துவக் கல்லூரி மருத்துவர் "மில்லர்" உதவி புரிந்தார். ரேடியோ கதிரின் வீரியம் தாங்காமல் அண்ணா இறுதி கட்டத்திற்கு சென்றார். 02 பிப்ரவரி 1969 அன்று 12.22 மணிக்கு மறைந்தார் என்றச் செய்தி உலகத் தமிழர்களை துக்கத்தில் ஆழ்த்தியது.

## பொன் மொழிகள்

- எதையும் தெளிவாகச் சொல்ல வேண்டும்.
- சோர்வு இல்லாமல் சொல்ல வேண்டும்
- அஞ்சக் கூடாது
- யாராலும் வெல்ல முடியாத வெற்றியைப் பெற வேண்டும்
- எதையும் தாங்கும் இதயம் வேண்டும்
- ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணலாம்
- உன்னால் முடியும் தம்பி
- பழமை, மடமை அழிய வேண்டும்.
- கீழோர் என்பது செய்யும் செயலால் தான் தீர்மானிக்கப்படுகிறது.
- தீண்டாமை, தெளிவும், சமத்துவமும் வேண்டும்.

## முடிவுரை

பிறரை மதித்தும்,போற்றியும், தற்புகழ்ச்சி கூடாத நல் நட்பினைக் கொண்ட இவர் பிறர் குறைகளைச் சுட்டி காட்டாதவர். நகைச்சுவைப் பாணி, குடும்ப பாசத்தில் உறைந்த இவர் இனியச் சொல் பேசுபவர். எதிரிகளை பேச்சால் வென்றவர். பகைவரின் பாராட்டைப் பெற்றவர். மதி நிறைந்த அறிஞர் அண்ணா, மக்கள் விரும்பிய அறிஞர் அண்ணா இன்று நம்மிடையே இல்லை. இலட்சக்கணக்கானோரின் இதயத்தை கொள்ளை கொண்ட மன்னன், அறிவு மேதை, இன்று பூமித்தாயின் மடியில் உறங்க, கடல் அலைகள் அவரின் புகழை தாலாட்டுப் பாட, தவழும் தென்றல் அண்ணாவின் உடலை மெருகூட்டி தழுவிச் செல்ல, அவர் மட்டும் எழவில்லை. ஆனால் அவரின் செம்மையும், புலமையும் இன்றும் அனைவரது நெஞ்சையும் ஆண்டு வருவது உண்மைதான் என்று சொன்னால் அது மிகையாகாது.!

## நோக்கீட்டு நூல்கள்

1. நாட்டுக்கு உழைத்த நல்லவர் - அண்ணாத்துரை
பழனியப்பா & பிரதர்ஸ்,
சென்னை - 600 014.
மூன்றாம் பதிப்பு : 1975.

2. அண்ணாவின் உவமைகள்
அபிராமி பப்ளிகேஷன்ஸ்,
சென்னை - 600 001
பதிப்பு அக்டோபர் : 1984

3. குறள் நெறியில் அறிஞர் அண்ணா
தமிழ் புத்தகாலயம்,
சென்னை - 5.
இரண்டாம் பதிப்பு சூன் : 1970.

4. அறப்போர்
பாரி நிலையம்
சென்னை - 600 108,
ஐந்தாம் பதிப்பு : 1985.

# அறிஞர் அண்ணாவும் வாழ்வியலும்

மு. மலர்விழி
தமிழ்ப் பல்கலைக்கழகம்

அறிஞர் அண்ணா ஓர் எழுத்தாளர், சிறந்த பேச்சாளர், தமிழ்நாட்டு பெர்னாட்ஷா என்று எதிரிகளால்கூட புகழப்பட்ட மேதை. ஆட்சியில் அமர்ந்த நிலையிலும் காட்சியில், கருத்தில் மாறாத எளிமையான இலக்கணம்!. அடக்கத்தை ஆடையாக அணிந்த அறிஞர் பெருமகனார்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பட்டமளிப்பு விழாவில் அறிஞர் அண்ணா ஆற்றிய கல்வியைப் பற்றிய பேருரைகள்.

பட்டம் பெறும் பட்டதாரிகளே! நீங்கள் சாதிக்கு எதிராக, மூட நம்பிக்கைக்கு எதிராக மற்றும் பல்வேறு உருவத்தில் காட்சியளிக்கும் கொடுங்கோன்மைக்கு எதிராக போர் தொடுக்கும் மாபெரும் போர் வீரர்களாக ஆக வேண்டும்.

"பறையருக்கு மிங்கு தீயர்
புலயருக்கும் விடுதலை!
பரவரோடு குறவருக்கும்
மறவருக்கும் விடுதலை
திறமை கொண்ட தீமையற்ற
தொழில் புரிந்து யாவரும்
தேர்ந்த கல்வி ஞானமெய்தி

வாழ்வோமிந்த நாட்டிலே" என்று கூறிய பாரதியின் வழியில் சாதியும், ஜனநாயகமும் ஒன்றாக இருக்க முடியாது பல வடிவத்திலுள்ள கொடுமைகளை சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்ற கருத்துக்களும் ஒத்திருக்கவே முடியாது. உங்களுக்கும் உங்கள் குடும்பங்களுக்கும் உரிய வாழ்க்கை நலனில் நீங்கள் ஈடுபாடு காட்டி உழைப்பதோடு சமுதாயத்திற்கு ஆற்ற வேண்டிய கடமையை மறக்காமல் செய்ய நீங்கள் கற்ற கல்வியும், பட்டங்களும் பயன்பட வேண்டும் என்று கருத்துரை ஆற்றினார்.

மேலும், பகுத்தறிவை நாடெங்கும் பரப்பும் சுடர்களேந்திய வீரர்களாக மாற்ற கல்வியானது அமைந்து நீங்கள் காட்சியளிக்க வேண்டும், பகுத்தறிவு என்பது வாழ்வின் அடிப்படையானதும் தேவையானதுமான உண்மைகளை மறுத்துரைப்பது அல்ல சிந்தனையும் செயலும் வெவ்வேறான இரட்டை வேடமுறையை அடியோடு ஒழித்துக்கட்டும் முறையேயாகும். இதனால் கல்வி பயிலும் எதிர்கால இளைஞர்கள் பகுத்தறிவு பாதையில் தன்னை அர்ப்பணித்துக் கொள்ளவேண்டும்.

கல்வியைப் பரப்புவது என்பது முற்றிலும் அரசாங்கத்தால் செய்யப்பட வேண்டிய வேலை என்று இருந்துவிடாமல் பணவசதியும் வாய்ப்பும் படைத்தவர்கள் கல்விக் கூடங்களாகிய அறிவாலயங்களை துவக்குவதில் ஈடுபடவேண்டும் என்பது என் விருப்பம் என்றும். பகுத்தறிவு உணர்ச்சியுடன் ஆசிரியர்கள் சொல்லித் தருவார்களேயானால் இன்னும் பத்தாண்டு காலத்தில் நமது மாணவர்களை மற்ற உலக மாணவர்களுடன் போட்டியிடக் கூடிய அளவுக்கு அறிவில் சிறந்தவர்களாக செய்துவிட முடியும். அறிவியல் கருத்தக்களை ஆராய்ந்தும், அறியாமை கருத்துக்களை தூக்கி எறிந்தும் கல்வி கற்க வேண்டும் என்றும் கூறிகிறார்.

நல்ல சிந்தனை, சிறப்பான செயல், உயர்வான பேச்சு, உவப்பான எழுத்து, ஆராயும் தன்மை, ஆளுமைத் திறனை வளர்க்கும் போக்கு இதன் அடிப்படையில் கல்வி அமைய வேண்டும். இதனால் தாய்வழிக் கல்விதான் சிறந்த கல்வியை உருவாக்க முடியும். எனவே, நம் தாய்மொழியான தமிழ்மொழியும் இவற்றுடன் ஆங்கில மொழியும் கற்கலாம் என்று, இருமொழிக் கொள்கையை ஆதரித்தார், நடைமுறைப்படுத்தினார், மும்மொழிக் கொள்கையை முற்றிலும் எதிர்த்து நவோதய கல்வி முறையை நம் தமிழ்நாட்டில் இன்றுவரை நடைமுறைப்படுத்தாமல் இருப்பதற்கு அறிஞர் அண்ணாவின் இருமொழிக் கல்விதான் என்பது சான்றாக அமையும்.

கல்வி என்பது வெறும் வாழ்க்கைக்கும், வசதிக்கும் என்று இல்லாமல் ஒவ்வொருவரும் நல்ல ஒழுக்கத்தை பெறவும், பிறரையும் சிறந்த ஒழுக்கத்தில் ஈடுபட செய்யவும் தாய்வழிக்கல்விதான் சிறந்தது என்று தன் ஆட்சிக்காலத்தில் பளளி முதல் கல்லூரிகள் வரை ஆங்கிலமொழி பாடத்தை தமிழில் மொழிபெயர்த்து கல்லூரியில்

தமிழ்வழிக்கல்வி முறையை நடைமுறைப்படுத்தினார். அதுமட்டுமல்ல தமிழ் வழிக் கல்வியில் படிக்கும் மாணவர்களுக்கு ஊக்கத் தொகையும் வழங்கினார். இதன் பயனாக கிராமப்புற மாணவர்கள் எளிதில் படித்து பட்டம் பெற்று அறிவை விரிவு செய்ய நல்ல திட்டமாக அமைந்தது.

தமிழ் வழிக்கல்வியால் இயலும் என்பதற்காக, தமிழ்நாடு எனப் பெயரிட போராடி தமிழ்நாடு எனப் பெயரிட்ட பெருமை அறிஞர் அண்ணாவுக்கே. இதனால் உலகை தமிழோடும், தமிழை உலகோடும் இணைத்து அனைத்து புதிய துறைகளிலும் தமிழ் வழிக்கல்வியை உலக வளர்ச்சிக்கு நிகராக தரப்படுத்திய பெருமை அறிஞர் அண்ணாவையே சாறும்.

இந்தி எதிர்ப்பு, ஆங்கில ஆதரவு என்ற தன்மையிலான மொழி அரசியலின் வளர்ச்சி தமிழ்மொழியின் அருமைகள் தமிழ்வழிக் கல்வியின் சிறப்புகள் மீதான அரசியல் சமூக உணர்வாகவே வளர்ந்துள்ளது என்பதற்கு அடிப்படைக் காரணம் அறிஞர் அண்ணாதான்.

தமிழ்வழிக்கல்வி அறிவியல் உணர்வின் கருவியாக மக்களின் வாழ்நிலை மாற்றங்களின் பண்பாடு தளமாக வளர்க்கப்பட்டதால்தான் உயர்தனிச் செம்மொழியாக அமைய அண்ணா அடிகோலினார்.

# அண்ணாவின் பார்வையில் கல்வியின் நோக்கங்கள்

இரா. வைஷ்ணவி
தமிழ்ப் பல்கலைக்கழகம்

## முன்னுரை

கள்ளி வயிற்றில் அகில் பிறக்கும் மான் வயிற்றில்
ஒள்ளரி தாரம் பிறக்கும் - பெருங்கடலுள்
பல்விலைய முத்தம் பிறக்கும் அறிவார் யார்
நல்லார் பிறக்கும் குடி.

என்னும் பாடலுக்கு நல்லதோர் இலக்கியமாக விளங்கும் பேரறிஞர் அண்ணா அவர்களின் கல்விச் சிந்தனையைக் கண்ணுறுவோம். அனைவராலும் "அண்ணா" என அன்புடன் அழைக்கப்பெறும் சி. என். அண்ணாத்துரை 1909-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 15-ஆம் நாள் நடராசன் - பங்காரு அம்மையார் தம்பதியருக்கு மகனாகப் பிறந்தார். அவருடைய கல்விச் சிந்தனைகளானது மாணவர்களுக்கு வாழ்வியல் நெறிமுறைகளை கற்றுத் தருவதாக அமைந்தது. அதனை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## கல்வி பற்றி அறிஞர் அண்ணாவின் கருத்து

கல்வி என்பது தண்ணீர். அதைச் சமூக விருட்சத்தின் வேரில் ஊற்றினால் நம் வேலை முடிந்து விட்டது என்று நினைத்தேன். ஆனால் அந்த மரத்தின் வேரிலுள்ள சாதி துவேஷமும் பேத புத்தியும், பணத்துக்கு அடிமைத் தனமுமாகிய புழுக்களா கல்வியை வளரவிடப் போகின்றன? அந்தப் புழுக்கள் சாக வேண்டும். அவற்றைக் கொல்ல வேண்டும்.

"அரம் போலும் கூர்மையரேனும் மரம்
போல்வர் மக்கட் பண்பில்லாதவர்"

என்ற திருக்குறள் கல்வியின் பயன் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதைக் கூறும். சமுதாயம் என்னும் மரத்தின் வேர்கள் புழுக்களால் சிதைந்து பிடிப்பிழந்து கொண்டிருக்கும்போது கல்வி என்னும் நீரை வேர்களில் ஊற்றுவது புழுக்களை மேலும் வாழச் செய்யுமே தவிர சமுதாயத்தை அழிவினின்றும் காப்பது ஆகாது என்னும் உண்மை அறிஞர் அண்ணாவின் கருத்தில் புதைந்திருக்கிறது.

## மாணவரும் சமுதாயமும்

மனித வாழ்க்கைக்கு கல்வி இன்றியமையாதது. சமுதாயத்திற்கு ஒளி கொடுக்கும் விளக்காகக் கல்வி விளங்குகிறது. சமுதாயத்தில் நிலவும் ஏற்றத் தாழ்வுகளை அகற்றி, முன்னேற்றத்திற்கு வழிகாண கல்வி இன்றியமையாததாகும். அத்தகு கல்வியைக் கற்றுத் தெளிவுடன் விளங்கும் மாணவர்கள் செயல்பாட்டில் துடிப்பு மிக்கவராக விளங்குவர். எனவே மாணவச் சமுதாயத்தின் முன்னேற்றமே நாட்டின் முன்னேற்றம் என்பதனை அறிந்து மாணவச் சமுதாயத்தை அண்ணா போற்றினார். சமுதாய முன்னேற்றத்தில் மாணவர்கள் பங்கு கொள்ள வேண்டும் என்பது அறிஞர் அண்ணாவின் கருத்து.

சமுதாயம் முன்னேற்றமடைவதற்கு மாணவர்களின் கடுமையான உழைப்பு தேவைப்படுகிறது. மாணவர்கள் நினைத்தால் சமுதாயத்தில் நிலவி வருகிற கொடுமைகளைத் தகர்த்தெறிந்து, பண்பட்ட சமுதாயத்தை உருவாக்க இயலும். மாணவச் சமுதாயமானது குறிக்கோளற்றுத் தன்னல விரும்பிகளாக இராமல், பொதுநல நாட்டமுடன் உழைக்க முன்வரவேண்டும்.

## மாணவர்களுக்கு அறிஞர் அண்ணாவின் அறிவுரை

மாணவர்களாகிய உங்களிடம் எல்லோராலும் கைவிடப்பட்ட நோயாளியை ஒப்படைக்கிறேன். மனிதனை மனிதனாக்க, மனிதனிடமிருந்து விலங்குத் தன்மையைப் பிரிக்க நீங்கள் பாடுபட வேண்டும். மாணவர்கள் பாடங்களைப் பயில்வதோடு நின்றுவிடக்கூடாது. இந்த நாடு எழில் மிகுந்த ஏற்றங்கொண்ட நாடாக விளங்க வேண்டும் என்ற நல்ல நாட்டுப்பற்று மாணவர்கள் உள்ளத்தில் ஏற்பட வேண்டும். மாணவர்கள் மக்களிடையே மண்டிக் கிடக்கும் அறியாமையை அழிப்பதற்கு அறிவுப் பணியை, பகுத்தறிவுப் பணியை ஆற்றுதல் வேண்டும். மனிதப் பண்பை, ஒற்றுமையை உருவாக்க வேண்டும். மனிதனை மனிதன் மதிக்கின்ற மாண்பை வளர்க்க வேண்டும். மூட நம்பிக்கையால் முதுகொடிந்து போனவர்களையெல்லாம் நிமிர்ந்து வாழச் செய்யும் நேரிய மருந்துகளால் குணப்படுத்த வேண்டும். பழமையின் பெயரால் மக்களைப் பாதிக்கின்ற கருத்துக்கள் எந்த வடிவத்தில் வந்தாலும் எதிர்த்துப் போரிட வேண்டும்.

## பெண் கல்வி குறித்து அறிஞர் அண்ணாவின் கருத்து

"ஆளப் பிறந்தவன் ஆண்மகன், அவன் விருப்பத்துக்கு ஆடிப் பிழைக்க வேண்டியவள் பெண்மகள். இப்படிப் பேசிடும் பண்பு இருக்கும்வரை நம் நாடு உருப்பட முடியுமா?" என்ற அறிஞர் அண்ணாவின் இந்தக் கேள்வியால் பெண் கல்வி முக்கியத்துவத்தை பற்றிய அறிஞர் அண்ணாவின் கருத்தை உணர முடிகிறது. பெண்கள் அறிவுத் திறனையும், பொருட் செல்வத்தையும் சேர்த்துக் கொண்டு செயல்பட முன்வந்தால் சமுதாயம் முன்னேற்றமடையும். சமுதாயத்தில் ஆடவராகப் பிறந்துவிட்ட ஒரே காரணத்திற்காக அவரால் இழைக்கப்படுகின்ற துன்பங்களை எல்லாம் பெண்கள் பொறுமையுடன் ஏற்றுக்கொண்டு செயல்பட வேண்டும் என்ற கருத்து முரண்பாடானது. பெண்கள் பல நூல்களைப் பயின்று உயர்ந்த பதவியினை ஏற்று நாட்டை ஆளக்கூடிய அளவிற்கு நிர்வாகத் திறமைகளை வளர்த்துக் கொள்ள முன்வரவேண்டும்.

## உழைப்பாளிகளுக்கு கல்வி பற்றிய அறிஞர் அண்ணாவின் கருத்து

தொழிலாளர் வாழ்வில் வளமிருந்தால் நாடும் வளத்துடன் சிறந்து விளங்கும். உழைப்பவர் வாழ்க்கை இருளடைந்து, இயற்கைச் செல்வம் கவனிப்பாரற்று இருந்தால் நாட்டில் வறுமை நிலவி பொருளாதாரம் பாதிக்கப்படும். சமுதாயம் முன்னேறாது. காலம் காலமாக முதலாளிகள் உழைப்பவர்களின் உழைப்பைச் சுரண்டி ஆதிக்கம் செலுத்தி வரும் அதிகார போக்கு மாறி உழைப்பவர்களுக்கு ஏற்ற ஊதியம் வழங்கும் நிலைவர வேண்டும். இதற்கு உழைப்பவர்களுக்கு கல்வியானது அவசியமாகிறது. கற்றவர்களால் மட்டுமே நாட்டினுடைய பொருளாதார நிலையை அறிந்து நல்லதோர் சமுதாயத்தை உருவாக்க இயலும்.

## அறிஞர் அண்ணா கண்ட பயிற்று மொழி

சமுதாயத்தில் மாணவர் முதற்கொண்டு அனைவர்க்கும் மொழிப்பற்று மிக அவசியமாகும். மொழிவளம் குன்றினால் நாட்டில் குழப்பங்கள், சிக்கல்கள் நிகழக்கூடும். மாணவர்கள் பேச்சளவில், எழுத்தளவில் மொழிப்பற்றுடன் இருந்தால் மட்டும் போதாது. வாழ்க்கையில் கடைப்பிடித்துச் செயல்பட்டால் தான் மற்றவரும் அதனைப் பின்பற்றி நடக்க ஏதுவாகும் என்கிறார் அறிஞர் அண்ணா. 1967-ஆம் ஆண்டு அறிஞர் அண்ணா முதல்வரான போது தமிழிலேயே பதவி ஏற்பு உறுதிமொழி எடுத்துக் கொண்டது அவரது மொழிப்பற்றைக் காட்டுகிறது.

அறிஞர் அண்ணா தமது தாய்மொழியாகிய தமிழின் சிறப்பைச்சுட்டுமிடத்து தாய்மொழி என்னும் தகுதிக்கு ஈடாக வேறு எந்தத்

தகுதியையும் ஒரு மொழி பெற்றிடத் தேவையில்லை. ஆயினும் நமது தாய்மொழி என்பதால் மட்டுமன்று வலிமிக்கது என்பதாலும் எவரும் வியந்து பாராட்டத்தக்கதாகிறது. அந்த வளம் கெடாமலும் மேலும் கௌரவமான செயல்களைச் செம்மையாக்கித் தருவது உமது கடமையாகும். தமிழ் ஆட்சி மொழியாக எல்லாத் துறைகளிலும் திகழ்வதற்கான சூழ்நிலையை உருவாக்குவதில் வெற்றி பெற்றிட நல்லார்வம் நிரம்பத் தேவை என்று மக்களிடையே மொழிப்பற்றை பற்றிய விழிப்புணர்வை அறிஞர் அண்ணா ஏற்படுத்தினார்.

வரலாற்றிலிருந்து எடுத்து இயலாத தாய்மொழிக் கல்விக்கென இந்தி எதிர்ப்பு போரட்டத்தை நடத்திய நமது அண்ணாவின் தாய்மொழிக் கல்விச் சிந்தனை சிறப்புக்குரியது.

## முடிவுரை

சென்னை மாநிலம் என்று இருந்த பெயரை மாற்றி தமிழ்நாடு மாநிலம் எனப் பெயர் பெறச் செய்தது, செகரட்டேரியட் என்பதனைத் தலைமைச் செயலகம் என மாற்றியமைத்தது, விதவைத் திருமணம் புரிவோருக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை அளித்தது, புதுமுக வகுப்பை (பி.யூ.சி) இலவசமாக்கியது, தமிழகத்தில் இருமொழித் திட்டத்தைச் செயல்படுத்தியது, இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டைச் சென்னையில் நடத்தியது, மெரீனா கடற்கரையில் தமிழர்களுக்குச் சிலைகள் அமைத்தது போன்ற அறிஞர் அண்ணாவின் சாதனைகளை அவரது நூற்றாண்டு விழாவினை நடத்தி வரும் இந்த ஆண்டில் நாம் அறிந்து கொள்வது சிறப்புக்குரியதாகும்.

"அறிவு வளர்ச்சி ஒன்றையே நோக்கமாகக் கொண்டது தான் மெய்யான கல்வி" எனக் கருதியவர் அறிஞர் அண்ணா. அந்தக் கல்வியை அடிப்படையாகக் கொண்டு தமது வாழ்வியல் நெறிமுறைகளை அமைத்துக் கொண்டவர் பேரறிஞர் அண்ணா. தமிழகத்தில் ஏன் இந்திய நாட்டிலேயே கல்லூரிகளுக்கு அதிகமாகச் சென்று சொற்பொழிவாற்றிய தலைவர் அறிஞர் அண்ணா ஒருவராகத்தான் இருக்கமுடியும். அவரது கல்விச் சிந்தனைகளை நமது சிந்தனையாக்கி செயல்பட்டால் சிகரம் தொடுவது உறுதி.

# பேரறிஞர் அண்ணாவின் பல்துறை சிந்தனைகள்

சி. முத்துலெட்சுமி
தமிழ்ப் பல்கலைக்கழகம்

## முன்னுரை

கல்வியை கல்+வி என்று பிரிக்கலாம். "கல்" என்றால் தோண்டுதல். ஒவ்வொரு மனிதனிடமும் உள்ள சிந்தனையை வெளிக்கொணருவது கல்வி என்று கல்வியாளர்கள் கூறுவர். கல்வி கற்றவனையும், கற்காதவனையும் வேறுபடுத்தி காட்டவல்லது. எனவேதான் "கல்வி கற்பது அறிவை வளர்த்துக் கொள்ளத்தானே தவிர ஆடம்பர வாழ்க்கைக்காக அன்று" என்று அறிஞர் அண்ணா தெளிந்த உள்ளத்துடன் கூறியுள்ளார். அறிஞர் அண்ணா அவர்களின் கல்விச் சிந்தனையைப்பற்றி இதன் கீழ்க்காண்போம்.

## அறிஞர் அண்ணாவின் பல்துறை அறிவு

அறிஞர் அண்ணா அவர்கள் தினமும் இரவு இரண்டு மணிவரை படித்துவிட்டு பிறகு கோழி கூவும் வரை எழுதுவார். நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் கூறும்பொழுது ''அண்ணா'' ஐ.நா. குழுவைப் பற்றியும் பேசுவார். கூழாங்கல்லைப் பற்றியும் பேசும் ஆற்றல் பெற்றவர் என கூறுவதிலிருந்து அவரின் கல்வி ஞானத்தைப் புரிந்து கொள்ளலாம்.

மேலை நாட்டு அறிஞர்களின் நூலை நிரம்பப்படித்து அதைப் பின்பற்றி தமிழில் பல நூல்களை எழுதியுள்ளார். அவற்றுள் ஒன்றுதான் "வெள்ளை மாளிகையில்" என்னும் நூலாகும். "யுனெஸ்கோ கூரியர்" என்ற இதழைப்படித்து அதைத் தமிழில் மொழி பெயர்த்து அவர் முதலமைச்சர் ஆனதும் வெளிவரச் செய்தார். பல்வேறு ஆங்கில, தமிழ் இதழ்களை தாமே ஆசிரியராக இருந்து நடத்தியுள்ளார். திரைப்படங்களுக்கு கதை எழுதுவது, நாடகங்கள் எழுதுவது, புதினம், கதை, கட்டுரை என பன்முகம் கொண்டவர்.

## அறிஞர் அண்ணாவின் இலக்கியங்கள்

அறிஞர் அண்ணா அவர்கள் அரசியல்வாதி மட்டுமல்ல. நல்ல இலக்கியவாதியும் ஆவார். நான் அரசியலுக்கு வராமல் இருந்திருந்தால் "அலை ஓசை" மாதிரி ஒரு நாவலை எழுதியிருப்பேன் என்று கூறுவார். இதிலிருந்து அண்ணாவின் இலக்கிய ஆர்வத்தை அறிந்து கொள்ளலாம். அண்ணா அவர்கள் புதினங்கள் 6, குறும்புதினங்கள் 18, சிறுகதைகள் 117, நாடகங்கள் 13, கட்டுரைகள் 560, கவிதைகள் 77 ஆகியன அவர் ஆற்றிய இலக்கிய பணிக்கு எடுத்துக்காட்டுகளாகும்.

எதுகை, மோனை அறிஞர் அண்ணாவின் இலக்கியங்களில் மிகச்சிறப்பாக இடம்பெறும். அவற்றுள் சில "விட்டுக்கொடுக்க நினைப்பவன் ஒரு போதும் கெட்டுப் போவதில்லை, கெட்டுப் போக நினைப்பவன் ஒரு போதும் விட்டுக் கொடுப்பதில்லை", "குற்றாலத்திற்குப் போய் குழாயடியில் குளிப்பதைப் போல" என்பன சிறந்த உதாரணங்களாகும். தமிழ் இலக்கியத்திற்கு அறிஞர் அண்ணாவின் வரவு ஒரு மறுமலர்ச்சியை தந்தது என்று சொன்னால் அது மிகையில்லை. அண்ணா அவர்கள் சென்னையின் மிகப் பெரிய நூலகமான "கன்னிமாரர் நூலகத்தில் உள்ள நூல்கள் அனைத்தையும் படித்து முடித்தவர். இயல், இசை, நாடகம் என முத்தமிழிலும் முத்திரை பதித்து "முத்தமிழ் அறிஞராகத் திகழ்ந்தவர்" பேரறிஞர் அண்ணா.

## நூலக கல்வியைப் பற்றி அறிஞர் அண்ணாவின் சிந்தனை

1948 ஆம் ஆண்டில் வானொலியில் அறிஞர் அண்ணா ஆற்றிய உரையில் "வீட்டுக்கொரு புத்தகசாலை வேண்டும்" என்று குறிப்பிட்டுள்ளார். அப்போது சொல்கிறார் "வீடுகளில் மேசை, நாற்காலி, சோபாக்கள் இருக்கும் பீரோக்கள் இருக்கும் அவைகளில் வெள்ளித் தாம்பாளமும் விதவிதமான வட்டில்களும், பன்னீர்ச்செம்பும் இருக்கும். பித்தளைப் பாத்திரங்கள் இருக்கும் உடைகள் சிறு கடையளவு இருக்கும். மருந்துகள் சிறு வைத்தியசாலை அளவுக்கு கூட இருக்கும் அப்படிப்பட்ட வசதியுள்ள வீடுகளிலேயேயும் கூட புத்தகசாலை இராது எனக் கூறுகிறார்.

வீட்டின் அலங்காரத்தையும், விசேசக்கால உபயோகத்திற்கான சாதனங்களையும் கவனிப்பது போல வீட்டிற்கோர் புத்தகசாலை, சிறிய அளவிலாவது அமைக்க நிச்சயமாக கவனம் செலுத்த வேண்டும்.

## கட்சியினரைப் பயிற்றுவிப்பதில் கல்விச்சிந்தனை

அறிஞர் அண்ணா அவர்கள் பல்துறை அறிவு பெற்று மிளிர்ந்தவர். தன் கட்சியினரைத் தம்பிகள் என்று கூறி ஒவ்வொருவரையும் ஒவ்வொரு தலைப்பில் பேசச்சொல்லி அவர்கள் அத்தலைப்பிறகு எப்படி தயார் செய்ய வேண்டும் என்பதற்கு எந்த நூலகத்தில் எந்த ஆசிரியர் எழுதிய நூலைப் படித்து குறிப்புகள் தயாரிக்க வேண்டும் என்பதையெல்லாம் சொல்லிக் கொடுப்பாராம். இதைப் பார்த்த பல்வேறு துறையினரும் அண்ணாவின் கல்வியறிவைக் கண்டு வியந்ததுண்டு.

## தமிழாசிரியர்கள் நடத்திய பாராட்டு விழாவில் அறிஞர் அண்ணா

பேரறிஞர் அண்ணா அவர்கள் முதல்வராகப் பொறுப்பேற்ற பிறகு தமிழாசிரியர்கள் ஒரு பாராட்டுக் கூட்டத்தை நடத்தினார்கள். அதில் கலந்து கொண்ட அண்ணா குறுந்தொகை நூலிலிருந்து "குறுகும் உளதே" என்ற பாடலுக்கு விளக்கம் கூறி ஒரு மணி நேரம் அவர் ஆற்றிய உரையைக்கண்டு தமிழறிஞர்கள் அண்ணாவின் இலக்கிய புலமையை வியந்தனர்.

## முடிவரை

தமிழ்நாட்டின் தலைசிறந்த எழுத்தாளரும், ஈடில்லாப் பேச்சாளரும், மக்களின் பேரன்பை பெற்றவரும் தலைசிறந்த கல்விச்சிந்தனையாளரும், வருங்கால வாழ்வை தீர்மானிக்கும் ஆற்றல்மிக்கவர் பேரறிஞர் அண்ணா என்பதை யாரும் மறுக்க இயலாது. அவர் எழுதிய ஏடுகளும், மேடைப் பேச்சும், நாடகங்களாகத் தீட்டி நடமாடவிட்டவையுமான சிந்தனை கருவூலங்களுமே தமிழ்நாட்டின் இளைஞர்களைப் பெருமளவில் கவர்ந்து அவர்களை மேலும் கல்வி பணியாற்றிட வைத்தது என்று கூறி இக்கட்டுரையை நிறைவு செய்கிறேன்.

# அறிஞர் அண்ணாவின் அரசியல் வாழ்க்கையில் முக்கிய நிகழ்வுகள்

ஜா. பௌலின் மார்க்கிரேட்
தமிழ்ப் பல்கலைக்கழகம்

## முன்னுரை

"கற்றனைத்தூறும் அறிவு" என்ற திருவள்ளுவரின் வாக்கிற்கு ஏற்பவும், "கண்டது கற்கப் பண்டிதன் ஆவான்" என்கின்ற கிராமிய சொல்வழக்கிற்கு ஏற்பவும், கற்பவைக் கசடறக் கற்று, பெறும் புலமையும், பேரறிவும் பெற்று, பேரறிஞர் ஆனவர் அண்ணா. அவரது கல்விச் சிந்தனையை இங்கு காண்போம்.

## சுய தொழில்

நெசவுத் தொழில் செய்து, பொருள் ஈட்டி, இல்லறத்தினை நல்லறமாக, நடத்தி வந்த நடராஜன் பங்காரு அம்மாள் தம்பதியினருக்கு சின்ன காஞ்சிபுரம் என்ற ஊரில் பிறந்த 'அண்ணா' துரை, அவ்வூரில் பச்சையப்பா பள்ளியில் தொடக்கக் கல்வி பயிலும் காலத்திலேயே நெசவுத் தொழிலையும், தையல் தொழிலையும் கற்று, பள்ளி ஓய்வு நேரங்களிலும், விடுமுறை நாட்களிலும், அத்தொழிலைத் திறம்படச் செய்து, காலணா கூலி பெற்றார் என்ற செய்தி அவர் சுய தொழிற்பால் கொண்ட ஈடுபாட்டினைக் காட்டுகிறது.

சுய மரியாதை வீரராக விளங்கிய அவர், தாம் பின்னாளில் ஆசிரியராகப் பொறுப்பேற்று, நடத்திய நாளிதழ்களிலும், தாம் எழுதிய கட்டுரை, நாடகம், மற்றும் புதினங்களிலும், சுய தொழில் செய்வதன் அவசியத்தையும், மேன்மையையும் விளக்கி, அது சுயமரியாதையை எங்ஙனம் காக்கிறது என்று எடுத்துக்காட்டியுள்ளார்.

## குழந்தை நலம் பேணுதல்

தாம் கல்லூரியில் படிக்கும் காலத்திலேயே பெற்றோர், பெரியோர் விரும்பியவாறு 1930-ஆம் ஆண்டு, தஞ்சாவூர் ராணி அம்மையாரை வைதீக

முறைப்படி திருமணம் செய்துகொண்ட அறிஞர் அண்ணாவுக்கு குழந்தைகள் இல்லை. எனவே, தமது உறவுப் பிள்ளைகளான பரிமளம், இளங்கோவன், கௌதமன், பாபு ஆகிய நான்கு பேரையும் தத்து எடுத்துக்கொண்டார்.

இது குழந்தைகள் மீது அவர் கொண்ட அன்பினையும், அவர்தம் நலம் பேணுதலில் அவர் கொண்ட அக்கறையையும் வெளிப்படுத்துகிறது.

பின்னாளில் காமராஜர் கொண்டு வந்த மதிய உணவுத் திட்டத்தினை மனமாற வரவேற்றதுடன், தமது ஆட்சி காலத்திலும், தொடர்ந்து செயல்பட ஊக்குவித்தார்.

மேலும், கொள்கையளவில் தாய் சேய் நலம் பேணவும், ஆரோக்கியமான குழந்தைகளே நாட்டின் எதிர்காலம் என்பதனால் சத்துணவு, தொட்டில் குழந்தைகள் திட்டம் என்றும் சுட்டிச் சென்றார்.

பின்னாளில், அறிஞர் அண்ணா வழி வந்த தம்பிகள், அவர் கொள்கையளவில் அறிவித்ததினை, சட்ட வடிவமாக்கி, செயல்படுத்தி வருகின்றனர்.

## பெண் கல்வி

திருவள்ளுவரையும், பாரதியையும், பாரதிதாசனையும் முறையே கல்வியின் சிறப்பு, பெண்ணடிமை ஒழிப்பு என்ற நிலைகளில் கற்றும், உய்த்துணர்ந்தும் அறிந்தவர் பேரறிஞர் அண்ணா.

தம் வாழ்நாள் முழுமைக்கும் தாம் ஏற்றுக்கொண்ட ஒரே தலைவர் பெரியார் ஈ.வே.ராமசாமி என்று அறிவித்து அவர்தம் கொள்கைகளுக்கு, தமது மேடைப் பேச்சுக்களாலும், பத்திரிக்கை தலையங்கங்களாலும் அழுத்தம் கொடுத்தவர் அண்ணா.

பெண், கல்வி பெறுவது அவள் குடும்பமே கல்வி பெறுவதற்கு ஒப்பாகும், பெண் விடுதலைக்கு அதுவே வித்தாகும் என்று தொடர்ந்து கொள்கையாக வலியுறுத்தி வந்ததினை, தம்பிமார்கள், ஆரம்பக் கல்வி முதல் கல்லூரி பட்டப் படிப்பு வரை பெண்களுக்கு இலவசக் கல்வி என்றாக்கிக் கொடுத்துள்ளனர்.

## கல்வி

"பேரறிஞர் அண்ணா" பள்ளி இறுதி வகுப்பில் மூன்றாவது முயற்சியில் வெற்றி பெற்றார் என்பது வியப்புக்குரிய செய்தி. இது கல்விக்கொள்கையினை வகுக்க அடித்தளமாக அமைந்தது.

கல்வி கற்கும் காலத்தில், கல்லூரி பருவத்தில், படிப்பில் மட்டுமே கவனம் செலுத்த வேண்டும். அதீத அரசியல் ஆர்வம் ஆகாது என்பதில் கண்டிப்புடன் இருந்தார். பள்ளிப்பருவத்தில் கலைஞர்.மு.கருணாநிதியையும் கூட, இது விஷயத்தில் கண்டிப்புடன் அறிவுறுத்தி உள்ளார் என்பது காணக் கிடக்கிறது.

## மொழி

தாய்மொழித் தமிழ், அன்னிய மொழி ஆங்கிலம் இவற்றில் புலமை பெற்றிருந்த அண்ணா, வடமொழி இந்தி திணிப்பினை, நீண்ட கால, கடுமையான, எதிர்ப்பு போராட்டங்கள் மூலம், தவிர்த்தார்.

நேருவின் உறுதிமொழியைத் தொடர்ந்து, மும்மொழிக் கொள்கையினைப் படிப்படியாகக் குறைத்து, தமிழ் ஆட்சிமொழி, ஆங்கிலம் இணைப்பு மொழி என்ற அளவிற்குக் கொண்டுவந்து சட்டமாக்கினார்.

மொழி வாரி மாநிலமாகப் பிரிந்த, தமிழ் பேசும் மக்கள் வாழுகின்ற நிலப்பரப்பிற்கு, உண்ணாநோன்பிருந்து உயிர்நீத்த திரு.சங்கரலிங்கம் அவர்களின் இறுதி விருப்பத்தினை நிறைவேற்றும் முகமாக "தமிழ்நாடு" என்று பெயர் சூட்டி சட்டமாக்கினார்.

## சமூகம்

"ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்று அறிவித்த அறிஞர் அண்ணா, சமூகத்தில் பரவிக் கிடந்த சாதி, மத வேற்றுமைகளைக் களைந்திட கலப்புத் திருமணங்களை ஆதரித்தும், சுய மரியாதைத் திருமணங்களை நடத்தியும் இதனை சட்டப்படியான திருமணங்களாக்கியும் கொடுத்தார்.

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற அவரது தாரக மந்திரம், மொத்த சமூகத்திலும் ஒரு தாக்கத்தையும், மறுமலர்ச்சியையும், ஏற்படுத்தியுள்ளது.

## இதர துறைகள்

மொழி பெயர்ப்பு, மேடை பேச்சு, பத்திரிக்கைத் துறை, நாடகத்துறை, சினிமாத்துறை, அரசியல், சமூக சீர்திருத்தம், இலக்கியம் இன்ன பிற தாம் தொட்ட துறைகளனைத்திலும், தமக்கென ஒரு முத்திரையைப் பதித்து, வேறு எவர் அத்துறைகள் குறித்து ஆராயப் புகுந்தாலும், "அண்ணாவுக்கு முன் அண்ணாவுக்குப் பின்" என்ற நிலை உருவாவதற்கான சூழ்நிலையை உருவாக்கி மறுமலர்ச்சி ஏற்படுத்தி உள்ளார் என்றால் மிகையாகாது.

## முடிவுரை

அண்ணா ஒரு கல்விச் சுரங்கம், அவரது கல்விச் சிந்தனைகள் அதிலிருந்து புறப்படும் ஊற்றுக் கண்கள். எமக்குத் தொழில் எழுத்து, நாட்டுக்கு உழைப்பது, ஒரு போதும் சோராதிருப்பது என்றளவில் 15.09.1909 இல் பிறந்து, 03.02.1969-ல் மறைந்த அறிஞர் அண்ணா தமது அறுபது வயதிற்குள்ளாக, செய்துள்ள சாதனையை, அவரது கல்விச் சிந்தனையை கருத்தில் கொண்டு முன்னேறுவோம். நாடு நலம்பெற நமது பங்களிப்பினைச் செய்வோம்.

"வாழ்க அண்ணாவின் புகழ்"

# அறிஞர் அண்ணாவின் தமிழ்மொழி பற்றிய கல்விச் சிந்தனைகள்

கி. சுமதி

தமிழ்ப் பல்கலைக்கழகம்

## முன்னுரை

மக்களுக்கு நாடும், மொழியும் இரு கண்களைப் போன்றவை. நாட்டுப்பற்றும் , மொழிப்பற்றும் அற்றவர்கள் ஒளியற்றவர்களேயாவார்கள். இவற்றில் ஒன்று மட்டும் இருப்பினும் அந்த மக்கள் நிறைவுடையவர்கள் ஆக மாட்டார்கள். ஒற்றைக்கண் இருந்தாலும், ஊனம், ஊனம்தானே? ஒளி பிறக்கின்ற போது இருள்தானே அகல்கிறது . நல்ல தலைவர்கள் தோன்றும் போது மக்கள் அந்த வழி சென்று நலம் பெறுகிறார்கள்.

“அறிவுக் கூர்வாள் சுழலட்டும்

அறமே என்றும் வளரட்டும்

அறியாமை இருள் நீங்கட்டும்

பகுத்தறிவு பாங்குடன் வளரட்டும்”

என்று சொல்லி அறிவுக்கு இலக்கியமாக நின்றார் ஒருவர். அவர் தம் அறிவுக் கூர்வாள் சுழன்ற பக்கமெல்லாம் மடமை ஒழிந்தது. பகுத்தறிவு பாங்குடன் வளர்ந்தது. பாங்கொழிந்து கிடந்த தமிழ்ச் சமுதாயம் இவரது வரவால் பான்மை பெற்றது. தமிழ் ஏற்றம் பெற்றது. தமிழ் தன் பெயருக்கு ஒரு நாட்டைப் பெற்றது. தரணி புகழ் தமிழகம் பிறந்தது. தாயகம் ஒரு தயாளனைக் கண்டது.

அவர் !
அறிவின் உருவம் !
அன்பின் சின்னம் !
உயர்ந்த எழுத்தாளர் !
ஒப்பற்ற நாடகாசிரியர் !
சிறந்த ஓவியர் !
செந்தமிழ்ச் சொல்லாளர் !
நல்ல நடிகர் !

நலம் தரும் தோழர் !

நல்லவர்க்கு நல்லவர் !

அல்லவர்க்கும் நல்லவர் !

காஞ்சியில் பிறந்தவர் !

கன்னித் தமிழ் வளர்த்தவர் !

அனைவருக்கும் அண்ணா !

அவர் முழுப் பெயர் என்ன?

இளைஞர்கள் உள்ளத்தில் நீங்காத இடம் பெற்றுவிட்ட அந்த முடிசூடா மன்னரைப் பற்றி உங்களுக்குத் தெரியாமல் இருக்குமா என்ன? என்றாலும் சொல்கிறேன். அவர் முழுப்பெயர்.

## அறிஞர் அண்ணாவின் கல்விச் சிந்தனைகள்

"கற்றது கை மண் அளவு கல்லாதது உலகளவு" என்பது அறிஞர்கள் கண்டறிந்த உண்மை. ஒருவன் தான் பெற்றுக் கொண்ட அறிவை வளர்த்துக் கொண்டே போனால் அவன் அடையக் கூடிய வெற்றிக்கு எல்லையே இல்லை.

ஒரு தாய் தன் குழந்தைக்கு அடிக்கடி நினைவூட்ட வேண்டியதாவது;

"அன்பாய் இரு

அறிவினை விருத்தி செய்

அறியாமை அகற்று

ஆற்றலை வளர்த்துக் கொள்"

இவற்றுள் அதிக முக்கியத்துவம் பெறுவது "அறிவினை விருத்தி செய்" என்பதாகும். அறிவாற்றல் உள்ளவர்களைத் தான் அனைவரும் விரும்புவர். அறிவுக்கு அளவே இல்லை. அறிந்து கொள்ள வேண்டியது அளவற்றது. அறிவை வளர்த்துக் கொள்வதில் " போதும்" என்ற எண்ணம் வரவே கூடாது.

"போதும்" என்ற உணர்வு ஒருவனது வளர்ச்சிக்கு முட்டுக் கட்டையாக அமைந்து விடும். தாமஸ் ஆல்வா எடிசன் போதும் என்று முடிவெடுத்திருந்திருந்தால் இன்று உலகில் மின்னொளி வந்திருக்குமா?

மில்டன் "போதும்" என்று நினைத்திருந்தால் மீண்ட சொர்க்கம் நமக்கு கிடைத்திருக்குமா?

எனவே போதும் என்ற நிறைவு அறிவு வளர்ச்சியில் இருக்கக்கூடாது. கல்விக் கூடங்கள் கற்றுத் தருகின்ற அறிவு மிகவும் குறைவு. அதை வளர்த்துக் கொள்வது ஒவ்வொருவரின் கையில் தான் உள்ளது.

நிறைய புத்தகங்களை தொடர்ந்து படிக்க வேண்டும். படித்தவற்றை சிந்தித்து பார்க்க வேண்டும். சிந்தனையோடு ஏனையவைகளை ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும். அறிஞர் அண்ணா ஒரு படித்த மேதை படிப்பதில், சிந்திப்பதில் ஆக்கபூர்வமான வகையில் அதைப் பயன்படுத்துவது அவருக்கு நிகர் அவரேதான்.

கற்றதை எந்த சூழ்நிலையிலும் திறமையாக கையாளுவது மட்டுமின்றி அவரின் அறிவாற்றலுக்கு மகுடம் வைக்கும் திறனையும் பெற்றிருந்தார் அதனால் தான் அவருக்குப் பேரறிஞர் என்ற புகழ் ஒட்டிக் கொண்டது.

அறிஞர் அண்ணா அவர்கள் கல்வியைப் பற்றிக் கூறிய கருத்துரைகள் பலப்பல சான்றாக இங்கு சில.

"அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெறும் பட்டதாரிகளே ! நீங்கள் சாதிக்கு எதிராக மூடநம்பிக்கைக்கு எதிராக மற்றும் பல்வேறு உருவத்தில் காட்சியளிக்கும் கொடுங்கோண்மைக்கு எதிராக போர் தொடுக்கும் மாபெரும் போர் வீரர்களாக ஆக முன் வாருங்கள் என உங்களை நான் அழைக்கிறேன்.

ஏனென்றால் சாதியும் ஜனநாயகமும் ஒன்றாக இருக்க முடியாது. பல ரூபத்திலுள்ள கொடுங்கோண்மைகளும் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்ற கருத்துக்களும் ஒத்திருக்கவே முடியாது. உங்களுக்கும் உங்கள் குடும்பங்களுக்கும் உரிய வாழ்க்கை நலனில் நீங்கள் ஈடுபாடு காட்டி உழைப்பதோடு. சமுதாயத்திற்கு நீங்கள் ஆற்ற வேண்டிய கடமையை மறக்காமல் ஆற்றுங்கள் ".

" கல்வியைப் பரப்புவது என்பது முற்றிலும் அரசாங்கத்தால் செய்யப்பட வேண்டிய வேலை என்று இருந்துவிடாமல், பணவசதியும் வாய்ப்பும் படைத்தவர்கள் கல்விக் கூடங்களாகிய அறிவாலயங்களைத் துவக்குவதில் ஈடுபட வேண்டும் என்பது என் விருப்பம் ".

"பகுத்தறிவு" உணர்ச்சியுடன் ஆசிரியர்கள் சொல்லி தருவார்களேயானால் இன்னும் புத்தாண்டுக் காலத்தில் நமது மாணவர்கள், மற்ற உலக மாணவர்களுடன் போட்டியிடக் கூடிய அளவுக்கு அறிவில் முன் நிற்கக் கூடிய அளவுக்குச் செய்து விட இயலும்.

படிப்பறிவைப் பகுத்தறிவுக்
கடமையாக்கிப்
பலதுறையில் சீர்த்திருத்தம்
பண்ண வெண்ணும்
துடிப்புடைய தொண்டர்படைத்
தலைவனாகிச்

சொல்லருக்கும் திறமையால்
துணை மிகுந்து
படிப்படியாய் முன்னேறிப்
பல மிகுந்து
பாராளும் உரிமையையும்
பற்றிக் கொண்டு
அடிப்படையில் அன்பு கொண்டு
செயலே செய்த
அறிஞர் அண்ணா
காந்தியைப் போல்
தென்னாட்டு காந்தி - என அழைக்கப்படார்.

## முடிவுரை

பேச்சால், எழுத்தால், சுருங்கச் சொன்னால் தம் ஒவ்வொரு செயலாலும் தமிழ்ப் பெரு மக்களுக்குப் பணியாற்றி அவர்கள் பேரன்பால் முதல் அமைச்சராகவும் விளங்கிய அறிஞர் அண்ணா 1969 பிப்ரவரி 2- ஆம்நாள் நள்ளிரவு 12.20 மணி மீளாத் துயிலில் ஆழந்தார். தமிழ்நாடே திரண்டு வந்து சென்னையைக் கண்ணீர்க் கடலில் மிதக்க விட்டது.

மகேந்திரவர்மனும், நரசிம்மவர்மனும் பல்லவ பேரரசின் இரு கண்களைப் போல் விளங்கியவர்கள். தமிழக வரலாற்றில் ஒளி கதிர்களாகத் தோன்றியவர்கள் அவர்கள் தோன்றிய அந்தக் காஞ்சி நகரில்தான் ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின் அறிஞர் அண்ணா தோன்றினார் என்றாலும் கலைகள் பிறந்த காஞ்சியில் பிறந்ததால் தானோ என்னவோ அண்ணாவும் பல்கலை வித்தகராக விளங்கினார்.

அறிஞர் அண்ணாவின் நாட்டுப்பற்று குன்றின் மீது ஏற்றப்பட்ட தீபம் போல பிரகாசிக்கத் தொடங்கியது. இப்படிப்பட்ட அறிவுச் சுடர் எதையும் தாங்கி வந்த இதயம் இப்போது சென்னைக் கடற்கரையில் அமைதியாக உறங்குகிறது. அவர் காட்டிய அன்பு வழி நடப்பதே அவருக்கு நாம் செய்யும் கைமாறு.

“யாமறிந்த மனிதரிலே அண்ணாவைப் போல் இனி ஒருவர் எங்கும் காணோம்”. என்று பாரதியின் பாடலை மாற்றினால் கூட அவருக்கு நாம் செய்கின்ற நன்றி மிகையாகாது.

வாழ்க அறிஞர் அண்ணாவின் புகழ்!

# அறிஞர் அண்ணாவின் கல்வித் திட்டம்

ச. சந்தியா
தமிழ்ப் பல்கலைக்கழகம்

## முன்னுரை

அறிவுக்குச் சிகரமாய், ஆற்றலின் பிறப்பிடமாய், அறியாதார் வாழ்விலே அணையா விளக்காய், அறிவின் ஒளியாய், இருளகற்றி இல்லறம் சிறக்க இருபதாம் நூற்றாண்டின இணையற்ற தலைவராய் உலக தமிழர்களின் முகவரியாய் மக்கள் மனங்களில் மறையத் தலைவராய், வாழ்ந்து கொண்டிருக்க கூடிய அறிவொளி ஆசான் பேரறிஞர் அண்ணா அவர்களின் சீரியக் கல்வி சிந்தனைகளைப் பற்றிய செய்திகளை இக்கட்டுரையில் காண்போம்.

## கல்வி பணிகள்

தமிழகத்தின் கல்வி வளர்ச்சியானது அண்ணா தோன்றாத ஆண்டுகளில் குறைவாக இருந்தது. பள்ளிகளின் எண்ணிக்கையும் குறைவாகவே இருந்தன.

அதற்கும் பிறபட்டக் காலங்களில் உயர் வகுப்பினர் மட்டுமே கல்வி கற்கும் நிலை இருந்தது. அப்போது பாரதியார், பாரதிதாசனுக்குப் பிறகு தாழ்த்தப்பட்டோரும் கல்விக் கற்க வேண்டும், அவர்களுக்கு கல்வி என்பது அவசியம் என்று; ஈ.வெ.ரா. பெரியார் அவர்கள் தான் போராடினார் பேரறிஞர் அண்ணா அவர்கள் பெரியாரின் திராவிட கழகத்தில் இருந்தார்; ஆகையால் அப்போது இருந்தே தாழ்த்தப்பட்ட மக்களின் கல்வி வளர்ச்சிக்காக மிகவும் பாடுப்பட்டார்.

அறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சியில் இருந்தது ஓராண்டு என்றாலும் அவர் முதலமைச்சர் பணிக்கு இலக்கணமாய்த் திகழ்ந்தார். அவர்கள் அதிக ஆண்டுகள் எதிர்கட்சி தலைவராக இருந்தார். அப்போதிருந்தே தமிழக நலத்திட்ட வளர்ச்சிக்காகவும் கல்வி மேம்பாட்டிற்காகவும் சட்டமன்றத்தில் அண்ணா நிகழ்த்திய உரைகளை நினைத்தால் நெகிழத் தக்கது.

## குலக்கல்வி எதிர்ப்பு

தமிழக முதல்வர் இராஜாஜி பள்ளிகளில் குலக்கல்வித்திட்டம் என்ற ஓர் திட்டத்தை அறிமுகப்படுத்தினார். அத்திட்டப்படி பாதி நேரம் கல்வியும், மீதி நேரத்தில் குலக்கல்வியும் பயில வேண்டும் என்ற குலக்கல்வி முறையைப் புகுத்தினார். உயர் குடியினர் அவர் தம் உயர் குலதொழில் கற்கலாம், ஆனால் அண்டிப் பிழைத்தவர்கள் அடிமை முறையையா கற்க முடியும்? சாதி ஒழித்த சமதர்ம சமூகத்திற்குக் காத்திருக்கும் காலத்திலே, விடியலைத் தேடுவதற்கு பதில், புதைக்குழியில் தள்ளுவதைப் போன்றிருந்த இந்த திட்டம் தமிழக மக்களை அதிர்ச்சியில் வீழ்த்தியது, ஒரு சதித்திட்டமாக தோன்றியது. இத்திட்டம் மீண்டும் செயல்படாத அளவில் சம்மட்டி, அடி கொடுக்க 'சொல்லின் செல்வன்' சம்பத் அவர்கள் தலைமையில் கூடிப் போர்க்குரல் கொடுத்தனர்.

திருச்சி கல்லக்குடி பெயர் மாற்றம் செய்யும் போராட்டம், குலக்கல்வி முறை எதிர்ப்பு போராட்டம், நேருவின் போக்கிற்கு கண்டனம் தெரிவிக்கும் போராட்டம் ஆகிய மூன்று போராட்டங்களும் 1953 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 14 ஆம் நாள் மும்முனைப் போராட்டமாக நடந்தன. இவ்வாறாக பேரறிஞர் அண்ணா அவர்கள் குலக்கல்வி முறைக்கு எதிர்ப்பு குரல் கொடுத்து தமிழக தாழ்த்தப்பட்டோரின் எதிர் காலத்தினை மீட்டுத் தந்தார். இது திராவிட முன்னேற்றக் கழக வரலாற்றில் திருப்பு முனையாக அமைந்தது.

## முதலமைச்சர் அண்ணாவின் கல்வித்திட்டம்

வளர்ந்த கல்வித் துறையே அறிஞர் அண்ணாவை வரவேற்றது எனலாம். திரா்விட முன்னேற்ற கழக ஆட்சியில் "எங்கும் தமிழ் எதிலும் தமிழ்" எனும் போக்கு வலுப்பெற்றது. கல்லூரிகளில் தமிழ் வழி வகுப்புகள் தொடங்கப்பட்டன. கல்லூரிக் கல்விவரையிலும் இலவசக் கல்வி முறை புகுத்தப்பட்டது. வருமான அடிப்படையில் புகு முகவகுப்புவரை இலவசக்கல்வி திட்டம் நடை முறைப்படுத்தப்பட்டது.

மூன்று ஆண்டு இளங்கலைச் சட்டப்படிப்பு (BGL) முறை அறிமுகப்படுத்தப்பட்டது, எனினும் கல்லூரிக் கல்வி வளர்ச்சி மாபெரும் மாற்றத்தை அடைந்தது என கூற இயலாது. பதிமூன்று திங்கள் ஆட்சி காலத்தில் பத்து அரசினர் கலைக்கல்லூரிகளும், ஒன்பது தனியார் கலைக் கல்லூரிகளும் தமிழ் நாட்டில் தொடங்கப்பட்டன. பல்கலைக்கழகங்கள்தோறும் தமிழாராய்ச்சி, குறளாராய்ச்சி மையங்கள் செயல்படத் தொடங்கின.

## பள்ளிக்கல்வி மற்றும் இருமொழித்திட்டம்

அறிஞர் அண்ணாவின் ஆட்சியில், கல்விச் சாலைகளில் மும்மொழித்திட்டத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. தமிழ், ஆங்கிலம் ஆகிய

இரண்டு மொழிகளை மட்டுமே கற்பிக்க ஆணைப் பிறப்பிக்கப்பட்டது. இதன் காரணமாக இந்தி ஆசிரியர்கள் பணி இழக்கும் நிலைஏற்பட்டது; ஆனால், அறிஞர் அண்ணா இந்தி ஆசிரியர்களை பணியிலிருந்து நீக்காமல், அதே பள்ளிகளில் வேறு பணிகளில் அவர்கள் பெற்ற ஊதியம் குறைவுறாதவாறு பணியமர்த்தினார். இச்செயல் அறிஞர் அண்ணாவின் மனிதநேயப் பண்பை மேலும் வெளிப்படுத்துகிறது.

பள்ளிக்கல்வியிலும் அறிஞர் அண்ணாவின் ஆட்சி காலத்தில் மாற்றங்கள் ஏற்பட்டன. இடைநிலைக்கல்வி வகுப்புகளுக்கு உரிய தேர்வு விடைத்தாள்கள் மையமுறையில் திருத்தப்பட்டு தேர்வு முடிவுகள் விரைவாக வெளியிடப்பட்டது. அறிஞர் அண்ணாவின் காலத்தில் 2056 ஆண்கள் பள்ளிகளும், 381 பெண்கள் பள்ளிகளும் செவ்வனே கல்விப்பணியைச் செய்தன.

## உதவித்தொகை வழங்கும் திட்டம்

தமிழ்ச் சமுதாயத்தில் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்ந்தவர்களின் எண்ணிக்கை கணக்கிலடங்காது. வறியவர்கள் வளம் பெறக் கல்வி இன்றிமையாதது. எனவே ஏழை, எளிய மக்கள் கல்வி பெறுவதற்காக உதவித்தொகை வழங்கும் திட்டத்தை அரசு விரிவுபடுத்தியது.

உதவித்தொகையை நிர்ணயிக்கும் பெற்றோரின் வருமான வரம்பினை அண்ணாவின் அரசு உயர்த்தியது. தாழத்தப்பட்டவர்கள், பழங்குடியினர் ஆகியோரின் கல்லூரிக்கல்வி உதவித்தொகையின் வரவு இரண்டாயிரம் என்றும்,பிற்படுத்தப்பட்ட சமூகத்தினரின் வருமான வரம்பு ஆயிரத்து ஐந்நூறு என்றும், வரையறுக்கப்பட்டது. ஆயிரத்து ஐந்நூற்றுக்கு கீழ் வருமானம் பெறும் குடும்பத்தைச் சேர்ந்த மாணவ மாணவியர்களுக்கு புகுமுக வகுப்பு வரை இலவசக் கல்வி நீட்டிக்கப்பட்டது.

## இலவசப்புத்தகங்களும் ஏடுகளும் வழங்கும் திட்டம்

மாநகராட்சிப் பள்ளிகளில் பயின்ற மாணவ மாணவியர்களுக்கு இலவசமாக புத்தகங்களும், ஏடுகளும் வழங்கப்பட்டது. 5,64,925 ரூபாய் மதிப்புள்ள புத்தகங்களும் ஏடுகளும் மாணவ மாணவியர்களுக்கு வழங்கப்பட்டன.

பார்வையற்ற மாணவ மாணவியரின் பயன் கருத 'பிரெயில்' முறை நூல்கள் தயாரிப்பதற்காக பூவிருந்தவல்லியில் தனியே அரசு அச்சகம் ஒன்றும் நிறுவப்பட்டது.

## கல்வித்துறையில் அறிஞர் அண்ணாவின் முத்திரைகள்

தமிழகக் கல்லூரிகளில் தமிழ்வழி அறிமுகப்படுத்துதல், முதுமுக வகுப்பு வரை ரூ.1500க்கு கீழ் ஆண்டு வருமானம் கொண்டவர்களுக்கு இலவசக்கல்வி, மூன்றாண்டு இளங்கலை சட்டப்படிப்பு, உதவித் தொகையின் வருமான வரம்பு உயர்வு ஆசிரியர்களின் ஓய்வூதியத்திட்ட விரிவு, ஊராட்சி ஒன்றியங்கள் தோறும் மைய சமையற்கூடம், தேர்வுத்தாள் திருத்துதலில் மைய முறை, பல்கலைக் கழகங்களில் குறளாராய்ச்சியுடன் இணைந்த தமிழாராய்ச்சி ஊக்குவித்தல் அறிஞர் ஆகியவை அண்ணாவின் ஆட்சியில் கல்வித்துறையில் பதித்த தனிப்பெறும் முத்திரைகளாகத் திகழ்கின்றன.

## முடிவுரை

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற தாரக மந்திரத்தைத் தமது உயிர் மூச்சாகக் கொண்டு வாழ்ந்தவர் அண்ணா.

அவர்தம் தம்பியரும் அவர் வழி நடந்து சீரணிப்படையினை அமைத்துச் சமுதாயத் தொண்டு செய்தமை பொன்னேட்டில் பொறிக்கப் படவேண்டியதாகும். சீரணிப் படையினர் தங்கள் ஓராண்டுச் சாதனைகளை அறிஞர் அண்ணாவிற்குப் பிறந்த நாள் பரிசாக அளித்தமை பெருமைக்குரிய செய்தியாகும்.

ஏற்றத்தாழ்வு இல்லாத சமுதாயத்தைப் படைக்க அறிஞர் அண்ணா மேற்கொண்ட முயற்சிகள் மிகப் பல. சமுதாயச்சிந்தனைச் சிற்பி அறிஞர் அண்ணா தன்மானத் திருமணங்களைச் சட்ட ஏற்புடைய- தாக்கினார். அறிஞர் அண்ணாவின் ஆட்சி காலத்தில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்கு வடிவு அமைக்கப்பட்டது. அவர்தம் ஆட்சியில் ஒவ்வோர் அரசாணையும் மனித நேயத்தை மையமாக கொண்டே வெளிவந்தது எனலாம்.